Die Vier Evangelien

Tamulisch

gedruckt in Tranquebar

1810

mit Buchstaben
in Deutschland gegossen.

Schwarz 1 Cor. 1,30.

DOMINI NOSTRI
JESU CHRISTI

Qui eſt

SERVATOR MUNDI

NOVI

FOEDERIS

libri

Pars Prima

S. MATTHEI, MARCI, LUCÆ,

et JOHANNIS EVANGELIA

Editio Quinta

TRANGAMBARIAE

Typis Sumtibusque Miſſionis Danicæ

ANNO MDCCCX.

உலக

ரெட்சகரான யேசுகிறிஸதது உணடுபணணின

புதுஉடனபடிககை

யின

ஆகமஙகளம.

முதலாம பஙகு.

தேல

Christian Eilbye
3rd April 1832.

அது: சுவிசேஷகராகிய
மததேயு, மாறகு, லூககா,
யோவான எனபவர்கள
அவர்பேரிலே

எழுதிவைதத

சுவிசேஷஙகள அடஙகியிருககுது.

ஐநதாமபதிததல

கிறிஸதுபிறநத ௲௮௱௩௰ததில தரஙகம
பாடிமிசியோனஅசசுககூடததிலபதிககபபடடது.

மததேயுஎழுதினசுவிசேஷம.

௧. அதிகாரம.

யேசுகிறிஸதுவை வளாததகபபனதோடடு அவருககுளள அஙகிஷவரிசை.

தாவீதினகுமாரனும ஆபிரகாமினகுமாரனுமாகியயேசுகிறிஸதுவினுடைய* அஙகிஷவரிசையின அடடவணையாவது. *லூ. ௩. ௨௩.

௨. ஆபிரகாம ஈசாககைப பெறறான| ஈசாககியாககோபபைபபெறறான|யாககோப யூதாவையும அவனசகோதரரையுமபெறறான.

௩. யூதா பாரேசையுஞசாராவையுந தாமாரெனபவளாலே பெறறான|பாரேஸ எஸரோமைபபெறறான|எஸரோம ஆராமைப பெறறான.

௪. ஆராம அமினதாபைப பெறறான| அமினதாப நகசோனைப பெறறான|நகசோன சலமோனைப பெறறான.

௫. சலமோன போவாசை ராகாபபெனபவளாலே பெறறான|போவாஸ ரூததெனபவளாலே பெறறான|ஓபெதயெசேயைபபெறறான.

௬. யெசே தாவீதராசாவைபபெறறான. தாவீதராசா சாலோமோனை ஊரியாவினஸதிரீயினாலே பெறறான.

௭. சாலோமோன ரொபோவாமைபபெறறான. ரொபோவாம அபியாவைபபெறறான|அபியா ஆசாவைப பெறறான.

௮. ஆசா யோசபாததைபபெறறான யோசபாதயோராமைப பெறறான|யோராம ஒசியாவைபபெறறான.

௯. ஒசியா யோததாமைபபெறறான|யோததாம ஆகாசைபபெறறான|ஆகாஸ எசேககியாவைபபெறறான.

௰. எசேககியா மனாசேயைப்பெறறான|மனாசே ஆமோனைப பெறறான|ஆமோன யோசியாவைப பெறறான.

௰௧. யோசியா யெகோனியாவையும அவனுடைய சகோதரரையும பாபிலோனுககுச சிறைபபடடுப போற நாளகளிலே பெறறான.

௰௨. பாபிலோனுக்குச்சிறைபபடடுபபோனபிற

பாடு யெகோனியா செயாலத்தியேலைப்பெற்றான் / செயாலத்தியேல் சோரோபாபேலைப்பெற்றான்.

௰௩. சோரோபாபேல் அபியூதைப்பெற்றான் / அபியூத் எலியாக்கீமைப்பெற்றான் / எலியாக்கீம் ஆசோரைப்பெற்றான்.

௰௪. ஆசோர் சாதோக்கைப்பெற்றான் / சாதோக் ஆகீமைப்பெற்றான் / ஆகீம் எலியூதைப்பெற்றான்.

௰௫. எலியூத் எலேயாசாரைப்பெற்றான் / எலேயாசார் மாத்தானைப்பெற்றான் / மாத்தான் யாக்கோபைப்பெற்றான்.

௰௬. யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப்பெற்றான் / அவளிடத்திலே கிறிஸ்துவென்னப்படுகிற யேசு பிறந்தார்.

௰௭. ஆகையாலே உண்டான தலைமுறைகளெல்லாம் ஆபிரகாம் முதல்கொண்டு தாவீதுமட்டும் பதினாலு தலைமுறைகளும் / தாவீது முதல்கொண்டு பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலமட்டும் பதினாலு தலைமுறைகளும் / பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலமுதல்கொண்டு கிறிஸ்துமட்டும் பதினாலு தலைமுறைகளுந்தானே.

கிறிஸ்துவின் சென்னமும் நாமகரணமும்.

லூக. ௧ / ௨௭—௩௮. ௨ / ௧—௨௧.

௰௮. ஆனாலே யேசுகிறிஸ்துவினுடைய சென்னத்தின் வயணமாவது. அவருடைய தாயாம் மரியாள் யோசேப்புக்கு நேமிக்கப்பட்டபின்பு அவள் / அவர்கள் கூடிவருமுன் / பரிசுத்த ஆவியினாலே கெற்பவதியென்று கண்டுது.

௰௯. அவள் புருஷனாகிய யோசேப்பு பேரவேணில நீதிமானாயிருந்து / அவளை அவகீர்த்திப்பண்ணமனதாயிராமல் ரகசியமாய் அவளை ஒழித்துவிட யோசனையாயிருந்தான்.

௨௰. ஆனால் அவன் இப்படி நினைத்திருக்கையிலே இதோ கற்த்தருடைய தூதன் சொப்பனத்திலே அவனுக்குக் காணப்பட்டுச் சொன்னதாவது: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே / உன் பெண்சாதி மரியாளைச் சேர்த்துக்கொள்ள அஞ்சப்படாதே / ஏனென்றால் அவளிடத்தில் உற்பத்தியானது பரிசுத்த ஆவியினாலே உண்டாயிருக்குது.

௨௧. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள் / * அவருக்கு யேசுவென்று பேரிடுவாயாக / அதேதென்றால் அவர் தமது சனத்தின் பாவங்களை நீக்கி அவர்களை ரட்சிப்பாரென்றான். * லூ. ௧ / ௩௧.

௨௨. கற்த்தராலே தீர்க்கதெரிசியைக்கொண்டு சொல்லப்பட்டது நிறைவேறுகிறதுக்கு இதெல்லாஞ்சம்பவித்தது.

௨௩. அவன்: * இதோ ஒரு கன்னியாஸ்திரீ கெற்பவதியாகி * ஒரு குமாரனைப்பெறுவாள் * அவருக்கு * *

இம்மா

ம்மானுவெலெனறுபெரிடுவாரகளெனறுன,
அதறகு: நமமுடனெபராபரனிருககிறாரெனகிற அற
தமுணடு. * யெசா. ௭, ௰௪. ** யெசா. ௮, ௮—௰.

௨௪. யொசெபாநிததிரைதெளிநதெழுநதபொது, கற
ததருடைய தூதனதனககுக கறபிததபடி செயது, தன
பெணசாதியைசசெரததுககொணடு,

௨௫. அவள தனமுதலபபெறான குமாரனைப பெ
ததமடடும அவளை அறியாதிருநதது, அவ ருககுயெசு
வெனறுபெரிடடான.

௨. அதிகாரம.

கிழககுசசாஸததிரிகளயெசுபாலகனைபபணிநது
கொளளவநதது.

௧. ஏரொதெராசாவினநாளககளிலயூதெயாவினஊ
ராகியபெதலெகெமிலெயெசுபிறநதபிறபாடு, இதொ
சாஸததிரிகளகிழககிலிருநதுயெருசலெமுககுவநது:

௨. பிறநதிருககிறயூதருடையராசாஎஙகெ, ஏனென
றால அவருடையநடசெததிரததைககிழககிலெகணடு
அவரைபபணிநதுகொளளவநதொமெனறாரகள.

௩. ஏரொதெராசா அதைககெடடபொதொவெனில
அவனும அவனொடெகூட யெருசலெமபடடணததார
னைவருங்கலஙகினாரகள.

௪. அவனசகல பிறதான ஆசாரியரையுஞ சனததின
வெதபாரகரையுங கூடடி, கிறிஸதுபிறபபதெஙகெ
எனறு அவரகளைககெடடுவிசாரிததான.

௫. அவரகள அவனுககுசசொனனதாவது: யூதெயா
வினஊராகியபெதலெகெமிலெதானெ: அதெனென
றால:

௬. * யூதாவினதெசமாகியபெதலெகெமெ, யூதா
வினபிறபுககளில நீசசிறியதலல, ஏனெனில நமமு
டசனமாகியஇஸரவெலையாளபபொறபிறபுஉனனி
டததிலிருநது புறபபடுவாரெனகிறதா யதீறககதெரிசி
யைககொணடெழுதபபடடிருககுதெனறாரகள.

* மீகா. ௫, ௧.

௭. அபபொ ஏரொதெசாஸததிரிகளை ரகசியமாக
அழைததுநடசெததிரஙகாணபபடடகாலமெது
வெனறு அவரகளிடததில உறறுவிசாரிதது,

௮. அவரகளைபபெதலெகெமுககனுபபி: நீஙகளபொ
ய, பிளளையினசெயதியைநனறாய ஆராயநதுபாருங
கொள, அதைக்கணடபொதொவெனிலநானுமவந
து அதைபபணிநதுகொளளுமபடிககு அதையெனககறி
வியுஙகொளெனறான.

௯. ராசாசொனனதைதகெடடு அவரகளபொனார
கள. இதொ அவரகள கிழககிலெகணடநடசெததிரம
பிளளையிருநதஸதலததினமெலவநதுநிறகுமடடும
அவரகளுககுமுனநடநதது.

௰. அவர்கள அநத நட்சேத்திரத்தைக்கண்டபோதோ
வெனில/மகாசசநதோஷமாகமிகுதியுஞ்சநதோஷித்
து.

௰௧. வீட்டிலேவநதுபிளளையையுமஅதின தாய
மரியாளையுங்கண்டு/தாழவிழுநதுஅதைப்பணிந
துகொண்டு/தங்கள பொக்கிஷங்களைத்திறநது/
பொனனையுநதூபவரககத்தையுமவெளளைப்போ
ளத்தையுமஅவருக்குக்காணிக்கையாகவைத்தார்
கள.

௰௨. ஆனாலஏரோதேயிடத்துக்குத்திரும்பவேண்
டாமென்று அவர்கள சொப்பனத்திலதேவனாலே
னமாயெச்சரிக்கப்பட்டு/மறுவழியாயத்தங்களதே
சத்துக்குப்புறப்பட்டுப்போனார்கள.

யேசுபாலகனெகிப்பத்துக்குக்கொண்டுபோகப்
பட்டது.

௰௩. அவர்கள புறப்பட்டுப்போனபினபு/தேவ
கர்த்தருடையதூதனசொப்பனத்திலயோசேப்புக்
குக்காணப்பட்டுச்சொனனதாவது: நீஎழுநதிருந
து/பிளளையையுமஅதினதாயையுங்கூட்டிக்கொண்டு
எகிப்துக்கோடிப்போய/நானஉனக்குச்சொலலு
மட்டுமஅவவிடத்திலிரு/ஏனெனறால ஏரோதேபிள
ளையைக்கொலலவதற்குத்தேடுவானெனறான.

௰௪. அப்பொழுதவன எழுநதிருநது/ராவிலேபிள
ளையையுமஅதினதாயையுங்கூட்டிக்கொண்டெகிப்
துக்குப்பிறப்பட்டுப்போய/

௰௫. ஏரோதேயினமரணபரியநதமஅவவிடத்திலி
ருநதான. எகிப்திலிருநதுநம்முடையகுமாரனைவர
வழைத்தேனென்று*தீர்க்கதரிசியைக்கொண்டு
கர்த்தராலஉரைக்கப்பட்டதுநிறைவேறும்படியா
கத்தானே. *ஒசே. ௰௧/௧.

௰௬. அப்பொழுஏரோதே/தானசாஸதிரிகளால
பரியாசமபண்ணப்பட்டதைக்கண்டு/மிகுநதகோப
மடைநது/தானசாஸதிரிகளிடத்திலே கேட்டாராயந
தகாலத்தினபடியே பெத்லேகேமிலும அதினசகல
எலலைகளிலுமிரண்டுவயதுமுதல கீழகொண்டு அ
தறகுக்கீழதகரமாயிருக்கிற சகல ஆண பிளளைகளை
யுங்கொனறுபோடஆளனுப்பினான.

௰௭. அப்பொழுதுஎரேமியா*தீர்க்கதரிசியினால
உரைக்கப்பட்டதுநிறைவேறிற்று.அவனசொனனதா
வது:* யெரே. ௩௧/ ௰௫.

௰௮. ராமாவிலேசசத்தங்கேட்கப்பட்டது/புலம்ப
லுமஅழுகையுநதுக்கமுமமிகுதி/*ராகேலதனபிள
ளைகளுக்காகஅழுது/அதுகளிலலாதபடியால
ஆறுதலஅடைநதுகொளளாதிருக்கிறாளெனறான.

*௧.மோ.௩௫/௰௯.

யேசுபாலகனநாசரேத்துக்குக்கொண்டுவரப்
பட்டது.

௰௯. ஆனால் ஏரோதே இறந்தபின்பு, கர்த்தருடைய தூதன் சொற்பனத்திலே யோசேப்புக்கு எகிப்த்திலே காணப்பட்டு,

௨௰. நீ எழுந்திருந்து பிள்ளையையும் அதின் தாயையுங் கூட்டிக்கொண்டு, இஸ்றவேல் தேசத்துக்குப் போ, அதேதெனில் பிள்ளையின் பிராணனை வாங்கத் தேடினவர்கள் செத்துப்போனார்களென்றான்.

௨௧. அவன் எழுந்திருந்து, பிள்ளையையும் அதின் தாயையுங் கூட்டிக்கொண்டு, இஸ்றவேல் தேசத்திலே வந்தான்.

௨௨. ஆனால் அர்கேலாவு தன் தகப்பனாகிய ஏரோதேயின் பட்டத்திலிருந்து யூதேயாவை ஆளுகிறானென்று கேட்டு, அங்கே போகப் பயந்தான். அப்போ அவன் சொற்பனத்திலே தேவவுத்தரவு பெற்று, கலிலேயாப்புறங்களுக்குப் புறப்பட்டுப் போய்,

௨௩. நாசரேத்தென்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினான். நசரேயனென்றழைக்கப்படுவானென்கிறதாய * தீர்க்கதரிசிகளாலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படியாகத்தானே. * யேசா. ௰௧, ௧. சகரி. ௬, ௰௨.

௩. அதிகாரம்.

யோவான் ஸ்நானகனுடைய ஊழியம்.
மாற்கு. ௧, ௨—௮. லூ. ௩, ௧—௰௮.
யோவா. ௧, ௬. ௭.

அனாலந்த நாட்களிலே யோவான் ஸ்நானகன் வந்து, யூதேயாவின் வனாந்திரத்திலே பிரசங்கம் பண்ணி:

௨. * குணப்படுங்கோள், ஏனென்றால் வானராட்சியஞ் சமீபமாய்ச் சேர்ந்ததென்றான். * ௪, ௰௭.

௩. அதேதெனில்: வனாந்திரத்திலே கர்த்தரின் வழியை ஆயத்தப்படுத்துங்கோள், அவருடைய பாதைகளைச் செவ்வைப்பண்ணுங்கோளென்று கூப்பிடுகிறவனுடைய சத்தமுண்டென்று * யெசாயா தீர்க்கதரிசியினாலே உரைக்கப்பட்டவன் இவன்தானே. * யேசா. ௪௰, ௩.

௪. இந்த யோவானென்றவன் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான், வெட்டுக்கிளிகளுங் காட்டுத்தேனும் அவனுடைய ஆகாரமாயிருந்தது.

௫. அப்போ யெருசலேமும் யூதேயாவனைத்தும் யோர்தானுக்கடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனண்டைக்குப் புறப்பட்டுப் போய்,

௬. தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தானிலே அவனாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௭. ஆனால் பரிசேயரிலுஞ் சதுசேயரிலும் அனேகர் தன்னுடைய ஞானஸ்நானத்துக்கு வருகிறதை அவன் கண்டு அவர்களுக்குச் சொன்னதாவது, விரியன்பாம்புக

ரினகுட்டிகளே! நீங்கள வருங்கோபததுககுததபபி
விததுககொளளவகை உங்களுககுககாட்டினவனார்.

௮. ஆகையாலமனஸதாபபடுதலுககேற்ததகனிகளைக
கொடுங்கோள.

௯. ஆபிராகாம எங்களுககுததகபபனெனறு உங்களை
உளளததிலசொலலநினைவுகொளளாதேயுங
கோள; ஏனெனில பராபரனிநதககலலுகளால
ஆபிரகாமுககுபபிளளைகளை எழுபபவலலவர
என்று உங்களுககுசசொலலுகிறேன.

௰. அபபோதே கோடாலியுமமரங்களினவேரகு
கிலவைககபபட்டிருக்கிறது; ஆனபடியினாலே நலலகனிகொ
டாதமரமெலலாமவெட்டுணடு, அககினியிலேபோ
டபபடும.

௰௧. * நானேவெனறாலகுணபபடுதலுககெனறு
சலததினால உங்களைஞானஸநானமபணணுவிக்கி
றேன. ஆனாலஎனககுபபினனாகவருகிறவர்என்னி
லுமபெலததவராயிருககிறார்; அவருடையபாதர
டசைகளைசசுமககநானபாததிரவானலல. அவர்பரி
சுததஆவியினாலும அககினியினாலுமஉங்களைஞானஸநா
னமபணணுவிபபார். * மற்கு ௧. ௭. ௮. லூ. ௩.
௰௬. யோவ. ௧. ௨௬. அபபோ. ௨. ௩. ௪.

௰௨. அவர்கையிலே அவருடையதூறறுககூடையி
ருககுது; அவர்தமதுகளததை அழவிளககி, தமதுகோ
துமபையைககளஞசியததிலசசேர்பபார்; ஆனாலபத
ரை அவியாதஅககினியினாலசுட்டுபபோடுவார்என
றான.

கிறிஸதுஞானஸநானமபெறறது.

மற்கு. ௧. ௯—௰௧. லூ. ௩. ௨௧. ௨௨.

௰௩. அபபோதுயேசுகலிலேயாவிலிருநதுயோர
தானருகேயோவானனிடததுககு அவனாலஞானஸநா
னமபெறவநதார்.

௰௪. ஆனாலயோவான அவருககுததடைபபண
ணி: நான உமமாலேஞானஸநானமபெறததேவை
யாமே! நீர் என்னணடைககுவருகிறீரோஎனறான.

௰௫. யேசுவோவெனறாலவனுடனே: இபபோ
திடங்கொடு; ஏனெனில இபபடிநீதியையெலலாம
நிறைவேறறநமககடுததாயிருககுதெனறுமறு
மொழிசொனனார்; அபபோதவருககிடங்கொடுத
தான.

௰௬. யேசுஞானஸநானமபெறறவுடனேதணணீ
ரிலேநினறேறினார்; அபபோ இதோ, பரமணடலங
கள அவருககுததிறககபபட்டுது; பராபரனுடைய *
ஆவிபுறாபபோலிறங்கி அவர்மேலவருகிறதைக
கணடான. * யேசா. ௰௧. ௨. யோவ. ௧. ௩௨—௩௪.

௰௭. இதோ ஒருசததமுமபரமணடலங்களிலிருந
துணடாகி: * இவர் நாமபிரியமாயிருககிறநமமுடை
யநேசகுமாரனாயிருககிறார்எனறுரைததுது.

* ௰௭. ௫. யேசா. ௪௨. ௧.

௪. அதி

௪. அதிகாரம்.

கிறிஸது பிசாசினாலே சோதிககபபடடது.

மாறகு. ௧, ௰௨. ௰௩. லூ. ௪, ௧—௰௩.

அபபோயேசுபிசாசினாலே சோதிககபபடுவதறகுஆவி
யினாலேவனாநதிரததிலேககொணடுபோகபபடடார்.

௨. அவர் நாறபதுநாள இரவுமபகலுமஉபவாச
மாயிருநதபினபு, அவருககுபபசிததது.

௩. அபபோ சோதிககிறவன அவரணடைககுவந
து: நீபராபரனுடைய குமாரனானால, இநதககலலுக
ளஅபபமாகசசொலலெனறது.

௪. ஆனால அவர்பிரதியுததாரமாக: *மனுஷனஅப
பததினாலேமாததிரமலல, பராபரனுடையவாயிலி
ருநதுபுறபபடுகிறசகலவாரததையினாலும்பிழைபபா
னெனறெழுதியிருககுதெனறார். *௫. மோ. ௮, ௩.

௫. அபபோ பிசாசு அவரைபபரிசுததநகரததுக
குககொணடுபோய, அவரை தேவாலயததுஉப
ரிகையினமேல நிறுததி:

௬. நீ பராபரனுடைய குமாரனானால, தாழககுதி; ஏ
னெனறால: தமமுடையதூதாகளுககு உனககாகக
கறபிபபார்உனபாதஙகலலிலிடறுபபடிககுஅவர்கள
உனனைககைகளிலேஏநதிககொணடுபோவார்கள
எனறு*எழுதியிருககுதெனறுஅவருககுசசொலலிதது.

* சஙகீ. ௯௧, ௰௧. ௰௨.

௭. யேசுஅததுடனே: உனபராபரனாகிய கறததரைப
பரிடசைபாராயாக வேணடு மெனறும். *எழுதிய
ருககுதெனறார்.

* ௫. மோ. ௬, ௰௬.

௮. மறுபடியுமபிசாசு அவரைமகா உயர்நதபறவ
ததினமேலாககொணடுபோய, லோகததினசகலரா
ஜசியஙகளையும அதுகளினமகிமையையும அவருககுக
காணபிததது,

௯. நீதாழவிழுநது எனனை பணிநதால, இதுக
ளெலலாததையும உனககுததருவேனெனறு அவருக
குசசொலலிதது.

௰. அபபோ யேசு அததுடனே: போ: சாததானே,
அதேதெனனறால *பராபரனாகிய கறததரைப பணிநது,
அவரொருவருககு ஆராதனை செயவாயாக வேணடு
மெழுதியிருககுதெனறார்.

* ௫. மோ. ௬, ௰௩.

௰௧. அபபோ பிசாசு அவரைவிடடுபபோசசுது,
இதோ தேவதூதாககள சேர்நதுவநதுஅவருககுஊழி
யஞசெயதார்கள.

கிறிஸ்துதமமுடைய போதகததொழிலைததுவககி, சிலரைச சீஷராக அழைததது, நோவாளி களுககாரோககியம அளிததது.

மாறகு. ௧, ௰௪—௨௰. லூா. ௪, ௰௪. ௫,

௰௨. ஆனால யோவான ஒபபுககொடுககபபடடா னெனறு யேசுகேடடு, கலிலேயாவுககுபபுறபபட டுபபோய,

௰௩. நாசரேததைவிடடு, செபுலோனநபதலி என றதேசஙகளின எலலைகளி லிருககுஙகடறகரை யானகபபர்நகூம பட்டணத்திலேவநது வாசமபண ணினார்.

௰௪. * ஏசாயாதீர்ககதரிசியைககொணடு உரைக கபபடடதுநிறைவேறுமபடியாகததானே. அவன சொனனதாவது: * யெசா. ௯, ௧. ௨.

௰௫. கடலககரைவழியும யோர்தானநதிககுமமா ன செபுலோனதேசமும நபதலி தேசமும புறசசாதி யாருடைய கலிலேயாவுமெனகிற,

௰௬. இருளிலேஇருககுஞசனமபெரியவெளிசசததை கணடது, மரணததின திசையிலும நிழலிலுமிருககிற வர்களுககுவெளிசசமஉதிததததெனறு.

௰௭. அதுமுதல யேசு: * குணபபடுஙகோள, ஏனென றால வானராட்சியஞசமீபமாயசசேர்நததெனறு பிறசஙகிககததுவககினார். * ௩, ௨.

௰௮. ஆனால * யேசுகலிலேயாககடலணடைநடக கையிலே இரணடுசகோதரராகிய பேதுருவெனனபபட ட சீமோனையும அவனுடையசகோதரன அநதிரேயாவுங கடலிலே வலைபோடுகிறதைககணடார். ஏனென றால மீனபிடிககிறவர்களாயிருநதார்கள.

* மாறகு. ௧, ௰௬—௨௰.

௰௯. அவர்களுடனே: எனபிறகே வாருஙகோள, உஙகளைமனுஷரைப பிடிககிறவர்களாககுவே னெனறார்.

௨௰. உடனே அவர்கள வலைகளைவிடடு அவரைப பினசெனறார்கள.

௨௧. அவர் அவவிடமவிடடுபபாலே போகையிலே, வேறேஇரணடுசகோதரராகிய செபெதேயுவின மககளா யாககோபுமவனுடையசகோதரன யோவானுமத ஙகளதகபபனசெபெதேயுவுடனே படகிலிருநதுக ங்கள வலைகளைப பொததிககொணடிருககிறதைக கணடு, அவர்களையழைததார்.

௨௨. உடனே அவர்கள படவையுந தஙகள தகபப னையுமவிடடு அவரைப பினசெனறார்கள.

௨௩. பிறபாடு யேசுகலிலேயா வெஙகுஞசுததிநடந து, அவர்களுடைய ஆலயஙகளிலே போதககமபண ணி, ராட்சியத்தினசுவிசேஷததைப பிறசஙகிததது, சனததி லிருநதசகல வியாதியையுஞசகல நோககாட்டையுங குணமாககினார்.

௨௪. அவரு

௨௪. அவருடையகீர்த்திசூரியாவிலலாங்குமபிறபலியமாச்சுது; அசசையால பலவியாதிகளையும உபாதிகளையும அடைநதசகலபிணியாளரையுமபிசாசுபிடிததவர்களையுஞசநதிரரோகிகளையுநதிமிர்வாதக்காறரையும அவரணடைக்குக்கொண்டுவநதார்கள; அவர்களைக்குணமாக்கினார்.

௨௫. கலிலேயாவிலுமபததுபபடடணஙகளிலுமெருசலேமிலுமயூதேயாவிலுமயோர்தானுககபபுறததிலுமிருநதுஅநேககுமபுகள வநதுஅவரைபபினசென்றது.

௫. அதிகாரம்.

கிறீஸ்துஒருபருவதததிலபிறசஙகமபணணி, விசுவாசிகளைபபாககியவானகளென்றுசொல்லி, தஙகளநறசீரைவிளஙகபபணணசசொலலுகிறது.

லூ. ௬. ௨௰—௨௬.

அவர்குமபுகளைககணடுபருவதததினமேலேறினார். அவர உடகார்நதபோதுஅவருடையசீஷாககள அவரணடையிலேசேர்நதார்கள.

௨. அபபோதவர்தமநுவாயைததிறநதுஅவர்களைபபோதிககமபணணசசொனனதாவது:

௩. * மனததரிததர்பாககியவானகள; அதெதனனாலவானராசசியமஅவர்களுடையதாயிருககுது.
* யெசா. ௫௭. * லூ. ௰௭/ ௰.

௪. * துயரபபடுகிறவர்களபாககியவானகள; அதெனனாலஅவர்களதேறறபபடுவார்கள.
* யெசா. ௬௧. ௧: ௩.

௫. மெசுனவளளவர்களபாககியவானகள; அதேனனாலஅவர்கள * பூமியைசசுதநதிரிததுககொளளுவார்கள. * சஙகீ. ௩௭/ ௰௧. யெசா. ௬௰/ ௨௧.

௬. நீதியினபேரிலே * பசிதாகமுளளவர்கள பாககியவானகள; அதெதனனாலஅவர்கள திருபதியடைவார்கள. * யெசா. ௫௫/ ௧.

௭. இரககவானகள பாககியவானகள; * அதேனனாலஅவர்கள இரககமபெறுவார்கள. வாகக் * / ௰௬/ ௰௭. ௨௧/ ௨௧.

௮. இருதயததிலசுததமானவர்கள பாககியவானகள; அதெதனனாலஅவர்கள * பராபரனைததெரிசிபபார்கள. * ௧. யோவ. ௩/ ௨. ௩. சஙகீ. ௨௪/ ௩. ௪.

௯. சமாதானததைஉணடாககுகிறவர்கள பாககியவானகள; அதேதெனனாலஅவர்கள பராபரனுடையபுததிரரெனனபபடுவார்கள.

௰ * நீதியினநிமிததியமாககததுனபபபடுகிறவர்கள பாககியவானகள; அதெதனனாலவானராசசியம அவர்களுடையதாயிருககுது.
* ௧. பேது. ௩/ ௰௪.

௰௧. எனநிமிததமாக உஙகளைததூஷணிததுததுன பபடுததி / தீதுமொழியெலலாம உஙகளுககுவிரோதமாய பொயயாயச சொலலுவார்களானால / பாககியவானக ளாயிருககிறீர்கள. * ௧. பேது. ௪ / ௰௪ /

௰௨. சநதோஷபபடடு * களிகூருஙகோள / ஏனெனனா ல உஙகளபலன பரமணடலஙகளிலெ திரளாயி ருககும / ஏனெனில உஙகளுககுமுனனிருநத தீர்ககதரி சிகளையெபபடியெ துனபபபடுததினார்கள.

* லூ. ௬ / ௨௩.

௰௩. நீஙகள பூமியினுடைய உபபாயிருககிறீர்கள / உபபு * சாரமறறுபபோசசுதேயானால எதினால சாரமுணடாககபபடும. வெளியெ கொடடுணணக வும மனுஷராலமிதிககபபடவுமெயொழிய வேறொனறுக குமாகாது. * மாறகு. ௯ / ௫௰. லூ. ௰௪ / ௩௪.

௰௪. நீஙகள லோகததின * வெளிசசமாயிருககிறீர் கள / மலையினமெலிருககிறபடடணம மறைநதிருககக கூடாது. * பிலி. ௨ / ௰௫.

௰௫ * விளககைககொளுததி / மரககாலின கீழெவைகக கிறதுமிலலை / விளககுததணடின மெலெவைபபார்கள / அபபொ வீடடிலெயிருககிறவர்களெலலாருககும பிரகாசிககும. * மாறகு. ௪ / ௨௧.

௰௬. அபபடியே / * மனுஷர் உஙகளநறகிரிகைக ளைககணடு / பரமணடலஙகளிலிருககிற உஙகளபி தாவைமகிமைபபடுததுகிறதுககாக உஙகளவெளிச சம அவர்கள முனபாகபபிரகாசிககககடவது.

* ௧. பேது. ௨ / ௰௨.

எனனைககுஙகோலைககபபடாததாயபபிரமா ணககறபனைகளின அறததனைததககாணபிததது.

௰௭. தாயபபிரமாணததையானாலுநதீர்ககதரிசி னஙகளை எனகிலுஙகோலைககுபபோடடவநதேனென றுஎணணிககொளளாதெயுஙகோள / கோலைததுப போடடவலலநிறைவேறறவநதேன.

௰௮. அதேதெனனால உஙகளுககு மெயயாகவெ சொலலுகிறேன / * வானமும பூமியுமொழியுமடடும வேதததிலெ ஒரேசிததெழுததாகிலும ஒரே அடசரககா லெனகிலுஙகூடிமநடநதேறுமடடாக ஒழியாது.

* லூ. ௰௬ / ௰௭.

௰௯. ஆனபடியினாலெ ஆராகிலுமநதஎலலாததி லுஞசிறிதானகறபனைகளில ஒனறைககடடவிழதது அபபடிமனுஷரை உபதேசிததால / வானராடசியததில எலலாரிலுஞசிறியவனெனனபபடுவான / ஆனால ஆராகிலும துகளைசசெயது உபதேசிததால அவன வா னராடசியததிலெ பெரியவனெனனபபடுவான.

௨௰. அதேதெனனால உஙகளுககுச சொலலுகிறேன. உஙகள நீதி * வேதபாரகர்பரிசெயரெனறவர்களின

நீதியை

நீதியைபபார்ககவதிகபபடடிருநதாலொழியவான
ராடசியததுககுளபபிறவேசிககமாடடீர்கள.
* ௨௩। ௨௫—௨௬.

௨௧. கொலைசெயயாயாகெனபதும। ஆராகிலுங
கொலைசெயதாலஞாயததீர்பபுககெதுவாயிருபபா
னெனபதுமபூறுவததாருககுசசொலலபபடடுதென
றுகெடடீர்கள.

௨௨. ஆனாலநான உஙகளுககுசசொலலுகிறென। தனசகோதரனணஞாயமிலலாமல கோபிததுககொள
பவனெலலாம ஞாயதீர்பபுககெதுவாயிருபபான. ஆராகிலுந தனசகோதரனைசசீ யெனறால ஆலோசி
னைசசபைததீர்பபுககெதுவாயிருபபான ஆராகிலுமமதி
கெடடவனெயெனறால * எரிநரகததுககெதுவாயிருப
பான. * ௧. யோவ. ௩। ௰௫.

௨௩. ஆகையாலநீபலிபீடததணடை உனகாணிககை
யைசசெலுததவநது। உனசகோதரனுககுனபேரிலகு
றையுணடெனறு அஙகெநினைவுகூர்நதாயாகில।

௨௪. அவவிடததிலெ பீடததினமுனனெ உனகாணிக
கையைவைததுவிடடுபபோய। உனசகோதரனோடெ
முநதஒபபுரவாகி।பிறபாடுவநதுஉனகாணிககையைச
செலுதது.

௨௫. எதிரியானவன உனனைஞாயாதிபதிககொபபுக
கொடாமலுமஞாயாதிபதிஉனனைசசேவகககாறனுக
கொபபுககொடாமலுமநீசசிறைசசாலையிலவைககப
படாமலுமிருகக। நீசீககிரமாக உனஎதிரியோடெ
டுனனமவழியிலிருககககொளள * அவனுடனெ
நலமனமபொருநது. * லூ. ௰௨। ௫௮. ௫௯.

௨௬. மெயயாகவே உனககுசசொலலுகிறென।
நீகடைசிககாசைககொடுததுததீருமடடாக அவவிடததி
லிருநதுபுறபபடமாடடாய.

௨௭. விபசாரமபணணாதெயாகெனபதுபூறுவததாருக
குரைககபபடடுதெனறுகெடடீர்கள.

௨௮. ஆனாலநான உஙகளுககுசசொலலுகிறெனஒரு
பெணசாதியை * இசசிககிறவனாயபபாரககிறவனெல
லாமதனனிருதயததிலெ அவளொடெவிபசாரமபண
ணியாசசுது. * யோபு. ௩௧। ௧.

௨௯. * உனவலதுகண உனககிடறலவருததிவிதது
தெயானால। அதைபபிடுஙகிஎறிநதுபொடு। ஏனென
றால உனசரீரமெலலாமநரகததிலதளளபபடாதப
டிககு உனஅவயவஙகளிலஒனறுகெடடுபபோ
றதெஉனககுநலமாயிருககுது. * ௰௮। ௮. ௯. மாறகு.
௯। ௪௩—௪௭. கலாத. ௫। ௨௪.

௩௰. உனவலதுகையும உனககிடறலவருததிவித
தால। அதைததறிததெறிநதுபோடு ஏனெனறால உன
சரீரமெலலாமநரகததிலதளளபபடாதபடிககு
உனஅவயவஙகளிலஒனறு கெடடுபபோறதெ
உனககுநலமாயிருககுது.

௩௧. * ஆராகிலுந தனபெணசாதியைததளளிவிட
டால। தளளுதலசீடடை அவளுககுககொடுககக
டவானெனறுசொலலபபடடுது. * ௫. மோ ௨௪। ௧.

௩௨. ஆனால

௩௨. ஆனாலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். * ஆராகிலும் வேசித்தனம் முகாந்தரமில்லாமல் தன் பெண்சாதியைத் தள்ளிவிட்டால் / அவளை விபசாரம் பண்ணுவிக்கிறான் / ஆராகிலும் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணினால் விபசாரம் பண்ணுகிறான்.
* ௰௯ / ௯.

௩௩. பின்னையும்: * பொய்யாணையிடாயாக என்பதும் / ** உன் ஆணைகளைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாக என்பதும் பூர்வத்தாருக்குச் சொல்லப்பட்டதென்று கேட்டீர்கள். ௩. மோ. ௰௯. ௰௨.
** ௪. மோ. ௩௰ / ௩.

௩௪. ஆனாலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் / பரிச்சேதமாய்ச் சத்தியம் பண்ணவேண்டாம் / வானத்தின் பேரிலானாலுஞ்சரி / ஏனென்றால் அது பராபரனுடைய * ஆசனமாயிருக்குது. * யேசா. ௬௬ / ௧.

௩௫. பூமியின் பேரிலானாலுஞ்சரி / ஏனென்றால் அது அவருடைய பாதபடியாயிருக்குது / யெருசலேமின் பேரிலானாலுஞ்சரி / ஏனென்றால் அது பெரிய ராசாவின் பட்டணமாயிருக்குது.

௩௬. உன் சிரசின் பேரிலேயுஞ் சத்தியம் பண்ணாயாக / ஏனென்றால் ஒரே மயிரை வெண்மையாக்கவும் அல்லது கறுப்பாக்கவுமாட்டாய்.

௩௭. உங்கள் சொல்லோவென்றால் * ஆமாம் அல்லவல்லவென்றிருக்கக்கடவது / இதுகளுக்கு மிஞ்சினது பொல்லாப்பினாலே உண்டாயிருக்குது. * யாக். ௫ / ௰௨.

௩௮. கண்ணுக்குக் கண் / பல்லுக்குப் பல்லென்பது * சொல்லப்பட்டதென்று கேட்டீர்கள் *. *
௨. மோ. ௨௧ / ௨௪. ௩. மோ. ௨௪ / ௨௰.

௩௯. ஆனாலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் / * பொல்லாப்போடே எதிர்த்து நிற்கவொண்ணாது / ** ஒருத்தன் உன் வலது கன்னத்திலே உன்னை அறைந்தால் / அவனுக்கு மற்றக் கன்னத்தையுந் திருப்பிக்கொடு.
* வாக். ௨௰ / ௨௨. ** லூ. ௬ / ௨௯.

௪௰. உன்னோடே * வழக்காடி உன் மேலங்கியை எடுத்துக்கொள்ள வேணுமென்றிருக்கிறவனுக்கு வஸ்திரத்தையும் விட்டுவிடு. * ௧. கொரி. ௬ / ௭.

௪௧. யாதொருத்தன் உன்னை ஒரு காதவழி வரப் பெலபந்தம் பண்ணினால் / அவனோடிரு காதவழி நடந்து போ.

௪௨. * உன்னை வேண்டிக்கொள்ளுகிறவனுக்குக் கொடு / உன்னிடத்திலே கடன் வாங்க வருகிறவனுக்கு முகங்கோணாதே. * லூ. ௬ / ௩௰.

௪௩. * உன் கிட்டத்தவனைச் சிநேகித்து / உன் ** சத்துருவைப் பகைக்கக்கடவாயென்பது சொல்லப்பட்டதென்று கேட்டீர்கள். * ௩. மோ. ௰௯ / ௰௮. ** ௫. மோ. ௭ / ௨. ௨௩ / ௬.

௪௪. ஆனாலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் * உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கோள் / உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கோள் / உங்களைப்

பகைக்க

யனைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கோள், உங்க
ளைத்துன்டரிக்கப்பண்ணுகிறவர்களுக்காகவும்
உங்களைத்துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் *
செபம்பண்ணுங்கோள். * லூ. ௬, ௨௭ — ௩௬. *

லூ. ௨௩, ௩௪.

௪௫. நீங்கள் பரமண்டலங்களிலிருக்கிற உங்
களைபிதாவின்புத்திரராயிருக்கத்தக்கதாகத்தானே
அதேதென்னில் அவர் தீயோர்பேரிலும் நல்லோர்பே
ரிலுந்தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியர்பேரி
லும் அநீதியர்பேரிலும் வருஷிக்கப்பண்ணுகிறார். *
ஏபே. ௫, ௧.

௪௬. அதேதென்னில் உங்களைச்சிநேகிக்கிறவர்க
ளைச்சிநேகித்தீர்களானால், உங்களுக்கு என்னபல
னென்ன? ஆயக்காரரும் அப்படித்தானே செய்கிறார்
களல்லவோ.

௪௭. உங்கள் சகோதரரைமாத்திரம் வினவினீர்க
ளானால், நீங்கள் விசேஷித்துச்செய்கிறதென்ன? ஆயக்
காரரும் அப்படிச்செய்கிறார்களல்லவோ.

௪௮. ஆகையால் பரமண்டலங்களிலிருக்கிற உங்
களுடைய பிதா பூரணசற்குணராயிருக்கிறதுபோலே, நீங்
களும் பூரணசற்குணராயிருக்கக்கடவீர்கள். *
கோலோ. ௩, ௰௨ — ௰௪.

௬. அதிகாரம்.

அப்பாலும் பருவதத்திலேப்பண்ணின பிரசங்கம்
தருமஞ்செபம் உபவாசமானதுகள் மாயமற்றி
ருக்கவேணுமென்பது.

மனுஷராலே காணப்படுவதற்கு, அவர்களுக்கு முன
பாக உங்கள் தருமங்களைச் செய்யாதபடிக்கு எச்சரிக்
கையாயிருங்கோள், மற்றப்படி பரமண்டலங்களி
லிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பல
னில்லை.

௨. ஆனபடியினாலே நீ தருமஞ்செய்கிறபோது, மா
யக்காரர்தாங்கள் மனுஷராலே புகழப்படுவதற்கு
ஆலயங்களிலும் வீதிகளிலுஞ்செய்கிறபோலே
உன்முன்பாகக் காளையூதிவியாதே; மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன், அவர்கள் தங்கள் பல
னை அடைந்துதீர்ந்தது.

௩. நீயோ வெளிக்கு தருமஞ்செய்கிறபோது, உன்
தருமம் அந்தரங்கமாயிருக்கிறதுக்காக, உன் வலதுகை
செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது.

௪. அப்போ அந்தரங்கத்திலே பார்க்கிற உன் பிதாதா
மே * வெளியரங்கமாய் உனக்குப் பலன் அளிப்பார்.

* லூ. ௰௪, ௰௪.

௫. நீ செபம்பண்ணுகிறபோதும், மாயக்காரரைப்
போலிராதே; அதேதென்னில் தாங்கள் மனுஷருக்கு

க்காண

க்காணப்பட ஆலயங்களிலும் வீதிகளின் முடுக்குகளிலும் நின்றுகொண்டு செபம்பண்ண விரும்புகிறார்கள். மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் அவர்கள் தங்கள் பலனை அடைந்துதீர்ந்தது.

௬. நீயோவென்றால் செபம்பண்ணுகிறபோது உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கிச் செபம்பண்ணு அப்போ அந்தரங்கத்திலே பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலன் அளிப்பார்.

௭. நீங்கள் செபம்பண்ணுகிறபோதோவென்றால் * அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கோள் ஏனென்றால் தாங்கள் வெகு வசனிப்பினாலே நாங்கள் கேட்கப்படுவோமென்று நினைக்கிறார்கள். * ௧ ராசா. ௰௮. ௨௬—௨௯.

௮. ஆனதுகொண்டு அவர்கள் சாயலாயிராதேயுங்கோள் அதேதென்றால் உங்கள் பிதா உங்களுக்குத் தேவையானதுகளை நீங்கள் தம்மை வேண்டிக்கொள்ளுகிறதுக்கு முன்னே அறிந்திருக்கிறார்.

௯. ஆகையால் நீங்கள் செபம்பண்ண வேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தமாவதாக.

* லூ. ௰௧. ௨—௪.

௰. உம்முடைய ராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போலே பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக.

௰௧. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கின்று தாரும்.

௰௨. எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னிக்குமாப்போலே எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

௰௩. எங்களைச் சோதனைகளில் பிரவேசிக்கப்பண்ணாதேயும் ஆனாலோ தின்மையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேதென்றால் ராச்சியமும் பெலனும் மகிமையும் உமக்கே என்றென்றைக்கும் உண்டாயிருக்குது. ஆமென் என்பது தானே.

௰௪. அதேதென்றால் மனுஷருக்கு அவர்கள் தப்பிதங்களை மன்னித்தீர்களானால் உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்.

௰௫. மனுஷருக்கு அவர்கள் தப்பிதங்களை * மன்னியாதே போனீர்களேயாகில் உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.

* ௰௮. ௩௫.

௰௬. நீங்கள் உபவாசிக்கும்போதோவென்றால் மாயக்காரரைப்போல முகவாடலாயிராதேயுங்கோள். அதேதென்றால் தாங்கள் உபவாசிக்கிறவர்களென்று மனுஷருக்குக் காணப்பட தங்கள் முகங்களை வகங்கப்பண்ணுகிறார்கள். மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் அவர்கள் தங்கள் பலனை அடைந்துதீர்ந்தது.

௰௭. நீயோவென்றால் உபவாசிக்கும்போது, நீ உப
வாசிக்கிறவனென்று மனுஷருக்கல்ல அந்தரங்கத்தில்
இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படுகிறதுக்காக
உன் சிரசைத் தயிலத்தால் பூசி, உன் முகத்தைக் கழுவு,

௰௮. அப்போ அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெ
ளியரங்கமாக உனக்குப் பலனளிப்பார்.

பொருளாசையும் பிழைப்பின் கவலையும் வேண்
டாமென்பது.

௰௯. * பூமியின் மேல் உங்களுக்குப் பொக்கிஷங்க
ளைக் கூட்டிவைக்காதேயுங்கோள், அங்கே பொட்
டூரும் துருவும் அதுகளைக் கெடுக்கும், அங்கே திருடரும்
கன்னமிட்டுத் திருடுகிறார்கள். யாக்கோ. ௫, ௧—௩.

௨௰. * வானத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்க
ளைக் கூட்டிவையுங்கோள், அங்கே பொட்டானும்
துருவேனும் அதுகளைக் கெடுக்கிறதுமில்லை, அங்
கே திருடர் கன்னமிடுகிறது நதிருடுகிறதுமில்லை. * லூ.
௰௨, ௩௩. ௧. தீமோ. ௬, ௰௭—௰௯.

௨௧. ஏனென்றால் உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்
குதோ, அங்கே உங்கள் இருதயமுமிருக்கும்.

௨௨. கண் சரீரத்தின் விளக்காயிருக்குது, ஆகையால்
உன் கண் கபடற்றதாயிருந்தால், உன் சரீரமெல்
லாம் வெளிச்சமாயிருக்கும்.

௨௩. உன் கண் பொல்லாததாயிருந்ததேயானால்,
உன் சரீரமெல்லாம் இருண்டிருக்கும். இப்போதும்
உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், இருள்
எத்தனை பெரிதாயிருக்கும்.

௨௪. ஒருவனும் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ்செய்
யக்கூடாது. ஏனென்றால் ஒருவனைப் பகைத்து
மற்றவனைச் சினேகிப்பான். அல்லது ஒருவனைச்
சார்ந்துகொண்டு மற்றவனை அசட்டைபண்ணு
வான், நீங்கள் பராபரனுக்கும் லோகப் பொருளுக்
கும் ஊழியஞ்செய்யக்கூடாது.

௨௫. ஆனதுகொண்டு உங்களுக்குச் சொல்லுகி
றேன், * என்னத்தை உண்போமென்னத்தைக் குடிப்
போமென்று உங்கள் சீவனுக்காகவும், என்னத்தை
உடுப்போமென்று உங்கள் சரீரத்துக்காகவுங் கவ
லைப்படாதேயுங்கோள். ஆகாரத்தைப் பார்க்கச் சீவ
னும் உடையைப் பார்க்கச் சரீரமும் அதிகமாயிருக்குதல்
லவோ. * லூ. ௰௨, ௨௨—௩௧. எபி. ௰௩, ௫.

௨௬. ஆகாசத்தின் பட்சிகளை நோக்கிப்பாருங்
கோள், அதுகள் விரைக்கிறதும் அறுக்கிறதுங் களஞ்
சியங்களிலே கூட்டிவைக்கிறதுமில்லை, இல்லாவிட்
டால் உங்கள் பரமபிதா அதுகளைப் பிழைப்பூட்டுகி
றார், அதுகளைப் பார்க்க நீங்கள் விசேஷத்திருக்கிறீர்க
ளல்லவோ, * சங்கீ. ௱௪௫, ௰௫. ௰௬.

௨௭. ஆனால் உங்களில் கவலைப்படுகிறதினாலே
தன் சரீர அளவின் மேல் ஒரு முழத்தைக் கூட்டலாம்

௨௮. உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன / வெளியிலே லீலிய புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று அதுகளைக் கவனித்துப் பாருங்கோள் / அதுகள் உழைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை.

௨௯. மேலாவிடாலும் சாலோமோனென்பவன் தன் சமஸ்த மகிமையிலும் இதுகளிலொன்றைப்போலும் உடுத்தியிருந்ததில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௰. இப்போதும் இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படுகிற வெளியின் புல்லைப் பராபரன் இவ்விதமாக உடுத்துவித்தால் / வெகு அதிசமாய் உங்களை உடுத்துவிப்பாரல்லவோ / அற்ப விசுவாசிகளே.

௩௧. ஆனபடியால் என்னத்தை உண்போமென்னத்தைக் குடிப்போமென்னத்தை உடுப்போமென்று சொல்லிக் கவலைப்படாதேயுங்கோள்.

௩௨. ஏனென்றால் அதுகளெல்லாத்தையும் அக்கியானிகள் நாடித் தேடுகிறார்கள். உங்கள் பரமபிதாவோவென்றால் இதுகளெல்லாம் உங்களுக்குத் தேவையென்றறிவார்.

௩௩. ஆனால் முந்தப் பராபரனுடைய ராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கோள் / அப்போது இதுகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்.

௩௪. ஆகையால் நாளையத்துக்காகக் கவலைப்படாதேயுங்கோள். ஏனென்றால் நாளையத்தினம் தன்னுடையதுகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அத்தத்தின் பாடும் போதும்.

௭. அதிகாரம்.

அப்பாலும் பர்வதத்தில் பண்ணின பிரசங்கம்.
புறணரந்தானமாக நடத்தவும் / செபம்பண்ண
வகுசேரானப் புத்தி.

நீங்கள் குத்தமாய் நிறணிக்கப்படாதிருக்கக் குத்தமாய் நிறணியாதேயுங்கோள்.

௨. அதேதென்றால் எந்த நிறணிப்பினாலே நிறணிக்கிறீர்களோ / அத்தாலே நிறணிக்கப்படுவீர்கள் / எந்த அளவினாலே அளக்கிறீர்களோ / அத்தாலே உங்களுக்குத் திரும்ப அளக்கப்படும்.

௩. ஆனால் நீ உன் கண்ணிலிருக்கும் உத்திரத்தை உணராமல் / உன் சகோதரன் கண்ணிலிருக்குஞ் சிராயைப் பார்க்கிறதென்ன.

௪. அல்லது உன் சகோதரனுடனே: நான் உன் கண்ணிலிருக்குஞ் சிராயை எடுத்துப் போடட்டுமென்று நீ சொல்லுவதெப்படி / இதோ உத்திரம் உன் கண்ணிலிருக்குதே.

௫. மாயக்காறனே / முந்த உன் கண்ணிலிருக்கும் உத்திரத்தை எடுத்துப்போடு / பிறபாடு உன் சகோதரன் கண்ணிலிருக்குஞ் சிராயை எடுக்கிறத்துக்கு வகை பார்ப்பாயாக.

௬. நீங்கள்

௬. நீஙகள *பரிசுததமானதை **நாயகளுககுக கொடாமலும / உஙகள முததுகளைப பனறிகள த ஙகளகாலகளாலமிதிததுபபோடடுததிருமபிக கொணடுஉஙகளைபபீறாதபடிககுஅதுகளை அதுகள முனபோடாமலுமிருஙகோள. * க. கொரி. ௰/ ௨௧. ** ௨. பே. ௨/ ௨௨.

௭. கேளுஙகோள / அபபோஉஙகளுககுககொடுக கபபடும / தேடுஙகோள / அபபோகணடுபிடிபபீர் கள / தடடுஙகோள / அபபோஉஙகளுககுததிறககப படும.

௮. ஏனனனறாலகேடகிறவனெலலாம*வாஙகி றான / தேடுகிறவனகணடுபிடிககிறான / தடடுகிறவ னுககுததிறககபபடும. * யெரே. ௨௯/ ௰௨—௰௪.

௯. அலலதுஉஙகளிலெநதமனுஷனாகிலுமதனனை அபபஙகேடகிறதனமகனுககுககலலைககொடுப பானோ.

௰. அவனமீனைககேடடால / அவனுககுபபாமபைக கொடுபபானோ.

௰௧. இபபோதுமபொலலாதவர்களாகியநீஙகள உஙகள பிளளைகளுககுநலலவைகளைககொடுகக அறிநதிருநதால எததனைஅதிகமாயபபரமணடலஙகளி லிருககிறஉஙகளபிதாதமமைககேடகிறவர்களுககு * நனமைகளைககொடுபபார். * லூ. ௰௧/ ௯—௰௩.

௰௨. இபபோதும / மனுஷர் எனனெனனததை உங களுககுச செயயவேணுமெனறிருககிறீர்களோ / அதைபபெலலாமநீஙகளஅவர்களுககும அபபடியே / செயயுஙகோள / ஏனனனறால *நாயபபிரமாண முநதீர்ககதரிசனஙகளுமதுதானே.
* றோம. ௰௩/ ௰.

ஊககாதவழிககுஙகளளபபோதகருககுமெசசரிக கையாயிருககசசொனனபுததி.

௰௩.* இடுககவாசலாலேஉளபபிரவேசியுங கோள / அதேதெனனனறால கேடடுககுககொணடுபோ ற வாசலவிரிவுமவழிவிசாலமுமாயிருககுது / அதுக குளபபிறவேசிககிறவர்களஅனேகமபேராயிருககி றார்கள : * லூ. ௰௩/ ௨௪.

௰௪. ஜீவனுககுககொணடுபோறவாசல / இடுககமுமவழிநெருககமுமாயிருககுது / அதைககணடு பிடிககிறவர்களகொஞசமபேராயிருககிறார்கள.
* அபபோ. ௰௪/ ௨௨.

௰௫: ஆனால *களளததீர்ககதரிசிகளுககெசசரிக கையாயிருஙகோள / அவர்கள **ஆடடுததோலைப போததுககொணடுஉஙகளணடைககுவருகிறார்கள உளளேயோகவவுகிறஓநாயகளாயிருககிறார்கள.
* ௨. பே. ௨/ க. ** எஸே. ௰௯/ ௰௪. ௨. கொரி. ௰௧/ ௰௩.—௰௫.

௰௬. அவர்களுடையகனிகளினால அவர்களைஅறி வீர்களாக. முளசசெடிகளிலதிராடசபபழங களையுமமுளபபூணடுகளில அததிபபழஙகளையும அறுககிறார்களோ.

௰௭. அநதபபடிநலலமரமெலலாமநலலகனிக ளைககொடுககும / ஆகாதமரமோஆகாதகனிகளைக கொடுககும.

௰௮. நல்லமரம ஆகாததகனிகளைக கொடுக்கக் கூடாது, ஆகாதமரம நல்லகனிகளைக கொடுக்கவுங் கூடாது.

௰௯. *நல்லகனிகொடாதமரமெல்லாம வெட்டப் பட்டு, அக்கினியிலே போடப்படும். * ௩, ௰.

௨௰. ஆனதுகொண்டு அவர்களின கனிகளினாலே அவர்களை அறிவீர்கள.

௨௧. என்னுடனே: *ஆண்டவரே! ஆண்டவரே என்றுசொல்லுகிறவனெல்லாம, பரமண்டலங்க ளிலிருக்கிற என்பிதாவினசித்தத்தை ** செயகிறவனே வானராட்சியத்துக்குளபபிரவேசிப்பான.

* லூ. ௬, ௪௬. ** யாக. ௧, ௨௨. ரோம. ௨, ௰௩.

௨௨. அந்தநாளில அநேகம்பேர என்னுடனே: ஆண்டவரே ஆண்டவரே, உமது நாமத்திலே தீர்க்கதரிசனம உரைத்தோமல்லலோ, உமது நாமத்திலே பிசாசுகளைத துரத்திவிட்டோமல்லலோ, உமது நாமத் திலே அநேகம அற்புதங்களைச செயதோமல்லலோ என்பார்கள.

௨௩. அப்போதுநான: ஒருக்காலும உங்களை அறிந்தேனில்லை, அக்கிரமஞ்செயகிறவர்களே, * என்னைவிட்டகன்றுபோங்கோளென்று அவர்க ளுக்கறிக்கைபண்ணுவேன. * ௨௫, ௪௧.

தேவவசனத்தைக்கேட்டுச்செய்கிறவனுக்கு வரும்பிரயோசனம, செய்யாதவனுக்கு வருங்கேடு.

லூ. ௬, ௪௭—௪௯.

௨௪. ஆனபடியாலெவனுகிலுமிந்தவென்னுடைய வார்த்தைகளைக்கேட்டு அதுகளின்படி செயதால, அவனைப்புத்தியுள்ள மனுஷனுக்கொப்பிடுகிறேன. அவனதன வீட்டைக கல்லுமலையின மேலேக கட்டினான.

௨௫. பெருமழைசொரிந்து, பெருவெள்ளம வந்து, காற்றுகளும அடித்து, அந்தவீட்டின மேலேமோதியும அதுவிழுந்ததில்லை, ஏனெனில கல்லுமலையின மேலே அஸ்திவாரம்போட்டிருந்தது.

௨௬. ஆனாலெவனுகிலுமிந்தவென்னுடைய வார்த்தைகளைக கேட்டும அதுகளின்படி செயயாதிருந்தால, அவனபுத்தியற்றமனுஷனுக்கொப்பாயிருக்கிறான. அவனதன வீட்டைமணலின மேலேக்கட்டினான.

௨௭. பெருமழைசொரிந்து, பெருவெள்ளம வந்துகாற்றுகளும அடித்துஅந்தவீட்டின மேலேமோதுகிறபோது அதுவிழுந்தது, அதினவிழுகுதல பெரிதுமாயிருந்ததென்றார்.

௨௮. யேசுஇந்தவார்த்தைகளை முடித்தபோது சம்பவித்ததேதென்றால, கும்புகள அவருடைய போதகத்துக்காகவிஸ்மித்தது.

௨௯. அதெனனில வேதபாரகரைபபோலலல, அதிகாரமுளளவரைபபோல அவர்களுககுப போதிக்கிறவராயிருநதார.

௮. அதிகாரம.

கிறிஸது ஒரு குஷடரோகியைக குணமாககினது.

அவர் பருவததிலிருநது இறஙகினபோது திரளான கும்பு கள அவரைப பினசெனறது.

௨. இதோ * ஒருகுஷடரோகிவநது அவரைப பணிநது: ஆணடவரே, உமககு மனதுணடானால எனனைச சுததமாகக உமமாலே ஆகுமெனறான. * மாறகு. ௧, ௪௰—௪௫.

௩. அபபோ யேசு கையை நீடடி, அவனைத தொடடு: எனககு மனதுணடு, சுததமாகெனறார். உடனே அவன குஷடரோகஞ சுததமாசசுது.

௪. யேசு அவனுடனே: நீ ஒருததருககுஞ சொல்லாத படிக்குப பார, ஆனாலும * போய ஆசாரியனுககு உனனைக காணபிதது, மோசே கறபிதத காணிக்கையை அவர்க ளுககுச சாடசியாகச செலுததெனறார. * ௩. மோ. ௰௪, ௨. ௩.

அவர் சேர்வைகாறனுடைய வேலைககாறனைக குணமாககினது. லூ. ௭, ௧—௰.

௫. யேசு கபபறநகூமுககுளப பிறவேசிககையில, நூறறுககுச சேர்வைகாறனொருவன அவரணடை வநது அவ ரை வேணடிக கொணடு:

௬. ஆணடவரே, என வேலைககாறன மிகவும உபாதிபபடடு வீடடிலே திமிர்வாதமாயக கிடககிறான எனறான.

௭. யேசு அவனுடனே: நான வநது அவனைக குண மாககுவேனெனறார.

௮. சேர்வைகாறன பிறதியுததாரமாகச சொனன தாவது: ஆணடவரே, நீர் என தலைவாசலுககுளப பிறவேசிகக நான பாததிரவானலல, ஒரு வாரதத மாததிரஞ சொலலும, அபபோ என வேலைககாறன ஆரோககியமாவான.

௯. அதெனனாலநான அதிகாரததுககுக கீழான மனுஷனாயிருநதும, எனககுக கீழாயிருககிற சேவகரி னனைக கொணடு, நான ஒருவனைப போவெனகப போ றான, பினனொருவனை வாவெனக வருகிறான, என பணிவிடைகாறனுககு: இதைச செயயெனறுச சொலலச செயகிறானெனறான.

௰. யேசு இதைககேடடு ஆசசரியபபடடுப பினசெலலு கிறவர்களுடனே சொனனதாவது: மெயயாக உ ஙகளுககுச சொலலுகிறேன, இஸறவேலிலே முத லாய நான இபபடிககொதத விசுவாசததைக கணட திலலை.

௰௧. ஆனாலுங்களுக்குச்சொல்லுகிறேன், அநேகம்பேர் *கிழக்கிலும்மேற்கிலுமிருந்து வந்து, வானராட்சியத்திலே ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபென்பவர்களுடனேகூடப்பந்தியிருப்பார்கள்.

* யெசா. ௪௯, ௰௨.

௰௨. *ராட்சியத்தின்புத்திரரோவென்றால் எல்லாத்துக்கும்புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள், அங்கே அழுகையும்பல்லுக்கடிப்புமுண்டாயிருக்குமென்றார். * ௨௫, ௩௰.

௰௩. அப்போ யேசு சேர்வைகாறனுடனே: போ, நீவிசுவாசித்தப்படி உனக்காகக்கடவதென்றார். அந்தநாழிகையிலே அவனவேலைக்காறன் ஆரோக்கியமானான்.

அவர் பேதுருவின் மாமியையும் அநேகம் நோவாளிகளையுங்குணமாக்கினது.

௰௪. *யேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமிசுரமாய்க்கிடக்கிறதைக்கண்டு, * மாற். ௧, ௨௯—௩௪.

௰௫. அவள் கையைத்தொட்டார்: அப்போ சுரம் அவளைவிட்டுநீங்கிற்று. அவளெழுந்திருந்து அவர்களுக்கூழியஞ்செய்தாள்.

௰௬. ஆனால் அஸ்தமனமானபோது பிசாசுபிடித்த அநேகம்பேரை அவரண்டைக்குக்கொண்டுவந்தார்கள். அவர் ஆவிகளை வார்த்தையினாலே துரத்திவிட்டு, பிணியாளிகளெல்லாரையுங்குணமாக்கினார்.

௰௭. அவர் நம்முடைய பெலவீனங்களைத்தம்மேலேபோட்டுக்கொண்டு, நம்முடைய நோக்காடுகளைச்சுமந்தாரென்று *யெசாயாதீர்க்கதரிசியினாலே உரைக்கப்பட்டதுநிறைவேறும்படியாகத்தானே. * யெசா. ௫௩, ௪.

அவர்தம்மைப்பின்செல்லுகிறவர்களுக்குச்சொன்ன புத்தி. லூ. ௯, ௫௭—௬௰.

௰௮. ஆனால் யேசு தம்மைச்சுற்றிலும் அநேகங்கும்பல்களைக்கண்டு, அக்கரைக்குப்போகக்கற்பித்தார்.

௰௯. வேதபாரகனொருவன் சேர்ந்துவந்து, அவருடனே போதகரே, நீர் எங்கேபோனாலும் உம்மைப்பின்செல்லுவேனென்றான்.

௨௰. யேசு அவனுடனே: நரிகளுக்குக்குழிகளுண்டு, ஆகாசத்துப்பறவைகளுக்குக்கூடுகளுமுண்டு, *மனுஷனுடையகுமாரனுக்கோ தலைசாய்க்கிடமில்லையென்றார். * ௨. கொரி. ௮, ௯. சகரி. ௯, ௯.

௨௰௧. ஆனால் அவருடையசீஷர்களிலே வேறொருத்தன் அவருடனே: ஆண்டவரே, நான்முந்திப்போய், என்தகப்பனை அடக்கம்பண்ண எனக்குத்தாரங்கொடுமென்றான்.

உஉ. யேசுவோவென்றாலவனுடனே: என்னைப்பின்சென்றுவா; * மரித்தோர் தங்கள் மரித்தோரையடக்கம்பண்ணட்டுமென்றார். * ஏபே. உ, க. க. தீமோ. ரு, சா. அபி. ஙு, க.

அவர்கடலுக்கொந்தளிப்பையமர்த்தினது.

மாற். ச, ஙரு—சக. லூா. அ, உஉ—உரு.

உங. அவர்படகிலேறுகிறபோது அவர்சீஷர்கள் அவர்பிறகே சென்றார்கள்.

உச. இதோ, படகு அலைகளாலே மூடப்படத்தக்கதாய்க் கடலிலே பெரிய கொந்தளிப்பெடுத்தது; அவரோவென்றால் நித்திரைபண்ணினார்.

உரு. அப்போ அவருடைய சீஷர்கள் சேர்ந்துவந்து * அவரையெழுப்பி: ஆண்டவரே, எங்களை ரட்சியும், மடிந்துபோகிறோமென்றார்கள். * சங்கீ. ஙரு, உங. சச, உச.

உசா. அப்போ அவரிவர்களுடனே: அற்பவிசுவாசிகளே, ஏன் பயமடைந்திருக்கிறீர்களென்றுசொல்லி, எழுந்திருந்து காற்றுகளையுங்கடலையும் அதட்டினார்; அப்போ மகா அமைச்சல் உண்டாச்சுது.

உஎ. ஆனால் மனுஷர் ஆச்சரியப்பட்டு: இவரெப்படிப்பட்டவரோ, காற்றுகளுங்கடலும் இவருக்குக் கீழ்ப்படியுதே என்றார்கள்.

அவர்பிசாசுகளைத்துரத்தி, அதுகளைப்பண்ணிகளுக்குள்ளப் போகஉத்தாரங்கொடுத்தது.

மாற். ரு, க—உய. லூா. அ, உசா—ஙகூ.

உஅ. அவர் அக்கரையிலே கெர்கேசேனர் தேசத்திலே வந்தபோது, பிசாசுபிடித்த இரண்டுபேர் பிரேதக்கல்லறைகளிலிருந்து புறப்பட்டு அவருக்கெதிராக வந்தார்கள். அவர்கள் மகா கொடியராயிருக்கையாலந்த வழியாக ஒருவனும் நடக்கக்கூடாதிருந்தது.

உகூ. இதோ அவர்கள்: யேசுவே, பராபரனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்குமென்ன, * காலம் வருமுன்னே எங்களை உபாதிக்கவிங்கே வந்தீரோ வென்றுகூப்பிட்டார்கள். * உ. பேது. உ, ச.

ஙய. அவர்களுக்கப்புறந்தூரமாய் அனேகம்பண்ணிகளுடைய மந்தைமேய்ந்துகொண்டிருந்தது.

ஙக. அப்போ பிசாசுகள்: நீரெங்களைத்துரத்துகிறதானால், பண்ணிகளின் மந்தையிலே நாங்கள் போக உத்தாரங்கொடுமென்று அவரை வேண்டிக்கொண்டுது.

ஙஉ. அவரதுகளுக்கு: போங்கோளென்றார். அதுகள் புறப்பட்டு, பண்ணிகளுடைய மந்தைக்குள்ளப் போச்சுது; இதோ பண்ணிகளுடைய மந்தையெல்லாம் உயர்ந்தமேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, தண்ணீரிலே மாண்டுது.

௩௩. ஆனாலமேயததவர்கள ஓடிபபட்டணததிலே சென்றுசகலததையுமபிசாசுபிடிததவர்களுடைய வரததமானததையுமஅறிவிததார்கள.

௩௪. அபபோதுபட்டணததாரெலலாமயேசுவுககெதிராகபபுறபபட்டு, அவரைககாணடுதங்கள எலலைகளைவிட்டுபபோகஅவரை வேண்டிககொணடார்கள.

௯. அதிகாரம.

கிறிஸ்ததுதிமிர்வாதககாறனைசசொஸததமாககினது.

அபபோ * அவர்படவிலேறி, திரும்பககரையபபட்டுதமமுடையபட்டணததிலவந்தார். * மாற்கு. ௨. ௧——௰௨. லூ. ௫. ௰௭——௨௬.

௨. தோபடுககையினமேலகிடககிறஒருதிமிர்வாதககாறனைஅவரணடைககுககொணடுவந்தார்கள. யேசுஅவர்களுடையவிசுவாசததைககணடு, திமிர்வாதககாறனுடனே: மகனே, திடனகொள, உனபாவஙகள உனககுமனனிககபபட்டுதென்றார்.

௩. அபபோ சிலவேதபாரகரில சிலர் தஙகள உளளததிலே: இவன தேவதூஷணஞ்சொலலுகிறானென்றார்கள.

௪. ஆனால யேசு அவர்கள நினைவுகளை கணடு சொனனதாவது: நீஙகள உஙகள இருதயஙகளிலே பொலலாததுகளை நினைககிறதேதது.

௫. ஏனெனில எதுஎளிதாயிருககுது, பாவஙகள உனககுமனனிககபபட்டுதென்று சொலவதெளிதோ, எழுந்திருநதுநடவென்றுசொலவதெளிதோ.

௬. ஆனாலபூமியிலேபாவஙகளைமனனிககமனுஷனுடையகுமாரனுககுஅதிகாரமுணடென்றுநீஙகளஅறியவேணுமென்று சொலலி, திமிர்வாதககாறனுடனே: நீ எழுந்திருநது * உனபடுககையை எடுததுககொணடுஉனவளவுககுபபோவென்றார்.
* யோவ. ௫. ௮.

௭. அபபோ அவன எழுந்திருநது தன வளவுககுபபோனான.

௮. கும்புகள அதைககணடு ஆசசரியபபட்டு, மனுஷருககுஅபபடிககொததஅதிகாரததைககொடுததபராபரனைமகிமைபபடுததினார்கள.

அவர்மததேயுவை அழைததது மஉபவாசததினபேரிலேஉததாரஞசொனனதும.

௯. யேசு அவ்விடமவிட்டபபாலே போகையில, * ஆயததுறையில உடகார்ந்திருநதமததேயுவெனனபபட்டஒருமனுஷனைககணடார். அவனுடனே: எனனைபபினசெனறுவாவென்றார், அவனெழுந்திருநது அவரையபினசென்றான. * மாற்கு ௨. ௰௪——௨௨. லூ. ௫. ௨௭——௩௨.

௰. அப்போ சம்பவித்ததென்னென்றால், அவர் வீட்டிலே பந்தியிருக்கையிலே, இதோ அநேகம் ஆயக்காரரும் பாவிகளும் வந்து, யேசுவோடும் அவர் சீஷர்களோடுங்கூடப் பந்தியிருந்தார்கள்.

௰௧. பரிசேயர் அதைக் கண்டு அவருடைய சீஷர்களுடனே: உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் அசனம் பண்ணுவானேனென்றார்கள்.

௰௨. யேசுவோவென்றால் அதைக் கேட்டு அவர்களுக்குச் சொன்னதாவது; பலவான்களுக்கு வைத்தியன் தேவையாயிராமல், பிணியாளிகளுக்குத் தேவையாயிருக்கிறது.

௰௩. ஆனால் * பலியையல்ல, இரக்கத்தை விரும்புகிறேனென்றதேதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கோள், அதேதென்னால் நீதிமான்களையல்ல, ** பாவிகளைக் குணப்படுதலுக்கழைக்க வந்தேனென்றார். * ஓசே. ௬, ௬. மிகா. ௬, ௭. ௮. ** ௧. தீமோ. ௧, ௰௫.

௰௪. அந்நேரத்திலே யோவானுடைய சீஷர்கள் அவரண்டைக்கு வந்து: நாங்களும் பரிசேயரும் அநேகந்தரம் உபவாசம் பண்ணக்கொள்ள உம்முடைய சீஷர்கள் உபவாசம் பண்ணாமலிருப்பானேனென்றார்கள்.

௰௫. யேசு அவர்களுக்குச் சொன்னதாவது: கலியாண மனுஷர், * மணவாளன் அவர்களோடிருக்குமட்டுந் துயரப்படக்கூடுமோ, மணவாளன் அவர்களை விட்டெடுபட்டுப்போகிற நாள்கள் வரும், அப்போ உபவாசமாயிருப்பார்கள். * யோ. ௩, ௨௯.

௰௬. ஒருவனுங் கோடித்துணியைப் பழைய வஸ்திரத்தின்மேலே போட்டிணையான், ஏனென்றால் அதிலே இணைத்தத் துண்டு வஸ்திரத்தை விட்டெடுபட்டுப்போய், பின்னையுங் கெட்ட பீறலாகுது.

௰௭. திராட்சப்பழங்களின் புதுரசத்தைப் பழந்துருத்திகளிலே வார்ப்பாருமில்லை, வார்த்தால், துருத்திகள் பீறுண்டு ரசமுஞ் சிந்திப்போய்த் துருத்திகளுங் கெட்டுப்போம். புதுரசத்தைப் புதுத்துருத்திகளிலே வார்த்து வைக்கிறார்கள் அப்போ இரண்டும் பத்திரப்படுமென்றார்.

அவர் பெரும்பாடுள்ள ஸ்திரீயை ஆரோக்கியமாக்கினதும் யவீருவினுடைய மகளை எழுப்பினதும். மற்கு. ௫, ௨௨—௪௩. லூ. ௮, ௪௧—௫௬.

௰௮. அவர் இதுகளை அவர்களோடே பேசுகிறபோது, இதோ ஒரு தலைவன் சேர்ந்து அவரைப் பணிந்து: என் மகள் இந்நேரத்திலே செத்துப்போனாள், ஆகிலும் நீர் வந்து அவள்மேலே உமது கையை வையும், அப்போ பிழைப்பாளென்றான்.

௰௯. யேசு எழுந்திருந்து தம்முடைய சீஷர்களோடுங்கூட அவன் பிறகே போனார்.

௨௰. இதோ பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ பிறகே சேர்ந்து வந்து அவர் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.

௨௧. ஏனெனில் தன்னுள்ளத்திலே: அவருடைய * வஸ்திரத்தை மாத்திரந் தொட்டேனாகில் சொஸ்தமாவேனென்றாள். * ௰௪. ௩௬.

௨௨. இயேசுவோவென்றால் திரும்பி, அவளைக்கண்டு: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்ததென்றார். அந்நேரமுதலே ஸ்திரீ சொஸ்தமானாள்.

௨௩. இயேசு தலைவன் வீட்டிலே வந்து, தாரைக்காறரையும் இரைக்கிற சந்தடியையுங் கண்டு,

௨௪. அவர்களுடனே: அகலப்போங்கோள், ஏனெனில் சிறுபெண் மரித்திராமல் * நித்திரைபண்ணுதென்றார், ஆனால் அவரை நகைத்தார்கள். * யோவ. ௰௧. ௰௧.

௨௫. கும்பு வெளியே துரத்தப்பட்டபின்பு, அவர் உள்ளே பிரவேசித்து, அதின் கையைப் பிடித்தார், அப்போ சிறுபெண் எழுந்திருந்துது.

௨௬. இந்தக் கீர்த்தி அத்தேசத்திலெங்கும் பிறபலியமாச்சுது.

அவர் இரண்டு குருடரையும் பிசாசு பிடித்த ஒருவனையும் இரட்சித்தது.

௨௭. இயேசு அவ்விடம் விட்டப்பாலே போகையில், இரண்டு குருடர் அவரைப் பின்சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கிரங்குமென்று கூப்பிட்டார்கள்.

௨௮. அவர் வீட்டிலே வந்தபின், அந்தக் குருடர் அவரண்டை வந்தார்கள். இயேசு அவர்களுடனே: இதைச் செய்ய என்னாலே கூடுமென்று விசுவாசிக்கிறீர்களோ என்றார். அவருக்கு: ஆண்டவரே, ஆமென்றார்கள்.

௨௯. அப்போதவர் கண்களைத் தொட்டு: * உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்காகக்கடவதென்றார். * அ. ௰௩.

௩௰. அப்போ அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டுது. இயேசுவோவெனில்: ஒருவனுமிதையறியாதபடிக்குப் பாருங்கோளென்று அவர்களுக்குக் கெட்டியாய்க் கற்பித்தார்.

௩௧. ஆனால் அவர்கள் புறப்பட்டு, அத்தேசத்திலெங்கும் அவரைப் பிரசித்தம்பண்ணினார்கள்.

௩௨. அவர்கள் புறப்படுகையில், இதோ பிசாசுபிடித்த ஊமையான மனுஷனை அவரண்டைக்குக் கொண்டுவந்தார்கள்.

௩௩. பிசாசு துரத்தப்பட்டபின், ஊமையன் பேசினான். கும்புகள் ஆச்சரியப்பட்டு: இஸ்றவேலிலே இப்படி ஒருக்காலுங் கண்டதில்லையென்றார்கள்.

௩௪. பரிசேயரோவென்றால்: * பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறானென்றார்கள்.

* ௰௨. ௨௪.

அவர் மேய்ப்பனில்லா ஆடுகள் மேலே மனதுருகினது.

௩௫. இயேசு

௩௫. யேசு சகல பட்டணங்களிலுங் கிறாமங்களிலுஞ் சுத்திநடந்து, அவர்கள் ஆலயங்களிலே பிறசங்கம் பண்ணி, ராட்சியத்தின் சுவிசேஷத்தைப் பிறசங்கித்து, சனத்திலிருந்த சகல வியாதியையுஞ் சகல நோக்காட்டையுங் குணமாக்கினார்.

௩௬. ஆனாலவர் கும்புகளைக் காணுகையிலே, அவர்களின்பேரிலே மனதுருகினார், அதேனென்றால் * மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலே தொக்குச்சுப்போனவர்களுஞ் சிதறிப்பட்டவர்களுமாயிருந்தார்கள். * சகரி, ௰. ௨. மாற்கு. ௬. ௩௪.

௩௭. அப்போதவர் தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னதாவது: * அறுப்போ மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம். * லூ, ௰. ௨. யோவ. ௪. ௩௫.

௩௮. ஆனபடியால் அறுப்புக்கச்சமானன் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்ப அவனை வேண்டிக்கொள்ளுங்கோளென்றார்.

௰. அதிகாரம்.

கிறீஸ்து அப்போஸ்தலரை ஊழியத்துக்கனுப்பி அவர்களுக்குக் கொடுத்த அதிகாரமுங் கட்டளைகளும்.

மாற்கு. ௬. ௭—௰௯. லூ. ௯. ௧—௫.

அப்போதவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களைத் தம்மிடத்திலழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்துவதற்குஞ் சகல வியாதியையுஞ் சகல நோக்காட்டையுங் குணமாக்குவதற்கும், அவர்களுக்கதிகாரங் கொடுத்தார்.

௨. பன்னிரண்டு அப்போஸ்தலருடைய * நாமங்களாவது: முந்தினவன் பேதுருவென்னப்பட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயாவும், செபெதேயுவின் குமாரனாகியாகோபும், அவன் சகோதரனாகிய யோவானும்.

* அப்போ. ௧. ௰௩.

௩. பிலிப்பும், பற்தொலோமேயும், தோமாவும், ஆயக்காரன் மத்தேயும், அல்பேயின் குமாரனாகியாகோபும், * ததேயுவென்கிற மறுநாமமுள்ள லெபேயும்.

௪. சீமோன் கானானித்தானும், அவனைக் காட்டிக்கொடுக்கிறவனான யூதா ஸ்காரியோத்துந்தானே.

௫. இந்தப் பன்னிருவரை யேசு அனுப்பி, அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னதாவது: * நீங்கள் புறச்சாதிகளுடைய வழிக்குப் போகாமலும், ** சமாரியர் பட்டணத்திலே பிரவேசியாமலும், * அப்போ. ௰௩. ௪௬. ** ௨. ராசா. ௰௭. ௨௪. மு

௬. * இஸ்ரவேல் வீட்டினுடைய காணாமல்போன ஆடுகளண்டைக்குப் போங்கோள்.

* ௰௫. ௨௪.

௭. போகையிலே: * வானராட்சியஞ் சமீபமாயச் சேர்ந்ததென்று பிறசங்கியுங்கோள். * ௩. ௨. ௪. ௰௭.

௮. வியாதிக்காரரைக் குணமாக்குங்கோள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கோள், மரித்தோரை எழுப்புங்கோள், பிசாசுகளைத் துரத்துங்கோள். * இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கோள். * அப்போ. ௮, ௰௮—௨௰. ௧. பேது. ௫, ௨.

௯. உங்கள் கச்சைகளில் * பொன்னையாகிலும் வெள்ளியையாகிலுஞ் செம்பையாகிலும்,

* லூ. ௨௨, ௩௫. ௩௬.

௰. வழிக்குப் பையையாகிலும், இரண்டங்கிகளையாகிலும், பாதரட்சைகளையாகிலுந் தடியையாகிலுந் தேடிவைக்காதிருங்கோள், ஏனென்றால் * வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரவானாயிருக்கிறான்.

* லூ. ௰, ௭. ௧. தீமோ. ௫, ௰௮.

௰௧. எந்தப் பட்டணத்திலாகிலுங் கிராமத்திலாகிலும் நீங்கள் பிரவேசித்தீர்களானால், அதிலே பாத்திரவானெவனென்றறிந்துகொண்டு நீங்கள் புறப்படுந்தனையும் அங்கேயிருங்கோள்.

௰௨. ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும்போது அதை வெளில அமைதமினவுங்கோள்.

௰௩. அந்த வீடு பாத்திரமாயிருந்தால், உங்கள் சமாதானம் அதின்பேரிலே வரவும், பாத்திரமல்லாதிருந்ததேயாகில், உங்கள் சமாதானம் உங்களிடமாய்த் திரும்பவுங்கடவது.

௰௪. ஆர் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும் போவாரோ, அந்த வீட்டை அல்லது பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு, உங்கள் கால்களின் தூளை உதறிப்போடுங்கோள்.

௰௫. மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: * ஞாயந்தீர்க்கும் நாளிலே அந்தப் பட்டணத்தாரைப் பார்க்க, சோதோம் கொமோறா தேசத்தாருக்கு நேர்த்தமாயிருக்கும். * ௰௧, ௨௪.

அவர்களுக்கு வருந் துன்பங்களை முன்னறிவித்தது.

௰௬. இதோ * நான் உங்களை ஆடுகளைப்போல ஓநாய்கள் நடுவே அனுப்புகிறேன், ஆனபடியினாலே பாம்புகளைப்போல வினவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாயிருங்கோள்.

* லூ. ௰, ௩. ரோ. ௰௬, ௰௯.

௰௭. ஆனாலும் மனுஷருக்கு எச்சரிக்கையாயிருங்கோள், அதேனென்றால் ஆலோசனைச் சபைகளுக்கு உங்களை * ஒப்புக்கொடுத்து, தங்கள் ஆலயங்களில் உங்களை வாரினாலடிப்பார்கள். * ௨௪, ௯.

௰௮. என்னிமித்தியமாகத் துரைகளண்டைக்கும் ராசாக்களண்டைக்கும், அவர்களுக்கும் புறச்சாதிகளுக்குஞ் சாட்சியாகக் கொண்டுபோயவிடப்படுவீர்கள்.

௰௯. அவர்கள உஙகளை ஒபபுககொடுககுமபோ தோமுவனில; * எபபடி அலலது எனனததைப பேசுவோமெனறுக கவலைபபடாதேயுஙகோள; ஏனெனிலபபேசவேணடியது அநநேரததிலே உஙகளுககுககொடுககபபடும. * மாறகு. ௰௩. ௰௧.

௨௰. அதேதெனனால பேசுகிறவர்கள நீஙகளலல; * உஙகள பிதாவின ஆவி உஙகளிலிருநது பேசுகிறவர். * ௨, மோ. ௪, ௰௧. ௰௭.

௨௧. ஆனாலசகோதரனசசகோதரனையும, பிளளையைததகபபனும, மரணததுககொபபுககொடுபபான. பெறறவருககு விரோதமாகப பிளளைகள எழுமபி, அவர்களைக கொலைபபடுததுவார்கள.

௨௨. நீஙகள என நாமததினிமிததியமெலலாராலும பகைககபபடடிருபபீர்கள; ஆனால முடிவுபரியநதம நிலைததிருபபவனே ரெடசிககபபடுவான.

* அதி. ௨, ௰.

௨௩. ஒரு பட்டணததில உஙகளைத துனபபபடுததுகிறார்களேயானால, மறறப படடணததுககு ஓடிபபோஙகோள. அதேதெனனால உஙகளுககு மெயயாகச சொலலுகிறேன, மனுஷனுடைய குமாரனவருமட டாக நீஙகள இஸறவேலுடைய படடணஙகளைச சுததிமுடியாது.

௨௪. சீஷன போதகனிலும, பணிவிடைககாரன தன எசமானிலும மேலபபடடவனலல.

௨௫. சீஷன தன போதகனைபபோலவும பணிவிடைககாரன தன எசமானைபபோலவுமிருககிறது அவனுககுப போதும; * வீடடெசமானைப பெயெலசெபூலெனறு சொனனார்களானால, அவர் வீடடாரை எததனையதிகம. * ௪, ௩௪.

அவர்களுககுச சொனன ஆறுதல.

௨௬. ஆகையால அவர்களுககுப பயபபடாதேயுஙகோள. ஏனெனில வெளியாககாததமறைபொருளுமிலலை, அறியபபடாத அநதரஙகமுமிலலை.

௨௭. நான உஙகளுககு இருளிலே சொலலுகிறதனை வெளிசசததிலே சொலலுஙகோள; நீஙகள காதிலே கேடகிறதனை வீடுகளமேல பிரசஙகியுஙகோள.

௨௮. ஆததுமததைக கொலலவலலவர்களாயிராமல, சரீரததைக கொலலுகிறவர்களுககு நீஙகள பயபபடாமல, ஆததுமததையுஞ சரீரததையு நரகததிலே கெடுககததகக வலலவருககே பயபபடுஙகோள.

௨௯. இருகாசுககிரணடு அடைககலானகுருவிகள விறகுதலலவோ. எனனாலும உஙகள பிதாவனறிப பேலே அதுகளில ஒனறாகிலுநதரையிலே விழாது.

௩௰. உஙகள தலையின சகலமயிர்களும எணணபபடடிருககுது.

௩௧. ஆனபடியாலபபயபபடாதேயுஙகோள; அநேகமடைககலானகுருவிகளைபபாரககநீஙகள விசேஷிததிருககிறீர்கள.

உணமை

உண்மையான பத்திக கேவினது.

௩௨. எப்போதுமாவனுக்கும் மனுஷர் முன்பாக * என்னை அறிக்கைபண்ணினால், அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதா முன்பாக அறிக்கைபண்ணுவேன். * அறிவி. ௩. ௫.

௩௩. ஆனாலெவனுக்கும் மனுஷர் முன்பாக * என்னை மறுதலிக்கதால், அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதா முன்பாக மறுதலிப்பேன்.

* மாற்கு. ௮. ௩௮. ௨. திமோ. ௨. ௰௨.

௩௪. பூமியின்மேல் * சமாதானத்தை வரப்பண்ண வந்தேனென்றெண்ணிக்கொள்ளாதேயுங்கோள், சமாதானத்தையல்ல, பட்டயத்தை வரப்பண்ண வந்தேன். * லூ. ௰௨. ௫௧—௫௩.

௩௫. அதேதென்றால் மனுஷனை அவன் தகப்பனுக்கும் மகளை அவள் தாய்க்கும் மருமகளை அவள் மாமிக்கும் * விரோதமாயப் பிரியப்பண்ண வந்தேன்.

* மீகா. ௭. ௬.

௩௬. மனுஷனுடைய சத்துருக்கள் அவன் வீட்டார் தானே.

௩௭. * என்னிலும் அதிகமாகத் தகப்பனையானாலுந் தாயையானாலுஞ் சினேகிக்கிறவன் எனக்குப் பாத்திரவானல்ல, என்னிலும் அதிகமாக மகனையானாலும் மகளையானாலுஞ் சினேகிக்கிறவன் எனக்குப் பாத்திரவானல்ல. * லூ. ௰௪. ௨௬.

௩௮. தன் * சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்செல்லாதவன் எனக்குப் பாத்திரவானுமல்ல.

* ௰௬. ௨௪.

௩௯. தன் சீவனைக் கண்டடைந்தவன் அதையிழந்து போவான், என் நிமித்தியமாகத் தன் சீவனையிழந்தவனோ அதைக் கண்டடைவான்.

௪௰. உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவனோ என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான். * யோவ. ௰௩. ௨௰.

௪௧. தீர்க்கதரிசியென்கிற நாமத்துக்காகத் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசியினுடைய பலனை அடைவான். நீதிமானென்கிற நாமத்துக்காக நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுடைய பலனை அடைவான்.

௪௨. எவனாகிலுஞ் சீஷனென்கிற நாமத்துக்காக * இந்தச் சிறியவர்களிலொருவனுக்கு ஒரு கலசம் குளிர்ந்த தண்ணீர் மாத்திரங் குடிக்கக்கொடுத்தால், தன் பலனை இழந்துபோகானென்று மெய்யாகவே சொல்லுகிறேனென்றார். * ௨௫. ௪௰. மாற்கு. ௯.
௪௧. எபிரே. ௬. ௰.

௰௧. அதிகாரம்.

யோவான் கிறிஸ்துவினிடத்துக்கு ரெண்டு சீஷரை
அனுப்பினபோதவர்பகர்ந்தவசனங்கள்.

அப்பொசம்புவித்ததென்றால், யேசு தம்முடைய பனிரெண்டு சீஷாக்களுக்குக் கற்பனைகொடுத்து முடித்தபின்பு, அவர்களுடைய பட்டணங்களிலே உபதேசிக்கவும் பிரசங்கம்பண்ணவும் அவ்விடம் விட்டுப்புறப்பட்டுப்போனார்.

௨. ஆனால் காவலிலிருக்கிற * யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் கேட்டு, தன் சீஷர்களில் ரெண்டுபேரை அனுப்பி: * லூக். ௭, ௰௮—௩௫.

௩. * வருகிறவர் நீர்தானோ, அல்லது வேறொருவருக்குக் காத்திருப்போமோ வென்றவரைக் கேட்கச்சொன்னான். * ௫. மோ. ௰௮, ௰௫.

௪. யேசு அவர்களுக்குப் பிறத்தியுத்தாரமாகச்சொன்னதாவது: நீங்கள் போய், கேட்கிறதையுங் காண்கிறதையும் யோவானுக்கு அறிவியுங்கோள்.

௫. * குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோரெழுந்திருக்கிறார்கள், ** தரித்திரருக்குச்சுவிசேஷம் அறிவிக்கப்படுகுது.

* ஏசா. ௩௫, ௫. ௬. ** ஏசா. ௬௧, ௧.

௬. ஆர் என்னிடத்திலிடறல்ப்படாதிருக்கிறானோ அவன் பாக்கியவானென்றார்.

௭. அவர்கள் போறபோதோவென்னில யேசு கும்புகளுக்கு யோவானைக்குறித்துச்சொல்லத்துவக்கினதாவது: வனாந்திரத்தில எதைப்பார்க்கப்புறப்பட்டீர்கள், காத்தடித்தசையப்படும் நாணலையோ,

௮. அல்லது எதைப்பார்க்கப்புறப்பட்டீர்கள், மெல்லிய வஸ்த்திரங்களைத் தரித்த மனுஷனையோ, இதோ மெல்லிய வஸ்த்திரங்களை உடுக்கிறவர்கள் அரசர் மாளிகைகளிலிருக்கிறார்கள்.

௯. அல்லது எதைப்பார்க்கப்புறப்பட்டீர்கள், தீர்க்கதரிசியையோ, ஆம், தீர்க்கதரிசியிலும் அதிகப்பட்டவனையென்றுங்களுக்குச்சொல்லுகிறேன்.

௰. அதேதென்றால்: இதோ * நாம் நம்முடைய தூதனை உம்முடைய முகத்துக்கு முன்பாக அனுப்புகிறோம், அவன் உமக்கு முன்னே உமது வழியை ஆயத்தம் பண்ணுவானென்றெழுதிக்குறிக்கப்பட்டவனவன்தானே.

* மல்யாகி. ௩, ௧.

௰௧. உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்: ஸ்திரீகளிடத்தில பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப்பார்க்கப் பெரியவன் எழும்பினதில்லை. வானராட்சியத்திலே சிறியவனோ அவனைப்பார்க்கப் பெரியவனாயிருக்கிறான்.

௰௨. ஆனால் யோவான் ஸ்நானகன் நாளத்துவக்கி இறையிலவரைக்கும் வானராட்சியம் பெலப்பந்தப்

. படுகுது

படுத்து, பெலவந்தம்பண்ணுகிறவர்கள் அதைப்பறித்துக்கொள்ளுகிறார்கள்.

௰௩. அதேதென்னில் சகல தீர்க்கதரிசிகளும் நியாயப்பிரமாணமுந் தீர்க்கதரிசனம் உரைத்தது யோவான் மட்டுக்குந்தானே.

௰௪. நீங்கள் ஏற்றுக்கொள்ளமனதாயிருந்தால், அவனே * வரப்போற எலியாவாயிருக்கிறான். * ௰௭, ௰௨. மலேயாகி ௪, ௫.

௰௫. கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவான்.

௰௬. ஆனால் * இந்தச் சந்ததியை ஆருக்கொப்பிடுவேன், சந்தைவெளிகளில் உட்கார்ந்து தங்கள் தோழரோடே: * லூ. ௭, ௩௧—௩௫.

௰௭. நாங்கள் உங்களுக்குக் குழலூதினோம், நீங்கள் கூத்தாடவில்லை, உங்களுக்குப் புலம்பினோம், நீங்கள் மாரடிக்கவில்லையென்று அவர்களுக்கு எதிர்கூப்பிடுகிற குழந்தைகளுக்கொப்பாயிருக்குது.

௰௮. அதேதென்னால் யோவான் வந்து * சாப்பிடாமலுங் குடியாமலுமிருந்தான். அதற்கவர்கள்: பிசாசைக்கொண்டிருக்கிறானென்கிறார்கள். * ௩, ௪.

௰௯. * மனுஷனுடைய குமாரன் வந்திருந்து சாப்பிட்டுக் குடிக்கிறார், அதற்கவர்கள்: இதோ போசனப்பிரியனும் மதுபானனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்குஞ் சிநேகிதனென்கிறார்கள்; ஆனாலு ஞானந்தன் பிள்ளைகளால் நீதிவிளங்கப்பட்டுதென்றார். * ௯, ௰. ௰௧.

௨௰. அப்போதவர் தம்முடைய மிச்சமான வல்லமைகள் சம்புவிக்கப்பட்ட பட்டணங்கள் குணப்படாமலேபோனதுக்காக, அதட்டத்துவக்கிச் சொன்னதாவது:

௨௧. * கோராசீனே, உனக்கையோ, பெத்சாயித்தாவே, உனக்கையோ, ஏனென்னில் உங்களில் சம்புவிக்கப்பட்ட வல்லமைகள் தீருவிலுஞ் சீதோனிலுஞ் சம்புவித்திருந்தால், பூறுவத்திலே கோட்டடியிலுஞ் சாம்பலிலுமிருந்து குணப்படுவார்கள். * லூ. ௰, ௰௩.

௨௨. ஆனாலு உங்களுக்குச் சொல்லுகிறேன்: நியாயந்தீர்க்கும் நாளிலே உங்களைப்பார்க்கத் தீருவுக்குஞ் சீதோனுக்கும் நேர்த்தமாயிருக்கும்.

௨௩. வானபரியந்தம் உயர்ந்த கப்பர்நகூமே, நீயுமோ பாதாளபரியந்தந் தாழ்த்தப்பட்டுப்போவாய். அதேதென்னால் உன்னில் சம்புவித்த வல்லமைகள் சோதோமிலே சம்புவித்திருந்தாலது இந்நாள்வரைக்குமிருக்கும்.

௨௪. ஆனால் உங்களுக்குச் சொல்லுகிறேன்: * நியாயந்தீர்க்கும் நாளிலே உன்னைப்பார்க்கச் சோதோம்தேசத்தாருக்கு நேர்த்தமாயிருக்குமென்றார். * ௰, ௰௫.

அவர் சீஷவர்களின் குணப்படுதலுக்காகப் பிதாவை மகிமைப்படுத்தினதும் மனஸ்தாபமுள்ள பாவிகளைத் தம்மண்டை வரவழைத்ததும்.

௨௫. அந்த வேளையிலே *யேசு மறுமொழியாகச் சொன்னதாவது: பிதாவே, வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, **நீர் இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்தினீரென்றதற்காக உம்மைத் துதிக்கிறேன்.
* லூ. ௰. ௨௧. ௨௨. ** ௧. கொரி. ௧. ௧௯—௨௬.
௪௭. அ. ௩.

௨௬. ஆம், பிதாவே, அப்படியே உமக்கு முன்பாகப் பிரியமாயிருந்தது.

௨௭. என் பிதாவினாலே எனக்குச் சகலமும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்குது, பிதாதவிர, ஒருவனுங் குமாரனை அறியான்: குமாரனும் குமாரன் எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறானோ அவனுந்தவிர, ஒருவனும் பிதாவையும் அறியான். * ௨௮. ௰௮. யோவா. ௩. ௩௫. ௰௭. ௨.

௨௮. பிரயாசப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கோள், நான் உங்களை முசிப்பாறுவேன்.

௨௯. என் நுகத்தடியை உங்கள் மேலே ஏற்றுக்கொண்டு என்னிடத்திலே கற்றுக்கொள்ளுங்கோள், ஏதேனென்றால் மெத்தனவும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன், அப்படியே உங்கள் ஆத்துமாக்களுக்கு முசிப்பாறுதல் கிடைக்கும்.

௩௰. ஏனென்றால் என்னுகத்தடி மெதுவும், என் சுமை லேசுமாயிருக்குதென்றார். * ௧. யோவா. ௫. ௩.

௰௨. அதிகாரம்.

சீஷர்களுக்குக் கிறிஸ்து பரிந்துபேசினது.

கிறிஸ்துநாதர் யோவானாலே ஞானஸ்நானம் பெற்று, வனாந்திரத்திலே சோதிக்கப்பட்டது.
மத். ௩ / ௧. மு. ௪ / ௧—௰௧. லூ. ௩ / ௧. மு. ௪ / ௧—௰௩.

பராபரனுடைய குமாரனாகிய யேசுக்கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் துவக்கம்.

௨. தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களிலே: இதோ நாம் * நம்முடைய தூதனை உமக்கு முன்னுக்கு முன் அனுப்புகிறோம்; அவன் உமது வழியை உமக்கு முன்னே ஆயத்தம்பண்ணுவானென்றும், * மலேயாகி. ௩ / ௧.

௩. * வனாந்திரத்திலே கர்த்தருடைய வழியை ஆயத்தப்படுத்துங்கோள், அவருடைய பாதைகளைச் செவ்வைபண்ணுங்கோளென்று கூப்பிடுகிறவனுடைய சத்தமுண்டென்றும் எழுதியிருக்கிறபிரகாரமாய், * யெசா. ௪௰ / ௩. யோவா. ௧ / ௨௩.

௪. யோவான் வனாந்திரத்திலே ஞானஸ்நானங்கொடுத்து, பாவமன்னிப்புக்கென்று குணப்படுதலின் ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருந்தான்.

௫. அவனண்டைக்கு யூதேயா தேசத்தாரனைவரும் யெருசலேம் பட்டணத்தாரும் புறப்பட்டுப்போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, அனைவரும் யோர்தான் நதியிலே அவனாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௬. யோவானோவென்னில் ஒட்டகமயிர் உடுப்பாகத்தன்னரையிலே வார்க்கச்சையுந் தரித்துக்கொண்டவனும் வெட்டுக்கிளிகளையுங் காட்டுத்தேனையும் போசிக்கிறவனுமாயிருந்தான்.

௭. அவன் பிரசங்கம் பண்ணிச்சொன்னதாவது:* என்னிலும் பெலத்தவர் எனக்குப்பின்னாக வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்தவிழ்க்க நான் பாத்திரவானல்ல.* யோவ. ௧, ௨௭.

௮. நானோ* சலத்தினாலே உங்களுக்கு ஞானஸ்நானம் பண்ணிவித்தேன், அவரோ பரிசுத்த ஆவியினாலே உங்களுக்கு ஞானஸ்நானம் பண்ணிவிப்பாரென்றான்.*
யோவ. ௧, ௨௬.

௯. அந்நாள்களிலே சம்பவித்ததென்னவென்றால், யேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து, யோர்தானதியிலே யோவானாலே ஞானஸ்நானம் பெற்றார்.

௰. அவர் தண்ணீரிலிருந்து ஏறுகிறபோது, உடனேவானங்கள் திறவுண்டதையும்* ஆவி புறாப்போலே அவர்மீதிலிறங்குகிறதையுங் கண்டான்.*
யோவ. ௧, ௩௨—௩௪.

௰௧. நீர் நாம் பிரியமாயிருக்கிற நம்முடைய நேசகுமாரனாயிருக்கிறீரென்று ஒரு சத்தமும் பரமண்டலங்களிலிருந்துண்டாச்சுது.

௰௨. உடனே ஆவியானவர் அவரை வனாந்திரத்துக்கேகப்பண்ணினார்.

௰௩. அவர் அங்கே வனாந்திரத்திலே நாற்பதுநாளிருந்து, சாத்தானாலே சோதிக்கப்பட்டு, மிருகங்களோடேயிருந்தார், தேவதூதர் அவருக்கு ஊழியஞ்செய்தார்கள்.

அவர் சுவிசேஷத்தை அறிவிக்கவுஞ் சீஷரை அழைக்கவும் வந்தது, மத. ௪, ௰௨—௨௨.

௰௪. ஆனாலே யோவான் ஒப்புக்கொடுக்கப்பட்டபின்பு யேசு கலிலேயாவிலே வந்து, பராபரனுடைய ராட்சியத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து:

௰௫. *காலம் நிறைவேறிப் பராபரனுடைய ராட்சியஞ் சமீபமாய்ச் சேர்ந்தது, குணப்பட்டுச் சுவிசேஷத்தை விசுவாசியுங்கோளென்றார்.* கலா. ௪, ௪.

௰௬. அவர் கலிலேயாக்கடலண்டை நடக்கக்கொள்ள சீமோனையும் அவன் சகோதரன் அந்திரேயாவையுங் கடலிலே வலைபோடக்கண்டார், ஏனென்றால் மீன்பிடிக்கிறவர்களாயிருந்தார்கள்.

௰௭. யேசு அவர்களோடே: என்பிறகே வாருங்கோள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேனென்றார்.

௰௮. உடனே தங்கள் வலைகளை விட்டு அவரைப் பின்சென்றார்கள்.

௰௯. அவர் அவ்விடம் விட்டுச் சற்றப்பாலே போனபோது, செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபையும் அவன் சகோதரனாகிய யோவானையும் படகிலே வலைகளைப் பொத்தக்கண்டார்.

௨௰. உடனே அவர்களை அழைத்தார், அப்போது தங்கள் தகப்பனாகிய செபெதேயுவைக் கூலியாட்களோடே படவிலே விட்டு, அவர் பிறகே போனார்கள்.

அவர் கப்பர்நாகூமிலே போதகம் பண்ணிப் பிசாசுகளைத் துரத்தி வியாதிக்காரரைச் சுகமாக்கினது. லூ. ௪, ௩௧. ௱.

௨௧. பின்பு கப்பர்நாகூமுக்குள் பிரவேசித்தார்கள், உடனே அவர் ஓய்வு நாளிலே ஆலயத்துக்குள்ளே பிரவேசித்து, போதகம் பண்ணினார்.

௨௨. இவருடைய போதகத்துக்கு அதிசயப்பட்டார்கள், ஏனெனில் வேதபாரகரைப் போலல்ல * அதிகாரமுடையவரைப் போலே அவர்களுக்குப் போதகம் பண்ணுகிறவராயிருந்தார். * மத்தே. ௭, ௨௯. யோவா. ௭, ௪௬.

௨௩. * அவர்களுடைய ஆலயத்தில் அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷனிருந்தான்.

௨௪. அவன்: ஐயோ, * எங்களுக்கும் உமக்குமென்ன, யேசு நாசரேத்தானே, எங்களைக் கெடுக்க வந்தீரோ, உம்மை ஆரென்றறிவேன், நீர் பராபரனுடைய பரிசுத்தர்தானேயென்று கூப்பிட்டான். * ௫. ௭.

மத்தே. ௮, ௨௯.

௨௫. அப்போ யேசு: நீ மவுனமாகி அவனை விட்டுப் புறப்படென்று அதட்டினார்.

௨௬. அப்போ அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, மகா சத்தமாய்க் கூப்பிட்டுப் புறப்பட்டுது.

௨௭. அதினாலெல்லாரும்: இதென்ன, இவர் அதிகாரத்துடனே அசுத்த ஆவிகளுக்கு முதலாய்க் கற்பிக்கிறதும், அதுகள் அவருக்குக் கீழ்ப்படிகிறதுமாயிருக்கிற இந்தப் புத்தாய் போதகமென்னவென்று, ஒருவரோடொருவர் தர்க்கித்துக் கொள்ளும்படியாய் அதிசயித்தார்கள்.

௨௮. உடனே அவருடைய கீர்த்தி கலிலேயாவின் சுத்துப்புறமெங்கும் பரம்பிற்று.

௨௯. உடனே அவர்கள் ஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, யாகோபோடும் யோவானோடுங்கூட * சீமோன் அந்திரேயா என்றவர்களுடைய வீட்டிலே வந்தார்கள். * மத்தே. ௮, ௰௪. ௰௫.

௩௰. ஆனால் சீமோனுடைய மாமி சுரமாய்க் கிடந்தாள். உடனே அவளுடைய செய்தியை அவருக்குச் சொன்னார்கள்.

௩௧. அவர் சேர்ந்து வந்து, அவள் கையைப் பிடித்து, அவளைத் தூக்கிவிட்டார், உடனே சுரம் அவளை விட்டு நீங்கிற்று, அப்போ அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

௩௨. * சாயுங்காலமாகி, சூரியன் அஸ்தமித்தபோதோவென்னில், சகல பிணியாளிகளையும் பிசாசு பிடித்தவர்களையும் அவரண்டைக்குக் கொண்டு வந்தார்கள். மத்தே. ௮, ௰௬.

௩௩. பட்டணத்தாரெல்லாரும் வீட்டுவாசலண்டையிலே கூடிவந்தார்கள்.

௩௪. அவர் பலவிதவியாதிகளாலே வாதைப்பட்டிருந்த அனேகரைச் சொஸ்தமாக்கி, அனேகம் பிசாசுகளையுந் துரத்திவிட்டு, பிசாசுகளைப் பேசவொட்டாதிருந்தார்; ஏனெனில் அதுகள் அவரை அறிந்திருந்தது.

௩௫. அவர் அதிகாலமே இருட்டோடே எழுந்திருந்து புறப்பட்டு, வனாந்தரமானதொரு ஸ்தலத்துக்குப் போய் அங்கே செபம்பண்ணினார். * லூ. ௫. ௰௬.

௩௬. சீமோனும் அவனோடிருந்தவர்களும் அவரைத் தொடர்ந்துபோய்,

௩௭. அவரைக் கண்டபோது: உம்மை எல்லாருந் தேடுகிறார்களென்று அவரோடே சொன்னார்கள்.

௩௮. ஆனால் அவர் அவர்களுடனே: அடுத்திருக்கிற ஊர்களிலும் நான் பிரசங்கம்பண்ண அங்கே போவோம் வாருங்கோள்; ஏனெனில் இதற்காகப் புறப்பட்டுவந்தேனென்று சொல்லி,

* யெச. ௬௧. ௧.

௩௯. கலிலேயாவெங்கும் அவர்களுடைய ஆலயங்களிலே பிரசங்கம்பண்ணி, பிசாசுகளைத் துரத்திவிட்டார்.

௪௰. * ஒரு குஷ்டரோகி அவரண்டைக்கு வந்து, அவரை வேண்டிக்கொண்டு அவர் முன்பாக முழங்கால்படியிட்டு அவருடனே: உமக்குச் சித்தமுண்டானால் என்னைச் சுத்தமாக்க உம்மாலேயாகுமென்றான்.

* மத்தே. ௮. ௨—௪. லூ. ௫. ௰௨—௰௪.

௪௧. ஆனால் யேசு மனதுருகி, கையை நீட்டி அவனைத் தொட்டு, அவனுடனே: எனக்கு மனதுண்டு, சுத்தமாகென்றார்.

௪௨. இப்படி அவர் சொல்லுகையிலே உடனே குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிறது, அவன் சுத்தமானான்.

௪௩. அவர்: நீ ஒருக்கும் ஒன்றுஞ் சொல்லாதேயென்று, * அவனுக்குக் கட்டியாய்க் கற்பித்து,

* மத்தே. ௯. ௩௰.

௪௪. அவனுடனே: நீ போய், ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, நீ சுத்தமானதின் நிமித்தம் மோசே கற்பித்ததுகளை அவர்களுக்குச் சாட்சியாகச் செலுத்தென்று சொல்லி, உடனே அவனை அனுப்பிவிட்டார்.

௪௫. ஆனால் அவன் புறப்பட்டு, வெகுவாய்ப் பிரசங்கிக்கவும் அந்த வர்த்தமானத்தைப் பிரசித்தம்பண்ணவுந் தொடங்கினான். ஆகையினால் அவர் இனி வெளியரங்கமாய்ப் பட்டணத்திலே பிரவேசிக்கக்கூடாமல், வெளியே வனாந்தரங்களிலிருந்தார், ஆனாலும் எங்குமிருந்து சனங்கள் அவரண்டைக்கு வந்தார்கள்.

௨. அதிகாரம்.

அவர் ஒருதிமிர்வாதக்காரனைக் குணமாக்கினது.

லூ. ௫. ௰௭—௨௬.

சில நாளைக்குப் பிற்பாடு அவர் திரும்பக் கப்பர்நகூமுக்குள்ளே பிரவேசித்தார். அவர் வீட்டிலிருக்கிறாரென்று கேழ்விபாய்,

௨. உடனே

௨. உடனே அநேகர், வாசல்படிக்கு முன்னுமட்டேல கொள்ளாதபடியாய்க் கூடிவந்தார்கள். அவர்களுக்கு வசனத்தைச் சொன்னார்.

௩. அப்பொழுது நாலுபேரால் சுமக்கப்பட்ட * ஒரு திமிர்வாதக்காரனை அவரண்டைக்குக் கொண்டுவந்தார்கள். * மத்தே. ௯. ௧—௮.

௪. நெருக்கமாயிருந்தபடியினாலே அவரருகே சேரக் கூடாமல், அவரிருந்த வீட்டின் தளத்தைத் திறப்பாக்கி, திமிர்வாதக்காரன் கிடக்கிற படுக்கையை இறக்கினார்கள்.

௫. யேசுவோவென்னில் அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனுடனே: மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்றார்.

௬. ஆனால் வேதபாரகரில் சிலர் அங்கே உட்கார்ந்திருந்து, தங்கள் இருதயங்களில்:

௭. இவனிப்படிக்கொத்த தேவதூஷணங்களைச் சொல்லுவானேன், பராபரன் ஒருத்தரொழிய பாவங்களை மன்னிக்கத்தக்கவராரென்று சிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

௮. அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று யேசு தம்முடைய ஆவியில் உடனே அறிந்து, அவர்களுக்குச் சொன்னதாவது: நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திப்பானேன்,

௯. எது எளிதாயிருக்குது, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்லுவதோ, எழுந்திருந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று சொல்லுவதோ.

௰. ஆனாலும் பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷனுடைய குமாரனுக்கு அதிகாரமுண்டென்கிறதை நீங்கள் அறியவேணுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனுடனே:

௰௧. நீ எழுந்திருந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வளவுக்குப் போவென்று உனக்குச் சொல்லுகிறேனென்றார்.

௰௨. அப்பொழுது எல்லாரும் விறுமித்து: நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்று பராபரனை மகிமைப்படுத்தும்படியாய், உடனே அவன் எழுந்திருந்து படுக்கையை எடுத்துக்கொண்டு, எல்லாருக்கும் முன்பாகப் புறப்பட்டான்.

அவர் ஆயக்காரரோடே போசிக்கதும், உபவாசத்தைக் குறித்து உத்தரஞ் சொன்னதும். லூ. ௫, ௨௭—௩௯.

௰௩. மறுபடியும் அவர் கடலண்டைக்குப் புறப்பட்டுப்போனார், அப்போதும் எல்லாம் அவரண்டைக்கு வந்தது, அவர்களை உபதேசித்தார்.

௰௪. அவர் நடந்துபோகையிலே, * ஆயத்துறையிலே உட்கார்ந்திருந்த அல்பேயுவின் குமாரனாகிய லேவியைக் கண்டு, அவனுடனே: என்னைப் பின்செல்

லென

லெனார். அவனெழுந்திருந்து அவனைப் பின்சென்றான். * மத்தே. ௯. ௯—௰௩.

௧௫. அப்பொழுது சம்பவித்ததேதென்றால், அவர் லேவியின் வீட்டிலே பந்தியிருக்கையில், அநேகம் ஆயக்காரரும் பாவிகளும் யேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள். ஏதுக்கென்றால் அவரைப் பின்சென்றவர்கள் அநேகம் பேராயிருந்தார்கள்.

௧௬. வேதபாரகரும் பரிசேயரும் அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போசிக்கிறதைக் கண்டு, அவருடைய சீஷருடனே: அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போசித்துக் குடிக்கிறதென்னென்றார்கள்.

௧௭. யேசு அதைக் கேட்டபோது அவர்களுடனே: பெலனுள்ளவர்களுக்கு வயித்தியன் தேவையாயிராமல், பிணியாளிகளுக்குத் தேவையாயிருக்கிறான். நான் நீதிமான்களையல்ல, பாவிகளைக் குணப்படுதலுக்கழைக்க வந்தேனென்றார்.

௧௮. யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசிக்கிறவர்களாயிருந்தார்கள். ஆகையால் வந்து அவருடனே: யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசிக்கக்கொள்ள உம்முடைய சீஷர் உபவாசியாதிருப்பானேனென்றார்கள்.

௧௯. யேசு அவர்களுக்குச் சொன்னதாவது: கலியாணமனுஷர், மணவாளன் தங்களோடே கூடயிருக்குமட்டும் உபவாசிக்கக்கூடுமோ? அவர்கள் மணவாளன் தங்களோடே கூடவிருக்குங்காலமட்டும் உபவாசிக்கக்கூடாது.

௨௰. ஆனாலும் மணவாளன் அவர்களை விட்டெடுபடும் நாள்களும் வரும், அப்போ அந்த நாள்களிலே உபவாசிப்பார்கள்.

௨௧. ஒருவனுங் கோடிகத்துண்டைப் பழவஸ்திரத்திலிணையான், இணைத்தால் அதிலிணைத்த புதுத்துண்டு பழையதை விட்டுப் பேர, பின்னையுங் கெட்டப் பீறலாகுது.

௨௨. ஒருவனுந் திராட்சப்பழங்களின் புதுரசத்தைப் பழந்துருத்திகளிலே வார்த்து வைக்கிறதுமில்லை. வைத்தால் அந்தப் புதுரசந் துருத்திகளைப் பீறிப்போட்டு, ரசமுஞ் சிந்திப்போம், துருத்திகளுங் கெட்டுப்போம். புதுரசத்தைப் புதுத்துருத்திகளிலே வார்த்து வைக்கவேணுமென்றார்.

ஓய்வுநாளிலே கதிர்களைக் கொய்த சீஷருக்கு அவர் பரிந்து பேசினது. * லூ. ௬. ௧—௫.

௨௩. பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால், அவர் ஓய்வுநாளிலே விளைச்சலின் வழியே போறபோது, அவருடைய சீஷர் நடக்கையிலே கதிர்களைக் கொய்யத்துவக்கினார்கள். * மத்தே. ௰௨. ௧—௮.

௨௪. பரிசேயர் அவருடனே: இதோ ஓய்வுநாளிலே அடாததைத் தானஞ்செய்கிறார்களென்றார்கள்.

௨௫. அப்போ

௨௫. அப்போ தவரிவர்களுக்குச் சொன்னதாவது: தாவீது தனக்குத் தேவையாயிருந்து, தானுந்தன்னுடனேகூடயிருந்தவர்களும் பசித்திருக்கிறபோது:

௨௬. * அபியத்தாரென்றபிரதான ஆசாரியனகாலத்திலே பராபரனுடைய வீட்டுக்குள்ளே பிரவேசித்து, ஆசாரியர்களொழிந்து மற்றோர் போசிக்கத்தகாத தேவசமுகத்தப்பங்களைப் போசித்து, தன்னுடனேயிருந்தவர்களுக்குங்கொடுத்த அவன் செய்கையை நீங்களொருக்காலும் வாசித்ததில்லையோவென்றார்.

* ௧. சாமு. ௨௧, ௬.

௨௭. பின்னையும் அவர்களுடனே: மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டானதில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாச்சுது.

௨௮. ஆகையால் மனுஷனுடைய குமாரன் ஓய்வுநாளுக்குங்கூட ஆண்டவராயிருக்கிறாரென்றார்.

௩. அதிகாரம்.

சூம்பின கையுள்ளவனைக் கிறீஸ்து குணமாக்கினது.

லூக். ௬, ௬—௧௧.

திரும்ப ஆலயத்துக்குள்ளே பிரவேசித்தார். அங்கே * சூம்பின கையுள்ள ஒரு மனுஷனிருந்தான்.

* மத்தே. ௧௨, ௯—௧௪.

௨. அப்போ அவர் பேரிலே குற்றஞ்சாட்டுகிறதுக்காக அவனை ஓய்வுநாளிலே சொஸ்தமாக்குவாரோவென்று அவரை நோக்கியிருந்தார்கள்.

௩. ஆனால் அவர் சூம்பின கையுள்ள மனுஷனுடனே: எழுந்து நடுவே வாவென்று சொல்லி,

௪. அவர்களுடனே: ஓய்வுநாளிலே நன்மை செய்வதோ தின்மை செய்வதோ, சீவனை ரட்சிப்பதோ கொல்வதோ, எது நியாயமாயிருக்குதென்றார். ஆனால் அவர்கள் மவுனமாயிருந்தார்கள்.

௫. அவர் கோபத்துடனே அவர்களைச் சுத்திலும் பார்த்து, அவர்கள் இருதயத்தின் கடினத்துக்காகத் துக்கப்பட்டு, அந்த மனுஷனுடனே: உன்கையை நீட்டென்றார். அவன் நீட்டினான், அவன் கை மற்றக்கையைப் போல் சொஸ்தமாகி, சீருக்கு வந்தது.

௬. அப்போ பரிசேயர் புறப்பட்டுப்போய், உடனே ஏரோதேயின மனுஷருடனேகூட அவரைக் கொலைப்படுத்த அவருக்கு விரோதமாய் ஆலோசனைபண்ணினார்கள்.

அவர் கடலோரத்திலே செய்த அற்புதங்கள்.

௭. ஆனால் யேசு தம்முடைய சீஷருடனேகூட அவ்விடம் விட்டுக் கடலோரத்துக்குப் போனார், வெகு திரளான சனங்கள் கலிலேயாவிலும் யூதேயாவிலும்,

௮. யெருசலேமிலுமிதுமேயாவிலும்யோர்தானுக்கக்கரையிலுமிருந்துவந்து அவரைப்பின்சென்றார்கள். தீருவுக்குஞ்சீதோனுக்குஞ்சுற்றுப்புறத்தாராகிய வெகுதிரளான சனங்களும் அவர் எத்தனை பெரிய காரியங்களைச்செய்தாரென்றுகேட்டு அவரண்டைக்குவந்தார்கள்.

௯. ஜனத்திரள்தம்மைநெருக்காதபடிக்கு அவர்நிமித்தியந்தமக்கொருபடகுஆயத்தமாயிருக்கத்தம்முடையசீஷருக்குச்சொன்னார்.

௰. ஏனென்றாலனேகரைச்சொஸ்தமாக்கினார். அதினாலேவாதைப்பட்டயாவருமவரைத்தொடுவதற்கு அவர்மேலேவிழுந்தார்கள்.

௰௧. அசுத்தஆவிகளுமவரைக்காணும்போது அவர்முன்னேவிழுந்து: நீர்பராபரனுடையகுமாரனாயிருக்கிறீரென்றுகூப்பிட்டது.

௰௨. *அதுகளைத்தம்மைப்பிரசித்தம்பண்ணவேண்டாமென்றதுகளைமிகுதியுமதட்டினார். * ௧. ௨௫.

அவர்அப்போஸ்தலரைத்தெரிந்துகொண்டது.

லூ. ௬. ௰௨—௰௬.

௰௩. அவர்ஒருபர்வதத்தின்மேலேறி, தமக்குச்சித்தமானவர்களை வரவழைத்தார், அவர்கள் அவரண்டைக்குவந்தார்கள்.

௰௪. அப்போதவர்பன்னிரண்டுபேரை, தம்முடனேகூடயிருக்கவும், பிரசங்கம்பண்ணத்தாமவர்களை அனுப்பவும்,

௰௫. அவர்கள்வியாதிகளைக்குணமாக்கி, பிசாசுகளைத்துரத்தஅதிகாரமுடைந்திருக்கவும் அழைத்தார்.

௰௬. ஆரெனென்றால், *சீமோன், இவனுக்குப்பேதுருவென்றநாமத்தைத்தரித்தார். *மத்தே. ௰. ௨.

௰௭. செபெதேயுவின்குமாரனாகியயாக்கோபையும், யாக்கோபின்சகோதரனாகியயோவானையும், இவர்களுக்குமிடியின்குமாரரென்னறர்த்தங்கொள்ளும் போவனெர்கேஸென்னுநாமங்களைத்தரித்தார்.

௰௮. அந்திரேயாவையும்பிலிப்புவையும் பற்தொலோமேயுவையும் மத்தேயுவையும், தோமாவையும் அல்பேயுவின்குமாரன யாக்கோபையும், ததேயுவையுங்கானானியனான்சீமோனையும்,

௰௯. தம்மைக்காட்டிக்கொடுத்தயூதாஸ்காரியோத்தனையுந்தானே. பிற்பாடுவளவுக்குவந்தார்கள்.

அவர்பர்சேயரால்தூஷிக்கப்பட்டது.

௨௰. அவர்களப்பம்போசிக்கவுங்கூடாதபடியாய்க்கும்புமறுபடியுங்கூடிவந்தது.

௨௧. அவரண்டையிருந்தவர்கள் இதைக்கேட்டு, அதுதனக்குஅறியாதிருக்குதென்றுஅவனைக்கட்டுப்பண்ணப்புறப்பட்டார்கள்.

௨௨. யெருசலேமிலிருந்திறங்கிவந்தவேதபாரகர்: * அவர்பெயெல்செபூலைக்கொண்டிருந்து பிசாசுகளின்தலைவனாலே பிசாசுகளைத்துரத்துகிறாரென்றார்கள். * லூ. ௰௧, ௰௫. ஙு. மத். ௰௨, ௨௪. ஙு.

௨௩. அவர்களைஅவர்அழைத்து உவமைகளாய் அவர்களுக்குச்சொன்னதாவது: சாத்தான் சாத்தானைத்துரத்தக்கூடுகிறதெப்படி.

௨௪. ஒருராசாங்கந்தனக்குத்தானேவிரோதமாகப்பிரிந்தால் அந்தராசாங்கம்நிலைநிற்கமாட்டாது.

௨௫. ஒருவீடுதனக்குத்தானேவிரோதமாகப்பிரிந்தால் அந்தவீடுநிலைநிற்கமாட்டாது.

௨௬. சாத்தான்றனக்குத்தானேவிரோதமாக எழும்பிப்பிரிந்தால் அதுநிலைநிற்கமாட்டாமல் முடிவடைந்திருக்குது.

௨௭. முந்திபெலவானைக்கட்டினாலொழிய ஒருத்தனும்பெலவானுடையவீட்டுக்குள்ளப்புகுந்து அவனுடைமைகளைக்கொள்ளையிடக்கூடாது; கட்டினால் அப்போ அவன்வீட்டைக்கொள்ளையிடுவான்.

௨௮. மெய்யாகவேஉங்களுக்குச்சொல்லுகிறேன், * மனுஷபுத்திரருக்குள்ளெல்லாப்பாவங்களும் அவர்கள்தூஷணிக்குமாந்தேந்தத்தூஷணங்களும் மன்னிக்கப்படும். * லூ. ௰௨, ௰.

௨௯. ஆனாலெவனும் பரிசுத்தஆவிக்குவிரோதமாய்த்தூஷணித்தால், அவனென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்தியஆக்கினைக்குள்ளாயிருக்கிறானென்றார்.

௩௰. அதேனென்றால் அசுத்தஆவியைக்கொண்டிருக்கிறானென்று சொல்லியிருந்தார்கள்.

அவர்தம்முடைதாயுஞ்சகோதரங்களும் ஆரென்று அறிவித்தது.

௩௧. அவருடையசகோதரருந்தாயும்வந்து வெளியேநின்று, அவரை அழைத்தனுப்பினார்கள்,

* மத்தே. ௰௨, ௪௬—௫௰. லூ. ௮, ௰௯—௨௧.

௩௨. அவரைச்சுற்றிலுங்கும்பலுக்கார்ந்திருந்தது; அப்போ அவருடனே: இதோ உம்முடையதாயாரும் உம்முடைசகோதரரும் வெளியேநின்று உம்மைத்தேடுகிறார்களென்றார்கள்.

௩௩. அவர்அவர்களுக்குப்பிரதியுத்தரமாக: என்னுடைதாயுமென்னுடைசகோதரரும் ஆரென்று சொல்லி.

௩௪. தம்மைச்சூழவுமுட்கார்ந்திருந்தவர்களைச்சுத்திப்பார்த்து: * இதோ என்னுடைதாயுமென்னுடைசகோதரரும். * யோவா. ௰௫, ௰௪. எபி. ௨, ௰௧.

௩௫. ஏனென்றாலெவனுக்கும் பராபரனுடைய சித்தத்தின்படியேசெய்தால், அவனேயென்னுடைசகோதரனுஞ்சகோதரியுந்தாயுமாயிருக்கிறானென்றார்.

௪. அதிகாரம்.

நாலுவித நிலத்தின் உவமை. லூ. ௮; ௪—௰௫.

மீளவும் * கடலோரத்திலே போதகம்பண்ணத் துவக்கினார். வெகுகும்பு அவரண்டையிலே கூடினபடியினாலே அவர் படவிலே ஏறி, கடலிலே உட்கார்ந்தார், ஜனமெல்லாங் கடலுக்குக் கரையிலிருந்தது.

* மத்தே. ௰௩; ௧—௨௩.

௨. அப்போ அவர் வெகு காரியங்களை உவமைகளாய் அவர்களுக்குப் போதித்தது, தம்முடைய போதகத்திலே அவர்களுக்குச் சொன்னதாவது:

௩. கேளுங்கோள், இதோ விதைக்கிறவன் விதைக்கப் புறப்பட்டான்.

௪. அவன் விதைக்கையிலே சம்பவித்ததேதென்றால், சிலது வழியருகே விழுந்தது, அப்போ ஆகாசத்தின் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப் போட்டுது.

௫. வேறேசிலது வெகுமண்ணில்லாத கற்பாறைநிலத்திலே விழுந்தது, அதற்கு ஆழமண்ணில்லாதத்தினாலே உடனே முளைத்தது.

௬. சூரியனுதித்தபோது தீய்ந்துபோய், அதுக்கு வேரில்லாமையினாலே உலர்ந்துபோச்சுது.

௭. வேறுசிலது முள்ளுகளிலே விழுந்தது, முள்ளுகளெழும்பி அதை நெருக்கிப்போட்டுது, ஆகையால் அது கனி கொடுக்கவில்லை.

௮. வேறேசிலது நல்லநிலத்திலே விழுந்து ஓங்கி வளருகிற பயிராகி, கனிகொடுத்தது, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாய்த் தந்தது.

௯. கேட்கக் காதுள்ளவன் கேட்கக்கடவானென்று அவர்களுக்குச் சொன்னார்.

௰. பின்பு அவர் தனித்திருக்கிறபோது அவரைச் சுத்தியிருந்தவர்கள் பன்னிருவரோடுங்கூட இந்த உவமையை அவரைக் கேட்டார்கள்.

௰௧. அவர் இவர்களுக்குச் சொன்னதாவது: பராபரனுடைய ராட்சியத்தின் ரகசியத்தை அறியுகிறது உங்களுக்களிக்கப்பட்டுது, புறத்தியிலேயிருக்கிறவர்களுக்கோவெனில்,

௰௨. கண்ணாரக்கண்டுங் காணாமலும் காதாரக் கேட்டும் உணராமலும் மனந்திரும்பாமலும் பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாமலுமிருக்க, எல்லாம் அவர்களுக்கு உவமைகளாய்ச் சம்பவிக்குதென்றார். * ஏசா. ௬; ௯. ௰. அப்போ. ௨௮; ௨௬. ௨௭.

௰௩. பின்பு அவர் இவர்களுக்குச் சொன்னதாவது: இந்த உவமையை அறியீர்களோ, பின்னை எல்லா உவமைகளையும் எப்படி அறிவீர்கள்.

௰௪. விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.

௰௫. வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்களோவெனில், அவர்கள் கேட்கும்போது உடனே சாத்தான் வந்து, அவர்கள் இதயங்களிலே விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போம்.

௰௬. அப

௰௬. அப்படியே போலே கற்பாறை நிலத்திலே விதைக்கப்பட்டவர்களுமுண்டு; அவர்கள் வசனத்தைக் கேட்கும்போது உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக் கொண்டு;

௰௭. தங்களிலே வேர்கொள்ளாமல் க்ஷணித்தியாயிருக்கிறார்கள்; வசனத்தினிமித்தியமாக உபத்திரமுந் துன்பமும் உண்டானால் உடனே இடறலப்படுகிறார்கள்.

௰௮. முள்ளுக்குள் நடுவிலே விதைக்கப்பட்டவர்களாரென்றால்; இவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்கள்

௰௯. ஆனாலும் இந்தப் பிரபஞ்சத்தின் கவலைகளும் * ஐசுவரியத்தின் மயக்கமும் மற்றக் காரியங்களைத் தொட்டுண்டாகிற இச்சைகளும் உள்ளே பிரவேசித்து வசனத்தை நெருக்கிப்போடும். அதினாலே கனியற்றுப் போம். * ௧. திமோ. ௬. ௯. ௰.

௨௰. நல்ல நிலத்திலே விதைக்கப்பட்டவர்களாரென்றால்; இவர்கள் வசனத்தைக் கேட்டு; ஏற்றுக் கொண்டு; ஒன்று முப்பதாகவும் ஒன்று அறுபதாகவும் ஒன்று நூறாகவுங் கனிகொடுக்கிறவர்களென்றார்.

௨௧. அவர் பின்னையும் அவர்களுக்குச் சொன்னதாவது: * விளக்கானது விளக்குத்தண்டின் மேலே வைக்கப்படுவதற்கேயொழிய படியின் கீழாகிலுங் கட்டிலின் கீழாகிலும் வைக்கப்படுவதற்குக் கொண்டுவரப்படுமோ. * மத்தே. ௫. ௰௫.

௨௨. ஏனென்றால் வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை வெளிக்குவராத மறைபொருளுமில்லை.

௨௩. கேட்கிறதுக்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால்; கேட்கக்கடவானென்றார்.

௨௪. அவர் பின்னையும் அவர்களுக்குச் சொன்னதாவது: நீங்கள் கேழ்விப்படுகிறதேதென்று பாருங்கோள்; எந்த அளவினாலே அளக்கிறீர்களோ அதினாலே உங்களுக்கு அளக்கப்பட்டு; கேட்கிற உங்களுக்கு அதிகங் கொடுக்கப்படும்.

௨௫. ஏனென்றால் * எவன் உள்ளவனாயிருக்கிறானோ அவனுக்குக் கொடுக்கப்படும்; எவன் இல்லாதவனாயிருக்கிறானோ அவனிடத்திலே உள்ளதும் வாங்கப்படுமென்றார். * மத்தே. ௨௫. ௨௯.

பயிர் உவமை.

௨௬. பின்னையும் அவர் சொன்னதாவது: பராபரனுடைய ராச்சியம் ஒருமனுஷன் நிலத்திலே விதையை விதைக்கிறதுபோலிருக்குது.

௨௭. ராவும் பகலுமாக நாள் வரையிலே நித்திரையும் பண்ணுகிறான் எழுந்திருக்கிறான்; அவன் அறியாமல் விதை முளைத்துப் பயிராம்.

௨௮. அதேதென்றால் நிலந்தானாயே முந்தி முளையையும் பிறகு கதிரையும் பிறகு கதிரிலே நிறைந்த கோதுமணியையுந் தந்து பலனைக் கொடுக்கும்.

௨௯. பலன் கொடுக்கும்போது உடனே அவன், அறுப்புக்காலம் வந்தபடியினாலே, அரிவாளை அனுப்புகிறானென்றார்.

கடுகுமணியின் உவமை.

௩௰. பின்னையும் அவர் சொன்னதாவது: பராபரனுடைய ராட்சியத்தை எதுக்கொப்பிடுவோம், அல்லது எந்த உவமையை அதுக்குச் சொல்லுவோம்.

௩௧. * ஒரு கடுகு மணிக்கொப்பாயிருக்குது, அது நிலத்திலே விதைக்கப்படும்போது பூமியிலிருக்கிற சகல விதைகளிலுஞ் சிறியதாயிருக்குது. * மத். ௰௩, ௩௧. ௩௨. லூ. ௰௩, ௰௮. ௰௯.

௩௨. அது விதைக்கப்பட்டபோதோ வெளிலே எழும்பி, சகல கீரைகளிலும் பெரிதாகி, ஆகாசத்துப் பறவைகள் அதினுடைய நிழலின் கீழ் வந்தடையத்தக்கப் பெரிய கிளைகளை விடுமென்றார்.

௩௩. அவர் அப்படிக்கொத்த வெகு உவமைகளினாலே அவர்கள் கேட்கக்கூடின மாத்திரத்திலே அவர்களுக்கு வசனத்தைச் சொல்லி,

௩௪. உவமைகளாலேயல்லாமல் அவர்களுக்குச் சொல்லாதிருந்தார்; தம்முடைய சீஷருக்கோ வேறல்ல எல்லாத்தையுந் தனியே விடுவித்துச் சொன்னார்.

கலிலேயத்துக் கடலின் கொந்தளிப்பை அமர்த்தினது. மத்தே. ௮, ௨௩—௨௭. லூ. ௮, ௨௨—௨௫.

௩௫. அன்றையசாயுங்காலமானபோது அவர்களுடனே: அக்கரைக்குப் போவோம் வாருங்கோவென்றார்.

௩௬. ஆகையால் கும்பலை அனுப்பிவிட்டு, அவர் படவிலேயிருந்த பிரகாரமாகத்தானே அவரைக் கொண்டுபோனார்கள். ஆனால் வேறே படவுகளும் அவருடனே கூடயிருந்தது.

௩௭. அப்போ மகா சுழல்க்காத்துண்டாய், அலைகள் படவின்மேலே அது நிரம்பத்தக்கதாய் விழுந்தது.

௩௮. அவர் அமரத்திலே ஒரு தலைகாணியின்மேல் நித்திரை கொண்டிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி, அவருடனே: போதகரே! நாங்கள் மடிந்துபோறது உமக்குக் கவலையாயிராதோவென்றார்கள்.

௩௯. அவர் எழுந்து காத்தை அதட்டி, கடலுடனே: மவுனமடை, அமைதியாயிருவென்றார். அப்போ காத்து நின்று மகா அமைச்சலுண்டாச்சுது.

௪௰. அவர் இவர்களுடனே: நீங்கள் அத்தனை பயமாயிருப்பானேன், விசுவாசமுங்களுக்கில்லாதிருக்கிறதெப்படியென்றார்.

௪௧. அவர்கள் மகா பயமாய்ப் பயந்து: இவர் ஆரோ, காத்துங் கடலும் அவருக்குக் கீழ்ப்படியுதேயென்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்:

ரு. அதிகாரம்.

அவர பிசாசுகளைத துரததி அதுகளை பணணிகளுககுளபபோக உததாரங கொடுததது. மததேயு. அ. உஅ—௩௪. லூ. அ. உ௬—௩௯.

அவர்கள கடலுககக்கரையான கதரேனருடைய தேசததுககுவநதார்கள.

௨. அவர்படகிலிருநதிறஙகின போது, உடனே அசுதத ஆவியுளள ஒரு மனுஷன பிரேதககலலறைகளிலிருநது அவருககெதிராகவநதான.

௩. அவனுடைய குடியிருபபு பிரேதககலலறைகளிலுணடாயிருநதது, ஒருததனுமவனைச சஙகிலிகளினாலுமுதலாயக கட்டக்கூடாதிருநதது.

௪. ஏனெனில அவன அநேகந்தரம விலஙகுகளினாலுஞ சஙகிலிகளினாலுங கட்டுணடிருநதும அவனாலே சஙகிலிகளுமறுக்கப்பட்டு விலஙகுகளும ஒடிககப பட்டது, அவனைப பிடியப்பணண ஒருததனும வலலமையாகாதிருநதது.

௫. அவனெபபோதுமராவும பகலும பருவதஙகளிலுங கலலறைகளிலுமிருநது கூபபிடடு, தனனைத தானகலலுககளால மோதிககொணடிருநதான.

௬. ஆனால அவன யேசுவைத தூரததிலே கணடபோது ஓடிவநது * அவரைப பணிநதுகொணடு, * ௩, ௰௧.

௭. மகாசததததுடனே: யேசுவே, உனனதமான பராபரனுடைய குமாரனே, எனககும உமககுமெனன, தேவரீரெனனை வாதைபபடுததாதபடிககுப பராபரன பேரில உமமை ஆணையிடுகிறேனெனறான.

௮. அதேனனெனறால அவர அததுடனே: அசுதத ஆவியே, இநதமனுஷனை விடடுப புறபபடடுப போவெனறார்.

௯. அவர் அவனை: உனககுப பேரெனனவெனறு கேடடார். அதுபிறததியுததாரமாக: எனககுப பேயர் லேகியோன, ஏனெனில அநேகராயிருககிறோமெனறுசொலலி,

௰. தஙகளைத தேசததுககுப புறமபாக அனுபபிவிடாதபடிககு அவரை மிகவும வேணடிககொணடுது.

௰௧. ஆனால அவிடததில பறுவதஙகளருகே பணணிகளுடைய பெரிய மநதைமேயநது கொணடிருநதுது.

௰௨. பிசாசுகளெலலாம: பணணிகளுககுளபபுகுதஙகளை அனுபபுமெனறு அவரை வேணடிககொணடுது.

௰௩. உடனே யேசு அதுகளுககுததாரங கொடுததார். அபபோ அசுதத ஆவிகள புறபபடடு, பணணிகளுககுளபபுகுநதது, அபபோதேறககுறைய ரெணடாயிரம பணணிகளான அநதமநதை உயர்நத மேடடிலிருநது கடலிலே பாயநது, கடலிலமிழநதி மாணடுது.

௰௪. ஆனால பணணிகளை மேயததவர்கள ஓடி அதை படடணததிலும வெளிபபுறஙகளிலும அறிவிததார்கள. அபபோ சமபவிததததேதெனறுபாரககச சனஙகள புறபபடடு,

௰௫. யேசுவண்டை வந்து, லேகியோன் பிசாசுகள் பிடித்திருந்தவன் உடுத்திக்கொண்டு உட்கார்ந்து புத்தியடைந்திருக்கிறதைக் கண்டு பயப்பட்டார்கள்.

௰௬. பிசாசுகள் பிடித்தவனுக்கு எப்படிச் சம்பவித்ததென்கிறதையும் பன்றிகளுடைய செய்தியையுங் கண்டவர்களும் அவர்களுக்கு விபரமாய்ச் சொன்னார்கள்.

௰௭. அப்போதங்களெல்லைகளை விட்டப்பாலே போகவவரை வேண்டிக்கொள்ளத் துடங்கினார்கள்.

௰௮. அவர் படவிலேறுகிறபோது பிசாசு பிடித்திருந்தவன், தானவருடனே கூடவர அவரை வேண்டிக்கொண்டான்.

௰௯. ஆனாலேசு அவனை வர ஒட்டாமல் அவனுடனே: நீ உன் வீட்டிலே உன்னத்தாரண்டைக்குப் போய், கர்த்தர் உனக்கெத்தனையாய்ச் செய்து உன்மேலிரங்கினாரென்றவர்களுக்கறிவியென்றார்.

௨௰. அவன் போய், யேசு தனக்கெத்தனையாய்ச் செய்தாரென்று, பத்துப்பட்டணங்களிலும் பிரசங்கிக்கத் துவக்கினான். எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

அவர் பெரும்பாடுள்ள ஸ்திரீயைக் குணமாக்கி, யவீருவின் மகளை எழுப்பினது. மத். ௯, ௰௮—௨௬. லூக். ௮, ௪௧—௫௬.

௨௧. யேசு படவிலே மறுபடியும் அக்கரைக்குக் கடந்து வந்தபோது, வெகு கும்பு கடலோரத்திலிருக்கிற அவரண்டை வந்து கூடிற்று.

௨௨. இதோ ஆலயத்தலைவரில் யவீருவென்று பேர்கொண்ட ஒருத்தன் வந்து, அவரைக் கண்டபோது அவர் பாதத்திலே விழுந்து:

௨௩. என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியமடையும்படிக்கு நீர் வந்து அவள் மேலே கைகளை வைத்தருளும், அப்போ பிழைப்பாளென்றவரை மிகவும் வேண்டிக்கொண்டான்.

௨௪. அவர் அவனோடே கூடப்போனார். வெகு கும்பு அவரைப் பின்செல்லுகையால் அவரை நெருக்கினார்கள்.

௨௫. ஆனால் பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ இருந்தாள்.

௨௬. அவள் அனேகம் பரியாரிகளால் வெகுபாடுபட்டுத் தன்னிடத்திலுண்டானதெல்லாத்தையுஞ் செலவழித்தும் லாபமொன்றுங் காணாமல் பின்னையும் அவளுக்குக் கேடாச்சுது.

௨௭. அவள் யேசுவின் செய்தியைக் கேட்டு, கும்புக்குள்ளே பின்னாலே வந்து அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்.

௨௮. ஏனென்றால் அவருடைய வஸ்திரங்களையாகிலும் நான் தொட்டேனாகில், குணமாவேனென்றாள்.

௨௯. உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் வற்றிப் போச்சுது, அந்த வாதை நீங்கி, தான் ஆரோக்கியமடைந்ததைத் தன் சரீரத்திலே உணர்ந்தாள்.

௩௰. உடனே யேசு தம்மிலிருந்து புறப்பட்ட வல்லமையைத் தமக்குள்ளே அறிந்து, கூட்டத்திலே திரும்பி: என் வஸ்திரங்களைத் தொட்டதாரென்றார்.

௩௧. அவருடைய சீஷர் அவருடனே: ஜனம் உம்மை நெருக்குகிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டதாரென்கிறீரேயென்றார்கள்.

௩௨. இதைச் செய்தவளைக் காணச் சுற்றிலும் பார்த்தார்.

௩௩. தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த ஸ்திரீயோ வெலப்பயந்து, நடுங்கி வந்து அவர் முன்பாக விழுந்து, உண்மையை எல்லாம் அவருக்குச் சொன்னாள்.

௩௪. ஆனால் அவர் அவளுடனே: மகளே! * உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வாதையற்றுச் சுகமாயிருவென்றார்.

* ௰. ௫௨.

௩௫. அவர் இன்னும் பேசுகிறபோது, ஆலயத் தலைவன் வீட்டிலிருந்து சிலர் வந்து: உம்முடைய குமாரத்தி மரித்தாள், இனியேன் போதகரைப் பிரயாசப்படுத்துகிறீரென்றார்கள்.

௩௬. ஆனால் சொன்ன வார்த்தையை யேசு உடனே கேட்டு, ஆலயத் தலைவனுடனே: பயப்படாதே, விசுவாசித்தேயிருவென்று சொல்லி,

௩௭. பேதுருவையும் யாக்கோபையும் யாக்கோபின் சகோதரன் யோவானையுந் தவிர வேறொருத்தரையுந் தம்மைப் பின்செல்லவொட்டாமல்,

௩௮. ஆலயத் தலைவனுடைய வீட்டிலே வந்து, சந்தடியையும் அழுதுகொண்டு வெகுவாய்ப் புலம்புகிறவர்களையுங் கண்டு,

௩௯. உள்ளே பிரவேசித்து, அவர்களுடனே: நீங்கள் சந்தடிபண்ணி அழுகிறதென்ன, பிள்ளை * மரித்திராமல் நித்திரைபண்ணுகிறதென்றார். * யோ. ௰௧. ௰௧.

௪௰. அப்போ அவரை நகைத்தார்கள். ஆனால் அவர் எல்லாரையுந் துரத்திவிட்டு, பிள்ளையின் தகப்பனையுந் தாயையுந் தம்முடனே இருந்தவர்களையும் அழைத்துக்கொண்டு, பிள்ளை கிடந்த இடத்துக்குள்ளே பிரவேசித்து,

௪௧. பிள்ளையின் கையைப் பிடித்து, அதனுடனே: தலீத்தா கூமியென்றார். அது: சிறுபெண்ணே யெழுந்திரு (என்றுனக்குச் சொல்லுகிறேன்) என்கிற அர்த்தம்.

௪௨. உடனே சிறுபெண் எழுந்திருந்து நடந்தது, ஏனென்றால் பன்னிரண்டு வயதாயிருந்தது. அப்போ மகா விஸ்மயப்பாய் விஸ்மயித்தார்கள்.

௪௩. அவர், இதை ஒருவரும் அறியவேண்டாமென்று மிகவும் அவர்களுக்குக் கற்பித்து, அதுக்குச் சாப்பாடு கொடுக்கச் சொன்னார்.

௬. அதிகாரம.

அவர தமமுடைய ஊரிலே அசட்டைபணணப
பட்டது.

அவர அவவிடமவிட்டுப புறப்பட்டு, தாமவளாநத
ஊரிலேவநதார. அவருடைய சீஷர அவரைப பின
சென்றார்கள. * லூா. ௪, ௰௬—௩௰. மத. ௰௩,
௫௩—௫௮.

௨. ஓயவுநாளவநதபோது ஆலயததில உபதேசிக
கததுவககினார. அநேகா கேட்டுததிகைததுஇ: இதுகள
இவனுக்கெஙகேயிருநதுவநதது, இவனாலேககளிலே
லேபபணணபபட்ட வலலமைகளநடகக இவனுக
குககொடுபபட்டஞானமெனன.

௩. இவனமரியாளுடையகுமாரனுமயாககோபு,
யோசே, யூதா, சீமோன எனறவர்களுடைய சகோ
தரனுமாகிய * தசசனலலவோ, இவன சகோதரிகளும
இஙகேநமமிடததிலேயிருககிறாகளலலவோவெனறு
சொலலி, அவரிடததில இடறலடைநதார்கள.

* யோவ. ௬, ௪௨.

௪. ஆனாலயேசுஅவர்களுடனே: * ஒருதீர்க்கதரிசி
சிககுஅவனுடையஊரிலும, அவனுடைய இனததாரிடததிலும
அவனவீட்டிலுமிருககிறகனமீனமையினனெஙகுமில
லையெனறார. * யோவ. ௪, ௪௪.

௫. அஙகேஅவர நோயாளிகளாகியகொஞசம
பேர்களமேலேகைகளைவைதது அவர்களைககுண
மாககினதேயழிய வேறொருவலலமையையுஞ்செய
யககூடாமல,

௬. அவர்களுடையஅவிசுவாசததுககாக ஆசசரியப
பட்டு, கிராமஙகளைசசுததித்திரிநதுஉபதேசிததார.

அவர அபபோஸதலரைவெளிபபுறஙகளுககனுப
பினது. மததே. ௰, ௧. லூ. ௯, ௧—௫.

௭. அவர பனனிருவரைவரவழைததுஅவர்களை
ரெணடிரணடுபேராகஅனுபபததுவககி, அவர்களுககு
அசுததஆவிகளினமேலேஅதிகாரஙகொடுததது,

௮. தடிகளிரமபினனேயனறியும, பையையாகிலும
அபபததையாகிலுஙகசசையிலகாசையாகிலும, வ
ழிககெடுததுபோகாமல,

௯. பாதரட்சைகளைப போடடுககொணடிருகக
வும, இரணடஙகியைததரியாதிருககவும அவர்களுக
குககறபிததது,

௰. அவர்களுககுசசொனனதாவது: நீஙகளெங
கேயாகிலுமஒருவீட்டுககுளபிரவேசிததால, அஙகே
நீஙகள அவவிடமவிட்டுப்புறபபடுமட்டாகததஙகி
யிருஙகோள.

௰௧. எவர்களாகிலும உஙகளையேர்ததுககொள
ளாமலும உஙகளவசனஙகேளாமலுமிருநதாலஅவ
விடமவிட்டுப்புறப்படடுஉஙகளுடையகாலகளி
லபடிநதுருககுநதூளைஅவர்களுககுசசாட்சியாக

உதறிப்போடுங்கோள். மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நாயத்தீர்க்கு நாளிலே அந்தப் பட்டணத்தைப்பார்க்கச் சோதோமுக்கும் கொமோறாவுக்கும் நேர்ந்தமாயிருக்குமென்றார்.

௰௨. அவர்களும் புறப்பட்டு: குணப்படுங்கோளென்று பிரசங்கித்து; * மத்தே. ௰௧. ௨. ௪. ௰௦.

௰௩. அனேகம் பிசாசுகளைத் துரத்திவிட்டு; அனேகம் நோவாளிகளை எண்ணெயாலே பூசிச் சுகமாக்கினார்கள்.

யோவான் தலை வெட்டுண்ட செய்தி.

மத்தே. ௰௪. ௧—௰௨. லூக். ௯. ௭—௯.

௰௪. ஆனால் அவருடைய பேர் பிரசித்தமான படியினாலே ஏரோதேராசா கேட்டு: * ஸ்நானங்கொடுக்கிற யோவான் மரித்தோரிலிருந்தெழுந்தான், ஆகையால் இவ்வல்லமைகள் அவனிடத்திலே நடக்குதாயிருக்குதென்றான்.

௰௫. வேறே சிலர்: அவர் எலியாவென்றும், வேறு சிலர்: அவர் தீர்க்கதரிசியாகிலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனைப்போலிருக்கிறாரென்றும் சொன்னார்கள். * மத். ௰௬. ௰௪.

௰௬. ஆனால் ஏரோதே அதைக் கேட்டபோது: இவன் நான் சிரச்சேதம்பண்ணின யோவான்தான், அவன் மரித்தோரிலிருந்தெழுந்தானென்றான்.

௰௭. அதேதென்றால் ஏரோதே: * தான் விவாகம்பண்ணின தன் சகோதரனாகிய பிலிப்புவின் பெண்சாதி ஏரோதியாளினிமித்தியத்துச் சேவகரை அனுப்பி யோவானைப்பிடித்து, காவலிலே கட்டிவைத்தான்.

* லூக். ௩. ௰௯. ௨௰.

௰௮. ஏனென்றால் யோவான் ஏரோதேயுடனே: நீர் உம்முடைய சகோதரன் பெண்சாதியைப் படைப்பது உமக்கு ஞாயமல்லவென்று சொல்லியிருந்தான்.

௰௯. ஆகையால் ஏரோதியாள் அவனுக்குச் சத்துருவானது, அவனைக் கொன்றுபோடமனதாயிருந்தாள், ஆனால் அவளுக்குக் கூடாதே போச்சுது.

௨௰. அதேதென்றால் யோவான் நீதியும் பரிசுத்தமுமான புருஷனென்று ஏரோதே அறிந்து அவனுக்குப்பயந்து, அவனைக் காத்து அனேக காரியங்களை அவன் சொல்லுக்கேட்டுச்செய்து அவனை விருப்பமாய்க் கேட்டான்.

௨௧. ஆனால் ஏரோதே தன் ஜென்மவாசத்திலே தன்னுடைய பெரியமனுஷருக்கும் சேனைக்காறருக்குங் கலிலேயாவின் பிரபுக்களுக்கும் விருந்துபண்ணின சமயமான நாள் வந்தபோது,

௨௨. ஏரோதியாளின் குமாரத்தி உள்ளேப்பிரவேசித்து கூத்தாடி ஏரோதேயுக்கும் பந்தியிருக்கவர்களுக்கும் பிரியமாயிருந்தபோது, மகாராசா அந்தப் பெண்ணுடனே: உனக்கு வேண்டியதெல்லாம் என்னைக்கேள், உனக்குத்தருவேனென்று சொல்லி,

௨௩. என்ராட்சியத்திலே பாதிமட்டுக்கும் நீ என்னிடத்திலே கேட்டாலும் உனக்குத் தருவேனென்று அவளுக்கு ஆணையிட்டான்.

௨௪. அப்போ அவள் புறப்பட்டு, தன் தாயுடனே: என்னத்தைக் கேட்பேனென்றாள். அவளோ: யோவான் ஸ்நானகனுடைய தலையைக் கேளென்றாள்.

௨௫. உடனே அவள் சீக்கிரமாக ராசாவண்டைக்குள் ஏகப்பட்டு வந்து: நீர் இப்போதானே யோவான் ஸ்நானகனுடைய தலையை ஒரு தாலத்திலே எனக்குத் தரவேணுமென்றிருக்கிறேனென்று கேட்டாள்.

௨௬. அப்போ ராசா மிகவுந் துக்கமடைந்து, ஆணைகளினிமித்தியமாகவுங் கூடப் பந்தியிருந்தவர்களினிமித்தியமாகவும் அவளுக்கதைத் தட்டமனதில்லாமல்

௨௭. உடனே குலகாறனை அனுப்பி அவனுடைய தலையைக் கொண்டுவரக் கட்டளையிட்டான்.

௨௮. அவன் போய் அவனைக் காவல்கூடத்திலே சிரச்சேதம் பண்ணி, அவனுடைய தலையை ஒரு தாலத்திலே கொண்டுவந்து அந்தச் சிறுபெண்ணுக்குக் கொடுத்தான், சிறுபெண் அதைத் தன் தாயிக்குக் கொடுத்தாள்.

௨௯. அவனுடைய சீஷர் அதைக் கேட்டுவந்து, அவனுடலை எடுத்து, அதை ஒரு கல்லறையிலே வைத்தார்கள்.

கிறிஸ்து, ஐயாயிரம் பேருக்கு வனாந்திரத்திலே போசனங் கொடுத்தது. மத். ௰௪, ௰௩—௨௧. லூ. ௯, ௰—௰௭. யோவ. ௬, ௫—௰௫.

௩௰. அப்போஸ்தலர் யேசுவண்டையிலே வந்து கூடி, தாங்கள் செய்ததுகளையும் உபதேசித்ததுகளையுமெல்லாம் அவருக்கு அறிவித்தார்கள்.

௩௧. அப்போ அவர் அவர்களுக்கு: நீங்கள் தனியே ஒரு வனாந்திரமிடத்துக்கு வாந்து, சற்றே இளைப்பாறுங்கோளென்றார்; ஏனென்றால் வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தார்கள், போசிக்க முதலாய் அவர்களுக்கு நேரமில்லாதிருந்தது.

௩௨. அப்படியே படவிலே ஒரு வனாந்திரமேடத்துக்குத் தனியே போனார்கள்.

௩௩. கும்புகள் அவர்கள் போகிறதைக் கண்டு, அநேகம் பேர் அவர்தானென்றறிந்தார்கள், ஆகையால் கால்நடையாய்ச் சகல பட்டணங்களிலுமிருந்து அங்கே கூடி ஓடி, அவர்களுக்கு முந்திக்கொண்டு, அவரண்டையிலே வந்து கூடினார்கள்.

௩௪. யேசு புறப்பட்டுவந்து, வெகுசனத்தைக் கண்டு அவர்கள் பேரிலே மனதுருகினார். ஏனென்றால் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலிருந்தார்கள். அவர்களுக்கநேகங் காரியங்களை உபதேசிக்கத் துவக்கினார். * மத். ௯, ௩௬.

௩௫. வெகுநேரஞ் சென்றபின்பாடு, அவருடைய சீஷர் அவரண்டை வந்து: இது வனாந்திரமேடமாயிருக்குது, வெகுநேரமுமாச்சுதே.

௩௬. அவர்

௩௬. அவர்கள் சுத்துக்கிற மாங்களுக்குங் கிராமங்களுக்கும் போய், தங்களுக்குப் பஷணங்களைக் கொள்ள அவர்களை அனுப்பிவிடும், ஏனென்றால் போசிக்க அவர்களுக்கு ஒன்றுமில்லையென்றார்கள்.

௩௭. அதற்கவர் பிரதியுத்தாரமாக அவர்களுடனே: நீங்கள் அவர்களுக்குப் போசனங் கொடுங்கோளென்றார்; அவர்கள் அவருடனே: நாங்கள் போய் இருநூறு பணத்துக்கு அப்பங்களைக் கொண்டு அவர்களுக்குப் போசிக்கக் கொடுப்போமோவென்றார்கள்.

௩௮. அவரோவென்றால் அவர்களுடனே: உங்களுக்கெத்தனை அப்பங்களுண்டு, போய்ப் பாருங்கோளென்றார். அவர்கள் அறிந்தபோது: ஐந்தப்பமும் இரண்டு மீனுமிருக்குதென்றார்கள்.

௩௯. அப்போ எல்லாரையும் பச்சைப்புல்லின் மேலே பந்தி பந்தியாக இருத்த அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

௪௰. அப்படியே அவர்கள் வரிசை வரிசையாய் நூறு நூறும் ஐம்பதைம்பதுமாக உட்கார்ந்தார்கள்.

௪௧. அவர் அந்த ஐந்தப்பங்களையும் இரண்டு மீன்களையும் வாங்கி, வானத்தை அண்ணார்ந்து பார்த்து, ஸ்தோத்திரம் பண்ணி, அப்பங்களைப் பிட்டு, அவர்கள் முன்னே வைக்கத் தம்முடைய சீஷருக்குக் கொடுத்து, இரண்டு மீனையும் எல்லாருக்கும் பங்கிட்டார்.

௪௨. எல்லாருஞ் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்.

௪௩. பணிரெண்டு கூடை நிறைய அப்பத்துணிக்கைகளையும் மீன்களில் மீந்ததையுமெடுத்தார்கள்.

௪௪. அப்பங்களைச் சாப்பிட்டவர்களோவென்றால் ஏறக்குறைய ஐயாயிரம் புருஷராயிருந்தார்கள்.

அவர் கடலின் மேல் நடந்தது. மத். ௰௪, ௨௨.
௫. யோவ. ௬, ௰௫. ௫.

௪௫. உடனே அவர் தம்முடைய சீஷரைப் படகிலேறவும், தாமும் ஜனத்தை அனுப்பி விடுவதற்குள்ளே அக்கரைக்குப் பெத்சாயிதாவுக்கு நேராக முன்னே போகவுந் துரிசப் பண்ணினார்.

௪௬. அவர்களை அனுப்பிவிட்டபின்பு, ஜெபம் பண்ண ஒரு பருவதத்திலே போனார்.

௪௭. சாயுங்காலமானபோது படகு நடுக்கடலிலிருந்தது, அதற்கவர் ஒருத்தரே கரையிலிருந்து,

௪௮. அவர்கள் படகை ஓட்டுகிறதிலே வருத்தப்படுகிறதைக் கண்டார், ஏனென்றால் காத்து அவர்களுக்கெதிராயிருந்தது. ராத்திரியில் நாலாஞ் சாமத்திலே அவர் அவர்களண்டையிலே கடலின் மேலே நடந்து வந்து, அவர்களுக்குப் பக்கமாய் அப்பாலே போக மனதாயிருந்தார்.

௪௯. அதற்கவர்கள் அவரைக் கடலின் மேலே நடக்கக் கண்டு, ஆவேஷமென்று நினைத்து, சத்தமிட்டார்கள்.

௫௰. ஏனெ

௫௰. ஏனென்றால் எல்லாரும் அவரைக் கண்டு கலங்கினார்கள்; உடனே அவர் அவர்களுடனே பேசி: திடன்கொள்ளுங்கோள்; நான்தான்; பயப்படாதேயுங்கோளென்று சொல்லி,

௫௧. அவர்களண்டைக்குப் படவிலேறினார்; அப்போ காத்தமர்ந்தது. ஆனதால் அவர்கள் மிகுதியும் மட்டிலாமல் தங்களில் பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள்.

௫௨. அதேதென்றால் அப்பங்களின் அதிசயத்திலே அவர்களுக்கு உணர்வுண்டாகவில்லை; ஏனென்றால் அவர்களிருதயம் அழுத்தமுள்ளதாயிருந்தது.

௫௩. அவர்கள் அக்கரைக்குப்போய், *கெனேசரேத்துத் தேசத்திலே வந்து கரைபிடித்தார்கள். *மத்தே. ௰௪, ௩௪—௩௬.

௫௪. அவர்கள் படவிலிருந்திறங்கினவுடனே சனங்கள் அவரை அறிந்து,

௫௫. அந்தச் சுற்றுப்புறமெங்குமோடித்திரிந்து, அவரிருக்கிறாரென்று கேட்டவிடத்துக்கு எல்லாப் பிணியாளிகளைப் படுக்கைகளிலே எடுத்துவரத் துடங்கினார்கள்.

௫௬. அவர் எந்த ஊர்களிலும் பட்டணங்களிலும் கிராமங்களிலும் பிரவேசித்தாரோ, அங்கே வியாதிக்காரரைச் சந்தைவெளிகளிலே வைத்து, அவர்கள் அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலுந் தொட அவரை வேண்டிக்கொண்டார்கள். அவரைத் தொட்டயாவரும் ஆரோக்கியமானார்கள்.

௭. அதிகாரம்.

கிறிஸ்து பாரம்பரைக்காரியங்களுக்கு விரோதமாய்ப் பண்ணின போதகம். மத். ௰௫, ௧—௨௰.

யெருசலேமிலிருந்து வந்த பரிசேயரும் வேதபாரகரில் சிலரும் அவரிடத்திலே கூடினார்கள்.

௨. அப்போ அவருடைய சீஷரிற் சிலர் தீட்டுண்டாகிய கழுவாத கைகளாலே அப்பங்களைப் போசிக்கிறதை அவர்கள் கண்டு குற்றம்பிடித்தார்கள்.

௩. அதேதென்றால் பரிசேயரும் யூதரனைவரும் முன்னோர் பாரம்பரைக்குரியதைக் கைக்கொண்டிருந்து, முழங்கைமட்டுங் கழுவினாலொழியப் போசியார்கள்.

௪. கடையிலிருந்து வந்தபோதும், முழுகினாலொழியப் போசியார்கள். அப்படியவர்கள் கைக்கொள்ளுகிறதுக்குக் கொண்டதாகிய பாத்திரங்களுங் குடங்களுஞ் செம்புகளுங் கட்டில்களுங் கழுவுதல் முதலான வேறே அநேக காரியங்களுமுண்டு.

௫. பின்பு பரிசேயரும் வேதபாரகரும் அவரை: உம்முடைய சீஷர் முன்னோர் பாரம்பரைக்குரியதின்படியே நடவாமல், கழுவாத கைகளாலே அப்பத்தைச் சாப்பிடுவானேனென்று கேட்டார்கள்.

௬. அவரோ

௬. அவரோவென்றால் அவர்களுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது: இந்தச்சனம் உதடுகளினாலே நம்மைக் கனம்பண்ணுது; அவர்களிருதயமோ நமக்குத் தூரமாய்விலகியிருக்குதென்றும்;

எ. * மனுஷரின் கற்பனைகளாகிய போதகங்களைப் போதிவிக்கிறவர்களாயிருந்தால் வீணிலே நமக்காராதனை செய்கிறார்களென்றும் எழுதியிருக்கிற பிரகாரமாக மாயக்காரராகிய உங்களைக் குறித்து ** யேசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனஞ் சொன்னான். * கொலோ. ௨. ௨௰—௨௨. ** ஏசா. ௨௯. ௰௩.

அ. அதேதென்னறால் நீங்கள் பராபரனுடைய கற்பனையைவிட்டுவிட்டு; * மனுஷருடைய பாரம்பரைக் கிரமமாகிய குடங்களையும் பாத்திரங்களையும் கழுவுதலைக் கைக்கொண்டு இப்படிக்கொத்த வேறே அநேகங் காரியங்களையுஞ் செய்கிறீர்களென்றார். * மத். ௨௩. ௨௫. ௨௬.

௯. அவர் பின்னும் அவர்களுக்குச் சொன்னதாவது: நீங்கள் உங்கள் பாரம்பரைக் கிரமத்தைக் காக்கத்தக்கதாகப் பராபரனுடைய கற்பனைகளை நன்றாய்த் தள்ளினீர்கள்.

௰. அதேதென்னில்: * உன் தகப்பனையும் உன் தாயையுங் கனம்பண்ணென்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் சாகவே சாகக்கடவானென்றும் மோசே சொன்னானே. * ௨. மோ. ௨௰. ௰௨.

௰௧. ஆனால் ஒருமனுஷன் தகப்பனுடனே அல்லது தாயுடனே: உனக்கென்னாலே உதவுகிறதாகிலுண்டானாலே; அது கொர்பான்; அதாவது; காணிக்கையாயிருக்குதென்றால் நீங்கள் ஆமென்று சொல்லி;

௰௨. அவனினிமேல் தன் தகப்பனுக்கு அல்லது தன் தாய்க்கு ஒன்றுஞ் செய்யவொட்டாமல்;

௰௩. நீங்கள் போதிவிக்கிற உங்கள் பாரம்பரைக் கிரமத்தினாலே பராபரனுடைய வசனத்தைச் செல்லாமல் பண்ணி; இப்படிக்கொத்த அநேகங் காரியங்களைச் செய்கிறீர்களென்று சொல்லி;

௰௪. ஜனமெல்லாத்தையுஞ் சேரவழைத்து; அவர்களுக்குச் சொன்னதாவது: எல்லாரும் என் வசனங் கேட்டுணருங்கோள்.

௰௫. * மனுஷனுக்குப் புறம்பேயிருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தக் கூடாது; அவனுக்குள்ளிருந்து புறப்படுங் காரியங்களே மனுஷனைத் தீட்டுப்படுத்துகிறதாயிருக்குது.

௰௬. கேட்க ஒருத்தன் காதுள்ளவனிருந்தால் கேட்கக்கடவானென்றார்.

௰எ. அவர் ஜனத்தைவிட்டு வீட்டுக்குள் பிரவேசித்தபோது அவருடைய சீஷர் இந்த உவமையின் செய்தியை அவரைக் கேட்டார்கள்.

௰அ. அப்போதவர் அவர்களுடனே சொன்னதாவது: நீங்களும் அத்தனை உணர்வற்றவர்களாயிருக்கிறீர்களோ; புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே

போகிற

போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தக்கூடாதென்கிறதை அறிந்துகொள்ளமாட்டீர்களோ.

௰௯. ஏனென்றால் அது அவனிருதயத்துக்குள்ளாய்ப் போகாமல், வயிற்றுக்குள்ளாய்ப் போய், எல்லாப் போசனங்களையுங் கழிக்கிற ஆசனவழியாய்ப் புறப்பட்டுப் போம்.

௨௰. ஆகிலும் மனுஷனுக்குள்ளிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்துமென்றார்.

௨௰௧. எப்படியென்றால் * உள்ளே மனுஷருடைய இருதயத்திலிருந்து துர்ச்சிந்தனைகளும் விபசாரங்களும் வேசித்தனங்களும் கொலைபாதகங்களும், * மத். ௰௫, ௰௯. ௨௰.

௨௰௨. களவுகளும் பொருளாசைகளும் பொல்லாங்குகளும் வஞ்சகங்களும் காமவிகாரமும் வன்கண்ணும் தூஷணமும் பெருமையும் மதிகேடும் புறப்படும்.

௨௰௩. இந்தப் பொல்லாக் காரியங்களெல்லாம் உள்ளேயிருந்து புறப்பட்டு, மனுஷனைத் தீட்டுப்படுத்துமென்றார்.

அவர் கானானிய ஸ்திரீயினுடைய மகளைப் பிசாசின் வாதைக்கு நீங்கலாக்கிரட்சித்தது. மத். ௰௫, ௨௰௧—௨௮.

௨௰௪. அவர் அவ்விடம் விட்டெழுந்திருந்து, தீருசீதோன் பட்டணங்களின் எல்லைகளில் வந்து, ஒரு வீட்டுக்குள் பிரவேசித்து, ஒருவரும் அறியாதிருக்க மனதாயிருந்தார், ஆகிலும் ஒளித்திருக்கக்கூடாதிருந்தது.

௨௰௫. ஏனென்றால் அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு சின்ன மகளின் தாயாகிய ஒரு ஸ்திரீ அவர் செய்தியைக் கேட்டு வந்து, அவர் பாதத்தில் விழுந்தாள்.

௨௰௬. அந்த ஸ்திரீயோவென்றால் சீரோபேனிக்கே தேசத்தியான கிரேக்க ஸ்திரீயாயிருந்தாள், பிசாசைத் தன் மகளை விட்டுத் துரத்த அவள் அவரை வேண்டிக்கொண்டாள்.

௨௰௭. ஆனால் யேசு அவளுடனே: முந்திப் பிள்ளைகள் திருத்தியடையட்டும், ஏனென்றால் பிள்ளைகளுடைய அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்லவென்றார்.

௨௰௮. அவளோவென்றால் அவருக்குப் பிரதியுத்தாரமாக: ஆம் ஆண்டவரே, ஆகிலும் மேசைப்பலகையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் பிள்ளைகளுடைய துணுக்குகளில் கொஞ்சந் தின்னுதேயென்றாள்.

௨௰௯. அப்போ அவர் அவளுடனே: இந்த வார்த்தையினிமித்தியம் நீ போ, பிசாசு உன் மகளை விட்டு நீங்கிப் போச்சுதென்றார்.

௩௰. அவள் தன் வீட்டுக்கு வந்தபோது, பிசாசு நீங்கிப் போனதையும், மகள் கட்டிலின் மேல் படுத்திருக்கிறதையுங் கண்டாள்.

அவர் செவிடும் ஊமையுமான மனுஷனைக் குணமாக்கினது. மத். ௰௫, ௨௯—௩௧.

௩௧. மறுபடியும் அவர் தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளை விட்டுப் புறப்பட்டு, பத்துப் பட்டணங்களுடைய எல்லைகளின் நடுவாய்க் கலிலேயாக் கடலோரத்துக்கு வந்தார்.

௩௨. அப்பொழுது பேசமாட்டாத ஒரு செவிடனை அவரண்டைக்குக் கொண்டுவந்து, அவன் மேல் தம்முடைய கையை வைக்க அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௩௩. அப்பொழுது அவர் அவனைக் கும்பலை விட்டுத் தனியே அழைத்துப் போய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, * உமிழ்ந்து அவனுடைய நாவைத் தொட்டு, * ௮, ௨௩.

௩௪. வானத்தை * அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு விட்டு: எப்பத்தா, அதாவது: திறவுண்டு போவென்றார். * யோவ. ௰௧, ௪௧.

௩௫. உடனே அவனுடைய செவிகள் திறவுண்டு அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து போய், செவ்வையாய்ப் பேசினான்.

௩௬. இதை ஒருவருக்குஞ் சொல்லாதிருக்க அவர்களுக்குக் கற்பித்தார். ஆனால் அவர்களுக்கு எத்தனை கற்பித்தாரோ அத்தனை அதிகமாய் அவர்கள் பிரசங்கித்து,

௩௭. எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்கிறார், செவிடர் கேட்கவும் ஊமையர் பேசவும் பண்ணுகிறாரென்று, மட்டில்லாமல் ஆச்சரியப்பட்டுச் சொன்னார்கள்.

௮. அதிகாரம்.

* கிறிஸ்து வனாந்திரத்தில் நாலாயிரம் பேருக்குப் போசனங் கொடுத்தது. மத. ௰௫, ௩௨.

அந்நாட்களிலே திரளான சனமிருந்து அவர்களுக்குப் போசிக்க ஒன்றுமில்லாத போது யேசு தம்முடைய சீஷரைச் சேர வழைத்து அவர்களோடே:

௨. கும்பலின் மேல் மனதுருகுகிறேன், ஏனெனில் அவர்கள் இப்பொழுது மூன்று நாளாய் என்னோடே தரித்துப் போசிக்க ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். * ௬, ௩௪.

௩. நான் அவர்களைப் பட்டினியாக அவர்கள் வீட்டுக்கு அனுப்பினால் வழியிலே தொய்ந்து போவார்கள், ஏனென்றால் அவர்களில் சிலர் தூரத்திலேயிருந்து வந்தார்களென்றார்.

௪. அவருடைய சீஷர் அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: இவர்களை ஒருத்தன் இங்கே வனாந்தரத்திலே அப்பங்களினாலே திருத்திப்பண்ண எங்கேயிருந்து வருமென்றார்கள்.

௫. அவர்களை: உங்களுக்கு எத்தனை அப்பங்களுண்டென்று கேட்டார். அவர்கள்: ஏழென்றார்கள்.

௬. அப்பொழுது அவர் சனத்தைத் தரையிலே பந்தியிருக்கக் கட்டளையிட்டு, ஏழப்பங்களை எடுத்து ஸ்தோத்

திரம்பண்ணிப்பிட்டு அவைகளை முன்னே வைக்கும்படிச் சீஷருக்குக் கொடுத்தார், அவர்கள் சனத்தின் முன்னே வைத்தார்கள்.

௭. கொஞ்சஞ் சிறுமீன்களும் அவர்களுக்குண்டாயிருந்தது: அவர் ஸ்தோத்திரம் பண்ணி, அதுகளையும் அவர்கள் முன்னே வைக்கச் சொன்னார்.

௮. ஆனால் அவர்கள் * போசித்துத் திருத்தியடைந்து மீந்த துணிக்கைகளை ஏழு கூடை எடுத்தார்கள்: * ௨. ராசா. ௪, ௪௪.

௯. போசித்தவர்கள் ஏறக்குறைய நாலாயிரம் பேராயிருந்தார்கள். அவர் அவர்களை அனுப்பிவிட்டு,

௰. உடனே தம்முடைய சீஷரோடே கூடப் படவிலேறித் தல்மனுத்தாவின் எல்லைகளில் வந்தார்.

பரிசேயர் அவரை அடையாளங் கேட்டது.
மத்தே. ௰௬, ௧—௪.

௰௧. அப்பொழுது பரிசேயர் புறப்பட்டு வந்து அவரோடே தர்க்கிக்கத் துவக்கி, வானத்திலிருந்துண்டாகும் ஒரு அடையாளத்தை அவரிடத்திலே தேடி, அவரைச் சோதித்தார்கள்.

௰௨. அவர் தம்முடைய ஆவியிலே பெருமூச்சுவிட்டு, இந்தச் சந்ததி அடையாளந் தேடுகிறதென்ன, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், * இந்தச் சந்ததிக்கு அடையாளங் கொடுக்கப்படுவதில்லையென்று சொல்லி,
* லூக். ௰௧, ௨௯.

௰௩. அவர்களை விட்டுத் திரும்பப் படவிலேறி அக்கரைக்குப் போனார்.

அவர் பரிசேயருடைய புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருக்கச் சொன்னது. மத்தே. ௰௬, ௫—௰௨.

௰௪. அப்பங்களை எடுத்துவர மறந்திருந்தார்கள், படவிலே ஒரு அப்பமேயல்லாமல் வேறொன்றும் அவர்களுக்கில்லாதிருந்தது.

௰௫. அவர் அவர்களுக்கு: நீங்கள் பரிசேயருடைய புளித்தமாவுக்கும் ஏரோதேயினுடைய புளித்தமாவுக்கும் எச்சரிக்கையாயிருக்கப் பாருங்கோளென்று கற்பித்தார்: * லூக். ௰௨, ௧. ௧. கொரி. ௫, ௬.

௰௬. அப்பொழுது அவர்கள் ஒருத்தரோடொருத்தர்: நமக்கு அப்பங்களில்லாததினிமித்தம் இதைச் சொல்லுகிறாரென்று ஆலோசனைப்பட்டார்கள்.

௰௭. இயேசு அதை அறிந்து, அவர்களுடனே: உங்களுக்கு அப்பங்களில்லாததினிமித்தம் நீங்கள் ஆலோசனைப்படுகிறதென்ன, * இன்னுஞ் சிந்தியாமலும் உணராமலுமிருக்கிறீர்களோ, இன்னும் உங்கள் இருதயம் உங்களுக்குக் கெடியாயிருக்குதோ, * ௬, ௫௨.

௰௮. உங்களுக்குக் கண்களிருந்துங் காணீர்களோ, காதுகளிருந்துங் கேளீர்களோ, நினையாமலுமிருக்கிறீர்களோ.

௰௯. நான்

௰௯. நான் ஐயாந்தப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் பிட்டுப்போதது, துணிக்கைகளால் எத்தனைக் கூடை நிறையவெடுத்தீர்களென்றார். அவருடனே: பன்னிரண்டென்றார்கள். * ௬, ௪௩. ௪௪.

௨௰. ஆனால் நான் ஏழப்பங்களை * நாலாயிரம் பேருக்குப் பிட்டுப்போதது, துணிக்கைகளால் எத்தனைக் கூடை நிறையவெடுத்தீர்களென்றார். அவர்கள் ஏழென்றார்கள். * அ. ௬. வசனம்.

௨௧. அப்போதவர்களுடனே: நீங்கள் உணராதிருக்கிறதெப்படியென்றார்.

அவர் ஒரு குருடனுக்குப் பார்வை கொடுத்தது.

௨௨. அவர் பெத்சாயிதாவுக்கு வந்தார், அப்போதவரண்டையிலே ஒரு குருடனைக் கொண்டு வந்து, அவனைத் தொடவும் அவரை வேண்டிக் கொண்டார்கள்.

௨௩. அவர் குருடனுடைய கையைப் பிடித்து, * அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டு போய், அவன் கண்களிலே உமிழ்ந்து, அவன் மேலே கைகளை வைத்து: யாதொன்றைக் காணுகிறாயோவென்று அவனைக் கேட்டார். * ௭, ௩௩.

௨௪. அவன் முழித்துப் பார்த்து: மனுஷரை மரங்களைப்போலே நடக்கக் காணுகிறேனென்றான்.

௨௫. பிறபாடு திரும்ப அவன் கண்களின் மேலே கைகளை வைத்து, அவனை முழித்துப் பார்க்கப் பண்ணினார், அப்போதவன் சீரடைந்து, தூரத்திலே யாவரையுந் தெளிவாய்க் கண்டான்.

௨௬. அவர்: நீ கிராமத்துக்குள் பிரவேசியாமலும், * கிராமத்திலே ஒருத்தருக்குஞ் சொல்லாமலுமிருப்பாயாகவென்று அவனை அவன் வீட்டுக்கனுப்பினார்.
* ௭, ௩௬.

பேதுரு யேசுவின் பேரிலே பகர்ந்த சாட்சி.
மத்தே. ௰௬, ௰௩ — ௨௰. லூ. ௯, ௰௮ — ௨௰.

௨௭. யேசுவும் அவருடைய சீஷரும் புறப்பட்டு பிலிப்புச் செசாரியாப்பட்டணத்தின் கிராமங்களுக்குப் போனார்கள். வழியிலே அவர் தம்முடைய சீஷரை: மனுஷர் என்னை ஆரென்கிறார்களென்று கேட்டார்.

௨௮. அவர்கள் பிரத்தியுத்தாரமாக: யோவான் ஸ்நானகனென்றும், வேறே சிலர் எலியாவென்றும், வேறே சிலர் தீர்க்கதரிசிகளிலொருத்தரென்றுஞ் சொல்லுகிறார்களென்றார்கள்.

௨௯. அவர் அவர்களை: ஆனால் நீங்கள் என்னை ஆரென்கிறீர்களென்று கேட்டார். பேதுரு அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: நீர் * கிறிஸ்துவாயிருக்கிறீரென்றான். * யோவா. ௧, ௪௰. ௬, ௬௯.

கிறிஸ்துதாம் படப்போறபாடுகளை முன்னறிவித்து தந்தம்மைப் பின்செல்லப் புத்தி சொன்னதும்.

மத்தே. ௰௬, ௨௧. ஹூ. லூ. ௯, ௨௧ — ௨௭.

௩௰. அப்போ அவர் தம்முடைய செய்தியை ஒருவரோ
டுஞ் சொல்லாதபடிக்கு அவர்களுக்குக் கெட்டியாயக்
கற்பித்து,

௩௧. மனுஷனுடைய குமாரன் அநேகம் பாடுபட்டு,
மூப்பர்களாலும் பிரதான ஆசாரியர்களாலும் வேதி
யாக்களாலும் ஆகாதவனென்று தள்ளுண்டு, கொல்
லப்பட்டு, மூன்று நாளைக்குப் பிற்பாடு திரும்ப எழுந்
திருக்கவேண்டியதென்று அவர்களைப் போதிக்கத்
துவக்கி,

௩௨. இந்த வார்த்தையைத் தாராளமாய்ச் சொன்னார்.
அப்போ பேதுரு அவரைத் தனியே அழைத்து அவரை
உதம்பத் துவக்கினான்.

௩௩. ஆனால் அவர் திரும்பிக்கொண்டு தம்முடைய சீஷரைப்
பார்த்து, பேதுருவை உதம்பி: * என் பிறகே போ சாத்
தானே, ஏனென்றால் நீ பராபரனுக்கடுத்தவைகளை
யல்ல மனுஷருக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்.

* ௨. சாமு. ௰௯, ௨௨.

௩௪. அவர் கும்பையையுந் தம்முடைய சீஷரையுங்கூடத் தம
மண்டைக் கழைத்து, அவர்களுக்குச் சொன்னதாவது:
என் பிறகே வர மனதாயிருக்கிறவன் தன்னைத் தான்
வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு * என்
னைப் பின்செல்லக்கடவான்.

௩௫. ஏனென்றால் எவன் * தன் ஜீவனை ரட்சித்துக்
கொள்ள மனதாயிருக்கிறானோ அவன் அதை இழந்து
போவான், ஆனால் எவன் என் நிமித்தியமாகவுஞ் சுவி
சேஷத்தின் நிமித்தியமாகவுந் தன் ஜீவனை இழந்து
போவானோ அவன் அதை ரட்சித்துக்கொள்ளுவான்.

* மத். ௰, ௩௯.

௩௬. அதென்னென்றால் மனுஷன் லோகத்தையெல்
லாம் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஆத்து
மத்தைச் சேதப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன.

௩௭. அல்லது மனுஷன் தன் ஆத்துமத்தை மீட்கிறத
துக்குண்டாக என்னத்தைக் கொடுப்பான். * சங். ௪௯, ௯.

௩௮. அதென்னென்றால் * எவனுக்கும் விபசாரமும்
பாவமுமான இந்தச் சந்ததியிலே என்னைக்காகவும் என்
வார்த்தைகளுக்காகவும் வெட்கப்பட்டால், அவனுக்
காக மனுஷனுடைய குமாரனுந் தம்முடைய பிதாவின் மகி
மையாய்ப் பரிசுத்த தூதர்களோடேகூட வரும்போது
வெட்கப்படுவாரென்றார். * மத். ௰, ௩௩.
௨. தீமோ. ௨, ௰௨.

௯. அதிகாரம்.

அவர் பறுவதத்தில் மகிமைப்பட்டது.

மத். ௰௭, ௧—௰௩. லூ. ௯, ௨௮—௩௬.

பின்னையும் அவர் அவர்களுடனே: * மெய்யாகவே உங்
களுக்குச் சொல்லுகிறேன், இங்கே நிற்கிறவர்களில்
சிலருண்டு, அவர்கள் பராபரனுடைய ராட்சியம்

பெலததுடனெ வநததைககாணுமட்டும மரணததைத
ருசிபாரார்களெனறார். * மத. ௰௬. ௨௮.

௨. ஆறுநாள் * களுககுப்பிறபாடு யேசுபேதுருவையும /
யாககோபையும யோவானையுஙகூடடிககொணடு
அவர்களைமாததிரம உயர்நத ஒருபறுவததின மேல
தனிததழைததுபபோய / அவர்களுககுமுனபாக மறு
ருபமானார்.

௩. அவருடைய வஸததிரஙகள காநதியுளளதுக
ளுமஉறைநதமழையைபபோலமிகுநதவெணமையு
மாசசுது / பூமியின மேல வணணான அததனை வெண
மையாககககூடாது.

௪. அபபோ எலியாமோசேயோடுஙகூட அவர்க
ளுககுககாணபபடடான / அவர்கள யேசுவுடனே பே
சிககொணடிருநதார்கள.

௫. பேதுருபிறதியுததாரமாக யேசுவுடனே: ரபி
நாமிஙகேயிருககிறது நனறாயிருககுது. நாஙகள மூனறு
கூடாரஙகளைப போடுவோம / உமககொனறும
மோசேககொனறும எலியாவுககொனறும என
றான.

௬. ஏனெனில தான பேசுகிறதினனதெனறறியாதி
ருநதான / அதெனனறால திகைததிருநதார்கள.

௭. அபபோ அவர்களமேல நிழலிடுகிற ஒருமேக
முணடாயி / மேகததிலிருநது: * இவர் நமமுடைய நே
சகுமாரனாயிருககிறார் / இவர்சொலலைககேளுஙகோளென
கிறசததமுணடாசசுது. * மத. ௩. ௰௭.
௨. பே. ௧. ௰௭.

௮. அநபபோதே அவர்கள சுததுமபாரககிறபோது.
யேசுவொருததரையலலாமல வேறொருததரையுநதங
களுடனெ அபபுறஙகணடதிலலை.

௯. ஆனால அவர்கள பறுவததிலிருநதிறஙகிறபோது
அவர் இவர்களுககு / மனுஷனுடைய குமாரன மரித
தோரிலிருநதெழுநதுபோகுமளவும அதுககுமுனனே
ஆரோடுநதாஙகள கணடதுகளைச சொலலாதபடிக
குக கறபிததார்.

௰. அவர்கள: மரிததோரிலிருநதெழுநதிருககிறதென
ன வெனறு ஒருததரோடொருததர் தறககிததுக கொண
டு / அநதவாரததையதஙகளுககுளளே அடககி /

௰௧. எலியாமுநதி வரவேணுமெனறுவேதபாரகர்
சொலலுகிறதேதெனறவரைககேட்டார்கள.

௰௨. அவரோவெனறால அவர்களுககுபபிறதியுத
தாரமாகச சொனனதாவது: மெயதான. எலியாமுநதி
வநதெலலாததையுஞசீர்திருததுகிறான. ஆனாலமனுஷ
னுடைய குமாரனைககுறிதது / அவர் அநேகமபாடு
படடுஅறபமாயெணணபபடுவாரெனறெழுதியிருக
கிறதெபபடி.

௰௩. * எலியாவோவெனறால வநதானெனறுமஅவ
னைககுறிததெழுதியிருககிறபிறகாரமாயவர்கள /
தஙகளுககு வேணுமெனறபடிஎலலாமவனுககுச
செயதார்களெனறும உஙகளுககுச சொலலுகிறே
னெனறார். * மத. ௰௧. ௰௪.

அவர் சந்திர ரோகியானவனுக்கு ஸொஸ்தமாக்கினது. மத. ௰௭/ ௰௪—௨௧. லூ. ௯/ ௩௭—௪௩.

௰௪. அவர் சீஷரண்டையிலே வந்தபோது, அவர்களைச் சுத்த ஜநதிரளாகுமனடயும் அவர்களோடே தற்க்கிக்கிற வேதபாரகரையுங் கண்டார்.

௰௫. உடனே ஜனமெல்லாம் அவரைக் கண்டபோது ஆச்சரியப்பட்டு, ஓடிவந்து அவரை உபசரித்தார்கள்.

௰௬. அவர் வேதபாரகரை: நீங்கள் அவர்களோடே தற்க்கிக்கிறதென்னவென்று கேட்டார்.

௰௭. அப்போது கூட்டத்துக்குள்ளே ஒருத்தன் பிறதியுத்தாரமாக: போதகரே, ஊமை ஆவியுள்ள என் மகனை உம்மண்டையிலே கொண்டுவந்தேன்.

௰௮. அது அவனைப் பிடிக்கிற இடமெல்லாம் அவனை நொறுக்குது, அப்போ நுரைதள்ளி தன் பல்லுகளைக் கடித்துக்கொண்டு நோய்ந்து போறான். அதைத் துரத்திவிட உம்முடைய சீஷரோடே பேசினேன், அவர்களாலே கூடாமத்தே போச்சுதென்றான்.

௰௯. ஆனால் அவர் அவனுக்குப் பிறதியுத்தாரமாக: அவிசுவாசமுள்ள சந்ததியே, எந்தமட்டும் உங்களோடேயிருப்பேன், எந்தமட்டும் உங்களைப் பொறுத்திருப்பேன், அவனை என்னண்டைக்குக் கொண்டுவாருங்கோளென்றார்.

௨௰. அப்போ அவனை அவரண்டைக்குக் கொண்டுவந்தார்கள். அவரைக் கண்டவுடனே ஆவி அவனை அலைக்கழித்துது, அவன் தரையிலே விழுந்து நுரைதள்ளிப் புரண்டான்.

௨௧. அவர் அவனுடைய தகப்பனை: இது அவனுக்கு வந்து எத்தனை காலமாச்சுதென்று கேட்டார். அதற்கவன்: சிறுபோதே வந்திருக்குது,

௨௨. அது அவனைக் கெடுக்கத்தக்கதாக வெகுதரம் அவனைத் தீயிலேயுந் தண்ணீரிலேயுந் தள்ளுது, உம்மாலேதாகிலுங் கூடுமேயானால் எங்கள் மேலே மனதுருகி எங்களுக்குதவி செய்யுமென்றான்.

௨௩. ஆனால் யேசு அவனுடனே: விசுவாசிக்கக் கூடுமேயானால், விசுவாசிக்கிறவனுக்கு * எல்லாக் காரியங்களுங் கூடுமென்றார். * லூ. ௰௭/ ௬.

௨௪. உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன், ஆண்டவரே: என் அவிசுவாசத்துக்குதவி செய்யுமென்று கண்ணீர் விட்டுக் கூப்பிட்டான்.

௨௫. ஆனால் கும்பு சேர ஓடிவருகிறதை யேசு கண்டு, அசுத்த ஆவியை அதட்டி: ஊமையுஞ் செவிடுமான ஆவியே, அவனை விட்டுப் புறப்படு, இனி அவனுக்குட் போகாதேயென்கிறத்துக்கு நானுனக்குக் கற்பிக்கிறேனென்று அதட்டினார்.

௨௬. அப்போ அது கூப்பிட்டு அவனை வெகுவாய் அலைக்கழித்துப் புறப்பட்டுது. அவன் மரித்தானென்று அனேகர் சொல்லத்தக்கவனாய்ச் செத்தவன் போலானான்.

௨௭. ஆனால

௨௭. ஆனால் யேசு அவனைக் கையைப் பிடித்தெடுத்தார், அப்போ எழுந்திருந்தான்.

௨௮. அவர் வீட்டுக்குள்ளே பிரவேசித்த பிற்பாடு அவருடைய சீஷர் அவரைத் தனியே: நாங்கள் அதைத் துரத்திவிடக்கூடாதே போனதேதென்று கேட்டார்கள்.

௨௯. அவர் அவர்களுடனே: இந்தச் சாதி செபத்தினாலும் உபவாசத்தினாலுமே ஒழியப் பின்னெந்த வகையினாலும் புறப்படமாட்டாதென்றார்.

அவர் தம்முடைய மரணத்தையும் உயிர்த்தெழுந்ததையும் முன்னறிவித்தது. மத். ௰௭. ௨௨. ௨௩. லூ. ௯. ௪௩—௪௫.

௩௰. அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவைக் கடந்துபோனார்கள். அதை ஒருத்தரும் அறிய அவருக்கு மனதில்லாதிருந்தது.

௩௧. ஏனென்னில் அவர் தம்முடைய சீஷரைப் போதகம் பண்ணி, அவர்களுடனே: * மனுஷனுடைய குமாரன் மனுஷர் கைகளிலே ஒப்புக்கொடுக்கப்படுவார், அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள், கொல்லப்பட்டு மூன்றாம் நாளிலே திரும்ப எழுந்திருப்பாரென்றார். * அ, ௩௧.

௩௨. அவர்களோவென்னில் அந்த வார்த்தையை அறியாமல் போய், அதை அவரைக் கேட்கப் பயந்தார்கள்.

மனத்தாழ்மையாயிருக்கவும் இடறல் உண்டாக்காமலும் மட்டறலுடைய ராமதுமிருக்கவும் அவர் சொன்ன புத்தி. லூ. ௯, ௪௬—௫௰.

௩௩. அவர் கப்பர்நகூமுக்கு வந்தார், வீட்டிலே இருக்கும்போது அவர்களை: நீங்கள் வழியிலே உங்களுக்குள்ளே தர்க்கித்ததேதென்று கேட்டார்.

௩௪. ஆனால் அவர்கள் மவுனமாயிருந்தார்கள், ஏனென்னில் ஆர் பெரியவனென்று வழியிலே ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

௩௫. அவர் உட்கார்ந்து பன்னிருவரை அழைத்து அவர்களுடனே: * யாதொருத்தன் முதலாளியாயிருக்க மனதாயிருந்தால், எல்லாரிலும் கடைசியானவனும் எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருப்பானென்று சொல்லி, * மத். ௰௮, ௬. ௱.

௩௬. ஒரு பிள்ளையை எடுத்து அதை அவர்கள் நடுவே நிறுத்தி, அதை * அணைத்துக்கொண்டு, * ௰, ௰௬.

௩௭. எவனாகிலும் இப்படிக்கொத்த பிள்ளைகளிலே ஒன்றை என் நாமத்துக்காக ஏற்றுக்கொண்டால் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், எவனாகிலும் என்னை ஏற்றுக்கொண்டால் அவன் என்னை ஏற்றுக்கொள்ளாமல் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறானென்று அவர்களுக்குச் சொன்னார்.

௩௮. ஆனால் யோவான் அவருக்குப் பிரதியுத்தரமாக: போதகரே, நம்மைப் பின்செல்லாத ஒருத்தன்

உமது நாமத்திலே பிசாசுகளைத் துரத்திடக் கண்டோம்; அவன் நம்மைப் பின்செல்லாதபடியினாலே அவனுக்குத் தடை சொன்னோமென்றான்.

௩௯. ஆனால் யேசு சொன்னதாவது: அவனுக்குத் தடை சொல்லாதேயுங்கோள்; என்னுடைய நாமத்திலே வல்லமையைச் செய்து, சீக்கிரத்திலே என்னைத் தீங்கு சொல்லத்தக்கவனொருவனுமில்லை.

௪௰. அதேதென்னால் நமக்கு விரோதமாயிராதவன் நமக்கானவனாயிருக்கிறான்.

௪௧. * என்னிலுள்ளவனுக்கும் நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களென்று ஒருக்கலயந் தண்ணீர் என் நாமத்தினிமித்தியம் உங்களுக்குக் குடிக்கக் கொடுத்தால், அவன் தன் பலனையிழந்துபோகானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன். * மத. ௰: ௪௨.

௪௨. ஆனாலும் என்னிடத்தில் விசுவாசிக்கிற இச்சிறியரில் * ஒருவனுக்கு இடறலுண்டாக்கினால், அவன் கழுத்திலே ஏந்திரக்கல்லு தூக்கக் கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்திலே தள்ளுண்டுபோனது அவனுக்குத் தாவிலை.

* மத. ௰௮: ௬—௯.

௪௩. * உன்னுடைய கை உனக்கிடறலுண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு; நீ ஊனனவனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது இரண்டு கையுடையனாய் அவியாத அக்கினியாகிய நரகத்துக்குள் போவதைப்பார்க்கிலும் உனக்கு நலமாயிருக்கும். * மத. ௫: ௨௯. ௩௰.

௪௪. அங்கே * அவர்கள் புழுச் சாகாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். * யெச. ௬௬: ௨௪.

௪௫. உன் கால் உனக்கிடறலுண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு; நீ சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது இரண்டு கால் உடைத்தானாய் அவியாத அக்கினியாகிய நரகத்திலே தள்ளுண்டுபோவதைப்பார்க்கிலும் உனக்கு நலமாயிருக்கும்.

௪௬. அங்கே அவர்கள் புழுச் சாகாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

௪௭. உன் கண் உனக்கிடறலுண்டாக்கினால் அதைப் பிடுங்கிப்போடு; நீ ஒற்றைக்கண்ணனாய் பராபரனுடைய ராட்சியத்துக்குள் பிரவேசிப்பது இரண்டு கண்ணுடைத்தானாய் அக்கினியாகிய நரகத்திலே தள்ளுண்டுபோவதைப்பார்க்கிலும் உனக்கு நலமாயிருக்கும்.

௪௮. அங்கே அவர்கள் புழுச் சாகாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

௪௯. ஏனெனில் ஒவ்வொருத்தன் அக்கினியினாலே உப்பிடப்படுவான்; * சகல பலியும் உப்பினாலே உப்பிடப்படும். * ௩. மோ. ௨: ௰௩.

௫௰. * உப்பு நல்ல வஸ்து; உப்பு சாரமற்றுப்போகுதேயானால், அதற்கெத்தினாலே சாரமுண்டாக்குவீர்கள்; உங்களில் உப்புடைத்திருங்கோள்; ஒருவரோடொருவர் சமாதானமாயிருங்கோளென்றார். * மத. ௫: ௰௩.

௰. அதிகாரம்.

விவாகபந்தத்தைக்குறித்துச்சொன்ன உத்தரம். மத. ௰௯, ௩—௰௨.

அவர் அவ்விடம் விட்டெழுந்திருந்து யோர்தானுக்கக்கரையிலிருக்குந்தேசத்தைக்கடந்து, யூதேயாவினெல்லைகளிலே வந்தார். ஜனங்கள் திரும்ப அவரண்டைக்கூடிவந்தது; அவர் திரும்ப வழக்கத்தின்படியே அவர்களுக்குப் போதித்தார்.

௨. அப்போ பரிசேயர் சேர்ந்துவந்து: பெண்சாதியைத்தள்ளிவிடப் புருஷனுக்கு ஞாயமோவென்று அவரைச்சோதித்துக்கேட்டார்கள்.

௩. அவரோவென்றால் அவர்களுக்குப் பிறத்தியுத்தரமாக: மோசே உங்களுக்குக் கற்பித்ததென்னவென்றார்.

௪. அதற்கவர்கள்: தள்ளுதலின் சீட்டையெழுதித் தள்ளிவிட மோசே உத்தரங்கொடுத்தாரென்றார்கள். ✝ ௫. மோ. ௨௪, ௧.

௫. யேசு அவர்களுக்குப் பிறத்தியுத்தரமாகச் சொன்னதாவது: உங்கள் இருதயகடினத்தினிமித்தியம் இந்தக்கற்பனையை உங்களுக்கெழுதினான்.

௬. ஆனால் லோகச்சிஷ்டிப்பு முதலே பராபரன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கி:

௭. இதினிமித்தியம் மனுஷன் தன் தகப்பனையுந்தாயையும் விட்டுத் தன் பெண்சாதியோடே சேர்ந்திருப்பான். ✝ ௧. மோ. ௨, ௨௪.

௮. இருவரும் ஒரே மாங்கிஷமாயிருப்பார்களென்றார். இவ்விதமாய் அவர்கள் இனி இரண்டுபேராயிராமல் ஒரே மாங்கிஷமாயிருக்கிறார்கள்.

௯. ஆகையால் பராபரன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவானென்றார்.

௰. வீட்டிலே அவருடைய சீஷர் இந்தக்காரியத்தையே அவரைத்திரும்பவுங்கேட்டார்கள்.

௰௧. அவர் அவர்களுடனே: ✝ எவனாகிலுந்தன் பெண்சாதியைத்தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் அவளுக்கு விரோதமாய் விபசாரம்பண்ணுகிறான். ✝ மத. ௫, ௩௨.

௰௨. பெண்சாதியுந்தன் புருஷனைத்தள்ளிவிட்டு வேறொருத்தனை விவாகம்பண்ணினால், விபசாரம்பண்ணுகிறாளென்றார்.

அவர் பிள்ளைகளை ஆசீர்வதித்தது. மத. ௰௯, ௰௩—௰௫. லூ. ௰௮, ௰௫—௰௭.

௰௩. அப்போது அவரண்டைக்குப் பிள்ளைகளை அவர் அதுகளைத்தொடுகிறதுக்காகக்கொண்டுவந்தார்கள். ஆனால் சீஷர் அதுகளைக்கொண்டுவந்தவர்களை அதம்பினார்கள்.

௰௪. யேசு அதைக்கண்டபோ கோவெனிலதாங்க லண்டாந்து, அவர்களுக்குச் சொன்னதாவது: பிள்ளைகளையென்னிடைக்கு வருகிறதுக்கு இடங்கொடுங்கோள், அதுகளைத் தடைபண்ணாதேயுங்கோள், அதேதென்றால் பராபரனுடைய ராச்சியம் அப்படிக்கொத்தவர்களுடையதாயிருக்குது.

௰௫. மெய்யாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: * ஆராகிலுஞ் சின்னப்பிள்ளையைப்போலே பராபரனுடைய ராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாதே போனால், அதுக்குள்ளே பிறவேசிக்கமாட்டானென்று சொல்லி, * மத். ௰௮, ௩. ௧. பேது. ௨, ௨.
௧. கொ. ௰௪, ௨௰.

௰௬. * அதுகளை அணைத்துக்கொண்டு, அதுகள் மேலே கைகளை வைத்து அதுகளை ஆசீர்வதித்தார். * ௯, ௩௬.

அவர் ஐசுரியமுள்ள ஒருத்தனுக்குச் சொன்னகாரியம். மத். ௰௯, ௰௬—௨௯. லூ. ௰௮, ௰௮—௨௭.

௰௭. அவர் வழியிலே புறப்பட்டபோது ஒருத்தன் ஓடி வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு: நல்லபோதகரே, நித்தியசீவனைச் சுதந்தரித்துக் கொள்ள நான் செய்யவேண்டியதென்னவென்று அவரைக் கேட்டான்.

௰௮. ஆனால் யேசு அவனுக்குச் சொன்னதாவது: நீ என்னை நல்லவரென்பானேன், பராபரனொருத்தர் தவிர ஒருவனும் நல்லவனல்லவே.

௰௯. விபசாரம்பண்ணாதேயாக, கொலைசெய்யாதேயாக, களவுசெய்யாதேயாக, பொய்ச்சாட்சிசொல்லாதேயாக, கவடுசெய்யாதேயாக, உன் தகப்பனையுந்தாயையுங்கனம்பண்ணு என்கிற கற்பனைகளை அறிவாயே என்றார்.

௨௰. ஆனால் அவன் அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: போதகரே, இதுகளெல்லாமென் சிறுவயதுதுவக்கிக் கைக்கொண்டிருக்கிறேனென்றான்.

௨௧. யேசுவோவெனிலவனை நோக்கிப்பார்த்து அவனைச் சிநேகித்து: உனக்கொன்று குறையுது, நீ போய் உனக்குண்டானதையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்போ பரமண்டலத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும், நீயோவெனில் வந்து சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்செல்லென்றார். * மத். ௬, ௰௯. ௨௰.

௨௨. ஆனால் அவன் அந்த வார்த்தையிலே மனம் நொந்துகொண்டு, துக்கமாய்ப்போய்விட்டான், அதேதெனில் வெகு ஆஸ்தியுள்ளவனாயிருந்தான்.

௨௩. அப்போ யேசு சுத்திலும் பார்த்து, தம்முடைய சீஷருடனே: திரவியங்களுள்ளவர்கள் பராபரனுடைய ராச்சியத்துக்குள்ளே பிறவேசிப்பதெத்தனை அரிதாயிருக்குமென்றார்.

௨௪. சீஷரோவெனில் அவருடைய வார்த்தைகளுக்குக் காகவிறுமித்தார்கள். ஆனால் யேசு திரும்பப் பிறத்தியுத்

காரியங்கொடுத்து: பிள்ளைகளே, திரவியங்களின் பேரிலே நம்பிக்கையாயிருக்கிறவர்கள் பராபரனுடைய ராட்சியத்துக்குள்ளே பிரவேசிக்கிறது எத்தனை அரிதாயிருக்குது. * சங்கீ. ௬௨/ ௰௧.

௨௫. ஐசுவரியவான் பராபரனுடைய ராட்சியத்துக்குள்ளே பிரவேசிக்கிறதைப் பார்க்கிலும், ஒட்டகம் ஊசியின் காதிலே நுழைகிறது எளிதாயிருக்குமென்று அவர்களுக்குச் சொன்னார்.

௨௬. ஆனால் அவர்கள் அதிகமாய்த் திகைத்து ஒருத்தரோடொருத்தர்: அப்படியானால், ஆர் ரெட்சிக்கப்படக்கூடுமென்றார்கள்.

௨௭. யேசுவோவென்றால் அவர்களை நோக்கிப் பார்த்து: மனுஷராலே இது கூடாததாயிருக்குது, பராபரனாலேயோ கூடாததல்ல, அதேனென்றால் பராபரனாலே * எல்லாக் காரியங்களும் கூடுகிறதாயிருக்குதென்றார். * லூ. ௧/ ௩௭. ௧. மோ. ௰௮/ ௰௪.

கிறீஸ்துநிமித்தியமாக ஏதையாகிலும் விட்டுவிட்டவனுக்கு வரும்பலன். மத். ௰௯/ ௨௭—௩௰. லூ. ௰௮/ ௨௮—௩௰.

௨௮. அப்பொழுது பேதுரு அவருடனே: இதோ நாங்கள் எல்லாத்தையும் விட்டு உம்மைப் பின்சென்றோமென்று சொல்லத்தொடங்கினான்.

௨௯. ஆனால் யேசு பிரதியுத்தாரமாகச் சொன்னது: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், என்னிமித்தியமாகவும் சுவிசேஷத்தினிமித்தியமாகவும் வீட்டையாகிலும் சகோதரரையாகிலும் சகோதரிகளையாகிலும் தகப்பனையாகிலும் தாயையாகிலும் பெண்சாதியையாகிலும் பிள்ளைகளையாகிலும் நிலங்களையாகிலும் விட்டுவிட்ட ஒருத்தனும்,

௩௰. இப்பொழுது இம்மையிலே துன்பங்களுடனே கூட நூறத்தனையாக வீடுகளையும் சகோதரரையும் சகோதரிகளையும் தாய்களையும் பிள்ளைகளையும் நிலங்களையும், வரப்போற லோகத்திலே நித்திய சீவனையும் அடையாதிருப்பதில்லை.

௩௧. ஆகிலும் * முந்தினோர் அனேகர் பிந்தினோருமாய், பிந்தினோர் அனேகர் முந்தினோருமாயிருப்பார்களென்றார். * மத். ௨௰/ ௰௬.

படப்போறபாடுகளைக் கிறீஸ்து முன்னறிவித்தது. மத். ௨௰/ ௰௭—௰௯. லூ. ௰௮/ ௩௧—௩௩.

௩௨. ஆனால் யெருசலேமுக்குப் போயாறுக்கிறவர்களாய் வழியிலேயிருந்தார்கள். யேசு அவர்களுக்கு முன்னாக நடந்தார், அவர்கள் திகைத்துப் பயத்தோடே பின்சென்றார்கள். அப்பொழுது அவர் பன்னிருவரையும் மறுபடியும் அழைத்து, தமக்குச் சம்பவிக்கப்போறதுகளை அவர்களுக்குச் சொல்லத்துவக்கி:

௩௩. இதோ யெருசலேமுக்குப் போயாறுக்கிறோம், அங்கே மனுஷனுடைய குமாரன் பிறதான ஆசாரியர்க

ளுக்கும

னுக்கும் வேதபாரகருக்கும் ஒப்புக்கொடுக்கப்படு
வார்; அவர்கள் அவரை மரணத்துக்குள்ளாகத் தீர்த்து,
புறசாதியாருக்கு ஒப்புக்கொடுப்பார்கள்.

௩௪. அவரைப் பரியாசம்பண்ணி, அவரை வாரினாலே
அடித்து, அவர்மேலே துப்பி, அவரைக் கொன்றுபோடு
வார்கள்; மூன்றாம் நாளிலே திரும்பவும் எழுந்திருப்
பாரென்றார்.

செபெதேயுவின் குமாரருடைய விண்ணப்பம்.
மத். ௨௰, ௨௰—௨௮.

௩௫. செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும்
யோவானும் அவரண்டைக்கு வந்து: போதகரே,
நாங்கள் கேட்கப்போறதைத் தேவரீர் எங்களுக்குச்
செய்யவேணுமென்றிருக்கிறோமென்றார்கள்.

௩௬. அவர் அவர்களுடனே: நான் உங்களுக்கென்
ன செய்யவேணுமென்றிருக்கிறீர்களென்றார்.

௩௭. அப்போதவர்கள் அவருடனே: உம்முடைய மகி
மையிலே நாங்கள், ஒருத்தன் உம்முடைய வலது பாரிசத்தி
லும், ஒருத்தன் உம்முடைய இடது பாரிசத்திலும் உட்கார்ந்
திருக்கும்படிக்கு எங்களுக்கருளச்செய்யுமென்றார்
கள்.

௩௮. ஆனாலேயேசு அவர்களுடனே: நீங்கள் கேட்
கிறதின்னதென்று அறியீர்கள்; நான் குடிக்கிற பாத்தி
ரத்தை நீங்கள் குடிக்கவும், நான் பெறுகிற ஸ்நானத்
தை நீங்கள் பெறவும் உங்களாலே கூடுமோவென்றார்.

௩௯. அவர்கள் அவருடனே: கூடுமென்றார்கள்; ஆ
னாலேயேசு அவர்களுடனே: நான் குடிக்கிற பாத்திரத்
தைக் குடிப்பீர்கள்; நான் பெறுகிற ஸ்நானத்தை
யும் பெறுவீர்கள்.

௪௰. ஆனாலென் வலதுபாரிசத்திலும் என் இடது
பாரிசத்திலும் உட்காருகிறதுக்களிக்கிறது என்னுடைத்
தல்ல; எவர்களுக்காய் ஆயத்தம்பண்ணப்பட்டதோ
அவர்களுக்களிக்கப்படுமென்றார்.

௪௧. மற்றப் பத்துப்பேர் அதைக் கேட்டபோது,
யாக்கோபின் பேரிலும் யோவான் பேரிலும் தாங்
கலாயிருக்கத் துவங்கினார்கள்.

௪௨. ஆனாலேயேசு அவர்களைச் சேரவழைத்து அவர்க
ளுக்குச் சொன்னதாவது: சாதிகளுக்குத் தலைவராக
எண்ணப்பட்டவர்கள் அவர்களை ஆளுகிறார்க
ளென்றும், அவர்களிலே பெரியவர்கள் அவர்கள்
மேலே அதிகாரிகளாயிருக்கிறார்களென்றும் அறிவீர்
கள்.

௪௩. உங்களிலேயோவெனில் அப்படி வேண்டாம்;
உங்களிலெவனும் பெரியவனாகவேணுமென்றி
ருந்தால், உங்கள் பணிவிடைக்காரனாயிருப்பான்:

௪௪. உங்களிலெவனும் முதலாளியாகவே
ணுமென்றிருந்தால், எல்லாருக்கும் ஊழியக்கார
னாயிருப்பான்.

௪௫. ஏனென்றால் மனுஷனுடைய குமாரனும் ஊ
ழியஞ்செய்வித்துக்கொள்ள வராமல், ஊழியஞ்

செய்ய

செய்யவுந் தம்முடைய ஜீவனை அநேகரை மீட்கும் பொருளாகத் தரவும் வந்தாரென்றார்.

குருடன் பர்திமேயு பார்வையடைந்தது.

௪௬. பிற்பாடு யெரிகோவுக்கு வந்தார்கள். அவரும் அவருடைய சீஷருந் திரளா ஜனங்களும் * யெரிகோவிலிருந்து புறப்படுகிற போது திமேயுவின் மகனாகிய பர்திமேயுவென்னுங் குருடன் வழியருகே உட்கார்ந்திரந்து கொண்டிருந்தான். * மத். ௨௰. ௨௯. ஹ.

௪௭. அவர் நாசரேத்தானாகிய யேசுவென்று கேட்டப் போது: யேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கிரங்குமென்று கூப்பிடத் துவக்கினான்.

௪௮. அநேகர் அவனை அதட்டினார்கள், ஆனாலவன் வெகு அதிகமாய்: தாவீதின் குமாரனே, எனக்கிரங்குமென்று கூப்பிட்டான்.

௪௯. அப்பொழுது யேசு நின்று அவனை அழைக்கச் சொன்னார். அவர்கள் குருடனை அழைத்து, அவனுடனே: திடன் கொண்டெழுந்திரு, உன்னை அழைக்கிறாரென்றார்கள்.

௫௰. அப்பொழுதவன் தன் வஸ்திரத்தை எறிந்து போட்டெழுந்திருந்து யேசுவண்டை வந்தான்.

௫௧. யேசு அவனுக்குப் பிரதியுத்தாரமாக: நான் உனக்கென்ன செய்ய வேணுமென்றிருக்கிறாயென்றார். குருடன் அவருடனே: குருவே, நான் பார்வை அடைய வேணுமென்றான்.

௫௨. ஆனால் யேசு அவனுடனே: போ, * உன் விசுவாசம் உன்னை ரட்சித்ததென்றார். உடனே அவன் பார்வை அடைந்து யேசுவை வழியிலே பின் சென்றான். * ௫. ௩௪.

௰௧. அதிகாரம்.

கிறிஸ்து யெருசலேமுக்குள் பிரவேசம் பண்ணினது. மத். ௨௧. ௧—௰௭. லூ. ௰௯. ௨௯ ஹ. யோவ. ௰௨. ௰௨—௰௯.

அவர்கள் யெருசலேமுக்குச் சமீபமாய் ஒலிவமலைக்கருகான பெத்பகேயுக்கும் பெத்தானியாவுக்கும் வந்த போது, அவர் தம்முடைய சீஷரிலிரண்டு பேரை அனுப்பி,

௨. அவர்களுக்குச் சொன்னதாவது: உங்களுக்கெதிரேயிருக்கிற கிராமத்துக்குப் போங்கோள், அதுக்குள் பிரவேசித்தவுடனே, மனுஷர் ஒருநாளுமேறியிராதொரு கழுதைக்குட்டி கட்டியிருக்கிறதைக் காண்பீர்கள், அதை அவிழ்த்துக் கொண்டுவாருங்கோள்.

௩. யாதொருத்தன் உங்களுடனே: நீங்களென்ன செய்கிறீர்களென்றால், அது கர்த்தருக்குத் தேவையாயிருக்குதென்று சொல்லுங்கோள், உடனே அதை இங்கே அனுப்புவானென்றார்.

௪. அவர்

௪. அவர்கள் போய், குட்டியை வழிப்பிரிவான வெளியிலே ஒருகதவடியிலே கட்டியிருக்கிறதாகக் கண்டுபிடித்து, அதை அவிழ்த்தார்கள்.

௫. அப்போ அங்கேநின்றவர்களிற்சிலர் அவர்களுடனே: நீங்கள் குட்டியை அவிழ்க்கிறகாரியமென்னவென்றார்கள்.

௬. ஆனால் அவர்கள் யேசுகற்பித்தபடியே அவர்களுக்குச்சொன்னார்கள். அப்போ அவர்கள் அவர்களைப்போகவிட்டார்கள்.

௭. அவர்கள் மறியையேசுவண்டைக்குக்கொண்டுவந்து, அதின்மேலே தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்கள், அவர் அதின்மேலேறினார்.

௮. ஆனால் அனேகர் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்துப்போட்டார்கள், வேறேசிலர் கிளைகளைத் தறித்துவழியிலே தெளித்தார்கள்.

௯. முன்போனவர்களும் பின்வந்தவர்களுஞ்சத்தமிட்டு: * ஓசியன்னா, கர்த்தாவின்நாமத்திலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். * சங்கீ. ௱௰௮, ௨௫. ௨௬.

௰. கர்த்தாவின்நாமத்திலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின்ராட்சியம் ஆசீர்வதிக்கப்பட்டது, உன்னதமானதுகளிலே ஓசியன்னாவென்றார்கள்.

௰௧. யேசுயெருசலேமுக்கும் தேவாலயத்துக்குள்ளும் பிறவேசித்து, எல்லாத்தையுஞ் சுத்திப்பார்த்து, சாயுங்காலமானபோது பன்னிருவரோடுங்கூடப் பெத்தானியாவுக்குப்புறப்பட்டுப்போனார்.

அவர்கனிகொடாத அத்திமரத்தைச்சபித்தது.

மத. ௨௧, ௰௮. ௰௯.

௰௨. மறுநாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்துவருகையில் அவர் பசித்திருந்து,

௰௩. இலைகளுள்ள அத்திமரத்தைத்தூரத்திலேகண்டு, அதிலேதாகிலுங்கண்டுபிடிக்கலாமோவென்று வந்தார். அவர் அதண்டைவந்தபோது, இலைகளையல்லாமல் பின்னொன்றையுங்கண்டதில்லை, அதேனென்றால் அத்திப்பழக்காலமாயிருந்ததில்லை.

௰௪. அப்போயேசு உத்தரமாக அதுடனே: இனிமேலானறைக்கும் ஒருமுனானிடத்திலக்கனிபோசியாதிருக்கக்கடவதாகவென்றார்: அதை அவருடசீஷர் கேட்டார்கள்.

அவர்தேவாலயத்தைச்சுத்திகரித்தது.

௰௫. அவர்கள் யெருசலேமுக்குவந்தார்கள். * யேசு தேவாலயத்துக்குள்ளப்பிறவேசித்து, தேவாலயத்தில் விற்கிறவர்களையுங்கொள்ளுகிறவர்களையுந்துரத்திவிட்டுவக்கி, காசுக்காறருடைய பலகைகளையும் புறாவிற்கிறவர்களின் ஆசனங்களையுங் கவிழ்த்துப்போட்டு, * மத. ௨௧, ௰௨. ௰௩. ஆ.

௰௯, ௪௫—௪௮.

௰௬. ஒருவனுந் தேவாலயத்து வழியாக யாதொரு பண்டபாடியையுங் கொண்டு போகவொட்டாமல்;

௰௭. * நம்முடைய வீடு எல்லாச் சாதிகளுக்குஞ் செபத்தின் வீடென்னப்படுமென்றெழுதியிருக்கல்லையோ? நீங்களோவெனில் ** அதைக் கள்ளர் கெபியாக்கினீர்களென்று அவர்களுக்குச் சொல்லி உபதேசித்தார். * யெச. ௫௬। ௭. ** யெரே. ௭। ௰௧.

௰௮. அதை வேதபாரகரும் பிரதான ஆசாரியர்களுங் கேட்டு, அவனை எப்படிக் கொலைசெய்வதென்று வகைதேடினார்கள். ஏனென்றால் சனமெல்லாம் அவர் உபதேசத்துக்குத் திகைத்திருந்தபடியினாலே அவருக்குப் பயப்பட்டார்கள்.

௰௯. சாயுங்காலமானபோது பட்டணத்திலிருந்து வெளியே புறப்பட்டார்.

அவர் விசுவாசத்தையுஞ் செபத்தையுங் குறித்துச் சொன்னபுத்தி. மத். ௨௧। ௨௰—௨௨.

௨௰. காலமே அவர்கள் கடந்துபோகும்போது, அத்திமரம் வேர்கள் முதலாய்ப் பட்டுப்போச்சுதென்று கண்டார்கள்.

௨௧. அப்போ பேதுரு நினைவுகூர்ந்து, அவருடனே: றபீ, இதோ நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போச்சுதென்றான்.

௨௨. யேசுப் பிரத்தியுத்தாரமாக அவர்களுக்குச் சொன்னதாவது: பராபரன் பேரிலே விசுவாசமுள்ளவர்களாயிருங்கோள்.

௨௩. ஏனென்றால் * எவனாகிலும் இந்தப் பர்வதத்தடனே: நீ பெயர்ந்து சமுத்திரத்தில் விழுவென்று சொல்லி, தன்னிருதயத்திலே சந்தேகப்படாமல், தான் சொல்லுகிறது ஆகுமென்று விசுவாசித்தால், அவனுக்கு அவன் சொன்னபடியாகுமென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். * மத். ௰௭। ௨௰.

௨௪. ஆனபடியினாலே நீங்கள் செபம்பண்ணி எதைக் கேட்டாலும் அடைவோமென்று விசுவாசியுங்கோள், அப்போ உங்களுக்கு வருமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். * மத். ௭। ௭.

௨௫. நீங்கள் செபம்பண்ணி நிற்கும்போது யாதொருவன் பேரிலே உங்களுக்குக் குறையாதாகிலுமுண்டானால், பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் உங்களுக்கு மன்னிக்கும்படிக்கு, அதை மன்னியுங்கோள்.

௨௬. நீங்கள் * மன்னியாதே போனீர்களேயானால், பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதே போவாரென்றார்.

* மத். ௬। ௰௫.

அவருடைய அதிகாரத்துக்காக யூதருடைய மூப்பர் வந்து தருக்கித்தது. மத். ௨௧। ௨௩—௨௭.

லூ. ௨௰। ௧—௮.

௨௭. பிற

௨௭. பின்பு மறுபடியும் எருசலேமுக்கு வந்தார்கள். அவர் தேவாலயத்திலே உலாவுகையிலே பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும் மூப்பரானவர்களும் அவரண்டையிலே வந்து [illegible]

௨௮. எந்த அதிகாரத்தினாலே இதுகளைச் செய்கிறீர், இதுகளைச் செய்யும்படி உமக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தவர் ஆரென்றார்கள்.

௨௯. அதற்கு யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தரமாக: நானும் உங்களை ஒரே வார்த்தையைக் கேட்பேன், நீங்கள் எனக்கு உத்தரஞ் சொன்னால், நானும் உங்களுக்கு எந்த அதிகாரத்தினாலே இதுகளைச் செய்கிறேனென்று சொல்லுவேன்.

௩௰. யோவானுடைய ஞானஸ்நானம் பரமண்டலத்திலிருந்துண்டாயிருந்ததோ, அல்லது மனுஷராலே உண்டாயிருந்ததோ, எனக்குச் சொல்லுங்கோளென்றார்.

௩௧. அப்போ அவர்கள்: பரமண்டலத்திலிருந்துண்டாயிருந்ததென்று சொன்னோமேயாகில், அவர்: பின்னை ஏன் அவனை விசுவாசியாதே போனீர்களென்பார்.

௩௨. மனுஷராலென்று சொன்னோமேயாகில், ஜனத்துக்குப் பயமுண்டு, எல்லாரும் யோவானை மெய்யாய்த் தீர்க்கதரிசியாயிருந்தானென்று எண்ணினார்களென்று தங்களுக்குள்ளே சிந்தித்துக்கொண்டு,

௩௩. யேசுவுக்குப் பிரத்தியுத்தரமாக: அறியோமென்றார்கள். அப்போ யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தரமாக: நானும் இதுகளை எந்த அதிகாரத்தினாலே செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேனென்றார்.

௰௨. அதிகாரம்.

பொல்லாத திராட்சத்தோட்டக்காறர் உவமம்.
மத். ௨௧. ௩௩. லூ. ௨௰. ௯—௰௯.

அவர் உவமைகளாய் அவர்களுக்குச் சொல்லத்துவக்கினதாவது: ஒரு மனுஷன் திராட்சத்தோட்டத்தை நாட்டி, சுத்திவேலி அடைத்து, அதிலே ஆலையைப் போட்டு, கோபுரங்கட்டி, அதைத் திராட்சத்தோட்டக்காறருக்கு விட்டு, மறுதேசத்துக்குப் போய்,

௨. தருணகாலத்திலே தோட்டக்காறர்கையிலே திராட்சத்தோட்டத்துக் கனியிலே சிலதை வாங்க, தோட்டக்காறரண்டைக்கு ஒரு ஊழியக்காறனை அனுப்பினான்.

௩. அவர்களோவென்றால் அவனைப் பிடித்து, அடித்து, வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள்.

௪. திரும்ப வேறே ஒரு ஊழியக்காறனை அவர்களண்டைக்கு அனுப்பினான். அவனை அவர்கள் கல்லெறிந்து, தலையிலே காயப்படுத்தி, கனயீனமாக அனுப்பிவிட்டார்கள்.

௫. திரும்பவும் வேறே ஒருத்தனை அனுப்பினான், அவனை அவர்கள் கொன்றார்கள், வேறே அநேகரில் சிலரை அடித்துச் சிலரைக் கொன்றுபோட்டார்கள்.

௬. இனனம அவனுககுப பிரியமான ஏகககுமாரனி
ருககையிலே: என குமாரனுககு அஞசுவார்களெனறு,
அவனையுஙகடைசியிலே அவர்களணடைககனுப்பி
னான.

௭. ஆனால அநதததோடடககாரர் ஒருததரோடொரு
த்தர்: இவன சுதநதரவாளியாயிருககிறான, இவனைக
கொனனுபோடுவோம வாருஙகோள, அபபொ
சுதநதிரமநமமுடையதாமெனறு சொலலிக கொணடு,

௮. அவனைப பிடிததுக கொனறு, திராடசத
தோடடததுககுப புறமபே எறிநதுபோடடார்கள.

௯. இபபோது திராடசத தோடடததுச சுவாமியான
வனனசெயவான, வநது தோடடககாறரைச சஙகரிக
து, திராடசததோடடததை வேறேபேர்களுககுவிடு
வான.

௰. * விடடுக கடடுகிறவர்கள ஆகாதெனறு தளளின
கலலே கோடிககுத தலையான கலலாசசுது.

* சஙகீ. ௱௰௮, ௨௨. ௨௩.

௧௧. அது கததராலே ஆசசுது, அது நமமுடைய கண
ணுககு ஆசசரியமாயிருககுதெனறெழுதியிருககிறததை
நீஙகள வாசிககததுமிலலையோ வெனறார்.

௧௨. அபபோ அவரைப பிடிகக வகைதேடினார்
கள, * சனததுககுப பயநதார்கள. ஏனனெனறாலிநத
உவமையைத தஙகளுககுச சொனனாரெனறறிநதார்கள.

* மற. ௰௪, ௫.

இராயனுடையவைகளுககாக அவர் சொனன உததரவு.
மத. ௨௨, ௰௫—௨௨. லூ. ௨௰, ௨௰—௨௬.

௧௩. அபபோ அவர்கள அவரை விடடுப போய
வாரததையிலே அவரைககுததமபிடிகக, பரிசேயரிலும
ஏரோதுகடசியினமனுஷரிலுஞ சிலரை அவரணடைக
கனுபபினார்கள.

௧௪. இவர்கள வநது, அவருடனே: போதகரே
நீர் சததியமுளளவர், எவனைக குறிததும உமககுக கவ
லையிலலையெனறு அறிநதிருககிறோம. ஏனனெனறால
நீர் மனுஷருககு முகமபாராமல, சததியமாய பராபர
னுடைய வழியைப போதிககிறீர். இராயனுககுவரி
கொடுககததகுமோ அலலவோ, கொடுபபோமோ
கொடாதிருபபோமோவெனறார்கள.

௧௫. ஆனால அவர்களுடைய மாயததை அவர் அறிநது,
அவர்களுடனே: நீஙகள எனனைச சோதிககிறதெனன?
நான பார்ககும படிககு ஒரு பணததை எனககுக கொண
டுவாருஙகோளெனறார்.

௧௬. அபபடியே கொணடுவநதார்கள. அவர் இவர்க
ளுடனே: இநதச சுருபமும மேலெழுததும ஆருடையதென
றார். அவர்கள அவருககு: இராயனுடையதுகளெனறார்கள.

௧௭. அபபோ யேசு அவர்களுககுப பிரதியுததார
மாக: இராயனுடையதை * இராயனுககும பராபரனுடை
யதைப பராபரனுககுங கொடுஙகோளெனறார். அவர்
கள அவர்பேரிலே ஆசசரியபபடடார்கள.

* ரோ. ௰௩, ௭.

மரித்தோர்களெழுந்திருக்கிறதற்குச் செய்யமேண்டேறப்பி வித்தது. மத். ௨௨। ௨௩—௩௩. லூ. ௨௰। ௨௭—௪௰.

௰௮. பிற்பாடு உயிர்த்தெழுந்தலில்லை என்று சொல்லுகிற * சதுசேயர் அவரண்டை வந்து அவரைக் கேட்டதாவது: * அப்போ. ௨௩। ௮.

௰௯. போதகரே ஒருத்தனுடைய சகோதரன் புத்திர சந்தானமில்லாமல் மரித்துப் பெண்சாதியைப் பின்னுவைத்தால் அவனுடைய சகோதரன் அவன் பெண்சாதியை விவாகம்பண்ணித் தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்க வேணுமென்று * மோசே எங்களுக்கு எழுதிவைத்தான். * ௫. மோ. ௨௫। ௫.

௨௰. இப்போதும் ஏழு சகோதரர் இருந்தார்கள் முந்தினவன் ஒரு பெண்சாதியை விவாகம்பண்ணிச் சந்தானமில்லாமல் மரித்தான்.

௨௧. இரண்டாஞ் சகோதரன் அவளை விவாகம்பண்ணி அவனுஞ் சந்தானமில்லாமல் மரித்தான் மூன்றாஞ் சகோதரனும் அந்தப்படித்தானே.

௨௨. ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணிச் சந்தானமில்லாமல் சென்றுபோனார்கள். எல்லாருக்குங் கடைசியிலே பெண்சாதியும் மரித்தாள்.

௨௩. இப்போதும் உயிர்த்தெழுந்தலிலே அவர்கள் எழுந்திருக்கும்போது அவர்களிலே ஆருடைய பெண்சாதியாயிருப்பாள் ஏழுபேரும் அவளைப் பெண்சாதியாகப் படைத்திருந்தார்களே என்றார்கள்.

௨௪. யேசு அவர்களுக்குப் பிறத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: நீங்கள் வேதஎழுத்துக்களையாகிலும் பராபரனுடைய வல்லமையையாகிலும் அறியாததினாலேயல்லோ மோசம்போகிறீர்கள்.

௨௫. ஏனென்றால் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கும்போது கொள்வினையுங் கொடுப்பினையுமில்லாமல் பரமண்டலங்களிலிருக்கிற தூதரைப்போலிருப்பார்கள்.

௨௬. ஆனால் மரித்தோர் எழுந்திருக்கிறார்களென்கிறதைக் குறித்து நீங்கள் மோசேயின் பொஸ்தகத்திலே: * நான் அபிரகாமுடைய பராபரனும் ஈசாக்குடைய பராபரனும் யாக்கோபுடைய பராபரனுமாயிருக்கிறேனென்று பராபரன் முட்செடியிலே அவனுடனே சொன்னதை வாசித்ததில்லையோ.
* ௨. மோ. ௩। ௬.

௨௭. அவர் மரித்தோருடைய பராபரனாயிராமல் சீவனுள்ளோருடைய பராபரனாயிருக்கிறார் ஆகையினாலே நீங்கள் மிகவும் மோசம்போகிறீர்களென்றார்.

பிறதானகற்பினையேதென்பது. மத். ௨௨। ௩௪—௪௰.

௨௮. அவர்கள் தர்க்கித்துக்கொள்ளுகிறதை வேதபாரகரிலொருத்தன் கேட்டு அவர்களுக்கு நன்றாய் உத்தாரஞ்சொன்னாரென்றறிந்து சேர்ந்துவந்து: எல்லாக் கற்பினைகளிலும் பிறதானமானதேதென்று அவரைக் கேட்டான்.

௨௯. ஆனாலேயேசுவவனுக்குப்பிரெதியுத்தாரமாகச்
சொன்னதாவது: எல்லாக்கற்பினைகளிலும்பிற
தானமானதுக்கேட்டெனறால்; * இஸ்றவேலே, கேள்,
நம்முடையபராபரனாகியகற்தர்ஏகக்கற்த்தராயிருக்கிறார்.

* ரு. மோ. ௬। ௪. ரு.

௩௰. உன்பராபரனாகியகற்தனை உன்முழுஇருதயத்
தாலும் உன்முழுஆத்துமத்தாலும் உன்முழுவிஞ்ஞா
னத்தாலும் உன்முழுப்பெலத்தாலுஞ்சிநேகிப்பாயாகவென்
கிறதேபிறதானகற்பினை.

௩௧. அதற்கொட்டொத்தயிரண்டாங்கற்பினை: * உனக்
கடுத்தவனை உன்னைப்போலச்சிநேகிப்பாயாகவென்
பதுதானே. இதுகளிலும்பெரியகற்பினைவேறொன்
றுமில்லையென்றார். * ௩. மோ. ௰௯। ௰௮.

௩௨. அப்பொழுதுவேதபாரகனவனுடனே: நல்ல
வாத்தியாரே, நீர்மெய்யாய்ச்சொன்னீர்,
ஏகனானபராபரனொருத்தராயிருக்கிறார், அவரைத்
தவிரவேறொருத்தரில்லை.

௩௩. அவரைமுழுஇருதயத்தாலும்முழுவிஞ்ஞா
னமுழுஆத்துமத்தாலும்முழுப்பெலத்தாலுஞ்
சிநேகிக்கிறதும் அடுத்தவனைத்தன்னைப்போலச்சிநேகிக்
கிறதுமெல்லாச்சறுவாங்கதகனங்களுக்கும்பலி
ப்பெலிகளுக்குமதிகமாயிருக்கிறதென்றான்.

௩௪. அவன்புத்தியுடனேயுத்தாரஞ்சொன்னதை
யேசுகண்டு, அவனுடனே: நீபராபரனுடையராட்சி
யத்துக்குத்தூரமானவனல்லவென்றார். அப்புறம்
ஒருத்தருமவரைக்கேட்கத்துணிந்ததில்லை.

கிறிஸ்துவுடையகுமாரனென்பது.

மத. ௨௨। ௪௧—௪௬. லூ. ௨௰। ௪௧—௪௪.

௩௫. யேசுதேவாலயத்திலேயுபதேசித்து, உத்த
ரவுகொடுத்துச்சொன்னதாவது: கிறிஸ்துதாவீதின்
குமாரனென்றுவேதபாரகரெப்படிச்சொல்லுகிறார்
கள்.

௩௬. * கற்தர்என்னாண்டவருடனே: நானும்
முடையசத்துருக்களைஉம்முடையபாதப்படியாக்கிப்போடு
மட்டும்நம்முடையவலதுபாரிசத்திலேஉட்காருமென்
றாரென்றுதாவீதுதானேபரிசுத்தஆவியினாலேசொன்
னானே. * சங்கீ. ௱௰। ௧.

௩௭. ஆகையினாலேதாவீதுதானேஅவரைஆண்டவ
ரென்கிறானே, பின்னெப்படிஅவனுடையகுமாரனா
யிருக்கிறாரென்றார். வெகுசனமவரைவிருப்பமாய்க்
கேட்டார்கள்.

வேதபாரகரினமாயத்தனத்தைக்காண்பித்தது.

மத. ௨௩। ௧—௩௩. லூ. ௨௰। ௪௫—௪௭.

௩௮. அவர்தம்முடையபோதகத்திலேஅவர்களுக்குச்
சொன்னதாவது: * நீளவஸ்திரங்களைத்தரித்துநடக்
கிறதையுஞ்சந்தைவெளிகளிலேவந்தனங்களையும்,
* லூ. ௰௧। ௪௩—௫௨.

௩௯. ஆலயங்களில் முதல் ஆசனங்களையும் விருந்துகளில் முதலிடங்களையும் விரும்பி,

௪௰. விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட செபம் பண்ணுகிற வேதபாரகருக்கு எச்சரிக்கையாயிருங்கோள். இவர்கள் அதிக ஆக்கினை அடைவார்களென்றார்.

சனங்கள் தங்கள் காசுகளைப் போடுகிறவிதத்தை அவர் நோக்கிப்பார்த்தது. லூ. ௨௧. ௧—௪.

௪௧. யேசு காணிக்கைப்பெட்டிக்கெதிராக உட்கார்ந்து, சனங்கள் காணிக்கைப்பெட்டியிலே எப்படிக் காசைப் போடுகிறார்களென்று பார்த்திருந்தார். அயிசுரியவான்கள் அநேகர் அநேகமாய்ப் போட்டார்கள்.

௪௨. ஒரு ஏழை விதவை வந்து, ஒரு துட்டுக்குச் சரியான ரெண்டு காசைப் போட்டாள்.

௪௩. அப்போ அவர் தம்முடைய சீஷரைச் சேர அழைத்து, அவர்களுடனே: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; * இந்த ஏழை விதவை காணிக்கைப்பெட்டியிலே காசு போட்ட எல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய்ப் போட்டாள். * ௨. கொ. ௮. ௰௨.

௪௪. ஏனெனில் எல்லாருந் தங்கள் பரிபூரணத்திலிருந்து போட்டார்கள், இவளோ தன் தாழ்ச்சியிலிருந்து, தனக்குண்டான கெல்லாத்தையுந் தன் முழுச்சீவனத்தையும் போட்டாளென்றார்.

௰௩. அதிகாரம்.

அவர் எருசலேமின் அழிவையும் லோகத்தின் முடிவையுங் குறித்துச் சொன்னது. மத். ௨௪. ௧—௩௯. லூ. ௨௧. ௫—௩௩.

அவர் தேவாலயத்தைவிட்டுப் புறப்பட்டபோது, அவருடைய சீஷரிலொருத்தன் அவருடனே: போதகரே, இதோ எப்படிப்பட்ட கல்லுகளும் எப்படிப்பட்ட வேலைப்பாடுகளுமென்றான்.

௨. யேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: இந்தப் பெரிய வேலைப்பாடுகளைக் காண்கிறாயோ, * இடிக்கப்படாமல் கல்லின்மேலே ஒரு கல்லும் வைக்கப்படுவதில்லையென்றார். * லூ. ௰௯. ௪௪.

௩. அவர் தேவாலயத்துக்கெதிராக ஒலிவமலையின்மேலே உட்கார்ந்திருக்கிறபோது, பேதுரும் யாகொபும் யோவானும் அந்திரேயாவும்:

௪. எப்போ இதுகளுண்டாம், இதுகளெல்லாம் நிறைவேறுகிற காலத்துக்கடையாளம் என்னவென்றெங்களுக்குச் சொல்லுமென்று அவரைத் தனித்துக் கேட்டார்கள்.

௫. ஆனால் யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொல்லத்துவக்கினதாவது: ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்குப் பாருங்கோள்.

௬. ஏனென்றால் அநேகர்; நான்தானென்று என்பேர்கொண்டுவந்து அநேகரை மோசம்போக்குவார்கள்.

௭. ஆனால் யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் நீங்கள் கேட்கும்போது கலங்காதேயுங்கோள்; ஏனென்றால் அப்படிச் சம்பவிக்கவேண்டியது; முடிவோவென்றாலோ இன்னுமில்லை.

௮. அதேதென்றால் சாதிக்குச் சாதியும் ராச்சியத்துக்கு ராச்சியமும் விரோதமாயெழும்பும்; அங்கங்கே பூமியதிர்ச்சிகளுமுண்டாம், பஞ்சங்களுங் கலகங்களுமுண்டாம்.

௯. இதுகளுபாதிகளின் துவக்கங்கள். நீங்களோவென்றால் எச்சரிக்கையாயிருங்கோள்; ஏனென்றால் ஆலோசனைச் சபைகளுக்கும் ஆலயங்களுக்கும் உங்களை ஒப்புக்கொடுப்பார்கள். நீங்கள் அடிப்பட்டு, என் நிமித்தியந் துரைகளுக்கும் ராசாக்களுக்கும் முன்பாக, அவர்களுக்குச் சாட்சியாக நிறுத்தப்படுவீர்கள்.

௰. எல்லாச் சாதிகளிடத்திலும் முந்திச் சுவிசேழம் பிறசங்கிக்கப்படவேணும்.

௰௧. * அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும்போது நீங்கள் என்ன பேசுவோமென்று முன்கவலைப்படாமலுந் தியானியாமலும்; அந்நாழிகையிலே உங்களுக்குக் கொடுக்கப்படுகிறதைப் பேசுங்கோள். ஏனென்றால் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவிதானே. * மத். ௰, ௰௯.

௰௨. * ஆனாற் சகோதரனைச் சகோதரனும் பிதா பிள்ளையைத் தகப்பனும் மரணத்துக்குக் காட்டிக்கொடுப்பான்; பெற்றாருக்கு விரோதமாய்ப் பிள்ளைகளெழும்பி அவர்களைக் கொலைப்படுத்துவார்கள். * மீகா. ௭, ௬.

௰௩. எல்லாராலுமென் நாமத்தினிமித்தியம் பகைக்கப்பட்டிருப்பீர்கள். ஆனால் முடிவுபரியந்தம் நிலைநிற்கிறவனே ரெட்சிக்கப்படுவான்.

௰௪. * தானியேலெந் தீர்க்கதெரிசியாலுரைக்கப்பட்ட பாழாக்குதலின் அருவருப்பை நீங்கள் தகாத்தலத்திலே நிற்கக்காணும்போதோவென்றால் (அதை வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவான்) அப்போ யூதேயாவிலிருக்கிறவர்கள் பர்வதங்களுக்கோடிப்போகக்கடவார்கள். * தானி. ௯, ௨௭.

௰௫. ஆனால் வீட்டின்மேலிருக்கிறவன் தன் வீட்டுக்குள் இறங்கவேண்டாம்; தன் வீட்டிலொன்றையாகிலுமெடுத்துக்கொள்ள உள்ளேபோகவும் வேண்டாம்.

௰௬. வயலிலிருக்கிறவன் தன் வஸ்திரத்தையெடுத்துக்கொள்ளப் பின்னிட்டுத்திரும்பவும் வேண்டாம்.

௰௭. ஆனால் அந்நாள்களிலே கெற்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் ஐயையோ.

௰௮. ஆனால் நீங்களோடிப்போவது மாரிகாலத்திலே சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கோள்.

௰௯. ஏனென்றால் அன்றுள்ளக்காலம் உபத்திரமா யிருக்கும்; அப்படிக்கொத்தது பராபரன் சிஷ்டித்த சிஷ்டிப்பின் ஆதிமுதற்கொண்டு இதுவரைக்கும் ஒருக்காலுஞ் சம்பவித்ததுமில்லை இனிச் சம்பவிக்கப்போகிறது மில்லை.

௨௰. கர்த்தர் அந்நாட்களைக் குறைக்காதிருந்தாரானால், ஒருமாம்சமும் இரட்சிக்கப்படுவதில்லை; தாம் தெரிந்துகொண்டவர்களினிமித்தமோவென்றால் அவர் அந்நாட்களைக் குறைக்கிறார்.

௨௧. * அப்போது யாதொருவன் உங்களோடே: இதோ கிறிஸ்து இங்கே, அதோ அங்கே என்றால் நம்பாதேயுங்கோள்.

௨௨. ஏனென்றால் * கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை முதலாய் மோசம்போக்கத்தக்கதாய் அடையாளங்களையும் அற்புதங்களையும் பண்ணுவார்கள். * ௫. மோ. ௰௩, ௧—௩. ௨. தெச. ௨, ௯—௰௨.

௨௩. ஆனால் நீங்கள் எச்சரிக்கையாயிருங்கோள்; இதோ எல்லாத்தையும் உங்களுக்கு முன்னறச்சொன்னேன்.

௨௪. அன்னாட்களிலேயோவென்றால் அந்த உபத்திரத்துக்குப் பிறபாடு * சூரியன் அந்தகாரப்பட்டு, சந்திரன் தன் ஒளியைக் கொடாதேபோம். * மத். ௨௪, ௨௯.

௨௫. * வானத்தின் நட்சத்திரங்கள் விழுகிறதாகி, வானங்களிலுள்ள பெலன்களும் அசைக்கப்படும். * ஏசா. ௰௩, ௰. [illegible]

௨௬. அப்போ * மனுஷனுடைய குமாரனை மேகங்களிலே வெகுவல்லமையோடும் மகிமையோடும் வரக்காண்பார்கள். * தானி. ௭, ௰௩.

௨௭. அப்போதவர் தம்முடைய தூதரை அனுப்பி, தாம் தெரிந்துகொண்டவர்களைப் பூமியின் முடிவுதுவக்கி வானத்தின் முகமட்டும் நாலு காத்துத்திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்.

௨௮. * அத்திமரத்தால் ஒரு உபமானத்தைக் கற்றுக்கொள்ளுங்கோள்; அதின் கிளைகள் இளசுமாய்த் துளிர்க்கும்போது வசந்தகாலஞ் சமீபமாயிருக்குதென்றறிகிறீர்கள். * மத். ௨௪, ௩௨—௩௩.

௨௯. அப்படியே நீங்களும் இதுகளைச் சம்பவிக்கக்காணும்போது, அது சமீபமாய் கதவண்டை வந்திருக்குதென்றறியுங்கோள்.

௩௰. மெய்யாக உங்களுக்குச் சொல்லுகிறேன்; இதுகளெல்லாஞ் சம்பவிக்கமட்டும் இந்தச்சந்ததி ஒழியாது.

௩௧. * வானமும் பூமியும் ஒழிந்துபோம்; ஆனாலென் வார்த்தைகள் ஒழியாது. * மத். ௨௪, ௩௫.

௩௨. அந்தநாளையும் நாழிகையையுமோவென்றால், பிதாதவிர வானத்திலுள்ள தூதராவது குமாரனாவது ஒருவரும் அறியார்கள்.

தம்முடைய வருகைக்கு ஆயத்தமாயிருக்க அவர் புத்தி சொன்னது. மத். ௨௪। ௩. ௸ லூ. ௨௧। ௩௪—௩௬.

௩௩. எச்சரிக்கையாயிருங்கோள், * முழித்திருங்கோள், ஏனெனில் காலமெப்போவென்றறியீர்கள். * மத். ௨௫। ௰௩.

௩௪. புறத்தேசத்துக்குப் பயணம்போகிற ஒரு மனுஷன் தன் வீட்டை விட்டுத் தன் ஊழியக்காறருக்கு அதிகாரத்தையும் அவனவனுக்கு அவனவனுடைய வேலையையுங் கொடுத்து, முழித்திருக்க வாசல்காறனுக்குக் கற்பித்தது போலிருக்குது.

௩௫. ஆகையினாலே வீட்டுக்கெசமான் அசுப்பிலே வந்து உங்களை நித்திரை பண்ணுகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு முழித்திருங்கோள்.

௩௬. ஏனென்றால் எப்போ வருகிறார், சாயுங்காலத்திலோ, பாதிராத்திரியிலோ, சாவல் கூவுகிறபோதோ, காலமேயோ வென்றறியீர்கள்.

௩௭. நான் உங்களுக்குச் சொல்லுகிறதையே எல்லாருக்குஞ் சொல்லுகிறேன், முழித்திருங்கோளென்றார்.

௰௪. அதிகாரம்.

யேசு பரிமளதயிலம் பூசப்பட்டது. மத். ௨௬। ௧—௰௩.

இரண்டுநாளைக்குப் பிறபாடு பஸ்காவும் புளிப்பில்லா அப்பங்களின் பண்டிகையுமாயிருக்கிறதாயிருந்தது, * அப்போ பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும், அவனை எப்படித் தந்திரமாய்ப் பிடித்துக் கொன்று போடலாமென்றவனைத் தேடினார்கள். * லூ. ௨௨। ௧. ௨.

௨. ஆனாலுஞ் சனத்தினாலே கலகமுண்டாகாதபடிக்குப் பண்டிகையிலே வேண்டாமென்றார்கள்.

௩. அவர் பெத்தானியாவிலே குஷ்டரோகியான சீமோனின் வீட்டிலே பந்தியிருக்கையிலே, விலையேறப்பெற்ற உத்தமமான நளத்துத் தயிலத்தின் பரணியையுடைய * ஒரு ஸ்திரீ வந்து பரணியை உடைத்து அவர் சிரசின்மேலே வார்த்தாள். * யோவ. ௰௨। ௧—௮.

௪. ஆனாலுஞ் சிலர் தங்களுக்குள்ளே எரிதாங்கலடைந்து: இந்தத் தயில அழிம்பு எதுக்குண்டாச்சுது.

௫. இதை முன்னூறு பணத்துக்கதிகமாய் விக்கிரயப்படுத்தித் தரித்திரருக்குக் கொடுக்கலாமேயென்று சொல்லி, அவள் பேரிலே சினத்தார்கள்.

௬. ஆனால் யேசு சொன்னதாவது: அவளை விடுங்கோள், ஏன் அவளை வருத்தப்படுத்துகிறீர்கள், என்னிலே நற்கிரிகையைச் செய்தாள்.

௭. ஏனெனில் உங்களிடத்திலே எப்போதுந் தரித்திரரிருக்கிறார்கள், உங்களுக்கு மனதுண்டானால் நீங்கள்

அவர்களுக்கு நன்மைசெய்யலாம்; நானோவெனில் உங்களிடத்தில் எப்பொழுதுமிரேன்.

௮. இவள் தன்னாலானபடி செய்தாள்; பிரேதலங்காரத்துக்காக என் சரீரத்தைத் தயிலம் பூசமுந்திக்கொண்டாள்.

௯. மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; இந்தச் சுவிசேஷம் லோகமெங்கும் எங்கே பிரசங்கிக்கப்படுமோ, அங்கே இவள் செய்ததும் இவளை நினைப்பதற்காகச் சொல்லப்படுமென்றார்.

யூதா அவரைக் காட்டிக்கொடுக்க உடன்படிக்கை பண்ணிக்கொண்டது. மத். ௨௬। ௰௪—௰௬. லூ. ௨௨। ௩—௬.

௰. பன்னிருவரிலொருத்தனான யூதாஸ்காரியோத்தோவென்பவன் பிரதான ஆசாரியர்களண்டைக்கு; அவரை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படிக்குப் புறப்பட்டுப்போனான்.

௰௧. அவர்கள் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, அவனுக்கு வெள்ளிக்காசைத் தருவோமென்று வாக்குக்கொடுத்தார்கள்; ஆகையினால் அவனவரைச் சமையமான வேளையிலே காட்டிக்கொடுக்க வகைதேடினான்.

அவர் சீஷருடனே கூடப் பஸ்காவைப் போசித்தது. மத். ௨௬। ௰௭—௨௫. லூ. ௨௨। ௭—௰௪

௰௨. பஸ்காவைப் பலியிடும் புளிப்பில்லா அப்பங்களின் முதல் நாளிலே அவருடைய சீஷர் அவருடனே: நீர் பஸ்காவைப் போசிப்பதற்கு நாங்கள் எங்கே போய் ஆயத்தம்பண்ண உமக்குச் சித்தமுண்டென்றார்கள்.

௰௩. அப்போ அவர் தம்முடைய சீஷரில் இருவரை அனுப்பி; அவர்களுக்குச் சொன்னதாவது: பட்டணத்திலே போங்கோள்; அங்கே தண்ணீர்க்குடங்கு சுமந்துபோகிற ஒரு மனுஷன் உங்களுக்கெதிர்ப்படுவான்; அவனைப் பின்செல்லுங்கோள்.

௰௪. அவனெங்கே உள்ளே பிரவேசிக்கிறானோ அந்த வீட்டுக்கச்சமானுடனே: நானென் சீஷருடனே கூடப் பஸ்காவைப் போசிக்குந் தங்குமிடமெங்கேயென்கிறதுக்குப் போதகர் கேட்கிறாரென்று சொல்லுங்கோள்;

௰௫. அவன் தளவரிசைப்படுத்தியிருக்கிற ஆயத்தமான பெரிய மேல்வீட்டை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே நமக்கு ஆயத்தம்பண்ணுங்கோளென்றார்.

௰௬. அப்போ அவருடைய சீஷர் புறப்பட்டுப் பட்டணத்தில் வந்து, அவர் தங்களுக்குச் சொன்னபடியே கண்டுபிடித்து, பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள்.

௰௭. சாயுங்காலமானபோது அவர் பன்னிருவரோடுங்கூட வந்தார்.

௰௮. அவர்கள் பந்தியிருந்து போசிக்கையில், யேசு: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; * உங்களிலென்னுடனே போசிக்கிறவொருத்தனென்னைக் காட்டிக்கொடுப்பானென்றார். * லூ. ௨௨। ௨௧—௨௩. யோவ. ௰௩। ௨௧—௩௰.

௧௯. அப்போ அவர்கள் துக்கப்பட்டு ஒருத்தரொருத்
ராய் அவருடனே: நானோவென்றும் பின் ஒருவன்:
நானோவென்றுஞ் சொல்லத்துவக்கினார்கள்.

௨௰. அவரோவென்றால் பன்னிரண்டு பேரிலொருத்தனாகிய இவன்தானென்று அவர்களுக்குச் சொன்னதாவது: என்னுடனே கூடத் தாலத்திலே கையைத் தோய்க்கிறவனும் என்னுடைய ஒருத்தன்தானே.

௨௧. மெய்தான், மனுஷனுடைய குமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆனாலும் எவனால் மனுஷனுடைய குமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ அந்த மனுஷனுக்கையோ, அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்குமென்றார்.

அவர் பரிசுத்த ராப்போசனத்தை ஸ்தாபித்தது.
மத. ௨௬ / ௨௬—௨௯. லூ. ௨௨ / ௧௯. ௨௰.

௨௨. அவர்கள் அசனம்பண்ணுகையில் யேசு அப்பத்தை எடுத்துக்கொண்டு ஸ்தோத்திரம்பண்ணி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் போசியுங்கோள், இது என்னுடைய சரீரமாயிருக்குதென்றார்.

௨௩. பின்னை பானபாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் எல்லாரும் அதிலே குடித்தார்கள்.

௨௪. அப்போ அவர் அவர்களுக்குச் சொன்னதாவது: இது அநேகருக்காகச் சிந்தப்பட்டுப் புது உடன்படிக்கையினுடைய என் இரத்தமாயிருக்குது.

௨௫. மெய்யாக உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் பராபரனுடைய ராச்சியத்திலே திராட்சரசத்தை நவமானதாய்க் குடிக்கும் நாள்மட்டும் இனி அதைக் குடியேனென்றார்.

அவர் ஒலிவமலைக்குப் போனது. மத. ௨௬ /
௩௰—௩௫. யோவ. ௧௮ / ௧.

௨௬. அவர்கள் ஸ்தோத்திரம்பாடின பிற்பாடு ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

௨௭. அப்போ யேசு அவர்களுக்குச் சொன்னதாவது: நீங்களெல்லாரும் இந்த ராத்திரியிலே என்னிடத்தில் இடறல்படுவீர்கள், ஏனெனில்: * மேய்ப்பனை வெட்டுவேன், அப்போ ஆடுகள் சிதறுண்டு போமென்றெழுதியிருக்குது. * சகரி. ௧௩ / ௭. யோவா. ௧௬ / ௩௨.

௨௮. ஆனால் நான் * எழுந்திருந்த பின்பு உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேனென்றார்.

* ௧௬ / ௭.

௨௯. பேதுருவோவென்னில் அவருடனே: எல்லாரும் இடறல்பட்டாலும் நான் இடறல்படேனென்றான்.

௩௰. யேசு அவனுடனே: மெய்யாக உனக்குச் சொல்லுகிறேன், இன்றைக்கு இந்த ராத்திரியிலே சாவல்

ரெண்டுதரங் கூவுகிறதுக்குமுன்னே, மூன்றுதரம் * என்னை மறுதலிப்பாயென்றார். * லூ. உ௨, ௩௪. யோவ. ௰௩, ௩௮.

௩௧. அவனோ வின்னுமதிகமாய்: நானும் உம்முடனேகூட மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலியேனென்றான். அந்தப்படியே யெல்லாருஞ் சொன்னார்கள்.

அவர் தோட்டத்திலே பட்ட அவஸ்தைப்பாடுகள்.
மத். உ௬, ௩௬—௪௬. லூ. உ௨, ௩௯—௪௬.

௩௨. அப்போ கெத்சேமனே என்னும் பேர்கொண்ட தோட்டத்துக்கு வந்தார்கள். அவர் தம்முடைய சீஷருடனே: நான் செபம்பண்ணுமட்டும் நீங்களிங்கே உட்கார்ந்திருங்கோளென்று சொல்லி,

௩௩. பேதுருவையும் யாக்கோபையும் யோவானையுந் தம்முடனேகூட அழைத்துக்கொண்டு, திகிலடையவும் மிகவும் வியாகுலப்படவுந் துவக்கி,

௩௪. அவர்களுடனே: என் ஆத்துமம் மரணபரியந்தந் துக்கமாயிருக்குது, நீங்களிங்கே தங்கி முழித்திருங்கோளென்று சொல்லி,

௩௫. சற்றப்புறம்போய், தரையிலே விழுந்து, கூடுமானால் அந்த வேளை தம்மை விட்டுப்போகவேண்டிக்கொண்டு,

௩௬. அப்பா பிதாவே, எல்லாம் உமக்குக் கூடும், இந்தப் பாத்திரத்தை என்னண்டையிலிருந்து நீக்கிக்கொள்ளும், எனக்கோவல்ல, * உமக்கேச்சகமாயிருக்கிறதாகக்கடவதென்றார். * யோவ. ௫, ௩௦.

௩௭. பிறபாடு வந்து அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவுடனே: சீமோனே, நித்திரைபண்ணுகிறாயோ, ஒரு சேமமணிநேரமுழித்திருக்கப் பெலனில்லாமல் போனாயோ,

௩௮. நீங்கள் சோதனைக்குள்ளப்படாதபடிக்கு முழித்திருந்து செபம்பண்ணுங்கோள், ஆவி மனதுள்ளதுதான், மாம்சமோ வெகு பெலயீனமானதென்றார்.

௩௯. அவர் திரும்பப்போய், செபம்பண்ணி, அந்த வார்த்தையைத்தானே சொன்னார்.

௪௰. அவர் திரும்பி வந்தபோது, அவர்கள் மறுபடியும் நித்திரைபண்ணக் கண்டார், ஏனென்றால் அவர்களுடைய கண்கள் பாரமாய் நித்திரையடைந்திருந்தது, தாங்களப் பிரத்தியுத்தாரமாக அவருக்குச் சொல்லுவதென்னவென்று அவர்களறிந்ததில்லை.

௪௧. அவர் மூன்றாம் விசை வந்து அவர்களுக்குச் சொன்னதாவது: இன்னமும் நித்திரைபண்ணி இளைப்பாறுகிறீர்களோ, ஆச்சுது, வேளை வந்தது, இதோ மனுஷனுடைய குமாரன் பாவிகளுடைய கைகளிலே ஒப்புக்கொடுக்கப்படுகிறார்.

௪௨. எழுந்திருங்கோள், போவோம், இதோ என்னைக் காட்டிக்கொடுக்கிறவன் சமீபித்து வந்தானென்றார்.

அவர்

அவர் பிடிபட்டது. மத். ௨௬, ௪௭—௫௬. லூ. ௨௨, ௪௭—௫௪. யோவ. ௰௮, ௨—௰௪.

௪௩. உடனே அவனின்னம் பேசுகையிலே, பன்னிரு வரிலே ஒருத்தனாகிய யூதாவும் அவனுடனே கூடப் பிரதான ஆசாரியர்களிடத்திலும் வேதபாரகரிடத்திலும் மூப்பரிடத்திலுமிருந்து திரள்கும்பல் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்து வந்தார்கள்.

௪௪. ஆனால் அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நானெவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டுபோங்களென்று அவர்களுக்குக் குறிப்புச் சொல்லியிருந்தான்.

௪௫. அவன் வந்து உடனே அவரண்டை சேர்ந்து: ரபீ, ரபீ என்று சொல்லி அவரை முத்தமிட்டான்.

௪௬. அவர்களோவென்றால் அவர்மேலே தங்கள் கைகளைப் போட்டு அவரைப் பிடித்துக்கொண்டார்கள்.

௪௭. ஆனால் அண்டையிலே நின்றவர்களில் ஒருத்தன் பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான்.

௪௮. யேசு பிரத்தியுத்தரமாக அவர்களுக்குச் சொன்னதாவது: ஒரு கள்ளன்மேலே வருகிறது போலப் பட்டயங்களோடுந் தடிகளோடும் என்னைப் பிடிக்கப் புறப்பட்டு வந்தீர்களோ.

௪௯. நான் தினம் உங்களண்டையிலே தேவாலயத்திலே உபதேசித்துக்கொண்டிருந்தேனே, அப்போ என்னைப் பிடியாதிருந்தீர்களே, ஆனால் வேதவாக்கியங்கள் நிறைவேறப்பட வேண்டுமென்றார்.

௫௰. அப்போதெல்லாரும் அவரை விட்டோடிப் போனார்கள்.

௫௧. நிர்வாண சரீரத்தின் மேலேயிட்ட போர்வையைப் போர்த்திருந்த வாலிபக்காரனொருத்தன் அவரைப் பின்சென்றான், அவனை வாலிபக்காரர் பிடித்தார்கள்.

௫௨. அவன்றன் மேலேயிட்ட போர்வையைவிட்டு நிர்வாணமாய் அவர்களுக்கு விலகியோடிப்போனான்.

அவர் பிரதான ஆசாரியனரண்மனையிலே பட்டபாடுகளும் பேதுருவினால் மறுதலிக்கப்பட்டதும். மத். ௨௬, ௫௭. மு. லூ. ௨௨, ௫௫. மு. யோவ. ௰௮, ௰௩—௨௭.

௫௩. அவர்கள் யேசுவைப் பிரதான ஆசாரியனண்டைக்குக் கொண்டுபோனார்கள். அங்கே பிரதான ஆசாரியர்கள் மூப்பானவர்கள் வேதபாரகர் யாவருங் கூடினார்கள்.

௫௪. பேதுரு பிரதான ஆசாரியனுடைய அரண்மனையின் உள்ளே பிறமட்டுந் தூரத்திலே அவருக்குப் பின்சென்று, வேலைக்காரருடனே கூட உட்கார்ந்து, நெருப்பண்டை குளிர்காய்ந்திருந்தான்.

௫௫. பிரதான ஆசாரியனும் ஆலோசனைக்கூட்டமனைத்தும் யேசுவைக் கொலைசெய்யும்படிக்

கு அவ

அவருக்கு விரோதமாகச் சாட்சித் தேடினார்கள், ஆனால் அவர்களுக்குக் கிடைக்கப்பட்டதில்லை.

௫௬. ஏனெனில் அநேகர் அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லியுஞ் சாட்சிகள் சரிப்பட்டதில்லை.

௫௭. சிலர் எழுந்திருந்து அவருக்கு விரோதமாய்:

௫௮. * கைவேலையான இந்தத் தேவாலயத்தை நான் இடித்துப்போட்டு, கைவேலையல்லாத வேறொன்றை மூன்று நாளைக்குள்ளே கட்டுவேனென்று இவன் சொன்னதை நாங்கள் கேட்டோமென்று பொய்ச்சாட்சி சொன்னார்கள். * யோவ. ௨, ௰௯—௨௧.

௫௯. அப்படியும் அவர்கள் சாட்சி சரிப்பட்டதில்லை.

௬௰. அப்போ பிரதான ஆசாரியன் எழுந்து நடுவே நின்று, யேசுவை: நீ உத்தரமொன்றுஞ் சொல்லலையோ, இவர்கள் உன்மேலே என்ன சாட்சி சொல்லுகிறார்களென்று கேட்டான்.

௬௧. அவரோவென்றால் * உத்தரமொன்றுஞ் சொல்லாமல் மவுனமாயிருந்தார். மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை: நீ ஸ்தோத்திரிக்கப்பட்டவருடைய குமாரனாகிய கிறிஸ்துவாயிருக்கிறாயோவென்று கேட்டான். * யேசா. ௫௩, ௭.

௬௨. அப்போ யேசு: நானவர்தான், நீங்கள் மனுஷனுடைய குமாரன் வல்லமையினுடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கவும் வானத்தின் மேகங்களுடனே வரவுங் காண்பீர்களென்றார். * மத். ௨௪, ௩௰.

௬௩. ஆனால் பிரதான ஆசாரியன் தன் அங்கிகளைக் கிழித்துக்கொண்டு: இனி நமக்குச் சாட்சிகள் தேவையென்ன.

௬௪. தேவதூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்க் காணுதென்றான். ஆனால் அவர்கள் எல்லாரும் அவரை மரணத்துக்குள்ளாகத் தீர்த்தார்கள்.

௬௫. அப்போ சிலர் அவர்மேல் துப்பவும் அவருடைய முகத்தை மூடி அவரைக் குட்டி, அவருடனே: ஞானதிஷ்டியிலே பாரென்று சொல்லவுந் துவங்கினார்கள். வேலைக்காரர் அவரைத் தாடைக்கூளில் அடித்தார்கள்.

௬௬. யேசு அரண்மனையின் கீழ்த்தட்டிலிருக்கையிலே பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரிகளில் ஒருத்தி வந்து,

௬௭. குளிர்காய்ந்துகொண்டிருக்கிற பேதுருவைக் கண்டு, அவனை நோக்கிப்பார்த்து: நீயும் நாசரேத்தானாகிய யேசுவுடனேகூட இருந்தாயென்றாள்.

௬௮. ஆனாலவன்: அறியேன், நீ சொல்லுகிறது எனக்குத் தெரிகிறதுமில்லையென்று மறுதலித்து, வெளியே முகப்பிலே புறப்பட்டுப்போனான், அப்போ சாவல் கூவிற்று.

௬௯. வேலை

௬௯. வேலைக்காரி அவனை மறுபடியுங் கண்டு, அண்டையிலே நிற்கிறவர்களோடே: இவன் அவர்களிலொருத்தனென்றாள்.

௭௰. ஆனால் அவன் திரும்ப மறுதலித்தான். சற்று நேரத்துக்குப் பிற்பாடும் மறுபடியும் அண்டையிலே நிற்கிறவர்கள் பேதுருவுடனே: மெய்யாய் அவர்களிலொருத்தனாயிருக்கிறாய், ஏனென்றால் நீ கலிலேயன், உன் பேச்சும் ஒத்திருக்குதென்றார்கள்.

௭௧. அவனோவென்றால்: நீங்கள் சொல்லுகிற இந்த மனுஷனை அறியேனென்று சபித்துக் கொள்ளவும் ஆணையிடவுந் துவக்கினன்.

௭௨. அப்பொழுது சேவல் இரண்டாந்தரங் கூவிற்று, அப்பொழுது பேதுரு: சேவல் இரண்டு தரங் கூவுகிறதுக்கு முன்னே மூன்றுதரம் என்னை மறுதலிப்பாயென்று யேசு தனக்குச் சொன்ன வார்த்தையை நினைவுகூர்ந்து, அவ்விடம்விட்டு வெளிக்குப்போயழுதான்.

௰௫. அதிகாரம்.

கிறிஸ்து பிலாத்துவுக்கு ஒப்பிக்கப்பட்டார். மத். ௨௭, ௧. ௨. ௰௧—௨௰. லூக். ௨௩, ௧—௨௫. யோவா. ௰௮, ௨௮. முத. ௰௯, ௧—௰௬.

பொழுது விடிந்தவுடனே பிரதான ஆசாரியர்களும் அவர்களோடே கூடமூப்பாண்டவர்களும் வேதபாரகரும் ஆலோசனைச் சபை அனைத்துமாய் ஆலோசனை பண்ணி யேசுவைக் கட்டிக்கொண்டுபோய், பிலாத்துவுக்கு ஒப்புக்கொடுத்தார்கள்.

௨. பிலாத்து அவரை: நீ யூதருடைய ராசாவோ என்று கேட்டான். அவர் அவனுக்குப் பிரதியுத்தாரமாக: நீர் சொல்லுகிறபடியே என்றார்.

௩. பிரதான ஆசாரியர்கள் அவர்மேல் அனேகங் குற்றங்களைச் சாட்டினார்கள்.

௪. அப்பொழுது பிலாத்து மறுபடியும் அவரை: நீ உத்தரம் ஒன்றுஞ் சொல்லாயோ, இதோ உன்மேலெத்தனையோ காரியங்களைச் சாட்டிச் சொல்லுகிறார்களென்று கேட்டான்.

௫. ஆனால் பிலாத்துவுக்கு ஆச்சரியமாக யேசு அப்புறம் ஒன்றும் பிரதியுத்தாரஞ் சொல்லாதிருந்தார்.

௬. ஆனால் காவலிலே பண்ணப்பட்டவர்களில் பண்டிகைதோறும் அவர்கள் கேட்கிற ஒருத்தனை அவர்களுக்கு விடுதலை பண்ணுவான்.

௭. ஆனால் கலாதியிலே கொலைசெய்து, மறக்கலாத்திக்காரருடனே கூடக் கட்டிவைக்கப்பட்ட பரபாசென்கிற ஒருத்தனிருந்தான்.

௮. கும்பு சத்தமிட்டு, எப்போதுந் தங்களுக்குச் செய்கிறதின்படியே அவன் செய்யவேண்டுமென்று கேட்கத் துவக்கினார்கள்.

௯. ஆனால்

௯. ஆனால் பிலாத்து அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாக: நான் உங்களுக்கு யூதருடைய ராசாவை விடுதலைபண்ண உங்களுக்கு மனதுண்டோவென்றான்.

௰. ஏனென்றால் பிரதான ஆசாரியர்கள் அவரைப் பொறாமையினாலே ஒப்புக்கொடுத்தார்களென்று அறிந்திருந்தான்.

௰௧. ஆனால் பரபாவையே தங்களுக்கு விடக்கேட்கப் பிரதான ஆசாரியர்கள் கும்பை ஏவிவிட்டார்கள்.

௰௨. பிலாத்தும் மறுபடியும் அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாக: ஆனால் யூதருடைய ராசாவென்று நீங்கள் சொல்லுகிறவனை நான் என்ன செய்ய உங்களுக்கு மனதுண்டென்றான்.

௰௩. அவர்களோவென்றால்: அவனைச் சிலுவையில் அறையுமென்று மறுபடியுங் கூப்பிட்டார்கள்.

௰௪. ஆனால் பிலாத்து அவர்களுடனே: ஏன், என்ன பொல்லாப்பைச் செய்தானென்றான். அவர்களோ பின்னும் அதிகமாய்: அவனைச் சிலுவையில் அறையுமென்று கூப்பிட்டார்கள்.

௰௫. ஆனால் பிலாத்து கும்புக்குச் சரிப்பட்டப்பண்ண மனதாயிருந்து, அவர்களுக்குப் பரபாவை விடுதலைபண்ணி, யேசுவை வாரினாலே அடிப்பித்து, சிலுவையிலே அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுத்தான்.

௰௬. சேவகரோவென்றால் அவரை அரண்மனைக்குள்ப்புறமாகிய அதிகாரசாலையிலே கொண்டுபோய், சேர்வையனைத்தையுங் கூடவழைத்து,

௰௭. அவருக்குச் சிகப்பான மேல்சட்டையை உடுத்தி, முள்முடியைப் பின்னி அவருக்குச் சூட்டி:

௰௮. யூதருடைய ராசாவே, வாழ்கவென்று அவரை வினவத்துவக்கி,

௰௯. அவர் சிரசைக் கோலால் அடித்து, அவர்மேல் துப்பி, முழங்கால்படியிட்டு அவரைப் பணிந்துகொண்டார்கள்.

அவர் வெளியே கொண்டுபோகப்பட்டுச் சிலுவையில் அறையுண்டது. மத. ௨௭, ௩௧—௩௪. லூ. ௨௩, ௨௬—௩௫. யோவா. ௰௯, ௰௭—௨௪.

௨௰. அவரைப் பரியாசம்பண்ணின பிற்பாடு சிகப்பான சட்டையைக் கழட்டி அவருடைய வஸ்திரங்களை அவருக்குடுத்தி, அவரைச் சிலுவையில் அறைய வெளியே கொண்டுபோனார்கள்.

௨௧. வயலிலிருந்துவந்து கடந்துபோகிற அலெக்சாந்தருக்கும் ருபுசுக்கும் தகப்பனான சிரேனேயூரானாகிய சீமோனென்கிறவொருத்தனை அவருடைய சிலுவையைச் சுமக்கப் பலவந்தம்பண்ணினார்கள்.

௨௨. அவரைத் தலையோட்டிடமென்றர்த்தங்கொள்ளுங் கொல்கதாவென்கிற ஸ்தலத்துக்குக் கொண்டுபோய்,

௨௩. வெள்ளைப்போளங் கலந்த திராட்சப்பழரசத்தை அவருக்குக் குடிக்கக்கொடுத்தார்கள், அவரோவென்றால் அதை வாங்கினதில்லை.

௨௪. அவ

௨௪. அவனைச் சிலுவையிலே அறைந்த பின்பு அவருடைய வஸ்திரங்களின் மேலே அவர்கள் ஒவ்வொருத்தன் என்னத்தை எடுத்துக் கொள்வானென்று சீட்டுப் போட்டு அதுகளைப் பங்கிட்டுக் கொண்டார்கள். சங். ௨௨। ௰௮.

௨௫. அவனைச் சிலுவையிலே அறைந்தது மூன்றாம் மணி வேளையாயிருந்தது.

௨௬. யூதருடைய ராசாவென்கிற அவருடைய குற்றத்தின் முகாந்தரமான எழுத்து மேலாக எழுதியிருந்தது.

௨௭. அவருடனே கூட இரண்டு கள்ளரையும், ஒருத்தனை அவருக்கு வலது பக்கத்திலும் ஒருத்தனை இடது பக்கத்திலுஞ் சிலுவைகளிலே அறைந்தார்கள்.

௨௮. அப்படியே: அக்கிரமக்காரரிலே ஒருவராக எண்ணப்பட்டாரென்கிற வேத எழுத்து நிறைவேறிற்று. ஏசா. ௫௩। ௰௨.

௨௯. அந்த வழி நடந்து போனவர்கள் அவரைத் தூஷணித்து, தங்கள் தலைகளைத் துலுக்கி: ஆகா, தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே: ௰௪। ௫௮. யோவ. ௨। ௰௯—௨௧.

௩௰. உன்னை நீயே ரட்சித்துச் சிலுவையிலிருந்திறங்கென்றார்கள்.

௩௧. அப்படியே பிரதான ஆசாரியர்களும் வேதபாரகருடனே கூடப் பரியாசம் பண்ணி, ஒருவரோடொருவர்: மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சிக்கமாட்டானென்றும்,

௩௨. இஸ்ரவேலுக்கு ராசாவாகிய கிறிஸ்து இப்போ, நாம் பார்த்து விசுவாசிக்கத்தக்கதாகச் சிலுவையிலிருந்திறங்கட்டுமென்றுஞ் சொல்லிக் கொண்டார்கள். அவருடனே கூடச் சிலுவைகளிலே அறையுண்டவர்களும் அவரை நிந்தித்தார்கள்.

௩௩. ஆறாம் மணி வேளையான போது ஒன்பதாம் மணி வேளைமட்டுக்கும் பூமியின் மேங்கும் அந்தகாரமுண்டாச்சுது.

௩௪. ஒன்பதாம் மணி வேளையிலே யேசு மகா சத்தமாய்: * ஏலோயி, ஏலோயி, லம்மா சபக்தானியென்று கூப்பிட்டார். அது: என் பராபரனே, என் பராபரனே, நீர் என்னைக் கைவிட்டதேதென்கிறதும்.

* சங். ௨௨। ௨.

௩௫. அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்ட போது: இதோ எலியாவைக் கூப்பிடுகிறானென்றார்கள்.

௩௬. ஆனால் ஒருத்தன் ஓடி, ஒரு கடற்காளானைக் காடியால் நிரப்பி, ஒரு கோலிலே மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்து: பொறுங்கோள், எலியா அவனை இறக்க வருவானோ பார்ப்போமென்றான்.

* சங். ௬௯। ௨௨.

அவர் மரித்தது. மத். ௨௭। ௫௰—௫௬. லூ. ௨௩। ௪௬—௪௯. யோவ. ௰௯। ௩௰—௩௭.

௩௭. ஆனாலயேசுமகாசசததமிடடுசீவனைவிடடார்.

௩௮. அபபொழுதுதேவாலயததின திரை மேலேதுவககிக்கீழமடடும இரணடாயக்கிழிநதது.

௩௯. அவருக்கெதிராய அனனடையிலே நினறசெநதுவகாரனறேவனிவவாறுபபடிகூபபிடடுசசீவனை விடடதைக் கணடபோது/ மெயயாயிநதமனுஷன பராபரனுடையகுமாரனாயிருநதாரெனறான.

௪௰. ஆனாலதூரததிலிருநதுபாரககிற ஸ்திரீகளு மிருநதார்கள. அவர்களுககுளளே அவர் கலிலேயா விலிருககுங்கொளள * அவரைபபினசெனறு அவருககுஊ ழியஞசெயதமகதலாவூர்மரியாளுஞ சினனயாகககோ புககுமயோசெயுககுநதாயாகிய மரியாளுஞ சாலோ மெயும/ * லூா. ௮/ ௨. ௩.

௪௧. அவருடனேகூடயெருசலேமுககுவநதேஷின வேறேஷனேகமஸ்திரீகளுமிருநதார்கள.

அவர்அடககமபணணபபடடது. மத. ௨௭/ ௫௭. லூா. ௨௩/ ௫௰. லூ. யோவ. ௰௯/ ௩௮. லூ.

௪௨. சாயுஙகாலமானபோதுஓயவுநாளுககுமுன னாயததநாளாகையால/

௪௩. பராபரனுடையராசசியததுககுதநாறுவகாரத திருநதகனமுளளஆலோசனைககாரனான அரிமததி யாவூரானாகியயோசேபவநது/ துணிநதுபிலாததன னிடததுளள பிரவேசிததுயேசுவின சரீரததைக கேடடான.

௪௪. ஆனாலபிலாததுஅவர் அபபோதேமரிததாரோ வெனறாசசரியபபடடு/ செநதுவகாரனைஅழைபபிதது/ அவர்மரிதது நேரமாசசோவெனறு அவனைககேட டான.

௪௫. அநதசெநதுவகாரனாலே அறிநதுகொணட பிறபாடுசரீரததையோசேபபுககுககொடுததான.

௪௬. அவன மெலலிய படடுவையககொண்டு/ அவரையிறககி/ படடுவையிலே சுறறி/ கலலுமலையில வெடடபபடடிருநத ஏருககலலறையிலே அவரை வைதது/ கலலறைவாசலமேலஏருகலலைபபு ரடடிவைததான.

௪௭. ஆனாலமகதலாவூர் மரியாளும யோசேயின தாயாகியமரியாளும அவர் எஙகெவைககபபடடா ரெனறதைபபார்ததார்கள.

௰௬. அதிகாரம.

கிறிஸதுஉயிர்ததெழுநததைததேவதூதன அறிவித ததது. மத. ௨௮/ ௧—௮. லூா. ௨௪/ ௧—௭.

ஓயவுநாளானபினபுமகதலாவூர்மரியாளுமயாக கோபெனறதாயாகியமரியாளுஞசாலோமெயுமநாங களவநதுஅவரையபூசவேணுமெனறுசுகநதவறககங களைககொண்டு/

௨. வாரதது

௨. வாரத்து முதலாங்கிழமையிலே அதிகாலமே சூரியனுதிக்கையிலே கல்லறையினிடத்துக்கு வந்து:

௩. கல்லறையின் வாசலிலிருந்து நமக்குப் பிரட்டித் தள்ளுகிறவன் ஆரென்று ஒருத்தியோடொருத்தி சொல்லிக்கொண்டார்கள்.

௪. அவர்கள் நோக்கிப் பார்க்கிறபோது, கல்லைப் பிரட்டித் தள்ளப்பட்டுக் கிடக்கக் கண்டார்கள், ஏனெனில் அது மெத்தப் பெரிதாயிருந்தது.

௫. அவர்கள் கல்லறைக்குள்ளே பிரவேசித்து, வெள்ளை அங்கி தரித்த ஒரு வாலிபனை வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கக் கண்டு திகைத்தார்கள்.

௬. அவனோவென்றால் அவர்களுக்குச் சொன்னது: திகையாதேயுங்கோள், சிலுவையிலே அறையுண்ட நசரேத்தூராகிய யேசுவைத் தேடுகிறீர்கள், அவர் எழுந்திருந்தார், அவர் இங்கேயில்லை, இதோ அவனை வைத்த இடம்.

௭. ஆனால் நீங்கள் போய் அவருடைய சீஷருக்கும் பேதுருவுக்கும்: உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறாரென்றும், அவர் உங்களுக்குச் சொன்னபடி அங்கே * அவரைக் காண்பீர்களென்றும் சொல்லுங்கோளென்றான். * ௰௪, ௨௮.

௮. அவர்கள் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, கல்லறையை விட்டோடினார்கள், அதேதென்றால் நடுக்கமும் விம்மிதமும் அவர்களைப் பிடித்தது, ஒருவருக்கும் ஒன்றுஞ் சொல்லாமலும் போனார்கள், ஏனெனில் பயந்திருந்தார்கள்.

அவரெழுந்த நாள் முதற்கொண்டு பலவிசை தெரிசனையாகிப்போனதும் அவரிட்ட கட்டளை.

௯. ஆனால் அவர் வாரத்தின் முதலாங்கிழமை காலமே எழுந்திருந்த பின்பு தாம் ஏழு பிசாசுகளைத் துரத்திவிட்டிருந்த மக்தலேனாகிய மரியாளுக்கு முதலில் தெரிசனையானார். * யோவ. ௨௰, ௧——௰௮.

௰. அவள் போய், அவருடனே சஞ்சரித்திருந்து துக்கப்பட்டு அழுகிறவர்களுக்கு அதை அறிவித்தாள்.

௰௧. இவர்கள், அவர் உயிரோடிருக்கிறாரென்றும் அவளுக்குத் தெரிசனையானாரென்றும் கேட்டபோது நம்பாதேபோனார்கள்.

௰௨. இதுகளுக்குப் பிற்பாடு அவர்களிலே * ஒருகிராமத்துக்கு நடந்துபோற இரண்டுபேருக்கும் மறுரூபமாய்த் தம்மை வெளிப்படுத்தினார். * லூ. ௨௪, ௰௩——௩௫.

௰௩. அவர்களும் போய் மற்றவர்களுக்கு அறிவித்தார்கள், அவர்களையும் நம்பாதேபோனார்கள்.

௰௪. பிற்பாடு * பந்தியிருக்கிற பதினொருவருக்கும் அவர் தம்மை வெளிப்படுத்தி, எழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற் போனதினிமித்தியம் அவர்களுடைய அவிசுவாசத்தையும் இருதயக் கடினத்தையும் அதட்டினார். * லூ. ௨௪, ௩௬. ௸.

௰௫. அவரவர்களுக்குச் சொன்னதாவது: * நீங்கள் லோகமெங்கும் போய், சிஷ்டிப்பாயிருக்கிற யாவருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.

* மத். ௨௮. ௰௯.

௰௬. விசுவாசமுள்ளவனுமாய் ஞானஸ்நானம் பெற்றவன் ரெட்சிக்கப்படுவான்; * விசுவாசியாதவனோவெனில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.

யோவா. ௩. ௰௮.

௰௭. விசுவாசிக்கிறவர்களைப் பின்செல்லுமடையாளங்களாவது: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்திவிடுவார்கள்; * நவமான பாஷைகளைப் பேசுவார்கள். * அப்போ. ௨. ௪.

௰௮. சர்ப்பங்களை நீக்கிவிடுவார்கள்; சாவுக்கினமாயானதொன்றைக் குடித்தாலும் அது அவர்களுக்குச் சேதம் பண்ணாது; ஆரோக்கியமில்லாதவர்கள் மேலே கைகளை வைப்பார்கள், அப்போ குணமாவார்களென்றார்.

அவர் பரமண்டலத்துக்கேறினது. லூ. ௨௪. ௫௰.
யூ. அப்போ. ௧. ௯—௰௧.

௰௯. கர்த்தரோவென்றால் அவர்களோடே பேசினதுக்குப் பிற்பாடு பரமண்டலத்துக்கேறெடுத்துக் கொள்ளப்பட்டு, பராபரனுடைய வலதுபாரிசத்திலுக்கார்ந்தார்.

௨௰. ஆனால் அவர்கள் புறப்பட்டு எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தரோவென்றால் துணையாயிருந்து கிரியைகளை நடப்பித்து, பின்செல்லுமடையாளங்களினாலே வசனத்தைத் திடப்படுத்தினார்.

லூக்காளெழுதின சுவிசேஷம்.

௧. அதிகாரம்.

சுவிசேஷத்துடைய முகவுரை.

மேலவானான தெயோப்பிலே, எங்களுக்குள்ளே முழுநிச்சயமான செய்திகளின் வியரத்தை,

௨. ஆதிமுதல் * கண்ணாரக் கண்டவர்களும் வசனத்துக்கூழியக்காரருமான பேர்கள் எங்களுக்கு ஒப்பிவித்தபடி வரிசையாய்ச் சேர்க்க அநேகம் பேர் கையிட்டுக்கொண்டபடியினாலே, * ௧. யோவா. ௧. ௧.

௩. ஆதிமுதலாயெல்லாத்தையுங் கவனமாய்ப் பின்பற்றின நானும் உமக்குப் போதிக்கப்பட்ட வர்த்தமானங்களின் நிச்சயத்தை நீர் அறியவேணுமென்று,

௪. அதை உமக்கு வரிசையாயெழுதுவதெனக்கு நன்றாய்க் கண்டது.

யோவா

யோவானுடைய பிறப்பு பலிக்கப்பட்டது.

௫. யூதேயா தேசத்தின் ராசாவாகிய ஏரோதேயின் நாட்களிலே * அபியாவின் முறைச்சுற்றுக்காரனான சக்கரியா என்ற பேர்கொண்ட ஒரு ஆசாரியனிருந்தான். அவன் பெண்சாதி ஆரோனுடைய குமாரத்திகளிலே ஒருத்தி, அவளுடைய பேர் எலிசபேத்து. * ௧. நாளா. ௨௪, ௰.

௬. ஆனால் இருவரும் பராபரனுக்கு முன்பாக நீதிமான்களாயிருந்து, கர்த்தருடைய சகல கற்பனைகளிலும் நீதிநியாயங்களிலும் குற்றமற்றவர்களாய் நடந்துகொண்டார்கள்.

௭. அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது, ஏனென்றால் எலிசபேத்து மலடியாயிருந்தாள், இருவரும் வயதுசென்றவர்களுமாயிருந்தார்கள்.

௮. ஆனால் அவன் தன் முறைவரிசையிலே பராபரனுக்கு முன்பாக ஆசாரிய ஊழியத்தைச் செய்யும்போது சம்பவித்ததாவது:

௯. ஆசாரிய ஊழிய முறைமையின்படி அவன் * தூபங்காட்டுகிறதற்குச் சீட்டுப் பெற்று, கர்த்தருடைய தேவாலயத்துக்குள்ளே பிரவேசித்தான்.
* உ. மோ. ௩௰, ௭. ௮.

௰. தூபங்காட்டும் வேளையிலே சனத்தின் கூட்டமெல்லாம் புறம்பே செபம்பண்ணிக்கொண்டிருந்தது.

௰௧. அப்போது கர்த்தருடைய தூதன் ஒருவன் தூபப்பீடத்தின் வலதுபக்கத்திலே நின்று அவனுக்குக் காணப்பட்டான்.

௰௨. சகரியா கண்டு கலங்கினான், பயம் அவனைப் பிடித்தது.

௰௩. ஆனால் தூதன் அவனோடே சொன்னதாவது: சகரியாவே, பயப்படாதே, ஏனென்றால் உன் வேண்டுதல் கேட்கப்பட்டது, உன் பெண்சாதியாகிய எலிசபேத்து உனக்கொரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவானென்று பேரிடுவாயாக.

௰௪. அதினால் உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாம், அவன் பிறப்புக்காக அநேகர் சந்தோஷப்படுவார்கள்.

௰௫. ஏனென்றால் கர்த்தருக்கு முன்பாக * பெரியவனாயிருப்பான், திராட்சப்பழரசத்தையும் மதுபானத்தையுங் குடியான், தன் தாயின் கெற்பத்திலே தானே பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படுவான்.

* மத. ௰௧, ௯—௰௧.

௰௬. அவன் இஸ்ரவேல் புத்திரரில் அநேகரை அவர்கள் பராபரனாகிய கர்த்தரண்டைக்குத் திருப்புவான்.

௰௭. பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளண்டைக்குக் கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய உணர்விற்குந் திருப்பவும், கர்த்தருக்குச் சவரணையான சனத்தை ஆயத்தம்பண்ணவும் அவன் * எலியாவின் ஆவியோடும் பெலத்தோடும் அவருக்கு முன் நடப்பானென்றான். * மலா. ௪, ௫. ௬. மத. ௰௧, ௰௪.

௰௮. அப்போ சகரியா தேவதூதனுடனே: இதை எதினாலே அறிவேன், நான் கிழவனும் என் பெண்சாதி வயதுசென்றவளுமாமேயென்றான்.

௰௯. தேவதூதன் அவனுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது: நான் பராபரனுக்கு முன்பாக நிற்கிற * காபிரியேலென்கிறவன், உன்னுடனே பேசவும், உனக்கு இச்சுவிசேஷமாய அறிவிக்கவும் அனுப்பப்பட்டுவந்தேன். * தானி. ௮. ௰௬. ௯. ௨௧.

௨௰. இதோ தன் காலத்திலே நிறைவேறப்போற என்னுடைய வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினாலே நீ இதுகள் சம்பவிக்கும் நாள்மட்டும் பேசமாட்டாமல் ஊமையாயிருப்பாயென்றான்.

௨௧. ஜனத்திரளானது சகரியாவுக்குக் காத்திருந்து, அவன் தேவாலயத்திலே தாமதித்ததுக்காக ஆச்சரியப்பட்டது.

௨௨. அவன் வெளியே வந்தபோதோவென்றால் அவர்களுடனே பேசமாட்டாதிருந்தான், அதினாலே தேவாலயத்திலே ஒரு தெரிசனங் கண்டாரென்று அறிந்தார்கள். அவன் அவர்களுக்குச் சயிக்கினை காட்டி ஊமையாயிருந்தான்.

௨௩. பிற்பாடு சம்பவித்ததேதென்றால் அவன் ஊழியத்தின் நாட்கள் நிறைவேறின பின்பு தன் வளவுக்குப் போனான்.

௨௪. அந்நாட்களுக்குப் பிற்பாடு அவன் பெண்சாதியாகிய எலிசபேத்துக் கெர்ப்பந்தரித்து ஐந்துமாதந் தன்னை ஒளித்து:

௨௫. * கர்த்தர் மனுஷரில் எனக்குண்டாயிருந்த நிந்தையை நீக்கிப்போடுகிறதுக்காக என்னை நோக்கிப் பார்த்த நாட்களிலே எனக்கிப்படிச் செய்தாரென்றாள். * ௧. மோ. ௩௰. ௨௩.

கிறிஸ்துவினுடைய பிறப்பு அறிவிக்கப்பட்டது.

௨௬. ஆறாம் மாதத்திலே காபிரியேலென்கிற தூதன் நாசரேத்தென்னும் பேர்கொண்ட கலிலேயாவின் ஊருக்கு,

௨௭. தாவீதின் வீட்டானாகிய யோசேப்பென்னும் புருஷனுக்கு * நேமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னியாஸ்திரீயண்டைக்குப் பராபரனாலே அனுப்பப்பட்டான், அந்தக் கன்னியாஸ்திரீயின் பேர் மரியாள்.

* மத். ௧. ௰௮.

௨௮. தூதன் அவளிருந்த வீட்டுக்குள் பிரவேசித்து: வாழ்க, கிருபைபெற்றவளே, கர்த்தர் உன்னுடனேயிருக்கிறார், பெண்சாதிகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவளென்றான்.

௨௯. அவளோவென்றால் அவனைக் கண்டு, அவன் வார்த்தையினாலே கலங்கி, இந்த மின்னவுதலெப்படிக்கொத்ததோவென்று சிந்தித்தாள்.

௩௰. தூதன் அவளுக்குச் சொன்னதாவது: பயப்படாதே மரியாளே, ஏனென்றால் பராபரனிடத்திலே கிருபைபெற்றாய்.

௩௧. * இதோ

௩௧. * இதோ நீ கெற்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு ** இயேசுவென்று பேரிடுவாயாக. * யெச. ௭, ௰௪. ** மத. ௧. ௨௧.

௩௨. இவர் பெரியவராயிருந்து உன்னதமானவருடைய குமாரனென்னப்படுவார் பராபரனாகிய கர்த்தர் அவருக்கு அவருடைய பிதாவாகிய தாவீதின் * ராசாசனத்தைக் கொடுப்பார். * யெச. ௯, ௬. ௭. ௨. சாமு. ௭, ௰௨. ௰௩.

௩௩. அவர் யாக்கோபுடைய வீட்டின் மேலென்றென்றைக்கும் ராசாவாயிருப்பார் * அவருடைய ராசாங்கத்துக்கு முடிவில்லையென்றான். * தானி. ௨, ௪௪. ௭, ௰௪. மீகா. ௪, ௭.

௩௪. ஆனால் மரியாள் தூதனுடனே: இதெப்படியாம் புருஷனை அறியேனேயென்றாள்.

௩௫. தூதன் அவளுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: * பரிசுத்த ஆவி உன்மேல் வரும் உன்னதமானவருடைய பெலன் உன்மேல் நிழலிடும் ஆகையினாலே உன்னிடத்தில் பிறக்கப்போகிற பரிசுத்தமானது பராபரனுடைய குமாரனென்னப்படும். * மத. ௧, ௰௮. ௨௰.

௩௬. இதோ உனக்குப் பெந்துவாயிருக்கிற எலிசபேத்தாளுங்கூட முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கெற்பந்தரித்தாள் மலடியென்று சொல்லப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம்.

௩௭. ஏனென்றால் பராபரனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லையென்றான். * ௧. மோ. ௰௮, ௰௪.

௩௮. மரியாளோவென்றால்: இதோ ஆண்டவருடைய அடிமையாயிருக்கிறேன் உம்முடைய வார்த்தையின்படியெனக்காகக்கடவதென்றாள். அப்போது தேவதூதன் அவளை விட்டகன்றான்.

மரியாள் எலிசபேத்தைச் சந்தித்தது.

௩௯. மரியாளோவென்றால் அந்த நாட்களிலே எழுந்திருந்து மலைத்தேசத்திலிருக்கிற யூதாவினுடைய பட்டணத்துக்குத் தீவிரமாய்ப் போய் *

௪௰. சகரியாவினுடைய வீட்டுக்குள்ளே பிரவேசித்து எலிசபேத்தைச் சுகம் வினவினாள்.

௪௧. அப்போ சம்பவித்ததென்னவென்றால் எலிசபேத்து மரியாளுடைய மங்கள வசனத்தைக் கேட்கையில் அவளுடைய கெற்பத்திலே பிள்ளை துள்ளிற்று எலிசபேத்து பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு

௪௨. மகா சத்தத்தோடே கூப்பிட்டுச் சொன்னதாவது: பெண்சாதிகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவளும் உன் கெற்பத்தின் கனி ஆசீர்வதிக்கப்பட்டதுமாமே.

௪௩. என்னாண்டவருடைய தாயார் என்னண்டைக்கு வருகிறது எனக்கெத்தினாலே கிடைத்தது.

௪௪. இதோ நின் வினைச்சக்கமானது காதுகளில் விழுகையிலென் கெற்பத்திலே பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று.

௪௫. விசுவாசித்தவள் * பாக்கியவதி, ஏனென்றால் அவளுக்குக் கர்த்தராலே சொல்லப்பட்டதுகளுக்கு நிறைவேறுதல் வருமென்றாள். * யோ. ௨௰. ௨௯.

௪௬. அப்போது மரியாள் சொன்னதாவது: என்னாத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துது,

௪௭. * என் இரட்சகராகிய பராபரனிலே களிகூர்ந்திருக்குது. * ௧. சாமு. ௨. ௧.

௪௮. ஏனென்றால் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார், இதோ இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதியென்பார்கள்.

௪௯. அதேதென்றால் வல்லமையுடைத்தானவர் மகிமையானதுகளை எனக்குச் செய்தார், அவருடைய நாமம் பரிசுத்தமாயிருக்குது.

௫௰. * அவருடைய இரக்கந் தலைமுறை தலைமுறையாக அவருக்குப் பயந்தவர்களின் பேரிலே நிற்குது. * சங்கீ. ௱௩. ௰௭.

௫௧. தம்முடைய கையினாலே பெலனைச் செய்தார், தங்கள் இருதயத்தின் சிந்தையிலே * பெருமையுள்ளவர்களைச் சிதறப்பண்ணினார். * ௧. பேது. ௫. ௫.

௫௨. அவர் பெலவான்களை ஆசனங்களை விட்டுத் தள்ளினார், தாழ்மையானவர்களை உயர்த்தினார்.

௫௩. அவர் பசித்தவர்களை நன்மைகளினாலே ரொப்பி, ஐசுவரியவான்களை வெறுமையே அனுப்பிவிட்டார்.

௫௪. அவர் நம்முடைய பிதாக்களோடே சொன்னதின்படியே * ஆபிரகாமுக்கும் அவன் வித்துக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ்செய்ய நினைப்பதற்காக, * ௧. மோ. ௰௭. ௭. ௰௮. ௰௮.

௫௫. தம்முடைய தாசனாகிய * இஸ்ரவேலைக் கைதூக்கி ஆதரித்தாரென்றாள். * யெச. ௪௧. ௰.

௫௬. மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் அவளுடனேயிருந்து, தன் வசாவுக்குத் திரும்பினாள்.

யோவானுடைய ஜென்மமும் நாமகரணமும்.

௫௭. எலிசபேத்துக்குப் பேறுகாலம் நிறைவேறினபோது அவள் ஒரு புத்திரனைப் பெற்றாள்.

௫௮. அவளுடைய அசலகத்தாரும் பந்துசனங்களும் கர்த்தர் அவளிடத்திலே தம்முடைய இரக்கத்தைப் பெரிதாக்கினாரென்று கேட்டு, அவளுடனே கூடச் சந்தோஷப்பட்டார்கள்.

௫௯. சம்பவித்த தேதென்றால் எட்டாம் நாளிலே பிள்ளையைச் சுன்னத்துப்பண்ண வந்து, அதின் தகப்பனுடைய நாமத்தின்படி அதுக்குச் சகரியாவென்று பேரிட்டார்கள்.

௬௰. அப்போது அதினுடைய தாய் பிரத்தியுத்தாரமாக: அப்படியல்ல, அதுக்கு யோவானென்று பேரிடுவதென்றாள்.

௬௧. அவர்

௬௧. அவர்கள் அவளுடனே: உன் உறவினிலே இந்தப்பேரால் அழைக்கப்பட்டவர்கள் ஒருத்தருமில்லையேயென்று சொல்லி,

௬௨. அதினுடைய தகப்பனை, அதுக்கு என்ன பேரிட மனதுண்டென்று சயினைக்கேட்டார்கள்,

௬௩. அவன் எழுதுகிறபலகையைக் கேட்டுவாங்கி: அவன் பேர் யோவானென்றெழுதினான், எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

௬௪. உடனே அவனுடைய வாயும் நாவுந் திறக்கப்பட்டு, அவன் பராபரனைத் ஸ்தோத்திரித்துப் பேசினான்.

௬௫. அதினால் அவர்களைச் சுத்தும் வாசமாயிருந்த எல்லார்மேலும் பயம் வந்தது, யூதேயாவின் மலைத்தேசமெங்கும் இந்த வத்தமானங்களெல்லாஞ் சொல்லிக்கொள்ளப்பட்டுது.

௬௬. கேட்டவர்களெல்லாருந் தாங்கள் மனதிலே வைத்து: இந்தப் பிள்ளை எப்படிக்கொத்ததாயிருக்குமோவென்றார்கள். அவனோடே கூடக் கர்த்தருடைய கையிருந்தது.

சகரியா சொன்ன ஸ்தோத்திரமுந் தீர்க்கதரிசனமும்.

௬௭. அவனுடைய தகப்பனாஞ் சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, தீர்க்கதரிசனஞ் சொல்லி, பகர்ந்ததாவது:

௬௮. இஸ்ரவேலுடைய பராபரனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், அவர் தம்முடைய சனத்தை நோக்கிப்பார்த்து, அதுக்கு மீட்டுதலையுண்டாக்கி,

௬௯. தம்முடைய தாசனாகிய தாவீதின் வீட்டிலே நமக்கு *ரெட்சிப்பின் கொம்பையெழும்பப்பண்ணினார்:

* சங்கீ. ௱௩௨, ௰௭.

௭௰. நம்முடைய பிதாக்களுக்கு அவர் இரக்கம் பண்ணி, தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையையும்,

௭௧. தாம் நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாமுக்கிட்ட * ஆணையையும் நினைப்பதுக்கும், *௧. மோ. ௨௨, ௰௬—௰௮.

௭௨. நம்முடைய சத்துருக்களுடைய கைக்கு நாம் நீங்கி விடுதலையாக்கப்பட்டு,

௭௩. உயிரோடிருக்கிற சகல நாளும் பயமில்லாமல் *பரிசுத்தத்தோடும் நீதியோடும் தமக்கு முன்பாக நடந்து, தமக்கு ஊழியஞ் செய்யுதலை நமக்களிப்பதற்குமாக, *௧. பேது. ௧, ௰௫.

௭௪. அவர் ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினாலே சொன்னதின்படியே,

௭௫. நம்முடைய சத்துருக்களினின்றும் நம்மைப் பகைக்கிறயாவர்களுக்கும் நம்மை நீங்கலாக்கும் ரெட்சிப்பையுண்டாக்கினார்.

௭௬. நீயோ, பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசியென்னப்படுவாய்; அதெப்படியென்னில் * கர்த்தருடைய வழிகளை ஆயத்தம்பண்ணவும்,
* யேசு. ௪௰, ௩.

௭௭. நம்முடைய பராபரனுடைய உருக்கமான இரக்கங்களினாலே அவருடைய சனத்துக்கு அவர்களுடைய பாவங்களின் மன்னிப்பாகிய ரட்சிப்பின் அறிவைக் கொடுக்கவும், நீ அவருடைய முகத்துக்கு முன்னுகப்போவாய்.

௭௮. அந்த இரக்கங்களினாலே * உன்னதத்திலிருந்து உதையமானது, * மலேயாகி. ௪, ௨.

௭௯. அந்தகாரத்திலும் மரணநிழலிலும் உட்கார்ந்தவர்களுக்குப் பிரகாசிக்கிறதற்கும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும் நம்மைக் கண்டுசந்தித்ததென்றான். * யேச. ௯, ௨. ௪௨, ௭.

௮௰. அப்பிள்ளை வளர்ந்து ஆவியிலே பெலன்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்மட்டாக அவன் வனாந்திரங்களிலிருந்தான்.

௨. அதிகாரம்.

யேசுக்கிறிஸ்துவினுடைய செனனம்.

அன்னாட்களிலே சம்புவிக்கக்கேதென்றால், லோகமெல்லாங்குடிமதிப் பெழுதப்பட, * அகுஸ்துராயனால் உத்தாரம் பிறந்தது. * ௧. மோ. ௪௬, ௰.

௨. சுரியாவிலே கிரினியு துரையானபோது இந்த முதலாங்குடிமதிப்புண்டாச்சுது.

௩. எல்லாருங்குடிமதிப் பெழுதிவிக்க, தங்கள் தங்கள் பிறந்தவிடமானவூர்களுக்குப் போனார்கள்.

௪. அப்போ யோசேப்பும், தான் தாவீதின் வீட்டாரும் அங்கிஷத்தாருமானபடியினாலே, தனக்கு நியமிக்கப்பட்ட கெற்பவதியாகிய பெண்சாதி மரியாளுடனே கூடக் குடிமதியப் பெழுதிவிக்க, * ௧, ௨௭.

௫. கலிலேயாவின் ஊராகிய நசரேத்திலிருந்து யூதேயாவிலிருக்கிற பெத்லெகேமென்னப்பட்ட தாவீதின் ஊருக்குப் போயிருந்தான்.

௬. அப்போ சம்புவிக்கக்கேதென்றால், அவர்கள் அங்கேயிருக்கையிலே அவள் பெறுகிறதுக்கு நாட்கள் நிறைவேறி,

௭. தன் * முதற் பேறான குமாரனைப் பெற்று, அவரைப் பிடவைகளிலே சுத்தி, அவரை முன்னணையிலே படுக்கவைத்தாள்; ஏனென்றால் மடத்திலே அவர்களுக்கிடமில்லாதிருந்தது. * மத. ௧, ௨௫.

நற்சுவிசேஷம் மேய்ப்பருக்கறிவிக்கப்பட்டது.

௮. ஆனால் அந்தப் புறங்களிலே வெளிதங்கி, தங்கள் மந்தையை ராத்திரியிலே காவல்காக்கிற மேய்ப்பர் இருந்தார்கள்.

௯. தோ

௯. கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து
நின்றான்; கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுத்திப்
பிரகாசித்தது; அப்பொழுது மிகப் பயமாய்ப் பயப்பட்டார்
கள்.

௰. அந்தத் தேவதூதன் அவர்களுக்குச் சொன்ன
தாவது: பயப்படாதேயுங்கோள்; இதோ, எல்லாச் சனத்
துக்கும் வரப்போகிற பெரிய சந்தோஷத்
தை உங்களுக்குச் சுவிசேஷமாக அறிவிக்கிறேன்.

௰௧. அதாவது: இன்றைக்குக் கர்த்தராகிய கிறீஸ்து
என்கிற இரட்சகர் * தாவீதின் ஊரிலே பிறந்தார்.
* மீகா. ௫, ௧.

௰௨. பிள்ளையைப் பிடவைகளிலே சுத்தி முன்னணை
யிலே படுக்கக் கிடக்கக் காண்பதே உங்க
ளுக்கு அடையாளமென்றான்.

௰௩. அப்பொழுது பரமசேனையுடைய திரளான தூ
தர்களுடனே கூடயிருந்து பராபரனைத் துதித்து:

௰௪. உன்னதங்களிலே பராபரனுக்கு மகிமை
யும் பூமியிலே சமாதானமும் மனுஷர் பேரிலே பிரி
யமும் உண்டாவதாக என்றார்கள்.

௰௫. அப்பொழுது வானத்துக்குப் போகிறதேவதூ
தர்கள் அவர்களை விட்டு வானத்துக்குப் போன
பின்பு மேய்ப்பரானவர்கள் ஒருவருக்கொருவர்:
நாம் பெத்லெகேம் மட்டும் போய்க் கர்த்தர் நமக்கு அறிவித்த
காரியம் நடந்ததைக் கண்டு பார்ப்போம் வா
ருங்கோளென்று சொல்லிக்கொண்டு;

௰௬. தீவிரித்து வந்து, மரியாளையும் யோசேப்பை
யும் முன்னணையிலே படுத்திருக்கிற பிள்ளையையுங்
கண்டார்கள்.

௰௭. கண்டு, இந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்
குச் சொல்லப்பட்ட வார்த்தையைச் செய்தியாய்ப்
பிரசித்தப்படுத்தினார்கள்.

௰௮. கேட்டவர்களெல்லாரும் மேய்ப்ப
ராலே தங்களுக்குச் சொல்லப்பட்ட விசேஷங்களுக்
காக ஆச்சரியப்பட்டார்கள்.

௰௯. மரியாளோவென்றால் இந்த வார்த்தைகளை
எல்லாந் தன் இருதயத்திலே வைத்துச் சிந்தித்துக்
கொண்டிருந்தாள்.

௨௰. மேய்ப்பர்களுந் தங்களுடனே சொல்லப்பட்டதின்
படியே கேட்டுக் கண்டவைகளுக்காகப் பராப
ரனை மகிமைப்படுத்தித் துதித்துக்கொண்டு திரும்பினார்
கள்.

யேசு பாலகன் சுன்னத்துப் பண்ணப்பட்டது.

௨௧. பிள்ளையைச் சுன்னத்துப் பண்ண * எட்டு
நாள் நிறைவேறின போது, அது கெர்ப்பத்திலே உற்ப
விக்கிறதுக்கு முன்னே ** தேவதூதனாலே இட்டப்படி
யேசுவென்கிற நாமம் அதுக்கிடப்பட்டது. * ௧. மோ.
௧௭, ௧௨. ** ௧, ௩௧.

அவர் கர்த்தருக்கு முன்பாக நிறுத்தப்பட்டது.

௨௨. மோசேயினுடைய *நியாயப்பிரமாணத்தின்படியே அவர்கள் சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறின போது| *௩. மோ. ௰௨| ௨. ௬.

௨௩. *கெற்பந்திறந்து பிறக்கும் ஆணெல்லாங் கர்த்தருக்குப் பரிசுத்தமானதென்றழைக்கப்படுவதாக என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி அவரைக் கர்த்தருக்கு முன்பாக நிறுத்தவும்| *௨. மோ. ௰௩| ௨. ௨௨| ௨௯. ௩௪| ௰௯.

௨௪. கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டபடி ஒரு சோடு சோட்டுப்புறா| அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளைப் பலியாகச் செலுத்தவும் அவரை யெருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள். *௩. மோ. ௰௨| ௮.

௨௫. இதோ சிமேயோனென்ற பேர்கொண்ட ஒரு மனுஷன் யெருசலேமிலே இருந்தான்| இந்த மனுஷன் நீதியுந் தேவபக்தியுமுள்ளவனும் இஸ்ரவேலுடைய ஆறுதலுக்குக் காத்திருக்கிறவனுமாயிருந்தான்| அவன் மேலே பரிசுத்த ஆவியிருந்தார்.

௨௬. அவனுக்கு: நீ கர்த்தருடைய அபிஷேகத்தைக் காணுமுன்னே மரணத்தைப் பாராயென்று பரிசுத்த ஆவியினாலே உத்தாரமுண்டாச்சுது.

௨௭. அவன் ஆவியின் ஏவுதலால் தேவாலயத்திலே வந்தான். யேசுபாலகனிமித்தம் நியாயப்பிரமாண முறைமையின்படி செய்ய| தாயுந் தகப்பனும் அவரை உள்ளே கொண்டுவருகையில்|

௨௮. அவன் அவரைத் தன்கைகளிலேந்திக்கொண்டு| பராபரனைத் தோத்திரித்துச் சொன்னதாவது:

௨௯. ஆண்டவரே| இப்போ உம்முடைய அடியானை உம்முடைய வார்த்தையின்படி சமாதானத்துடனே போகவிடுகிறீர்.

௩௰. எல்லாப் பிறசாதிகளுக்குந் தெளிவையும் உம்முடைய சனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையையும் உண்டாக்கும் *வெளிச்சமாக| *யெசா. ௪௨| ௬.

௩௧. தேவரீர் *சகல சனங்களுக்கு முன்னேயும் ஆயத்தம் பண்ணின உம்முடைய ரட்சிப்பை| *யெசா. ௪௯| ௬.

௩௨. என் கண்கள் கண்டதென்று.

௩௩. அவரைக் குறித்துச் சொல்லப்பட்டதுகளுக்காக யோசேப்பும் அவருடைய தாயும் ஆச்சரியமாயிருந்தார்கள்.

௩௪. சிமேயோன் அவர்களை ஆசீர்வதித்து அவருடைய தாயாகிய மரியாளுடனே சொன்னதாவது: இதோ இவர் *அநேகம் பேர்களுடைய சிந்தனைகள் வெளியரங்கமாகும்படிக்கு| இஸ்ரவேலில் அநேகருடைய *விழுதலுக்கும் எழுந்திருத்தலுக்கும் எதிர்பேசப்படும் அடையாளமாகவும் வைக்கப்பட்டிருக்கிறார். *யெச. ௮| ௰௪—௰௫. ௧. கொரி. ௧| ௨௩. ௨௪.

௩௫. உன்னுடைய ஆத்துமத்தையே ஒரு பட்டயமும் ஊடுருவிப்போமென்றான்.

௩௬. ஆசேருடைய கோத்திரத்தாளும் பானுவேலின் குமாரத்தியுமான அன்னாளென்கிற ஒரு தீர்க்கதரிசியுமிருந்தாள்; இவள் கன்னியாஸ்திரீயாயிருந்து, பிறகு ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்து மிகுந்த வயதுசென்றவள்;

௩௭. எண்பத்துநாலு வயசான கைம்பெண்ணாயிருந்தாள்; இவள் தேவாலயத்தைவிட்டுப் பிரியாமல், உபவாசங்களினாலும் ஜெபங்களினாலும் இராவும்பகலும் ஆராதனைசெய்வாள்.

௩௮. இவளும் அந்நேரத்திலே சேர்ந்துநின்று, அக்கர்த்தரைத் தோத்திரம்பண்ணி, எருசலேமிலே மீட்புக்குக் காத்திருந்தயாவருக்கும் அவர் செய்தியைச் சொன்னாள்.

௩௯. அவர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி சகலத்தையும் முடித்தபின்பு, கலிலேயாநாட்டிலேயிருக்கிற தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பினார்கள்.

௪௰. அந்தப்பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினாலே நிறைந்திருந்தது; பராபரனுடைய கிருபையும் அதின்மேலிருந்தது.
*௫௨. வசனம்.

அவர் தம்முடைய தாய்தகப்பனுக்குக் கீழ்ப்படிந்தவராயிருந்தது.

௪௧. அவருடைய தாய்தகப்பன் வருஷந்தோறும் பஸ்காவின் பண்டிகையிலே எருசலேமுக்குப் போவார்கள். *௨. மோ. ௩௪, ௨௩.

௪௨. அவர் பன்னிரண்டு வயதானபோது அவர்கள் பண்டிகை முறைமையின்படி எருசலேமுக்குப் போனார்கள்;

௪௩. நாள்கள் முடிந்தபின்பு திரும்புகையிலே பிள்ளையாகிய யேசு எருசலேமிலே இருந்துவிட்டார்; அதை யோசேப்பும் அவருடைய தாயும் அறியாமல்,

௪௪. அவர் பயணக்காரருடைய கூட்டத்திலேயிருப்பாரென்று நினைத்து, ஒருநாள் பிரயாணம் வந்து, உறவின்முறையாரிடத்திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடி,

௪௫. அவரைக் காணாமல், அவரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

௪௬. அப்போ சம்பவிக்கிறதென்னவென்றால்: மூன்றுநாளைக்குப் பிற்பாடு அவரைத் தேவாலயத்திலே போதகர் நடுவிலே உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேச்சைக்கேட்கவும், அவர்களை வினவிக்கேட்கவுமாகக் கண்டார்கள்.

௪௭. ஆனால் அவர் பேசக்கேட்டவர்களெல்லாரும் அவருடைய புத்திக்கும் பிரத்தியுத்தரங்களுக்கும் விஸ்மயித்தார்கள்.

௪௮. அவனைக்கண்டு அதிசெயப்பட்டார்கள், அவ
னுடைய தாய் அவனிடத்தில்: மகனே, ஏன் எங்களுக்
கிப்படிச் செய்தாய், இதோ உன் தகப்பனும் நானும் மனோவி
த்தீணப்பட்டு உன்னைத் தேடினோமென்றாள்.

௪௯. அவர் அவர்களிடத்தில்: நீங்கள் என்னைத்தே
டினதேது, என்பிதாவுக்கடுத்துகளிலே நானிருக்க
வேண்டியதென்றறியீர்களோ என்றார்.

௫௰. ஆனாலவர் அவர்களுக்குச் சொன்ன வார்த்
தையவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை.

௫௧. பின்பு அவர்களோடேகூட அவர் இறங்கிப்போய்,
நாசரேத்துக்கு வந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்
தார், அவருடைய தாய் இந்த விசேஷமானவைகளெல்லா
லாந்தன் இருதயத்திலே வைத்தாள்.

௫௨. இயேசுவோவென்றால் ஞானத்திலேயும், வ
ளர்த்தியிலேயும், * பராபரனிடத்திலும் மனுஷரிடத்
திலுங் கிருபையிலேயும் அதிகப்பட்டார். * ௧. சாமு.
௨, ௨௬.

௩. அதிகாரம்.

யோவான் ஸ்நானகனுடைய ஊழியம். மத். ௩,
௧—௰௨. மாற்கு. ௧, ௧—௮.

திபேரியுராயன் ராட்சியபாரம் பண்ணும் பதினைந்
தாம் வருஷத்திலே, யூதேயாவுக்குப் பொந்தியுபி
லாத்துவாயுமாய், காலபங்குத் தேசமாகிய கலிலேயா
வுக்கு ஏரோதே அதிபதியுமாய், காலபங்குத் தேசமாகிய
இத்துரேயாவுக்குந் திராக்கோனித்திக்கும் அவனு
டைய சகோதரன் பிலிப்பு அதிபதியுமாய், காலபங்குத்
தேசமாகிய அபிலேனேக்கு லீசானியா அதிபதியுமாய்,

௨. அன்னாவுங் காயிப்பாவும் பிரதான ஆசாரியருமா
யிருக்கும்போது, வனாந்திரத்திலே சகரியாவின் குமார
னாகிய யோவானுக்குப் பராபரனுடைய வார்த்தையுண்
டாச்சுது.

௩. அப்போ அவன் யோர்தானதிக்கருகான தேச
மெங்கும் வந்து, பாவமன்னிப்புக்கென்று மனங்குணப்படு
தலினாலான ஸ்நானத்தைப் பிரசங்கித்தான்.

௪. வனாந்திரத்திலே கர்த்தருடைய வழியை ஆயித்தம்
பண்ணுங்கோள், அவருடைய பாதைகளைச் செவ்
வைப்பண்ணுங்கோளென்றும்,

௫. பள்ளமெல்லாம் நிரப்பப்பட்டு, சகல ம
லையுங் குன்றுந் தாழ்த்தப்பட்டு, கோணலானதுகள்
செவ்வையாகி, முரட்டுவழிகள் சமனானதுகளாகக்
கடவதென்றும்,

௬. மாங்கிஷம் யாவும் பராபரனுடைய ரட்சிப்
பைக் காணுமென்றுங் கூப்பிடுகிறவனுடைய சத்தம்
உண்டாமென்றுரைத்த * யெசாயா தீர்க்கதரிசியினு
டைய வாக்கியங்களின் பொஸ்தகத்திலே எழுதியிருக்
கிறப்பிரகாரமாகத்தானே. * யெச. ௪௰, ௩—௫.

௭. அவனிடத்திலே ஞானஸ்நானம் பெறப் புறப்
பட்டு வந்த கும்புகளுடனே சொன்னதாவது: விரியன்
பாம்புகளுடைய குட்டிகளே, நீங்கள் வருங்கோபத்
துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு முன்காட்டின
வனார்.

௮. ஆகையால் குணப்படுதலுக்கேற்த கனிகளைக்
கொடுங்கோள், ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பனென
று உங்களுக்குள்ளாகச் சொல்லத் தொடங்காதேயுங்
கோள், ஏனெனில் பராபரன் இந்தக் கல்லுகளினாலே
ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை எழுப்ப வல்லவர்
என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௯. அப்பொழுதே கோடாலியும் மரங்களின் வேருக்
கிலே வைக்கப்பட்டது, ஆகையால் நல்ல கனி கொடாத மர
மெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படு
மென்றான்.

௰. கும்புகள் அவனை: ஆனால் நாங்கள் என்ன செய்
ய வேணுமென்று கேட்டார்கள்.

௰௧. அவன் அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாக: *இ
ரண்டு சட்டையுடையவன் இல்லாதவனுக்குக் கொ
டுக்கக்கடவான், போசனங்களுடையவனும் அப்படி
யே செய்யக்கடவானென்றான். * ௧. யோவ.
௩/ ௰௭.

௰௨. ஆயக்காரரும் ஞானஸ்நானம் பெற வந்து,
அவனுடனே: போதகரே, நாங்கள் என்ன செய்யவே
ணுமென்றார்கள்.

௰௩. அவன் அவர்களுடனே: உங்களுக்குத் திட்டம்பண்
ணப்பட்டதுக்கதிகமாய் ஒன்றும் நடப்பியாதேயுங்
கோளென்றான்.

௰௪. சேவகரும் அவனை: நாங்களும் என்ன செய்ய
வேணுமென்று கேட்டார்கள். அவன் அவர்களுடனே:
ஒருத்தனுக்கும் நெருக்கமும் அநியாயமும் செய்யாமல்,
உங்கள் சம்பளம் போதுமென்றிருங்கோளென்றான்.

௰௫. ஆனால் யோவான் கிறிஸ்துவாயிருக்கிறாரோ
வென்று சனங்கள் காத்திருந்து, எல்லாருந் தங்கள் இருத
யங்களிலே அவனுக்காகச் சிந்தனையாயிருக்கிற
போது,

௰௬. யோவானெல்லாருக்கும் பிரத்தியுத்தாரமா
கச் சொன்னதாவது: நானே வெள்ளத்திலே உங்
களைத்தான் ஸ்நானம் பண்ணுவிக்கிறேன், ஆனாலென்
னிலும் பெலத்தவர் வருகிறார், அவருடைய பாதரட்
சைகளின் வாரை அவிழ்க்க நான் பாத்திரவானல்லேன்,
அவர் உங்களைப் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும்
ஞானஸ்நானம் பண்ணுவிப்பார்.

௰௭. அவருடைய தூற்றுக்கூடை அவர் கையிலே
யிருக்குது, அவர் தம்முடைய களத்தை அறவிளக்கி, கோ
துமையைத் தம்முடைய களஞ்சியத்திலே சேர்த்து, பதறை
யோ அவியாத அக்கினியாலே சுட்டுப்போடுவாரென்று
சொல்லி,

௰௮. வேறே அநேகங்காரியங்களைப் புத்தியாகச்
சொல்லி, சனத்துக்குச் சுவிசேஷத்தை அறிவித்தான்.

௰௯. ஆனால்

௰௯. ஆனால *காலபஙகு தேசாதிபதியான ஏரோதே தன சகோதரனாகிய பிலிபபுவின பெணசாதி ஏரோதியாளினிமிததமாகவும/ தான செயத சகல பொலலாபபுகளினிமிததமாகவும அவனாலே கடிநதுகொளளபபட டபோது/ * மத. ௰௪/ ௩. ௰. மாற. ௬/ ௰௭. ௰.

௨௰. எரோதே இபபடி எலலாதுஞ செயததுநதவிர யோவானைககாவலஸதலம அடைததான.

யேசுஞானஸநானமபெறறது. மத. ௩/ ௰௩. ௰. மாற. ௧/ ௯—௰௧.

௨௧. சனமெலலாம ஞானஸநானம பெறுகையில சமபவிததுகேகேன அலோ/ யேசுவும ஞானஸநானம பெறறு செபமபணணுகிறபோது/ வானநதிறககப படடு/
௨௨. பரிசுதத ஆவியானவர கணடபபுறாவைப போலே அவர மேலே இறஙகினார. *வானததிலி ருநது: நீர நமமுடைய நேசகுமாரனாயிருககிறீர/ உம மிடததிலே பிரியமாயிருககிறோமெனறொருசதத முமஉணடாசசுது. * ௯/ ௩௫.

கிறீஸதுவினுடையதாயின அஙகிஷவரிசை.

௨௩. யேசுவானவர முபபது வயதுபோலாகத தொடஙகினார. யோசேபபின குமாரனெனறெணணப படட அவர எலியினவஙகிஷகுமாரனாயிருநதார.

௨௪. எலிமாததாததுககும/ இவன லேவிககும/ இவன மெலகிககும/ இவன யனனாவுககும/ இவன யோசேப புககும/
௨௫. இவன மததததியாவுககும/ இவன ஆமோ சுககும/ இவன நாகூமுககும/ இவன எஸலிககும/ இவன நஙகேககும/
௨௬. இவன மாகாததுககும/ இவன மததததியாவக குமா/ இவன சேமேயிககும/ இவன யோசேபபுககும/ இவன யூதாவுககும/

௨௭. இவன யோவனனாவுககும/ இவன ரேசாவுக கும/ இவன சொரொபாபேலுககும/ இவன சலாதத்ியேலுககும/ இவன நேரிககும/

௨௮. இவன மெலகிககும/ இவன அததிககும/ இவன கோசாமுககும/ இவன எலமோதாமுககும/ இவன ஏருககும/
௨௯. இவன யோசேககும/ இவன எலியேசருககும இவன யொரீமுககும/ இவன மாததாததுககும/ இவன லேவிககும/
௩௰ இவன சிமேயோனுககும/ இவன யூதாவுககும/ இவன யோசேபபுககும/ இவன யோனானுககும/ இவன எலியாககீமுககும/
௩௧. இவன மெலேயாவுககும/ இவன மயினானுக கும/ இவன மாததாவுககும/ இவன *நாததானுககும/ இவன தாவீதுககும/ * ௨: சாமு. ௫/ ௰௪.

௩௨. இவன ஈசாயிககும/ இவன ஓபேதுககும/ இவன போவாசுககும/ இவன சலமோனுககும/ இவன நாகசோனுககும/

௩௩. இவன

௩௩. இவன அமினதாபுக்கும, இவன ஆராமுக்கும, இவன எஸரோமுக்கும, இவன பாரேசுக்கும, இவன யூதாவுக்கும,
௩௪. இவன யாக்கோபுக்கும, இவன ஈசாக்குக்கும, இவன ஆபிரகாமுக்கும, இவன தாராக்குக்கும, இவன நாகோருக்கும,
௩௫. இவன சாருக்குக்கும, இவன ராகாவுக்கும, இவன பேலேக்குக்கும, இவன ஏபேருக்கும, இவன சாலாக்குக்கும,
௩௬. இவன கேனானுக்கும, இவன அற்பகசாத்துக்கும, இவன சேமுக்கும, இவன நோவாவுக்கும, இவன லாமேக்குக்கும,
௩௭. இவன மெத்துசலாவுக்கும, இவன ஏனொக்குக்கும, இவன யாரேத்துக்கும, இவன மகலாலேயேலுக்கும, இவன கேனானுக்கும,
௩௮. இவன ஏனொசுக்கும, இவன சேத்துக்கும, இவன ஆதாமுக்குக் குமாரனானவன, இவன பராபரனால உண்டானவன.

௪. அதிகாரம்.

கிறிஸ்து பிசாசினாலே சோதிக்கப்பட்டது.
மத். ௪. க—௰௧. மாற். க. ௰௨. ௰௩.

யேசுவானவன பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய யோர்தானை விட்டுத திரும்பி, ஆவியினாலே வனாந்தரத்திலே கொண்டுபோகப்பட்டு,
௨. நாற்பது நாள பிசாசினாலே சோதிக்கப்பட்டு: அந்த நாட்களிலே ஒன்றும போசியாதிருந்தார், அது களிந்த பிற்பாடு அவருக்குப பசித்தது. * ௨. மோ. ௩௪. ௨௮.
௩. அப்போ பிசாசு அவருடனே: நீ பராபரனுடைய குமாரனானால, இந்தக் கல்லு அப்பமாகச சொல்லென்றது.
௪. யேசு அதுக்குப பிறத்தியுத்தாரமாக: * மனுஷன அப்பத்தினாலே மாத்திரமல்ல, பராபரனுடைய சகல வார்த்தையினாலே பிழைப்பானென்று எழுதியிருக்குதென்றார். * ௫. மோ. ௮. ௩.
௫. பிற்பாடு பிசாசு அவரை உயர்ந்த பர்வதத்தின மேலே கொண்டுபோய, ஒரு க்ஷணப்பொழுதிலே லோகத்தின ராச்சியங்களை எல்லாம அவருக்குக காண்பித்து:
௬. இந்த எல்லா அதிகாரத்தையும அதுகளின மகிமையையும உனக்குத தருவேன, ஏனென்றால எனக்கொப்புக்கொடுக்கப்பட்டிருக்குது, எனக்கு மனதாயிருக்கிறவனுக்கு அதைத தருகிறேன.
௭. நீ என முன்பணிந்தால எல்லாம உன்னுடையதாயிருக்குமென்று பிசாசு அவருடனே சொல்லிற்று.
௮. யேசு அதுக்குப பிறத்தியுத்தாரமாக: எனக்குப பின்னுகப்போ, சாத்தானே, ஏனெனில * உன பராபரனுக்

யகஷ

யாகர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருத்தருக்கு ஆரா
தனை செய்வாயாக வென்றெழுதியிருக்குதென்றார்.
* ௫. மோ. ௬, ௭. ௰, ௨௰.

௯. அதின்பின்பு அவனை யெருசலேமுக்குக் கொண்டுபோய்,
அவரைத் தேவாலயத்து உப்பரிகையின்மேல் நிறுத்தி,
அவருடனே சொன்னது: நீர் பராபரனுடைய குமா
ரனானால், இங்கேயிருந்து தாழக் குதியும்.

௰. ஏனென்றால்: உன்னைக் காக்கும்படிக்கு உன்
காரியமுடைத்தாகத் தம் தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

௰௧. உன் பாதம் கல்லிலே இடறாதபடிக்கு, அவர்க
ளுன்னைக் கைகளிலே ஏந்திக்கொண்டுபோவார்க
ளென்றும் * எழுதியிருக்குதென்று சொன்னான்.
* சங். ௯௧, ௰௧. ௰௨.

௰௨. யேசு அதுக்குப் பிரதியுத்தரமாக: * உன் பரா
பரனாகிய கர்த்தரைப் பரீட்சைபாராயாக வென்று சொல்
லியிருக்குதென்றார். * ௫. மோ. ௬, ௰௬.

௰௩. பிசாசு சோதினையெல்லாம் முடித்தபின்பு
சிலகாலம் அவரைவிட்டகன்றது.

கலிலேயாவிலுண்டான முதல் பிரசங்கங்கள். மத்.
௪, ௰௨. மாற். ௧, ௰௪. ௰௫. ௨௧, ௨௨.

௰௪. யேசுவானவர் ஆவியின் பெலத்தினாலே கலிலேயாவுக்
குத் திரும்பினார், அவருடைய கீர்த்தி சுற்றுத்தேசமெங்கும்
பரம்பினது.

௰௫. அவர்களுடைய ஆலயங்களிலே உபதேசித்து
எல்லாராலும் புகழப்பட்டார்.

௰௬. அவர் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்து
தமக்கு வழக்கமானபடி ஓய்வுநாளிலே ஆலயத்
துக்குள் பிரவேசித்து, வாசிக்க எழுந்திருந்தார்.

௰௭. அப்போ யெசாயா தீர்க்கதரிசியின் புஸ்த
கம் அவருக்குக் கொடுக்கப்பட்டது; அவர் புஸ்த
கத்தைத் திறக்கிறபோது:

௰௮. கர்த்தருடைய ஆவி என்மேலிருக்கிறார்; ஆன
படியினாலே தரித்திரருக்குச் சுவிசேஷஞ் சொல்லிக்க
வும், இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும்,
சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையுங் குருடருக்
குப் பார்வையையுங் கூறிப் பிரசங்கிக்கவும், நொ
றுங்குண்டவர்களை விடுதலையோடே அனுப்பவும்,

௰௯. கர்த்தருடைய பிரியமான வருஷத்தைப் பிரசங்
கிக்கவும், என்னை அபிஷேகம் பண்ணினார் என்
றெழுதியிருக்கிற இடத்தைக் கண்டுபிடித்து, *
யெசா. ௬௧, ௧—௩.

௨௰. புஸ்தகத்தைச் சுருட்டி ஊழியக்காரனுக்
குக் கொடுத்து, உட்கார்ந்தார்; ஆலயத்திலெல்
லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்
தது.

௨௧. அவரோ வென்றால்: இன்றைக்கு இந்த
வேதவாக்கியம் உங்கள் செவிகளிலே கேட்க நிறைவேறிற்
றென்று அவர்களுடனே சொல்லத்துடங்கினார்.

௨௨. எல்லாரும் அவருக்குச் சாட்சி கொடுத்து அவருடைய வாயிலிருந்து புறப்படுகிற கிருபையுள்ள வார்த்தைகளுக்காக ஆச்சரியப்பட்டு: இவன் * யோசேப்புடைய குமாரனல்லவோ என்றார்கள்.
* மத். ௰௩. ௫௫—௫௮. மாற்கு. ௬. ௧—௬.

௨௩. அப்பொழுது அவர் அவர்களுடனே சொன்னதாவது: வயித்தியனே, உன்னையே குணமாக்கு என்கிற உவமையையும், கப்பர்நகூமிலே நடந்தது செய்யப்பட்டதென்று கேட்டோமோ, அதைக் உன் ஊராகிய இங்கேயுஞ் செய்யென்கிறதையும் நீங்கள் எனக்குச் சொல்லுவது நிச்சயம்.

௨௪. ஆனால் * ஒரு தீர்க்கதரிசியும் தன் ஊரிலே அங்கீகாரக்கப்பட்டவனல்லவென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். * யோவ. ௪. ௪௪.

௨௫. ஆனால் * எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைக்கப்பட்டு, சீமையிலெங்கும் மகா பஞ்சம் உண்டாயிருக்கிற போது, இஸ்ரவேலிலே அநேக விதவைகளிருந்தார்கள். * ௧. ராசா. ௰௭. ௧. ௯.

௨௬. அவர்களில் ஒருத்தியினிடத்துக்கும் எலியா அனுப்பப்படாமல், சீதோன் தேசமாகிய சரெப்தா ஊரிலுள்ள விதவையான ஸ்திரீயினிடத்துக்கே அனுப்பப்பட்டான்.

௨௭. * எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில் இஸ்ரவேலிலே அநேகங் குஷ்டரோகிகளுமிருந்தார்கள், ஆனாலும் சீரியதேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களிலே வேறொருத்தருஞ் சுத்தமாக்கப்படவில்லையென்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார். * ௨. ராசா. ௫. ௰௪.

௨௮. ஆலயத்திலிருந்த எல்லாரும், இதுகளைக் கேட்டபோது, கோபத்தால் நிறைந்து,

௨௯. எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டியிருந்த மலையிலே செங்குத்தான முனையிலிருந்து அவரைத் தாழத் தள்ள, அந்த மட்டுமவரைக் கொண்டுபோனார்கள்.

௩௰. அவரோவெனில் * அவர்கள் நடுவாய்ப் புறப்பட்டுப்போய், * யோவ. ௮. ௫௯.

௩௧. கலிலேயதேசத்தின் கப்பர்நகூம் பட்டணத்துக்கு வந்து, ஓய்வுநாட்களிலே அவர்களுக்கு உபதேசித்துக்கொண்டிருந்தார்.

௩௨. அவர்கள் * அவருடைய உபதேசத்துக்குத் திகைத்தார்கள். ஏனென்றால் அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தது. * மத். ௭. ௨௮. ௨௯. யோவ. ௭. ௪௬.

அவர் கப்பர்நகூமிலே செய்த அதிசெயங்கள்.
மாற்கு. ௧. ௨௩—௩௪.

௩௩. அசுத்தப்பிசாசின் ஆவியுள்ள ஒரு மனுஷன் ஆலயத்திலேயிருந்தான், அவன் மகா சத்தத்துடனே:

௩௪. ஐயோ, எங்களுக்கும் உமக்குமென்ன, யேசு நாசரேத்தானே, எங்களைக் கெடுக்க வந்தீரோ, நீ

ராரென்று அறிவேன், நீர் பராபரனுடைய பரிசுத்தர்தானென்றான். * ௧, ௩௫.

௩௫. இயேசுவோவென்றால்: நீ மவுனமடைந்து அவனை விட்டுப் புறப்படு என்று அதட்டினார். அப்போ பிசாசு அவனை நடுவே தள்ளி, அவனுக்கு ஒரு சேதமுஞ் செய்யாமல் அவனை விட்டுப் புறப்பட்டுது.

௩௬. எல்லாருக்கும் ஆச்சரியமுண்டாய் ஒருத்தரோடொருத்தர்: இதென்ன வார்த்தையோ, அதிகாரமும் வல்லமையுமாய் அசுத்த ஆவிகளுக்குக் கற்பிக்கிறார், அதுகளாய்ப் புறப்பட்டுப் போகுதென்றார்கள்.

௩௭. அவருடைய கீர்த்தி சுற்றுத் தேசத்திலுள்ள எல்லாவிடத்திலும் பிரசித்தியமாய்ப் போச்சுது.

௩௮. அவர் எழுந்திருந்து ஆலயத்தை விட்டு, சீமோன் வீட்டுக்குள்ளே பிரவேசித்தார், * சீமோனுடைய மாமியோவென்றால் மகா சுரமாய்க் கிடந்தாள், அவளுக்காக அவரை வேண்டிக் கொண்டார்கள்.
* மத். ௮, ௰௪. ௰௫.

௩௯. அப்போ அவளுக்கு மேலாகக் குனிந்து நின்று சுரத்தை அதட்டினார், அது அவளை விட்டு நீங்கிற்று. உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

௪௰. சூரியன் அஸ்தமிக்கிறபோது, * பல பல வியாதிகளால் வாதைப்பட்டவர்களுடைய மனுஷர் யாவரும் அவர்களை அவரண்டையிலே கொண்டு வந்தார்கள். அவர்களில் ஒவ்வொருத்தன் மேலே அவர் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினார். * மத். ௮, ௰௬.

௪௧. பிசாசுகளும்: நீர் பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்துவென்று கூப்பிட்டு, அநேகரை விட்டுப் புறப்பட்டுது. அவர் அதுகளை அதட்டி, பேசவொட்டாதிருந்தார், ஏனெனில் அவர் கிறிஸ்துவென்று அதுகள் அறிந்திருந்தது.

அவர் கலிலேயாவிலே மறுபடியுந் திரிந்து பிரசங்கித்தது. மாற்கு. ௧, ௩௫—௩௯.

௪௨. உதயமானபோது அவர் புறப்பட்டு வனாந்திரமான இடத்துக்குப் போனார், கும்புகள் அவரைத் தேடி, அவரண்டையிலே வந்து, தங்களை விட்டுப் போகாதபடிக்கு அவரை நிறுத்திக் கொண்டார்கள்.

௪௩. அவரோவென்றால் அவர்களுடனே: நான் மற்ற ஊர்களுக்கும் பராபரனுடைய ராட்சியத்தின் சுவிசேஷமாய் அறிவிக்கவேணும், ஏனென்றால் இதற்கு அனுப்பப்பட்டேனென்றார்.

௪௪. அப்படியே கலிலேயாத் தேசத்தின் ஆலயங்களிலே பிரசங்கித்துக் கொண்டிருந்தார்.

௫. அதிகாரம்.

பேதுருவின் மீன் வேட்டை அதிசயம்.

பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால், கும்பு பராபரனுடைய வசனத்தைக் கேட்க அவரை நெருக்கி நிற்கை

யிலே

யிலே। அவர் கெனேசரேத்தென்னற்சு கடலண்டை யிலே நின்றிருந்து।

௨. கடலோரக்கரையிலே ரெண்டுபடகுகளை நிற்கக் கண்டார்। மீன்பிடிக்கிறவர்களோவென்றால் அது களைவிட்டிறங்கி। வலைகளை அலைச்சுக்கொண்டிருந் தார்கள்.

௩. அப்போ அந்தப்படகுகளிலொன்றுக்குள் ஏறி னார்। அது சீமோனுடையதாயிருந்தது। அதைக்கரையிலேயிருந் துசற்றே தள்ள அவர் அவனைவேண்டிக்கொண்டு। * அந்தப்படகிலே உட்கார்ந்திருந்து சனங்களுக்குப்போத கம்பண்ணினார். * மாற்கு. ௪। ௧.

௪. வசனித்துமுடிந்தபின்பு அவர் சீமோனுடனே: நீ ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய்। மீன்வேட் டைக்கு உங்கள் வலைகளைத் தாழ்விடுங்கோளென் றார்.

௫. சீமோன் அவருக்குப் பிரத்தியுத்தரமாக: அய் யரே। ராமுழுதும் நாங்கள் பிறையாசப்பட்டு ஒன் றும்பிடிக்கத்தில்லை। உம்முடைய வார்த்தையினாலே யோவென்றால் வலையைத் தாழ்விடுவேனென்றான்.

௬. அவர்கள் அப்படிச்செய்து। வெகுதிரளான மீன்களைச் சேர்த்துக்கொண்டார்கள். அவர்கள் வலையோ வெளிலக்கிழிந்தது.

௭. அப்போ வேறேப்படகிலேயிருந்த பங்காளிகள் வந்து தங்களுக்குச் சகொத்தாசைபண்ண। அவர்களுக்குச் சயினைகாட்டினார்கள்। அவர்கள் வந்து ரெண்டு படகு களையும் அமிழ்ந்தத்தக்கப்பாரமாக ரொப்பினார்கள்.

௮. ஆனால் சீமோன்பேதுரு இதைக்கண்டு। யேசுவின் முழங்கால்களண்டை விழுந்து: ஆண்டவரே। என் னைவிட்டுப்புறப்படும்। நான் பாவியான மனுஷனாயிருக்கிறேனென்றான்.

௯. ஏனெனில் பண்ணின மீன்வேட்டையினாலே அவனுக்கும் அவனுடனேகூட இருந்தயாவருக்குந் திகைப்புண்டாச்சுது.

௰. சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயு வினகுமாரராகிய யாக்கோபுக்கும் யோவானுக்கும் அந்தப்படிகாணே. அப்போ யேசு சீமோனுடனே: பயப்படாதே। இதுமுதல் மனுஷரைப்பிடிக்கிறவனா யிருப்பாயென்றார்.

௰௧. அவர்கள் படகுகளைக் கரையிலே தட்டிவைத்து। எல்லாத்தையும்விட்டு அவரைப்பின்சென்றார்கள்.

ஒருகுஷ்டரோக்குணமாக்கப்பட்டது.

மாற்கு. ௧। ௪௰—௪௫.

௰௨. பின்னும் ஒருசம்பவித்ததேதென்றால் அவர் ஒரு ஊரிலேயிருக்கையிலே। இதோ: குஷ்டரோகம் நிறைந்தஒருமனுஷன் அங்கேயிருந்தான் அவன் யேசு வைக்கண்டு முகங்குப்புறவிழுந்து: ஆண்டவரே। உமக்குச்சித்தமுண்டானால்। என்னைச்சுத்தமாக்க உம் மாலேகூடுமென்று அவரைவேண்டிக்கொண்டான்.

௰௩. அவர் கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகென்றார்; உடனே குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று.

௰௪. அவர் அவனுக்கு: நீ ஒருவருக்குஞ் சொல்லாமல், போய் உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, உன் சுத்தமாகுதலின் நிமித்தியம், * மோசே கற்பித்தத்தின்படியே, அவர்களுக்குச் சாட்சியாகப் பலி செலுத்தென்று கற்பித்தார். * ௩. மோ. ௰௪, ௨. ௩௨.

௰௫. ஆனாலும் அவருடைய கீர்த்தி அதிகமாய்ப் பரம்பிற்று, வெகுஜனங்கள் அவரைக் கேட்கிறதுக்கும் அவராலே தங்கள் பிணிகளினின்று குணமாக்கக் கொள்ளுகிறதுக்குங் கூடிவந்தது.

௰௬. அவரோவென்றால் வனாந்திரங்களிலே தனித்துப் போய், * செபம்பண்ணிக்கொண்டிருப்பார்.

* மற்கு. ௧, ௩௫.

ஒருதிமிர்வாதக்காறன் குணமாக்கப்பட்டது.

மற்கு. ௨, ௧—௰௨.

௰௭. பின்னையும் ஒருநாளிலே சம்பவித்ததாவது, அவர் உபதேசித்துக் கொண்டிருந்தார்; கலிலேய யூதேயதேசங்களின் சகல கிராமங்களிலும் எருசலேமிலுமிருந்து வந்த பரிசேயரும் நியாயப்பிரமாணப்போதகரும் உட்கார்ந்திருந்தார்கள். கர்த்தருடைய பெலன் அவர்களைக் குணமாக்கிறதுக்கிருந்தது.

௰௮. அப்போதோ, சில மனுஷர் * திமிர்வாதக்காறனாகிய ஒரு மனுஷனைப் படுக்கையின் மேலெடுத்து வந்து, அவனை உள்ளே கொண்டு போகவும் அவர் முன்பாக வைக்கவும் வகைதேடி, * மத். ௯, ௨—௮.

௰௯. அவனை எந்த வழியாய் உள்ளே கொண்டு போகலாமென்றதுக்கும் ஜனநிமித்தியம் வகைகாணாமல், வீட்டின் மேலேறி, தட்டோடுகள் வழியாய் அவனைப் படுக்கையுடனே கூட நடுவே யேசுவுக்கு முன்பாக இறக்கினார்கள்.

௨௰. அவர் அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, அவனுக்கு: மனுஷனே, * உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டுதென்றார். * ௭, ௪௮.

௨௧. அப்போ வேதபாரகரும் பரிசேயரும்: தேவதூஷணங்களைச் சொல்லுகிறவன் ஆர், பராபரன் ஒருவர் தவிர பாவங்களை மன்னிக்கத்தக்கவர் ஆரென்று சிந்திக்கத் தொடங்கினார்கள்.

௨௨. ஆனால் யேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: உங்கள் இருதயங்களிலே நீங்கள் சிந்திக்கிறதென்ன.

௨௩. எது எளிதாயிருக்குது, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டுதென்று சொல்வதோ, அல்லது, எழுந்து நடவென்று சொல்வதோ.

௨௪. ஆனாலும் பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷனுடைய குமாரன் அதிகாரமுள்ளவரென்கிறதை

நீங்கள்

நீங்கள் அறியப்பட வேணுமென்று சொல்லி, திமிர்வாதக் காரனை நோக்கி: நீ எழுந்திருந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போவென்று உனக்குச் சொல்லுகிறேனென்றார்.

௨௫. உடனே அவன் அவர்களுக்கு முன்பாக எழுந்திருந்து, தான் படுத்திருந்ததை எடுத்துக்கொண்டு, பராபரனை மகிமைப்படுத்தி, தன் வளவுக்குப் போனான்.

௨௬. எல்லாருக்கும் விஸ்மயப்புண்டாச்சுது, அவர்கள் பராபரனை மகிமைப்படுத்தி, பயத்தால் நிறையப்பட்டு: புதுச்சுதான அதிசயங்களை இன்று கண்டோமென்றார்கள்.

லேவியென்னும் மத்தேயுவை அழைத்ததும் உபவாசத்தைக் குறித்து உத்தரஞ்சொன்னதும். மாற்கு. ௨, ௰௩—௨௨.

௨௭. இதுகளுக்குப் பிற்பாடு அவர் புறப்பட்டு, ஆயத்துறையிலே உக்கார்ந்திருந்த * லேவியென்னும் பேருடைய ஆயக்காறனைக் கண்டு, அவனோடே: என்னைப் பின்செல்லென்றார். * மத். ௯, ௯—௰௩.

௨௮. அவன் எல்லாத்தையும் விட்டு எழுந்திருந்து அவரைப் பின்சென்றான்.

௨௯. அந்த லேவி அவருக்குத் தன் வீட்டிலே பெரிய விருந்து பண்ணினான், ஆயக்காறரும் அவர்களோடே பந்தியிருந்த மற்றவர்களும் வெகுசனமாயிருந்தார்கள்.

௩௰. ஆனால் அவர்களுடைய வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக * முறுமுறுக்க: நீங்கள் ஆயக்காறரோடும் பாவிகளோடும் போசித்துக் குடிப்பானேனென்றார்கள். * ௭, ௰௬.

௩௧. யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாக: ஆரோக்கியவான்களுக்கு வயித்தியன் தேவையாயிராமல் நோவாளிகளுக்குத் தேவையாயிருக்கிறான்.

௩௨. நீதிமான்களையல்ல பாவிகளைக் குணப்படுத்தச்சழைக்க வந்தேனென்றார்.

௩௩. ஆனால் * அவர்கள் அவரோடே: யோவானுடைய சீஷரும் அப்படியே பரிசேயருடைய சீஷரும் வெகுதரம் உபவாசித்து, செபங்களைப் பண்ணிக்கொண்டிருக்கக் கொள்ள, உம்முடைய சீஷர் போசித்துக் குடிப்பானேனென்றார்கள். * மத். ௯, ௰௪—௰௭.

௩௪. அவரோவென்றால் அவர்களுடனே: மணவாளன் கலியாண மனுஷரோடிருக்குமட்டும் நீங்கள் அவர்களை உபவாசிக்கப் பண்ணக்கூடுமோ.

௩௫. மணவாளன் அவர்களை விட்டெடுபடும் நாள்கள் வரும், அப்போ அந்த நாள்களிலே உபவாசிப்பார்களென்றார்.

௩௬. அவர்களுக்கொரு உவமையுஞ் சொன்னார்: ஒருவனும் புது வஸ்திரத்தின் துண்டைப் பழைய வஸ்திரத்திலே போடுகிறவனியான், போட்டதால், புதிதானதும் விட்டுப்போம், பழையதானதுக்குப் புது வஸ்திரத்துத் துண்டு ஒவ்வுகிறதுமில்லை.

௩௭. ஒருவனும் புதுத் திராட்சரசத்தைப் பழந் துருத்திகளில் வார்த்து வைக்கிறதுமில்லை; வைத்தால் புதுரசந் துருத்திகளைப் பீறிப்போடும்; அப்போ அது வெளுச்சிந்திப்போம், துருத்திகளுங் கெட்டுப்போம்.

௩௮. புதுரசத்தைப் புதுத் துருத்திகளில் வார்த்து வைக்கவேணும்; அப்போ ரெண்டும் பத்திரப்படும்.

௩௯. பழைய ரசத்தைக் குடிக்கிற ஒருவனும் உடனே புதிதானதை விரும்பான்; ஏனென்றால் பழைய ரசமே திறமாயிருக்குதென்பான் என்று சொன்னார்.

௬. அதிகாரம்.

ஓய்வுநாளிலே கதிர்களைக் கொய்த சீஷாக்களுக்குக் கிறீஸ்து பரிந்து பேசினது. மாற்கு. ௨, ௨௩—௨௮.

இரண்டாவதான ஒரு ஓய்வுநாளிலே சம்பவித்ததென்னென்றால், அவர் * விளைச்சல் வழியே நடந்துபோனார்; அப்போ அவருடைய சீஷாக்கள் கதிர்களைக் கொய்து, கைகளினாலே நிமிண்டித் தின்றார்கள்.

* மத். ௰௨, ௧—௮.

௨. ஆனால் பரிசேயரிற் சிலர் அவர்களுடனே: ஓய்வுநாட்களிலே செய்யத்தகாததை நீங்கள் செய்கிறதென்னென்றார்கள்.

௩. யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: தாவீதும் அவனுடனேயிருந்தவர்களும் பசித்திருக்கும்போது, அவன் பராபரனுடைய வீட்டுக்குள்ளே பிரவேசித்து, * ஆசாரியர்கள் மாத்திரமேயொழியப் பின்னை ஒருவரும் போசிக்கத்தகாத தேவசமுகத்தப்பங்களை வாங்கிக்கொண்டு, * ௩. மோ. ௨௪, ௫—௯.

௪. தானும் போசித்து, தன்னுடனேயிருந்தவர்களுக்குங் கொடுத்த * அவனுடைய செய்கையை நீங்கள் வாசித்ததில்லையோ என்றார். * ௧. சாமு. ௨௧, ௬.

௫. பின்னையும் அவர்களுடனே: மனுஷனுடைய குமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார் என்று சொன்னார்.

சூம்பின கையுடைய மனுஷனை அவர் குணமாக்கினது. மாற்கு. ௩, ௧—௬.

௬. வேறே ஒரு ஓய்வுநாளிலுஞ் சம்பவித்ததென்னென்றால், அவர் ஆலயத்துக்குள்ளே பிரவேசித்து உபதேசித்தார்; அங்கே ஒரு மனுஷனிருந்தான்; * அவனுடைய வலதுகை சூம்பியிருந்தது. * மத். ௰௨, ௯—௰௪.

௭. ஆனால் வேதபாரகரும் பரிசேயரும் அவரைக் குத்தம்பிடிக்க, ஓய்வுநாளிலே குணமாக்குவாரோ என்று * அவரைச் சார்த்திருந்தார்கள். * ௰௪, ௯.

௮. அவரோ அவர்கள் சிந்தனைகளை அறிந்து, சூம்பின கையுடைய மனுஷனுடனே: நீ எழுந்திருந்து நடுவே நில்லென்றார். அவன் எழுந்திருந்து நின்றான்.

௯. அப்போ

௯. அப்போ யேசு அவர்களோடே: உங்களை ஒன்று கேட்கிறேன், ஓய்வுநாளிலே நன்மை செய்வதோ தின்மை செய்வதோ, சீவனை ரட்சிப்பதோ அழிப்பதோ, எது ஞாயமென்று சொல்லுவீர்,

௰. சுற்றிலும் அவர்களெல்லாரையும் பார்த்து, அந்த மனுஷனோடே: உன் கையை நீட்டென்றார். அப்படியே அவன் செய்தான், அவனுடைய கை மற்றதைப் போலே சொஸ்தமாகி, சீருக்கு வந்தது.

௰௧. அவர்களோவெனில் அவமதியால் நிறைந்து, யேசுவை என்ன செய்வதென்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

அவர் அப்போஸ்தலரைத் தெரிந்துகொண்டது.
மாற்கு. ௩. ௰௩—௰௯.

௰௨. அந்நாளுகளிலே சம்பவித்ததேதெனில்: அவர் செபம்பண்ண ஒரு பர்வதத்துக்குப் புறப்பட்டுப் போய், பராபரனைச் செபிக்கிற செபத்திலே ராக்காலம் போக்கி,

௰௩. பொழுது விடிந்தபோது தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிருவரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு * அப்போஸ்தலரென்கிற நாமத்தையுந் தந்தார். * மத். ௰. ௨—௪.

௰௪. அவர்களாரெனில், அவர் பேதுருவென்று பேரிட்ட சீமோனும், அவன் சகோதரனாகிய அந்திரேயாவும், யாக்கோபும், யோவானும், பிலிப்பும், பற்தொலோமேயும்,

௰௫. மத்தேயும், தோமாவும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், செலோத்தேயென்னப்பட்ட சீமோனும்,

௰௬. யாக்கோபின் * சகோதரனாகிய யூதாவும், துரோகியுமான யூதா இஸ்காரியோத்துந் தானே.

* யூதா. ௧. வசனம்.

அவர் ஒரு பள்ளத்தாக்கின் சமனான இடத்திலே பண்ணின பிரசங்கம். மத். ௫. ௬. ௭. அதிகாரம்.

௰௭. அவர் அவர்களோடே கூட இறங்கி சமனான ஒரு இடத்திலே நின்றார். அவருடைய சீஷர் கூட்டமும், அவரைக் கேட்கவும் தங்கள் வியாதிகளைக் குணமாக்கிக்கொள்ளவும், யூதேயா தேசமெங்கும் யெருசலேமிலும் திரு சீதோன் பட்டணங்களின் கரைதுறையிலுமிருந்து வந்த சனத்தின் வெகு திரளும்,

௰௮. அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் அங்கே வந்து கூடினார்கள், ஆரோக்கியமும் அடைந்தார்கள்.

௰௯. சனமெல்லாம் அவரைத் தொடப்பார்த்தது, ஏனெனில் வல்லமை அவரிலிருந்து புறப்பட்டு எல்லாரையுங் குணமாக்கிற்று.

௨௰. அவர் தம்முடைய சீஷர்மேல் தம்முடைய கண்களை ஏறெடுத்துச் சொன்னதாவது: * தரித்திரரான நீங்கள்

பாக்கியவான்கள்; அதேதென்றால் பராபரனுடைய ராட்சியம் உங்களுடையதாயிருக்குது. * மத். ௫. ௩.

௨௧. இப்போ பசித்திருக்கிற நீங்கள் பாக்கியவான்கள்; அதேதென்றால் திருப்தியடைவீர்கள்; இப்போ * அழுகிற நீங்கள் பாக்கியவான்கள்; அதேதென்றால் நகைப்பீர்கள். * யேசா. ௬௧. ௩—௬.

௨௨. மனுஷனுடைய குமாரனிமித்தியமாக மனுஷர் * உங்களைப் பகைத்து உங்களை விலக்கி நிந்திக்கையிலும் உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருக்கிறீர்கள். * ௧. பேது. ௪. ௰௪.

௨௩. * அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கோள்; ஏனென்னிலே பரமண்டலத்திலே உங்கள் பலன் திரளாயிருக்கும்; அதேதென்றால் அப்படியே அவர்கள் பிதாக்கள் தீர்க்கதெரிசிகளுக்குச் செய்தார்கள். * அப்போ. ௫. ௪௧.

௨௪. ஆனால் * ஐசுவரியவான்களாகிய உங்களுக்கையோ! அதேதென்றால் உங்கள் ஆறுதலை நீங்கள் அடைந்துதீர்ந்தது. * ௰௬. ௨௫.

௨௫. * நிறைவுபட்டிருக்கிற உங்களுக்கையோ! அதேதென்றால் பசித்திருப்பீர்கள்; இப்போ நகைக்கிற உங்களுக்கையோ! அதேதென்றால் துக்கப்பட்டழுவீர்கள். * யேசா. ௬௫. ௰௩. ௰௪.

௨௬. எல்லா மனுஷரும் உங்களைக் குறித்து நல்லதாய்ப் பேசினாலே உங்களுக்கையோ! ஏனென்றால் அப்படியே அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதெரிசிகளுக்குச் செய்தார்கள்.

௨௭. ஆனால் கேள்விப்படுகிற உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்கள் * சத்துருக்களைச் சினேகியுங்கோள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கோள். * மத். ௫. ௪௪. ௪௫.

௨௮. உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கோள்; உங்களை ஆக்கிரமிக்கிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கோள்.

௨௯. உன்னைத் தாடையிலே அறைகிறவனுக்கு மற்றத் தாடையையும் ஒப்புக்கொடு; உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளுகிறவனுக்கு உன் அங்கியையுந் தடைபண்ணாதே. * மத். ௫. ௩௯—௪௧.

௩௰. உன்னை வேண்டிக்கொள்ளுகிற எவனுக்குங் கொடு; உன்னுடையதை எடுத்துக்கொள்ளுகிறவனை அதைத் திரும்பக் கேளாதே. * மத். ௫. ௪௨.

௩௧. உங்களுக்கு மனுஷர் எப்படிச் செய்யவேணுமென்றிருக்கிறீர்களோ அப்படி அவர்களுக்கு நீங்களுஞ் செய்யுங்கோள். * மத். ௫. ௰௨.

௩௨. * உங்களைச் சினேகிக்கிறவர்களையே நீங்கள் சினேகித்தால் உங்களுக்குத் தயவு எப்படிக் கிடைத்ததாயிருக்குது? பாவிகளுந் தங்களைச் சினேகிக்கிறவர்களைச் சினேகிக்கிறார்களே. * மத். ௫. ௪௬. ௪௭.

௩௩. உங்களுக்கு நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மைசெய்தால் உங்களுக்குத் தயவு எப்படிக் கிடைத்ததாயிருக்குது? பாவிகளும் அப்படித்தான் செய்கிறார்களே.

௩௪. வரப

௩௪. வரப்பப்பற்றிக்கொள்ளலாமென்றுநம்பிக்கையானவர்களுக்கு நீங்கள்கடன்கொடுத்தால் உங்களுக்கேதுபயன்படிக்கொத்தாயிருக்குது / பாவிகளுஞ்சாயும் அப்படிவரப்பப்பற்றிக்கொள்ளுதற்குப் பாவிகளுக்குக்கடன்கொடுக்கிறார்களே.

௩௫. நீங்களோ உங்கள் சத்துருக்களைச்சிநேகித்து / நன்மைசெய்து / ஒன்றுக்கும் ஆசைவைக்காமல் கடன்கொடுங்கோள் / அப்போ உங்கள்பலன்திரளாயிருந்து / உன்னதமானவருடைய பிள்ளைகளாயிருப்பீர்கள் / ஏனென்றால் அவர் நன்றியறியாதவர்கள் மேலும் பொல்லாதவர்கள் மேலும் உபகாரியாயிருக்கிறார் / * மத. ரு. ௪௫.

௩௬. ஆனபடியினாலே உங்கள்பிதா * இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோலே நீங்களும் இரக்கமுள்ளவர்களாகுங்கோள். * மத. ரு. ௪௮.

௩௭. * குற்றமாய்த்தீர்க்காதேயுங்கோள் / அப்போது குற்றமாய்த்தீர்க்கப்படாதிருப்பீர்கள் / ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்காதேயுங்கோள் / அப்போ ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்படாதிருப்பீர்கள் / விடுதலைபண்ணுங்கோள் / அப்போ விடுதலைபண்ணப்படுவீர்கள். * மத. எ. க.

௩௮. கொடுங்கோள் / * அப்போ உங்களுக்குக் கொடுக்கப்படும் / அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழுகிற நல்லளவை உங்கள் மடியிலே கொடுப்பார்கள் / ஏனென்றால் நீங்கள் அளக்கிற அளவினாலே உங்களுக்குத் திரும்ப அளக்கப்படுமென்றார். * சாங்கீ. ௬௪.
உ—௪.

௩௯. அவர் இன்னமும் அவர்களுக்குச் சொன்ன உவமையாவது: * குருடனுக்குக் குருடன் வழிகாட்டலாமோ / இருவரும் பள்ளத்தில் விழுவார்களல்லவோ. * மத. ௰௫ / ௰௪.

௪௰. சீஷன் தன் போதகனுக்கு மேற்பட்டவனாயிராமல் தேறினவனெல்லாந் தன் போதகனைப் போலிருப்பான்.

௪௧. ஆனாலும் * நீ உன் சுயகண்ணிலுள்ள உத்திரத்தை உணராமல் / உன் * சகோதரன் கண்ணிலுள்ள சராணைப்பார்க்கிறதென்ன. * மத. எ / ௩—ரு.

௪௨. அல்லது நீ உன் கண்ணிலுள்ள உத்திரத்தைக் காணாமல் / உன் சகோதரனுடனே: சகோதரனே / நான் உன் கண்ணிலுள்ள சிராயை எடுத்துப்போடட்டுமென்று எப்படிச் சொல்லக்கூடும். மாயக்காரா / முந்த உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு / பிறபாடு உன் சகோதரன் கண்ணிலுள்ள சிராயை எடுத்துப்போடவனுக்குப் பார்ப்பாயாக.

௪௩. ஏனென்றால் * ஆகாத கனிகொடுக்கும் மரம் நல்லமரமுமல்ல / நல்ல கனிகொடுக்கும் மரம் ஆகாதமரமுமல்ல. * மத. எ / ௰எ. ௰௮.

௪௪. எந்த மரமுந் தன் சுயகனியினாலே அறியப்படும் / ஏனென்றால் முள்ளுச் செடிகளிலே அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை / நெருஞ்சிச் செடியிலே திராட்சப்பழத்தை அறுக்கிறதுமில்லை.

௪௫. நல்ல மனுஷன் தன் இருதயத்தின் * நல்ல பொக்கிஷத்திலே நல்லதை எடுத்துக் கொடுக்கிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயத்தின் பொல்லாப் பொக்கிஷத்திலே பொல்லாததை எடுத்துக் கொடுக்கிறான்; ஏனென்றால் இருதயத்தின் பரிபூரணத்தினாலே அவனவன் வாய் பேசும்.
* மத். ௧௨. ௩௪. ௩௫.

௪௬. நான் சொல்லுகிறதுகளை நீங்கள் செய்யாமல் போய்; என்னை * ஆண்டவரே, ஆண்டவரே என்றழைப்பானேன். * மத். ௭. ௨௧—௨௩.

௪௭. * என்னண்டைக்கு வந்து என் வார்த்தைகளைக் கேட்டு அதுகளின்படி செய்கிறவனெவனோ அவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்கிறதை உங்களுக்குக் காண்பிப்பேன். * மத். ௭. ௨௪. [illegible].

௪௮. வெட்டி ஆழத் தோண்டி, கல்லின் மேலே அஸ்திவாரம் போட்டு வீடு கட்டின மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான். பெருவெள்ளம் வந்து நீரோட்டம் அந்த வீட்டின் மேலே மோதியும் அதை அசைக்க மாட்டாதே போச்சுது; ஏனென்றால் அது கல்லின் மேலே அஸ்திவாரம் போட்டிருக்குது.

௪௯. கேட்டுச் செய்யாதவனோவென்றால் அஸ்திவாரமில்லாமல் பூமியின் மேலே வீடு கட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின் மேல் மோதினவுடனே அது விழுந்தது; அந்த வீட்டினிடிதல் பெரிதாயிருந்ததென்றார்.

௭. அதிகாரம்.

* நூற்றுச்சேர்வைக்காரனுடைய வேலைக்காரனைக் குணமாக்கினது. மத். ௮. ௫—௰௩.

அவர் தம்முடைய வார்த்தைகளெல்லாம் ஜனத்தின் காதுகள் கேட்கச் சொல்லி முடித்த பின்பு, கப்பர்நகூமுக்குள் பிரவேசித்தார்.

௨. நூற்றுக்குச் சேர்வைக்காரனுக்கொருத்தனுக்குப் பிரியமான அவனுடைய வேலைக்காரன் பிணியாயிருந்து, சாகக்கிடந்தான்.

௩. அவன் இயேசுவின் செய்தியைக் கேட்டிருந்து, அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்க அவரை வேண்டிக்கொள்ளுகிறதுக்கு யூதருடைய மூப்பரை அவரண்டைக்கு அனுப்பினான்.

௪. இவர்கள் இயேசுவண்டையிலே வந்து அவரைக் கருத்தாய் வேண்டிக்கொண்டு: நீர் அவனுக்கிதைச் செய்யப் பாத்திரவானாயிருக்கிறான்.

௫. ஏனென்றால் நம்முடைய சாதியைச் சிநேகிக்கிறான்; எங்களுக்கு ஜெபாலயத்தையும் அவன்தானே கட்டினானென்றார்கள்.

௬. இயேசு அவர்களுடனே கூடப்போனார்; வீட்டுக்கு அவர் இனி தூரமாயிராதபோதோவென்றால் சேர்வைக்காரன் அவரண்டையிலே சிநேகிதரை அனுப்பி: ஆண்டவரே, பிரயாசப்படாதேயும்; ஏனென்றால்

தேவ

தேவரீர் என வீட்டுவாசலுக்குள பிரவேசிக்க நான பொர்நதவனலல.

எ. ஆகையால உமமண்டைக்குவரவுமென்னை நானபாத்திரவானாக எண்ணவிலலை, ஒருவாத்தை யசசொலலும, அப்பொழுதென்வேலைக்காரன குண மாவான.

அ. ஏனென்றால நான அதிகாரத்துக்குக்கீழானமனுஷ னாயிருந்தும, என கீழிருக்கிற சேவகர் எனக்குணடு; நானொருவனுக்கு: போவென்று சொலல, போ றான; மற்றவனுக்கு: வாவென்று சொலல, வருகி றான; என வேலைக்காரனுக்கு: இதைச்செய யென்று சொலல, செய்கிறானென்று அவருக்குச் சொலலச்சொனனான.

௯. யேசுவிதுகளைக் கேட்டபோது, அவன மேலே ஆச்சரியப்பட்டு, திருமபிக்கொண்டு, தமமைப்பின செலலுகிற ஜனங்களுக்கு: இஸ்ரவேலிலுங்கூட நான இப்படிக்கொத்தவிசுவாசத்தைக்கணடதிலலை என்று உங்களுக்குச் சொலலுகிறேனென்றார்.

௰. அனுப்பப்பட்டவர்கள் திருமபவீட்டுக்கு வருகி றபோது வியாதியாயிருந்த வேலைக்காரனை ஆரோக் கியமடைந்துவிருக்கக்கண்டார்கள்.

நாயீன் ஊரில மரித்த ஒருவாலிபகாரனை அவர் எழுப்பினது.

௰௧. மறுநாளிலே சமபவித்ததென்னவென்றால, நாயீன என்று சொலலப்பட்ட ஒரு ஊருக்குப் போனார்; அவ ருடைய சீஷரிலே அனேகரும வெகுஜனமும அவருடனே கூடப்போனார்கள்.

௰௨. அவர் ஊர்வாசலுக்குச் சமீபித்தபோதொ வென்றால, இதோ தனதாயக்கு ஒன்றானகுமாரனாகிய மரித்தனொருத்தன வெளியேயெடுத்துவரப்பட்டான; அவ ளோ வேறிலலா விதவையானவள; ஊரார் வெகு கும்பு அவளுடனே கூடவந்திருந்தார்கள்.

௰௩. கர்த்தர் அவளைப்பார்த்து அவளமேலமனது ருகி, அவளுடனே: அழாதேயென்று சொலலி,

௰௪. சேரவந்து, பாடையைத்தொட்டார்; சுமந்த வர்களோவென்றால நின்றார்கள். அப்பொழுதவர்: வாலிபகாரனே, *எழுந்திருஎன்று உனக்குச்சொலலுகி றேனென்றார். * மாற்கு. ரு, ௪௧. யோவா. ௰௧, ௪௩.

௰௫. அப்பொழுது மரித்தவன எழுந்திருக்கார்ந்து, பே சத்துடங்கினான. அவர் அவனை அவன தாயக்கொப்பி வித்தார்.

௰௬. எலலாருக்கும பயமபிடித்தது: மகாத் தீரக்கதரிசி நமக்குள்ளே எழுந்திருந்தாரென்றும, பராபரன தமமுடைய ஜனத்தைக்கணடுசநதித்தாரென் றும பராபரனை மகிமைப்படுத்தினார்கள்.

௰௭. இந்த அவருடைய வரத்தமானம யூதேயாமுழு துக்கும சுத்துத்தேசமெலலாம பிரசித்தமாச்சுது.

யோவா

யோவானவரண்டைக்குத் தானுப்பத்தியமனுப்பினபோது அவர் சொன்ன வசனங்கள்.

௰௮. யோவானுக்கு அவனுடைய சீஷர் இதெல்லாத்தையும் அறிவித்தார்கள். அப்போ *யோவான் தன் சீஷரில் இரண்டு பேரை அழைத்து, *மத். ௰௧।

௨—௬.

௰௯. இயேசுவண்டைக்கனுப்பி: வருகிறவர் நீரோ, அல்லது வேறொருத்தருக்குக் காத்திருப்போமோ வென்று கேட்கச் சொன்னான்.

௨௰. அந்த மனுஷர் அவரண்டைக்கு வந்து: வருகிறவர் நீரோ, அல்லது வேறொருத்தருக்குக் காத்திருப்போமோ வென்று கேட்கிறதுக்கு யோவான் ஸ்நானகன் எங்களை உம்மண்டைக்கனுப்பினானென்றார்கள்.

௨௧. அந்நேரத்திலே தானே அவர் அநேகரை வியாதிகளும் உபாதிகளும் பொல்லா ஆவிகளும் நீங்கக் குணமாக்கி, அநேகங் குருடருக்குப் பார்வையையருளினார்.

௨௨. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தாரமாக: குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படுகுதென்று நீங்கள் பார்த்ததுகளையுங் கேட்டதுகளையும் யோவானுக்குப் போயறிவியுங்கோள்.

௨௩. என்னிடத்திலே இடறல்படாதவன் பாக்கியவானென்றார்.

௨௪. யோவானுடைய தூதர்கள் போனபின்பு அவர் யோவானைக் குறித்து ஜனங்களுடனே சொல்லத் தொடங்கினதாவது: *வனாந்தரத்தில் எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள், காத்தாலசைவுண்ட நாணலையோ, *மத். ௰௧। ௭—௰௯.

௨௫. அல்லாமல் எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள், மெல்லிய வஸ்திரங்களைத் தரித்த மனுஷனையோ, இதோ மகிமையான உடுப்போடுஞ் செல்வத்தோடும் இருக்கிறவர்கள் அரசர் அரண்மனைகளிலே இருக்கிறார்கள்.

௨௬. அல்லாமல் எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள், தீர்க்கதெரிசியையோ, ஆம், தீர்க்கதெரிசியிலும் அதிகமானவனென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௭. *இதோ நாம் உம் முகத்துக்கு முன்பாக எம்முடைய தூதனை அனுப்புகிறோம், அவன் உமக்கு முன்னே உமக்கு வழியை ஆயத்தம் பண்ணுவானென்று எழுதிக்கிடக்கப்பட்டவன் இவனே. *மலே. ௩। ௧.

௨௮. ஏனென்றால் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கப் பெரிய தீர்க்கதெரிசி ஒருவனில்லை, பராபரனுடைய ராச்சியத்தில் சிறியவனேவெனில் அவனைப் பார்க்கிலும் பெரியவனாயிருக்கிறான்.

௨௯. சகல சனமும் ஆயக்காரரும் யோவானைக் கேட்டபோது பராபரனை நீதிபரரென்று சொல்லி அவனுடைய ஸ்நானத்தைப் பெற்றார்கள்.

௩௰. ஆனால

௩௰. ஆனால் பரிசேயரும் நியாயசாஸ்திரிகளும் பராபரனுடைய ஆலோசனையைத் தங்களுக்குக் கேடாகத் தள்ளி, அவனாலே ஞானஸ்நானம் பெறாதே போனார்கள் என்றார்.

௩௧. பின்னையுங் கர்த்தர் சொன்னதாவது: இந்தச் சந்ததியான மனுஷரை எதுக்கு ஒப்பிடுவேன், எதுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். * மத். ௰௧, ௰௬—௰௯.

௩௨. சந்தைவெளியில் உட்கார்ந்திருந்து, உங்களுக்கூதினோம், நீங்கள் கூத்தாடவில்லை, உங்களுக்குப் புலம்பினோம், நீங்கள் அழவில்லை என்று ஒன்றுக்கொன்று எதிர்க்கூப்பிடுகிற பிள்ளைகளுக்கொப்பாயிருக்கிறார்கள்.

௩௩. அதேதென்னில் யோவான் ஸ்நானகன் வந்து, அப்பம் போசியாமலிருந்து திராட்சரசங் குடியாமலுமிருந்தான், அதுக்கு நீங்கள்: பிசாசு உடையவனாயிருக்கிறானென்கிறீர்கள்.

௩௪. மனுஷனுடைய குமாரன் வந்திருந்து போசித்துக் குடிக்கிறார், அதுக்கு நீங்கள்: இதோ போசனப்பிரியனும் மதுபானனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்குஞ் சிநேகிதனென்கிறீர்கள்.

௩௫. ஆனாலும் ஞானந்தன் பிள்ளைகள் எல்லாராலும் நீதிவிளங்கப்பட்டதென்றார்.

அவர் மகாப்பாவியான ஒரு ஸ்திரீயின் பாவங்களை மன்னித்தது.

௩௬. ஆனால் பரிசேயரில் ஒருத்தன் அவரைத் தன்னுடனே அசனம்பண்ணவேணுமென்று கேட்டுக்கொண்டான், அவர் பரிசேயனுடைய வீட்டுக்குள்ளே பிரவேசித்து, பந்தியிருந்தார்.

௩௭. இதோ, அவ்வூரிலிருக்கிற பாவியான ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, * ஒரு பரணி பரிமளதயிலங்கொண்டுவந்து,

யோவ. ௰௨, ௩.

௩௮. அவருடைய பாதங்களண்டையிலே பின்னாக அழுதுகொண்டு நின்று, அவருடைய பாதங்களைக் கண்ணீராலே நனைக்கத் துவக்கி, தன் தலையின் மயிர்களாலே துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து பரிமளதயிலத்தினாலே பூசினாள்.

௩௯. அவரை அழைத்திருந்த பரிசேயன் அதைக் கண்டபோது: இவர் தீர்க்கதரிசியாயிருந்தாரானால், தம்மைத் தொடுகிற ஸ்திரீ ஆரென்றும் எப்படிக்கொத்தவளென்றும் அறிந்திருப்பார், ஏனென்னில் பாவியாயிருக்கிறாளென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். * ௰௫, ௨.

௪௰. யேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: சீமோனே, உனக்கு நான் சொல்லவேண்டிய ஒரு காரியமுண்டென்றார். சொல்லும், போதகரே என்றான்.

௪௧. கடன்கொடுத்த ஒருத்தனுக்குக் கடன்பட்டவர் ரெண்டுபேரிருந்தார்கள், ஒருத்தன் அஞ்ஞூறு வெள்ளிக்

காசும்

காசும் மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசுங் கொடுக்க வேண்டியதாயிருந்தது.

௪௨. ஆனால் கொடுக்க அவர்களுக்கில்லாதபோது இருவருக்கும் மன்னித்துவிட்டான். இப்போது அவர்களிலே எவன் அவனை அதிகமாய்ச் சிநேகிப்பான், அதைச் சொல்லென்றார்.

௪௩. சீமோனென்கிறவன் பிரத்தியுத்தரமாக: எவனுக்கதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே என்று நினைக்கிறேனென்றான். அப்போ அவர் அவனுடனே: நிதானமாய்த் தீர்த்தாயென்று சொல்லி,

௪௪. ஸ்திரீப்பண்டைக்குத் திரும்பி, சீமோனுடனே சொன்னதாவது: இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயோ, உன் வீட்டுக்குள்ளாகப் பிரவேசித்து வந்தேன், தண்ணீர் என் கால்களுக்கு நீ கொடுத்ததில்லை, இவளோவென்றால் கண்ணீரினாலே என் கால்களை நனைத்து, தன் தலைமயிர்களாலே துடைத்தாள்.

௪௫. முத்தம் எனக்கு நீ கொடுத்ததில்லை, இவளோவென்றால் நான் உள்ளே பிரவேசித்து முதல் என் பாதங்களை ஓயாமல் முத்திசெய்கிறாள்.

௪௬. எண்ணெயினாலே என் தலையை நீ பூசினதில்லை, இவளோவென்றால் பரிமளதைலத்தினாலே என் பாதங்களைப் பூசினாள்.

௪௭. ஆனபடியினாலே உனக்குச் சொல்லுகிறேன், அவளுடைய வெகுவான பாவங்கள் மன்னிக்கப்பட்டது. ஏனென்றால் வெகுவாய்ச் சிநேகித்தாளே, ஆனாலெவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகுதோ, அவன் கொஞ்சமாய்ச் சிநேகிக்கிறானென்றார்.

௪௮. அவளுக்கு: * உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டதென்றார். * ௫. ௨௰. ௨௧.

௪௯. அப்போ கூடப் பந்தியிருந்தவர்கள் தங்களுக்குள்ளே: பாவங்களையும் மன்னிக்கிற இவனார் என்று சொல்லத்தொடங்கினார்கள்.

௫௰. ஆனால் அவர் ஸ்திரீயுடனே: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்.

௮. அதிகாரம்.

ஸ்திரீகளும் அப்படியும் கலிலேயாவிலே சுற்றிப் பயணம்பண்ணினது.

பிற்பாடோம் பவித்தக்கே தென்னிலே அவர் ஊருக்குங் கிராமத்துக்கும் பயணம்பண்ணிக்கொண்டு பரனுடைய ராட்சியத்தைப் பிரசங்கித்து, சுவிசேஷமாய் அறிவித்தார்.

௨. பன்னிருவரும், பொல்லா ஆவிகளுக்கும் வியாதிகளுக்கும் நீங்கலாக்கக் குணமாக்கப்பட்ட சில ஸ்திரீகளும், * ஏழு பிசாசுகள் நீங்கப்போன மக்தலேனாள் என்னப்பட்ட மரியாளும், * மாற்கு. ௰௬. ௯.

௩. ஏரோதேயின் காரியக்காறனுகிய கூசாவின் பெண்சாதியாகிய யொவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளாலே அவருக்கு ஊழியஞ்செய்து கொண்டிருக்கிற மற்ற அனேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்.

நாலுவிதநிலத்தின் உவமை. மாற்கு. ௪, ௧—௨௫.

௪. வெகு கும்பு சனங்கள் ஊரிலிருந்து அவரண்டையிலே வந்தவர்களோடே கூடின போதோவென்னில், அவர் உவமையாய்ச் சொன்னதாவது:

௫. * விதைக்கிறவன் தன் விதையை விதைக்கப் புறப்பட்டான், அவன் விதைக்கையிலே, சிலது வழியருகே விழுந்து மிதிபட்டுது, ஆகாசத்தின் பறவைகளும் வந்து அதைப் பட்சித்துப் போட்டுது. * மத். ௰௩, ௩—௨௩.

௬. வேறே சிலது கற்பாறையின் மேலே விழுந்துது, அது முளைத்த பின்பு ஈரமில்லாததினாலே உலர்ந்து போச்சுது.

௭. வேறே சிலது முள்ளுக்குள்ளே நடுவே விழுந்துது, முள்ளுகள் கூட முளைத்து அதை நெருக்கிப் போட்டுது.

௮. வேறே சிலது நல்ல நிலத்திலே விழுந்துது, அது முளைத்து, ஒன்று நூறாய்ப் பலனைத் தந்துதென்றார். இதுகளைச் சொல்லி: கேட்கக் காதுள்ளவன் கேட்கக்கடவானென்று கூப்பிட்டார்.

௯. அவருடைய சீஷரோவென்றால் இந்த உவமை என்னவென்று அவரைக் கேட்டார்கள்.

௰. அவர் சொன்னதாவது: பராபரனுடைய ராச்சியத்தின் ரகசியங்களை அறியுகிறது உங்களுக்குக் கொடுக்கப்பட்டுது, மற்றவர்களோவென்னில் கண்டுங் காணாமலும், கேட்டும் உணராமலுமிருக்க அவர்களுக்கு உவமைகளாய் அறிவிக்கப்பட்டுது.

௰௧. இந்த உவமையின் அர்த்தமாவது: விதை பராபரனுடைய வசனமாயிருக்குது.

௰௨. வழியருகே விதைக்கப்பட்டவர்களோ கேட்கிறவர்களாயிருக்கிறார்கள், பிற்பாடு அவர்கள் விசுவாசித்து ரட்சிக்கப்படாதபடிக்கு, பிசாசு வந்து வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்தெடுத்துப் போடுது.

௰௩. கற்பாறையின் மேலே விதைக்கப்பட்டவர்களோவென்னில், கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள், இவர்களுக்கு வேரில்லை, சிலகாலம் விசுவாசித்து, சோதனையின் காலத்திலே பின்வாங்குகிறார்கள்.

௰௪. முள்ளுகளிலே விழுந்ததோவென்னில், இவர்கள் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள், ஆனாலும் போய், கவலைகளினாலும் * ஐசுவரியத்தினாலும் இச்சீவனத்தின் செல்வாக்குகளினாலும் நெருக்கிப் போடப்பட்டு பலனுக்கு வராதிருக்கிறார்கள். * ௰௪, ௨௬. ௧. தீமோ. ௬, ௯.

௰௫. நல்ல நிலத்திலே விதைக்கப்பட்டதோவென்னில், இவர்கள் வசனத்தைக் கேட்டு, நன்றுஞ்சற்குணமு

மாண

மான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே கனி கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். * கலாத்த. ௫/ ௨௨.

௰௬. ஆனால் ஒருத்தனும் * விளக்கைக் கொளுத்தின போது அதை ஒரு பாத்திரத்தினாலே மூடான் கட்டிலின் கீழே வையான்/ உள்ளே போகிறவர்கள் வெளிச்சங் காண அதை விளக்குத்தண்டின் மேலே வைப்பான். * மத். ௫/ ௰௫.

௰௭. ஏனென்றால் வெளியாகமாகாத அந்தரங்கமில்லை/ அறியப்பட்டு வெளிக்கு வராத மறைபொருளுமில்லை.

௰௮. ஆனபடியினாலே எப்படிக் கேட்கிறீர்களென்று பாருங்கோள்/ ஏனென்றால் எவன் உள்ளவனாயிருக்கிறானோ அவனுக்குக் கொடுக்கப்படும்/ எவன் இல்லாதவனாயிருக்கிறானோ அவனிடத்திலே உண்டென்று அவன் நினைக்கிறதும் எடுத்துக்கொள்ளப்படுமென்றார்.

அவர் தம்முடைய தாயுஞ் சகோதரருமாரென்றறிவித்தது.

௰௯. ஆனால் * அவருடைய தாயுஞ் சகோதரரும் அவரண்டைக்கு வந்து/ கும்பு நிமித்தியமாய் அவரைச் சேரமாட்டாதிருந்தார்கள். * மத். ௰௨/ ௪௬—௫௰.

௨௰. அப்போ உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மைப் பார்க்க வேணுமென்று வெளியிலே நிற்கிறார்களென்று அவருக்கு அறிவிக்கப்பட்டுது.

௨௧. அவரோவென்றால் அவர்களுக்குப் பிரதியுத்தாரமாக: பராபரனுடைய வாக்கியத்தைக் கேட்டு அதின்படி செய்கிறவர்களே * என்னுடைய தாயும் என்னுடைய சகோதரருமாயிருக்கிறார்களென்றார். * யோவ. ௰௫/ ௰௪.

அவர் கடலக்கொந்தளிப்பை அமர்த்தினது. மத். ௮/ ௨௩—௨௭. மாற்கு. ௪/ ௩௫—௪௧.

௨௨. ஒரு நாளிலே சம்பவித்ததேதென்றால் அவர் தம்முடைய சீஷரோடுங்கூட ஒரு படவிலேறி/ அவர்களோடே: சிறுகடலுக்கு அக்கரைக்குப் போவோமென்றார். அப்போ கரையைவிட்டோடினார்கள்.

௨௩. ஆனால் அவர்கள் படவு நடக்கத்துக்கையிலே நித்திரைபோனார். அப்போ கடலிலே சுழல் காற்றிறங்கி/ தண்ணீரினாலே படவு ரொப்பப்படுகிறத்தினாலே அவர்கள் மோசமடைந்து/

௨௪. சேர வந்து: ஐயரே/ ஐயரே/ மடிந்து போறோமென்று அவரை எழுப்பினார்கள். அவரோவென்றால் எழுந்திருந்து/ காற்றையுந் தண்ணீர் அலையையும் அதட்டினார். அப்போ அதுகள் நின்றுபோய/ அமைச்சலுண்டாச்சுது.

௨௫. அவரோவென்றால் அவர்களுக்கு: உங்கள் விசுவாசமெங்கென்றார். ஆனால் அவர்கள் பயந்து ஆச்

சரியப்

ரியப்பட்டு, ஒருவரொடொருவர்: இவரெப்பட்டிக்கொத்தவரோ, காற்றுக்குஞ் சலத்துக்குங் கட்டளைகொடுக்க லாயக்காயிருக்கிறார், அதுகளவருக்குக் கீழ்ப்படியுதென்றார்கள்.

அவர் பிசாசுகளைத் துரத்தி அதுகளைப் பன்னிகளுக்குள்ளப் போக உத்தாரங்கொடுத்தது. மத். ௮, ௨௮—௩௪. மாற்கு. ௫, ௧—௨௰.

௨௬. கலிலேயாவுக்கெதிரான கதரேனர் தேசத்திலே ஓடிச்சேர்ந்தார்கள்.

௨௭. அவர் கரையிலிறங்கினபோதோவெனில் அனேகநாளாய்ப் பிசாசுகள் பிடித்தவனும் வஸ்திரந்தரிக்காமலும் வீட்டிலிராமலும் பிரேதக்கல்லறைகளிலே தங்கினவனுமான அந்தப் பட்டணத்து மனுஷனொருத்தன் அவருக்கெதிராக வந்தான்.

௨௮. அவன் யேசுவைக் கண்டபோது, கூப்பிட்டுக்கொண்டு, அவருக்குமுன்பாக விழுந்து, மகாசத்தத்துடனே: உன்னதபராபரனுடைய சுதனாகிய யேசுவே, எனக்கும் உமக்குமென்ன, என்னை உபாதிக்காதிருக்க உம்மை வேண்டிக்கொள்ளுகிறேனென்றான்.

௨௯. அதேதென்னால் அவர் அசுத்த ஆவிக்கு, அந்த மனுஷனை விட்டு நீங்கக் கற்பித்தார். ஏனெனில் அனேகநாளாய் அது அவனைப் பாய்ந்து பிடிச்சிருந்தது, அவன் சங்கிலிகளாலும் விலங்குகளாலுங் கட்டுண்டு காவல் பண்ணப்பட்டிருந்துங் கட்டுகளை முறித்துப்போட்டு, பிசாசினாலே வனாந்திரங்களுக்குத் துரத்துண்டு போனான்.

௩௰. யேசு அவனை: உன் பேரென்னவென்று கேட்டார். அது: லேகியோனென்றது, அதேதென்னால் அனேகம் பிசாசுகள் அவனுக்குள்ளப் புகுந்திருந்தது.

௩௧. அவர் தங்களைப் பாதாளத்திலே போகக் கற்பியாதபடிக்கு அது அவரை வேண்டிக்கொண்டுது.

௩௨. ஆனால் அவ்விடத்திலே அனேகம் பன்னிகளுடைய மந்தை மலையிலே மேய்ந்துகொண்டிருந்தது, அதுகளுக்குள்ளப் போகத் தங்களுக்குத்தாரங் கொடுக்க அவரை வேண்டிக்கொண்டுது. அதுகளுக்குத்தாரங் கொடுத்தார்.

௩௩. அப்படியே பிசாசுகள் அந்த மனுஷனை விட்டு நீங்கி, பன்னிகளுக்குள்ளப் புகுந்தது, அப்போ அந்த மந்தை உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து அமிழ்ந்திப்போச்சுது.

௩௪. மேய்த்தவர்களோவெனால் நடந்ததைக் கண்டு ஓடிப்போய், பட்டணத்திலும் வெளிப்புறங்களிலும் அறிவித்தார்கள்.

௩௫. அப்போ நடந்ததைப் பார்க்கும்படிக்கு சனங்கள் புறப்பட்டு யேசுவண்டைக்கு வந்து, பிசாசுகள் விட்டுப்போன மனுஷன் யேசுவின் பாதத்தண்டையிலே உளுக்கார்ந்து உடுத்து, புத்தியடைந்திருக்கிறதைக் கண்டு பயந்தார்கள்.

௩௬. பிசாசுகள் பிடித்திருந்தவன் எப்படிச் சொஸ்தமாக்கப்பட்டானென்று கண்டபேர்களும் அவர்களுக்கு அறிவித்தார்கள்.

௩௭. அப்போ கதரேனருடைய சுற்றுத்தேசத்தின் திரளான சனமெல்லாம் அவரை, தங்களைவிட்டுப் போகவேண்டிக்கொண்டார்கள். ஏனென்றால் மகாபயம் பிடித்திருந்தார்கள். அவரோவென்றால் படகிலேறித் திரும்பிப்போனார்.

௩௮. பிசாசுகள் விட்டுப்போன மனுஷன் அவரோடேகூடப்போயிருக்க அவரை வேண்டிக்கொண்டான், யேசுவோவென்றால் அவனை அனுப்பிவிட்டு:

௩௯. நீ உன் வீட்டுக்குத் திரும்பிப்போய், பராபரன் உனக்கெத்தனையாய்ச் செய்தாரென்றறிவித்துச் சொல்லென்றார். அவன் போய், யேசு தனக்கெத்தனையாய்ச் செய்தாரென்று பட்டணமெங்கும் பிரசங்கித்தான்.

அவர் பெரும்பாடுள்ள ஸ்திரீயைக் குணமாக்கினதும் யவீருவின் மகளை எழுப்பினதும்.

மத. ௯, ௰௮—௨௬. மாற்கு. ௫, ௨௧. மு.

௪௰. பின்னையுஞ் சம்பவித்ததென்னென்றால், யேசு திரும்பி வருகையிலே கும்பு அவரை ஏற்றுக்கொண்டது, ஏனென்றால் எல்லாரும் அவருக்குக் காத்திருந்தார்கள்.

௪௧. இதோ ஆலயத்துக்குத் தலைவனாய யவீருவென்ற நாமமுள்ள ஒரு மனுஷன் வந்து, யேசுவின் பாதத்திலே விழுந்து, தன் வீட்டுக்குள் பிரவேசிக்க அவரை வேண்டிக்கொண்டான்.

௪௨. ஏனென்றால் அவனுக்குப் பன்னிரண்டு வயதுள்ள ஒரே ஒரு குமாரத்தியிருந்தாள். அவள் மரணாவஸ்தைப்பட்டாள். ஆனால் அவர் போகையிலே கும்புகள் அவரை நெருக்கிற்று.

௪௩. அப்போ பன்னிரண்டு வருஷமாகப் பெரும்பாடு வியாதியுடனேயிருந்து, ஜீவனத்தையெல்லாம் பரியாரிகளுக்குச் செலவழித்து, ஒருவனாலுங் குணமாக்கப்படக்கூடாதே போன ஒரு ஸ்திரீ,

௪௪. பிறகே சேர்ந்துவந்து, அவருடைய வஸ்திரத்தின் சூர்த்தனைத் தொட்டாள், உடனே அவளுடைய பெரும்பாடு வியாதி நின்றுபோச்சுது.

௪௫. அப்போ யேசு: என்னைத் தொட்டதாரென்றார். அறியோமென்று எல்லாருஞ் சொன்னபோது பேதுருவும் அவனோடேகூடயிருந்தவர்களும்: ஐயரே, கும்புகள் உம்மை நெருக்கி ஒடுக்கியும், என்னைத் தொட்டதாரென்கிறீரோ என்றார்கள்.

௪௬. யேசுவோவென்றால்: ஒருத்தர் என்னைத் தொட்டதுண்டு, அதேதென்றால் என்னிலிருந்தொரு வல்லமை புறப்பட்டதை நான் அறிவேனென்றார்.

௪௭. ஆனால் ஸ்திரீ தான் ஒளிகதிராததனைக் கண்டு நடுங்கிவந்து, அவர் முன்பாக விழுந்து, தான் அவரைத்

தொட்ட

தொட்டுக் காரியத்தையும் உடனே தான் குணமானதையுமெல்லாச் சனத்துக்கு முன்பாக அவருக்கு அறிவித்தாள்.

௪௮. அவரோவென்றால் அவளுடனே: திடன்கொள், மகளே, உன் விசுவாசம் உன்னை ரட்சித்தது, * சமாதானத்தோடே போவென்றார். * ௭, ௫௰.

௪௯. அவர் இன்னும் பேசுகையில் ஆலயத்தலைவனுடைய வீட்டிலிருந்து ஒருத்தன் வந்து அவனுடனே: உம்முடைய குமாரத்தி மரித்தாள், போதகரை வருத்தப்படுத்தாதேயுமென்றான்.

௫௰. ஆனால் யேசு அதைக் கேட்டு, அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: பயப்படாதே, விசுவாசித்தேயிரு, அப்போ ரட்சிக்கப்படுவாளென்றார்.

௫௧. அவர் வீட்டுக்குள் பிரவேசிக்கிறபோதோவென்றால், * பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் பெண்ணுடைய தகப்பனையுந் தாயையுமே ஒழிய வேறொருத்தரையும் உள் பிரவேசிக்க ஒட்டாதிருந்தார். * மத். ௰௭, ௧. ௨௬, ௩௭.

௫௨. எல்லாரும் அழுது அவளுக்காகத் துக்கங் கொண்டாடினார்கள், அவரோவென்றால்: அழாதேயுங்கோள், அது மரித்திராமல் நித்திரைபண்ணுதென்றார்.

௫௩. ஆனால் மரித்ததென்றவர்கள் அறிந்து அவரை நகைத்தார்கள்.

௫௪. அவரோவென்றால் எல்லாரையும் வெளியே துரத்தி, அதினுடைய கையைப் பிடித்து: பிள்ளையே, எழுந்திருவென்று சத்தமிட்டார்.

௫௫. * அப்போ அதின் ஆவி திரும்ப வந்தது; உடனே அது எழுந்திருந்தது, அதுக்குச் சாப்பாடு கொடுக்கக் கட்டளையிட்டார். * ௭, ௰௫. யோவா. ௰௧, ௪௪.

௫௬. அதின் தாய் தகப்பன் விஸ்மயித்தார்கள், அவரோவென்றால் நடந்ததை ஆரோடுஞ் சொல்லாதிருக்க அவர்களுக்குக் கற்பித்தார்.

௯. அதிகாரம்.

அப்போஸ்தலர் ஊழியத்துக்கனுப்பப்பட்டது.

மத். ௰, ௧. ஸு. மாற். ௬, ௭—௰௩.

அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரைக் கூட்டிவரவழைத்து, சகல பிசாசுகள் மேலும் வியாதிகளைக் குணமாக்கவும், அவர்களுக்கு வல்லமையையும் அதிகாரத்தையுங் கொடுத்து,

௨. பராபரனுடைய ராட்சியத்தைப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பி,

௩. அவர்களுடனே சொன்னதாவது: வழிக்குத் தடிகளையாகிலும் பையையாகிலும் அப்பத்தையாகிலுங்

காசையாகிலுமெடுத்துக்கொள்ளாதே
யுங்கோள। இரண்டு அங்கியையும் வைத்திராதேயுங்
கோள.

௪. எந்தவீட்டிலே பிரவேசித்தீர்களோ। அங்கே
தங்கி। அங்கேயிருந்து புறப்படுங்கோள।

௫. * எவர்கள் உங்களையேற்றுக்கொள்ளார்க
ளோ। அந்தவூரை நீங்கள் விட்டுப்புறப்பட்டு। அவர்
கள்மேல் சாட்சிக்காக உங்கள் கால்களின் தூளை
உதறிப்போடுங்கோளென்றார். * அ। ௩௱.

௬. அவர்கள் புறப்பட்டு। கிராமகிராமங்களுக்கும்
போய்த்திரிந்து। எங்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து।
குணமாக்கினார்கள்.

௭. * ஆனால் கால்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதே
அவராலே செய்யப்பட்டதெல்லாத்தையுங் கேட்டு।
சிலபேரால்: யோவான் மரித்தோரிலிருந்தெழுந்தா
னென்றும்। * மத. ௰௪। ௧. ௨.

௮. சிலபேரால்: எலியா காணப்பட்டானென்
றும்। வேறேபேராலே: பழையதீர்க்கதரிசிகளிலொ
ருத்தன் உயிர்த்தெழுந்தானென்றுஞ் சொல்லப்ப
ட்டியினாலே ஐயப்பட்டு:

௯. யோவானை நான் சிரச்சேதம்பண்ணினேன்।
ஆனால் இப்படிக்கொத்ததுகளை என்னுக்குக் கேழ்வி
யாகுகிறவன் ஆரோவென்று ஏரோதே சொல்லி। அவ
ரைப்பார்க்கத்தேடினான்.

* கிறிஸ்து வனாந்திரத்தில் ஐயாயிரஞ்சனங்களுக்குப்
போசனங்கொடுத்தது. மத. ௰௪। ௰௩—௨௧.
மாற்கு. ௬। ௩௰—௪௪. யோவா. ௬। ௧—௰௫.

௰. அப்போஸ்தலர் திரும்பவந்து। தாங்கள் செய்த
தெல்லாத்தையும் அவருக்கு விபரித்தார்கள்। அப்போ
அவர் அவர்களைக்கூட்டிக்கொண்டு। பெத்சாயிதாவென்ன
ப்பட்ட பட்டணத்தின் வனாந்திரமான ஒருவிடத்துக்குத்
தனியே போனார்.

௰௧. ஆனால் கும்புகள் அதையறிந்து அவரைப்பின்
சென்றது. அவர் அவர்களைச்சேர்த்துக்கொண்டு। பராபர
னுடைய ராச்சியத்தின் சுவிசேஷத்தை அவர்களுக்குச்
சொல்லி। குணமாகத்தேவையானவர்களைக் குண
மாக்கினார்.

௰௨. ஆனால் பொழுது சாயத்துவக்கிற்று। அப்போ
பன்னிருவருஞ் சேர்ந்துவந்து। அவருடனே: கும்பைச்சுற்
றுமிருக்கிற ஊர்களிலுங் கிராமங்களிலும் போய்த்
தங்கவும் போசனஞ்சம்பாதித்துக்கொள்ளவும் அவர்
களையனுப்பிவிடும்। ஏனென்றால் நாங்கள் வனாந்திர
இடத்திலேயிருக்கிறோமென்றார்கள்.

௰௩. அவரோவென்னில் அவர்களுடனே: நீங்கள்
அவர்களுக்குச்சாப்பாடுகொடுங்கோளென்றார்.
ஆனால் அவர்கள்: நாங்கள் போய் இந்தச்சனத்துக்
கெல்லாம் ஆகாரங்களைக்கொண்டாலேயொழிய
எங்களிடத்திலே ஐந்தப்பத்துக்கும் ரெண்டுமீனுக
ளுமல்லாமல் அதிகமில்லையென்றார்கள்.

௰௪. ஏனென்றால் ஏறக்குறைய ஐயாயிரம் மனுஷர் இருந்தார்கள்; ஆனால் அவர் தம்முடைய சீஷருடனே: பந்திக்குப் பந்திக்கு ஐம்பது ஐம்பதாக அவர்களை உட்காரச் சொல்லுங்கோளென்றார்.

௰௫. அப்படியே செய்தார்கள்; எல்லாரும் உட்கார்ந்தார்கள்.

௰௬. அப்போதவர் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்துக்கொண்டு வானத்தை அண்ணாந்து பார்த்து, அதுகளை ஆசீர்வதித்துப் பிட்டு, சனத்தின் முன்னே வைக்க, சீஷர்களுக்குக் கொடுத்தார்.

௰௭. எல்லாரும் போசித்துத் திருப்தியடைந்தார்கள்; அவர்களுக்கு மீந்த துணிக்கைகள் பன்னிரண்டு கூடை எடுக்கப்பட்டது.

அவர் தம்மைக்குறித்துச் சீஷருடனே சம்பாஷித்தது.

மத. ௰௬/ ௰௩—௨௰. மாற்கு. ௮/ ௨௭—௩௰.

௰௮. பின்பு சம்பவித்ததென்னவென்றால்; அவர் தனியே செபம்பண்ணிக்கொண்டிருக்கையில் அவருடைய சீஷர் அவருடனே கூட இருந்தார்கள். அப்போதவர்: சனங்கள் என்னை ஆரென்கிறார்களென்று அவர்களைக் கேட்டார்.

௰௯. அவர்கள் பிரத்தியுத்தாரமாக: யோவானிஸ்நானனென்றும், வேறேசிலர் எலியாவென்றும், வேறேசிலரோவென்றால் பழைய தீர்க்கதரிசிகளில் ஒருத்தன் உயிர்த்தெழுந்தானென்றுஞ் சொல்லுகிறார்களென்றார்கள்.

௨௰. அப்போதவர்களுடனே: நீங்களோ என்னை ஆரென்கிறீர்களென்றார். பேதுரு பிரத்தியுத்தாரமாக: பராபரனுடைய கிறீஸ்து என்றான்.

௨௧. ஆனாலவர், இதை ஆருக்குஞ் சொல்லாதபடிக்கு அவர்களுக்குக் கெட்டியாயக் கற்பித்து:

௨௨. மனுஷனுடைய குமாரன் அநேகம் பாடுபடவும், மூப்பராலும் பிரதான ஆசாரியர்களாலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளுண்ணவுங் கொல்லப்படவும், மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டியதென்றார்.

அவர் தம்மைப் பின்செல்லப் புத்திசொன்னது.

மத. ௰௬/ ௨௪. மு. மாற்கு. ௮/ ௩௪. மு.

௨௩. ஆனால் எல்லாரோடும் அவர் சொன்னதாவது: ஒருவன் என் பிறகே வர மனதாயிருந்தால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்செல்லக்கடவான்.

௨௪. ஏனென்றால் எவன் * தன் சீவனை ரட்சித்துக்கொள்ள மனதாயிருக்கிறானோ அவனதை இழந்துபோவான்; எவன் தன் சீவனை என் நிமித்தியமாக இழந்துபோறானோ அவன் அதை ரட்சித்துக்கொள்ளுவான்.

* யோவா. ௰௨/ ௨௫.

௨௫. ஏனெனில் மனுஷன் லோகமனைத்தையும் ஆதாயப்படுத்திக்கொண்டு, தன்னைத்தானே இழந்து சேதப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன.

௨௬. ஏனென்றால் எவனென்னைக்காகவும் என் வார்த்தைகளுக்காகவும் வெட்கிறானோ, அவனுக்காக மனுஷனுடைய குமாரன் தமக்கும் பிதாவுக்கும் பரிசுத்த தூதருக்கும் இருக்கிற மகிமையோடே வரும்போது, வெட்குவார்.

௨௭. ஆனால் உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன், பராபரனுடைய ராட்சியத்தைப் பார்க்குமட்டும் மரணத்தை ருசிபாராத சிலர் இங்கே நிற்கிறவர்களிலிருக்கிறார்களென்றார்.

அவர் ரூபமறுவதத்தினாலே மகிமைப்பட்டது.
மத். ௰௭ | ௧—௯. மாற்கு. ௯ | ௨—௯.

௨௮. இந்த வார்த்தைகளுக்குப் பிற்பாடு ஏறக்குறைய எட்டு நாளானபோது சம்பவித்ததேதென்றால், அவர் பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக்கொண்டு, * செபம்பண்ண ஒரு பர்வதத்தில் ஏறினார். * ௬ | ௰௨.

௨௯. அவர் செபம்பண்ணுகையில் அவருடைய முகரூபமாறி, அவருடைய உடை வெண்மையாகி, மின்னிக்கொண்டிருந்தது.

௩௰. இதோ மோசேயும் எலியாவுமாகிய இரண்டு புருஷர் அவரோடே பேசினார்கள்.

௩௧. இவர்கள் மகிமையுடனே காணப்பட்டு, அவர் யெருசலேமிலே நிறைவேறப்போகிற அவருடைய முடிவைச் சொன்னார்கள்.

௩௨. ஆனால் பேதுருவும் அவனுடனேகூட இருந்தவர்களும் பாரநித்திரை அடைந்தார்கள். அவர்கள் முழித்துக்கொண்டபோதோவென்றால் அவருடைய மகிமையையும் அவரண்டை நிற்கிற இரண்டு புருஷரையுங் கண்டார்கள்.

௩௩. அப்போது சம்பவித்ததேதென்றால், இவர்கள் அவரைவிட்டுப் பிரிகையில், பேதுரு யேசுவுடனே: அய்யரே, நாமிங்கேயிருக்கிறது நல்லது; நாங்கள் மூன்று கூடாரங்களைப் போடுவோம், ஒன்று உமக்கும் ஒன்று மோசேக்கும் ஒன்று எலியாவுக்கும் என்று, தான் பேசுகிறதின்னதென்று அறியாமலே சொன்னான்.

௩௪. இதுகளை அவன் சொல்லுகிறபோதோவென்றால் ஒருமேகம் வந்து அவர்கள் மேல் நிழலிட்டது. அவர்கள் மேகத்துக்குள் பிறவேசிக்கையில் இவர்கள் பயந்தார்கள்.

௩௫. அப்போது மேகத்திலிருந்து: * இவர் நம்முடைய நேசமுள்ள குமாரனாயிருக்கிறார், அவர் சொல்லைக்கேளுங்கோளென்கிற சத்தமுண்டாச்சுது. * ௩ | ௨௨.

௩௬. அந்தச்சத்தமுண்டாகையிலே யேசு ஒருத்தரே காணப்பட்டார். ஆனால் அவர்கள் தாங்கள் கண்டதுகளிலொன்றையும் அந்நாட்களிலே ஒருவருக்கும் அறியாமல் மவுனமாயிருந்தார்கள்.

அவர்

அவர்சந்திரரோகியான ஒருபிள்ளையைக் குணமாக்கினது. மத். ௰௭ / ௰௪—௨௩. மாற்கு. ௯ / ௰௪—௩௨.

௩௭. மறுநாளிலே சம்பவித்ததேதென்றால் / அவர்கள் பர்வதத்திலிருந்திறங்கினபோது வெகுகும்பு அவருக்கெதிர்க்கொண்டுவந்தது.

௩௮. இதோ தொகுப்பிலே ஒருமனுஷன் கூப்பிட்டுச் சொன்னதாவது: போதகரே / என்மகனை நோக்கிப் பார்க்கவும்மை வேண்டிக்கொள்ளுகிறேன் / அதேதென்னிலவனெனக்கொரே பிள்ளையாயிருக்கிறான்.

௩௯. இதோ ஆவி அவனைப் பிடிக்குது / உடனே அவன் அலறுகிறான் / அது அவனை நுரைதள்ளி அலக்கழித்து அவனைச் சக்கினப்படுத்தியும் அவனைவிட்டு நீங்க அரிதாயிருக்குது.

௪௰. அதைத்துரத்திவிட உம்முடைய சீஷரை வேண்டிக்கொண்டேன் / அவர்களாலே கூடாதேபோச்சுதென்றான்.

௪௧. யேசு பிரத்தியுத்தாரமாக: விசுவாசமில்லாத மாறுபாடான சந்ததியே / எந்தமட்டும் உங்களோடேயிருந்து உங்களைப் பொறுத்திருப்பேன் / உன்மகனை இங்கே கொண்டுவாவென்றார்.

௪௨. அவன் சேர்ந்துவருகிறபோது பிசாசு அவனை நொறுக்கி அலைக்கழித்தது. ஆனாலே யேசு அசுத்த ஆவியை அதட்டி / பிள்ளையைக் குணமாக்கி / அவனை அவன் தகப்பனுக்குக் கொப்புவித்தார்.

௪௩. அப்போளெல்லாரும் பராபரனுடைய மகத்துவத்துக்காகத் திகைத்தார்கள். யேசு செய்ததெல்லாத்துக்காகவும் அனைவரும் ஆச்சரியப்படுகிறபோதோவெனில அவர் தம்முடைய சீஷர்களுடனே:

௪௪. நீங்கள் இந்த வார்த்தைகளை உங்கள் காதுகளிலே வையுங்கோள் / என்னவெனில் மனுஷனுடைய குமாரன் * மனுஷருடைய கைகளிலே ஒப்புக்கொடுக்கப்படப்போகிறாரென்றார். * ௰௮. ௩௧—௩௪.

௪௫. அவர்களோவெனில் இந்த வார்த்தையை அறியாமலேபோனார்கள் / அது அவர்களுக்குத் தோணாதபடி மறைபொருளாயிருந்தது / இந்த வார்த்தையைக் குறித்து அவரைக் கேட்கப் பயமுமாயிருந்தார்கள்.

சீஷரிடத்திலகண்ட பெருமையான நினைவு.
மாற்கு. ௯ / ௩௩—௪௧.

௪௬. ஆனால்தாங்களிலே பெரியவனாயிருப்பவனாரென்கிற சிந்தனை அவர்களுக்குள்ளே வந்தது.

௪௭. * யேசுவோவெனில் அவர்கள் இருதயத்தின் சிந்தனையையறிந்து / ஒருகுழந்தையையெடுத்து அதைத் தம்மண்டை நிறுத்தி / * மத். ௰௮ / ௨. ௩.

௪௮. அவர்களுக்குச் சொன்னதாவது: எவனாகிலும் இந்தக் குழந்தையை என்நாமத்துக்காக ஏற்றுக்கொண்டால் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான் / எவனாகிலும் என்னை ஏற்றுக்கொண்டாலென்னையனுப்

பினவரை ஏறறுககொளளுகிறான. ஏனெனறால * உங களெலலாரிலுஞ சிறியவனாயிருககிறவனே பெரிய வனாயிருபபானெனறார். * ௰௮। ௰௪.

௪௯. யோவானபிரததியுததாரமாக: ஐயரே। உம முடைய நாமததினாலே பிசாசுகளைத துரததிவிடுகிற ஒருதத னை நாஙகள கணடு। அவன எஙகளுடனேகூட உம மைப பினசெலலாதபடியினாலே அவனுககுத தடை சொனனோமெனறான.

௫௰. யேசு அவனுடனே: தடை சொலலாதேயுங கோள। ஏனெனறால நமககு விரோதமாயிராதவன நமககானவனாயிருககிறானெனறார்.

விடுதிகொடாதவர்கள பேரிலே சீஷருககுணடான எரிசசல.

௫௧. அவர் எடுபடடுபபோம நாளகள நிறை வேறுகிறபோதோவெனறால அவர் யெருசலேமுககுப போகததமது முகததைத திருபபி।

௫௨. தமமுடைய முகததுககு முனனாகத தூதாககளை அனுபபினார். அவர்கள போய அவருககு விடுதியை ஆயத தமபணண। சமாரியருடைய ஒருகிராமததிலே பிரவே சிததார்கள.

௫௩. ஆனாலும அவர்கள அவரை ஏறறுககொணட திலலை। அதேனெனறால அவருடைய முகம யெருசலே முககுப போகிறதாயிருநதது.

௫௪. அவருடைய சீஷராகிய யாககோபும யோவா னுமதைக கணடபோதோவெனறால: ஆணடவரே। * எலியாசெயததுபோலே நாஙகள வானததிலிருநது அககினியிறஙகவும அவர்களை அழிககவுஞ சொலல உமககுச சிததமுணடோவெனறார்கள.

* ௨. ராசா. ௧। ௰. ௰௨.

௫௫. ஆனாலும அவர் திருமபி அவர்களை அதடடி: நீங களெநத ஆவியின சமமநதமெனறறியீர்களோ। * மத. ௰௧। ௨௯.

௫௬. ஏனெனறால மனுஷனுடைய குமாரன மனுஷரு டைய ஆததுமஙகளைக கெடுககவலல। * ரடசிகக வநதாரெனறார். அபபோ வேறே ஒருகிராமததுககுப போனார்கள. * யோவா. ௩। ௰௭.

தமமைப பினசெலலுகிறதறகாகக கிறிஸதுசில ருககுச சொனனஞாயஙகள.

௫௭. ஆனால அவர்கள வழியிலே போகையில சமபு விததததேதெனறால। ஒருததன * அவருடனே: ஆணடவ ரே। நீர் போறஎவவிடததிலும உமமைப பினசெல லுவேனெனறான. * மத. ௮। ௰௯—௨௨.

௫௮. யேசு அவனுடனே: நரிகளுககுக குழிகளும ஆகாசததுபபறவைகளுககுக கூடுகளுமுணடு। ஆனால மனுஷனுடைய குமாரனுககுத தலைசாயககிடமிலலை யெனறார்.

௫௯. அவர் வேறே ஒருததனுககு: எனனைப பினசெல லெனறார். அவனோவெனறால: ஆணடவரே। முநதி

நான

நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்குத்தாரங் கொடுமென்றான்.

௬௰. அதற்கு யேசு அவனுடனே: மரித்தோர் தங்களுடைய மரித்தோரை அடக்கம் பண்ணட்டும், நீயோ வெளியே போய் பராபரனுடைய ராச்சியத்தை அறிவியென்றார்.

௬௰௧. வேறொருத்தனும்: ஆண்டவரே, உம்மைப் பின்செல்லுவேன், ஆனாலு முந்தி என் வீட்டிலிருக்கிறவர்களுக்குச் சயல் ஒப்புவித்துக்கொள்ள எனக்குத்தாரங் கொடுமென்றான்.

௬௰௨. யேசுவோ வெளியில் அவனுடனே: கலப்பையின் மேல் தன் கையைப் போட்டு, *பின்னுக்குப் பார்க்கிறவனொருத்தனும் பராபரனுடைய ராச்சியத்துக்கு ஆனவனல்லவென்றார். *பிலி. ௩, ௰௪.

௰. அதிகாரம்.

கிறிஸ்து எழுபது சீஷரை ஊழியத்துக்கு அனுப்பினது.

இதுகளுக்குப் பிறபாடு கர்த்தர் *வேறே எழுபது பேரைக் குறித்து, தாமவர் போற எல்லாப் பட்டணத்துக்கும் இடத்துக்கும் அவர்களைத் தம்முடைய முகத்துக்கு முன்னே இரண்டிரண்டு பேராய் அனுப்பி,

௨. அவர்களுடனே சொன்னதாவது: *அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆகையினாலே அறுப்புக்குச் சுவாமியானவர் தம்முடைய அறுப்புக்கு வேலையாட்களை அனுப்ப அவரை **வேண்டிக்கொள்ளுங்கோள். *மத. ௯, ௩௭. ௩௮. **௨. தெச. ௩, ௧.

௩. போங்கோள், இதோ *நான் உங்களை ஆட்டுக்குட்டிகளைப் போலே ஓநாய்கள் நடுவே அனுப்புகிறேன். *மத. ௰, ௰௬.

௪. *சட்டுவத்தையாகிலும் பையையாகிலும் பாதரட்சைகளையாகிலுஞ் சுமக்காதேயுங்கோள், வழியில் ஒருத்தரையும் வினவாதேயுங்கோள். *௯, ௩. மத. ௰, ௯—௰.

௫. எந்த வீட்டுக்குள் பிரவேசிக்கிறீர்களோ, அங்கே முந்தி: இந்த வீட்டுக்குச் சமாதானமென்று சொல்லுங்கோள்.

௬. அங்கே சமாதானத்தினுடைய பிள்ளையிருந்தால், அவன் மேல் உங்கள் சமாதானம் வந்து தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடமாய்த் திரும்பும்.

௭. அந்த வீட்டிலே தானே நீங்களிருந்து, அவர்களுக்குண்டானதுகளைப் புசித்துக் குடியுங்கோள், ஏனென்றால் வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரவானாயிருக்கிறான். ஒரு வீட்டைவிட்டு மற்ற வீட்டுக்குப் போகாதேயுங்கோள்.

௮. எந்தப் பட்டணத்திலாகிலும் நீங்கள் பிரவேசித்து அவர்கள் உங்களை ஏற்றுக்கொண்டால் உங்கள் முன்னு வைத்ததுகளைப் புசித்து,

௯. அதிலிருக்கிற வியாதிக்காரரைக் குணமாக்கி: பராபரனுடைய ராச்சியம் உங்களுக்குக் கிட்டவந்ததென்று அவர்களுக்குச் சொல்லுங்கோள்.

௰. * ஆனால் எந்தப் பட்டணத்திலாகிலும் நீங்கள் பிரவேசித்து அவர்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதின் வீதிகளிலே நீங்கள் புறப்பட்டு, * ௯. ௫.

௰௧. எங்களுக்கொட்டின உங்கள் பட்டணத்தின் தூளையும் உங்களுக்கெதிராகத் துடைத்துப்போடுகிறோம், ஆனாலும் பராபரனுடைய ராச்சியம் உங்களுக்குச் சமீபமாயிருந்ததென்கிறதை அறியுங்கோளென்று சொல்லுங்கோள்.

௰௨. அந்தப் பட்டணத்தைப் பார்க்கச் சோதோமென்னாருக்கு அந்நாளிலே நெகிழ்தமாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௩. * கோறாசினே, உனக்கையையோ, பெத்சாயிதாவே, உனக்கையையோ, ஏனென்றால் உங்களில் சம்பவிக்கப்பட்ட அற்புதங்கள் தீருவிலுஞ் சீதோனிலுஞ் சம்பவித்திருந்ததானால், பூர்வத்திலே ரெட்டிலுஞ் சாம்பலிலும் உட்கார்ந்து குணப்படுவார்கள். * மத். ௰௧. ௨௧—௨௪.

௰௪. ஆனாலும் நியாயத்தீர்க்குதலில் உங்களைப் பார்க்கத் தீருவுக்குஞ் சீதோனுக்கும் நெகிழ்தமாயிருக்கும்.

௰௫. வானபரியந்தம் உயர்ந்த கப்பர்னகூமே, நீ பாதாளபரியந்தந் தாழ்த்தப்படுவாய்.

௰௬. * உங்களைக் கேட்கிறவன் என்னைக் கேட்கிறான், உங்களை அசட்டைபண்ணுகிறவன் என்னை அசட்டைபண்ணுகிறான், என்னை அசட்டைபண்ணுகிறவனோ என்னை அனுப்பினவரை அசட்டைபண்ணுகிறானென்றார். * மத். ௰. ௪௰. யோவா. ௰௩. ௨௰.

அவர்கள் திரும்பி வந்தது.

௰௭. ஆனால் அந்த எழுபதுபேருஞ் சந்தோஷத்துடனே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படியுதென்றார்கள்.

௰௮. அவரோவெனில் அவர்களுக்குச் சொன்னதாவது: சாத்தான் வானத்திலிருந்து மின்னலைப்போல விழுகிறதைக் கண்டேன்.

௰௯. இதோ * சர்ப்பங்களையுந் தேள்களையுமே லுஞ் சத்துருவினுடைய சகலவல்லமையின்மேலும் மிதிக்க உங்களுக்கதிகாரங் கொடுக்கிறேன், ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தாது. * மாற். ௰௬. ௨௰. சங். ௯௧. ௰௩.

௨௰. ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதுக்கோ நீங்கள் சந்தோஷப்படாமல், * உங்கள் நாமங்கள் பரமண்டலங்களிலே எழுதியிருக்கிறதுக்கே சந்தோஷப்படுங்கோளென்றார். * அறிவ். ௩. ௫.

௨௧. அந்நேரத்திலே யேசுவானவர் ஆவியிலே களிகூர்ந்து சொன்னதாவது: பிதாவே, வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, இதுகளை நீர் ஞானிகளுக்குங் கல்வி

மானக

மானருக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினதுக்காக உம்மை மகிமைப்படுத்துகிறேன். ஆம், பிதாவே, அப்படியே உமக்கு முன்பாகப் பிரியமாயிருந்தது. *மத். ௰௧. ௨௫. ௵

௨௨. *எல்லாம் என் பிதாவினாலே எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்குது, பிதாவைத் தவிர ஒருத்தனுங் குமாரன் இன்னாரென்றறியான், குமாரனுங் குமாரன் ஆருக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந் தவிர ஒருத்தனும் பிதா இன்னாரென்றறியான். *மத். ௨௮. ௰௮.

௨௩. அவர் சீஷரண்டைக்குத் திரும்பி, தனித்துச் சொன்னதாவது: நீங்கள் பார்க்கிறதுகளைப் பார்க்குங் கண்கள் பாக்கியமுள்ளதுகள்.

௨௪. ஏனெனில் *அநேகந் தீர்க்கதெரிசிகளும் ராசாக்களும் நீங்கள் பார்க்கிறதுகளைக் காணவும் நீங்கள் கேட்கிறதுகளைக் கேட்கவும் ஆசையாயிருந்தும், காணாமலுங் கேளாமலும் போனார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார். *௧. பே. ௧.

௰—௰௨.

ஒரு நியாயசாஸ்திரி தான் நித்தியசீவனைச் சுதந்தரித்துக்கொள்ளச் செய்யவேண்டியதேதென்றுந் தனக்கடுத்தவன் ஆரென்றுங் கேட்டதுக்குக் கிறிஸ்து சொன்ன உத்தரவு.

௨௫. வேதோபாயசாஸ்திரியொருத்தனெழுந்திருந்து: போதகரே, நான் என்ன செய்து நித்தியசீவனைச் சுதந்தரித்துக்கொள்ளுவேனென்று அவரைச் சோதித்தான்.

௨௬. அவரோவென்றால் அவனுடனே: நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்குது, எப்படி வாசிக்கிறாயென்றார்:

௨௭. அவன் பிரதியுத்தாரமாக: உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமத்தோடும் உன் முழுப் பெலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும், உனக்கடுத்தவனை உன்னைப்போலுஞ் சினேகிப்பாயாக என்கிறதாயத்தானே என்றான்.

௨௮. அவர் அவனுடனே: நீ நியாயமாய் உத்தாரஞ் சொன்னாய், அப்படிச் செய், அப்போ பிழைப்பாயென்றார்.

௨௯. அவனோவென்றால் தன்னை நீதிமானாக்கமனதாய் யேசுவுடனே: ஆனால் எனக்கடுத்தவன் ஆரென்றான்.

௩௰. யேசு பிரதியுத்தாரங் கொடுத்துச் சொன்னதாவது: ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து யெரிகோவுக்கிறங்கிப்போய், கள்ளர் கையில் அகப்பட்டான், அவர்கள் அவனை உரிந்துகொண்டு காயப்படுத்தி, குத்துயிராக விட்டுப்போனார்கள்.

௩௧. ஆனால் தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியிறங்கிவந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்.

௩௨. அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்.

௩௩. ஆனால

௩௩. ஆனால் சமாரியனொருத்தன் வழிப்பயணம் பண்ணி, அவனிடத்தில் வந்து அவனைக் கண்டு மனதுருகி,

௩௪. சேர்ந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சப்பழ ரசமும் வார்த்து, அதுகளைக் கட்டி, அவனைத் தன் சுய வாகனத்தின் மேலேற்றி அவனை மண்டபத்திலே கொண்டுபோய், அவனைப் பராமரித்து,

௩௫. மறுநாளிலே புறப்படும்போது, ரெண்டு வெள்ளிக்காசெடுத்து மண்டபத்தானுக்குக் கொடுத்து, அவனிடத்திலே: இவனைப் பராமரித்துக்கொள், அதிகமாய் நீ செலவழித்ததெல்லாம் நான் திரும்ப வருகையில் உனக்குக் கொடுப்பேனென்றான்.

௩௬. இப்போது கள்ளர் கையிலகப்பட்டவனுக்குறிந்த மூன்று பேர்களில் எவர் அடுத்தவனாக உனக்குக் காணுதென்றார்.

௩௭. அவன்: இரக்கத்தை அவனிடத்தில் செய்தவனேயென்றான். ஆகையால் யேசு அவனுடனே: நீ போய், நீயுமப்படியே செய்யென்றார்.

மறுதாள் வெகு ஊழியஞ் செய்யுறத்துக்காகக் கவலைப்பட்டதுக்கு அவர் சொன்ன வார்த்தை.

௩௮. பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால் அவர்கள் பயணம் போகையிலே அவரொரு கிராமத்துக்குள் பிரவேசித்தார், ஆனால் * மறுதாளென்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே சேர்த்துக்கொண்டாள். * யோவா. யக, க.

௩௯. அவளுக்கு மரியாளென்னப்பட்ட ஒரு சகோதரியிருந்தாள், அவள் யேசுவின் பாதத்தண்டையுட்கார்ந்துகொண்டிருந்து அவருடைய வசனத்தைக் கேட்டாள்.

௪௰. மறுதாளோவென்றால் வெகு ஊழியஞ் செய்யுறத்துக்காக அலுவலாயிருந்தாள், அவள் வந்துநின்று: ஆண்டவரே, என் சகோதரி என்னை மாத்திரம் ஊழியஞ் செய்யவிட்டிருக்கிறது உமக்குக் கவலையில்லையோ, அவளெனக்கொத்தாசை பண்ண அவளுக்குச் சொல்லுமென்றாள்.

௪௧. ஆனால் யேசு அவளுக்குப் பிரத்தியுத்தாரமாக: மறுதாளே, மறுதாளே, நீ அநேக காரியங்களுக்காகக் கவலைப்பட்டுக் கலங்கிறாய்.

௪௨. ஆனால் * ஒன்றே தேவை, மரியாளோவென்றால் தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாளென்றார். * மத். ௬, ௩௩.

யக. அதிகாரம்.

செபம்பண்ணுவதற்காகக் கிறீஸ்து சொன்ன அறிவு.

பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால் அவரொரு இடத்திலே செபம்பண்ணிக்கொண்டிருந்து முடிந்தபின்பு

அவருடைய சீஷரிலொருத்தன் அவருடனே: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்குச் செபம்பண்ணப் போதிவித்ததுபோல் நீரும் எங்களுக்குப் போதியுமென்றான்.

௨. அவரவர்களுக்குச் சொன்னதாவது: நீங்கள் செபம்பண்ணும்போது சொல்லவேண்டியதென்னில்: * பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தமாவதாக, உம்முடைய ராச்சியம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படும்போலே பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக: * மத. ௬. ௯—௰௩.

௩. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கன்றன்று தாரும்.

௪. எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும், ஏனென்னில் எங்களுக்கு நேரஸ்தனானவனுக்கெல்லாம் நாங்களும் மன்னிக்கிறோம். எங்களைச் சோதனைக்குள்ளாய்ப் பிரவேசிக்கப்பண்ணாமல், துன்மையினீக்கி எங்களை ரெட்சித்துக் கொள்ளுமென்று சொல்லுங்கோளென்றார்.

௫. பின்னையும் அவரவர்களுக்குச் சொன்னதாவது: உங்களிலொருத்தன் தனக்கொரு சினேகிதனிருக்கக்கொள்ள, அவன் அவனண்டைக்குப் பாதிராத்திரியிலே போய், அவனுடனே: சினேகிதனே, மூன்று அப்பங்களெனக்குக் கடன் கொடு.

௬. ஏனென்னில் என் சினேகிதன் வழிப்பயணத்திலிருந்து என்னண்டைக்கு வந்தான், அவன் முன்னே வைக்க எனக்கொன்றுமில்லையென்று சொல்லுகிறபோது,

௭. உள்ளேயிருக்கிறவன் பிறத்தியுத்தாரமாக: என்னைப் பிரயாசப்படுத்தாதே, கதவு பூட்டடித்தீர்ந்தது, என் பிள்ளைகள் என்னுடனே கூடப் படுக்கைவீட்டிலேயிருக்கிறார்கள், நான் எழுந்திருந்து உனக்குக் கொடுக்கக்கூடாதென்று சொல்லியும்,

௮. பிற்பாடவன் அவனுக்குச் சினேகிதனாயிருக்கிறதினாலெழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும், தன்னை அவன் வருத்தஞ் செய்கிறதினாலே எழுந்திருந்து அவனுக்குத் தேவையானமட்டுங் கொடுப்பானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௯. நானும் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்னில், * கேளுங்கோளப்போ உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கோளப்போ கண்டுபிடிப்பீர்கள், தட்டுங்கோளப்போ உங்களுக்குத் திறக்கப்படும்.

* மத. ௭. ௭—௰௧.

௰. ஏனென்னில் கேட்கிறவனெல்லாம் வாங்கிறான், தேடுகிறவன் கண்டுபிடிக்கிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

௰௧. உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருத்தன் குமாரன் அப்பங் கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானோ, மீனைக் கேட்டால் மீனுக்கு வதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானோ.

௰௨. அல்லது முட்டையைக் கேட்டால் அவனுக்குத் தேளைக் கொடுப்பானோ.

௰௩. பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருந்தால், எத்தனை அதிகமாய்ப் பரமபிதாவானவர் தம்மைக் கேட்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பாரென்றார்.

அவர் ஒரு பிசாசைத் துரத்திவிட்டதும் தம்மை அதுக்காகத் தூஷணித்தவர்களுக்கு எதிர் உத்தரஞ் சொன்னதும்.

௰௪. அவர் ஒரு பிசாசைத் துரத்திவிட்டார், அது ஊமையாயிருந்தது; அப்போது சம்பவித்ததேதென்றால் பிசாசு புறப்பட்டபின்பு ஊமையன் பேசினான், அதற்குக் கும்புகள் ஆச்சரியப்பட்டார்கள்.

௰௫. ஆனால் அவர்களில் சிலர்: பிசாசுகளின் தலைவனாகிய * பெயெல்செபூலைக்கொண்டு பிசாசுகளைத் துரத்திவிடுகிறானென்றார்கள். * மத். ௯. ௩௨—௩௪.

௰௨. ௨௪—௩௰. மாற். ௩. ௨௨—௩௰.

௰௬. வேறே பேர்களோவெனில் சோதித்து, * வானத்திலிருந்துண்டாகும் ஒரு அடையாளத்தை அவரிடத்திலே தேடினார்கள். * மத். ௰௨. ௩௮. ௰௬. ௧.

௰௭. ஆனால் அவர் அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து அவர்களுக்குச் சொன்னதாவது: தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்த எந்த ராசாங்கமும் பாழாம்; எந்த வீடும் விழுந்துபோம்.

௰௮. சாத்தானுந் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்தால், அதின் ராட்சியம் எப்படி நிற்கும்? ஏனெனில் பெயெல்செபூலைக்கொண்டு பிசாசுகளைத் துரத்திவிடுகிறேனென்கிறீர்கள்.

௰௯. நானே பெயெல்செபூலைக்கொண்டு பிசாசுகளைத் துரத்திவிட்டால், உங்கள் பிள்ளைகள் ஆரைக்கொண்டு அதுகளைத் துரத்திவிடுகிறார்கள். ஆகையால் அவர்கள் உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள்.

௨௰. நான் பராபரனுடைய விரலினால் பிசாசுகளைத் துரத்திவிட்டேனேயாகில், பராபரனுடைய ராட்சியமல்லோ உங்கள்கிட்ட வந்தது.

௨௧. ஆயுதந்தரித்த பெலவான் தன் அரமனையைக் காக்கிறபோது அவனுக்குள்ளது பத்திரப்படிருக்கும்.

௨௨. அவனிலும் பெலவான் * அவன்மேல் வந்து, அவனைச் செயித்தானேயாகில், அவன் நம்பியிருந்த சகல ஆயுதவர்க்கத்தையும் பறித்துக் கொண்டு, அவனுடைமைகளைப் பங்கிடுகிறான். * கொலோ. ௨. ௰௫.

௨௩. என்னுடனே இராதவன் எனக்கு விரோதமாயிருக்கிறான், என்னுடனே சேறக்காதவன் சிதறடிக்கிறான்.

௨௪. அசுத்த ஆவி மனுஷனை விட்டுப் புறப்படுகிறபோது அது தண்ணீரற்ற இடங்களிலே இளைப்பாறுதலைத் தேடித்திரிந்து, கிடையாமல் போய், நான் விட்டுப் புறப்பட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பப்போவேனென்று சொல்லி, * மத். ௰௨. ௪௩—௪௫.

௨௫. வரும்போது அதைப் பெருக்கிச் சிங்காரிக்கப் பட்டதாகக் கண்டுபிடிக்கும்.

௨௬. அப்போது போய் / தன்னிலும் பொல்லாத வேறேழாவிகளைக் கூட்டிக் கொண்டு உள்பிரவேசித்து / அங்கே குடியிருக்கும் / அப்போ அந்தமனுஷனுடைய பிற்காரியங்கள் முற்காரியங்களைப் பார்க்கிலுங் கேடாமென்றார். * ௨. பே. ௨ / ௨௰.

௨௭. அவரிதுகளைச் சொல்லுகையில் சம்பவித்ததேதென்றால் / கும்பிலே ஒருஸ்திரீ சத்தமிட்டு அவரை நோக்கி: உம்மைச் சுமந்த கெற்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளதென்றாள்.

௨௮. அவரோவென்றால்: பராபரனுடைய வாக்கைக் கேட்டு அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே பாக்கியவான்களென்றார்.

தம்மிடத்தில் அடையாளத்தைத் தேடினவர்களுக்கு அவர் சொன்ன உத்தரவு.

௨௯. ஆனால் கும்புகள் திரளாய்க் கூடினபோது அவர் சொல்லத் தொடங்கினதாவது: இந்தச்சந்ததி பொல்லாததாயிருக்குது / அது அடையாளத்தைத் தேடுது / ஆனால் யோனாவென்கிற தீர்க்கதரிசியின் அடையாளமே ஒழிய அதற்கு வேறே அடையாளங் கொடுபடாது. * மத். ௰௨ / ௩௯—௪௨. யோனா. ௨ / ௧.

௩௰. அதெப்படியென்றால் யோனா நினிவேபட்டணத்தாருக்கு அடையாளமாயிருந்தது போலே / மனுஷனுடைய குமாரனும் இந்தச் சந்ததிக்கிருப்பார்.

௩௧ * தாயத்திர்ப்பிறதேசத்து ராசாத்தி இந்தச் சந்ததியின் மனுஷருடனே கூட எழுந்திருந்து அவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பாள் / ஏனென்றால் அவள் சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க / பூமியின் கடையாந்தரங்களிலிருந்து வந்தாள் / ஆனால் இதோ சாலொமோனிலும் இங்கே அதிகம். * ௨. நாளா. ௯ / ௧.

௩௨. தாயத்திர்ப்பிறதேச நினிவே மனுஷர் இந்தச் சந்ததியுடனே கூட எழுந்திருந்து அதை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார்கள். ஏனென்றால் யோனாவின் பிரசங்கத்துக்கு * குணப்பட்டார்கள். ஆனால் இதோ யோனாவிலும் இங்கே அதிகம். * யோனா: ௩ / ௫. ௰.

௩௩. ஆனால் ஒருத்தனும் விளக்கைக் கொளுத்தின போது / அதை அந்தரங்கத்திலே அல்லது பறையின் கீழே வையான் / உள்ளே போகிறவர்கள் வெளிச்சங்காண அதை விளக்குத்தண்டின் மேலே வைப்பான்.

௩௪ * சரீரத்தின் விளக்குக் கண் / எப்போதும் உன் கண் கபடற்றதாயிருந்தால் / உன் சரீரமெல்லாம் வெளிச்சமாயிருக்கும் / பொல்லாததாயிருந்ததேயானால் / உன் சரீரமும் இருண்டிருக்கும். * மத். ௬ / ௨௨. ௨௩.

௩௫. ஆகையால் உனக்குள்ளிருக்கும் வெளிச்சம் இருளாயிராதே பார்:

௩௬. உன் சரீரம் ஒருபுறமும் இருள் அடைந்திராமல் முழுதும் வெளிச்சமாயிருந்தால் / அப்போ ஒரு

விளக்கு

ளக்கு உன் கண்மின்னலிலே பிரகாசிப்பிக்கும்போலே, அது முழுதும் வெளிச்சமாயிருக்குமென்றார்.

அவர் பரிசேயர் மேலும் வேதபாரகர் மேலும் அய்யயோவென்று சொன்னது

௩௭. அவர் பேசுகையிலே, பரிசேயன் ஒருத்தன் அவரை தன்னுடனே பகல் போசனம் பண்ண வேண்டிக்கொண்டான். அவர் உள்ளே பிரவேசித்து பந்தியிருந்தார்.

௩௮. ஆனால் அவர் அசனம் பண்ணுமுன்னே கழுவாமலிருந்தாரென்று பரிசேயன் கண்டு ஆச்சரியப்பட்டான்.

௩௯. கர்த்தரோவென்றால் அவனுடனே சொன்னதாவது: * இப்போ பரிசேயராயிருக்கிற நீங்கள் குடிக்கிற போசிக்கிற பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தம் பண்ணுகிறீர்கள், உங்கள் உட்புறமோ கொள்ளையினாலும் பொல்லாப்பினாலும் நிறைந்திருக்குது.

* மத. ௨௩, ௨௫. ௨௬.

௪௰. மதியற்றவர்களே, வெளிப்புறமானதைப் பண்ணினவர் உட்புறமானதையும் பண்ணினதில்லையோ.

௪௧. ஆனால் * உண்டானதுகளிலே பிச்சைக்கொடுங்கோள், அப்போதே எல்லாம் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும். * ௰௨, ௩௩. யெச. ௫௮, ௭.

௪௨. * ஆனாலே பரிசேயராகிய உங்களுக்கு அய்யயோ, ஏனென்றால் நீங்கள் ஏறதேற்றத்திலும் அசதாவீலுக்கும் சகலவிதக்கீரையிலும் பத்திலொன்று கொடுக்கு, நியாயத்தையும் தேவசினேகத்தையும் விலகிப்போறீர்கள். இதுகளையே நடப்பிக்கிறதும் அதுகளையும் விட்டுவிடாதிருக்கவேண்டியதாயிருந்தது. * மத. ௨௩, ௨௩.

௪௩. * பரிசேயராகிய உங்களுக்கு அய்யயோ, ஏனென்றால் ஆலயங்களிலே முதல் ஆசனத்தையும் சந்தைகளிலே மின்வந்தனங்களையும் விரும்புகிறீர்கள்.

* மத. ௨௩, ௬. ௭.

௪௪. * மாயக்காறராகிய வேதபாரகரே பரிசேயரே, உங்களுக்கு அய்யயோ, ஏனென்றால் காணப்படாதப் பிரேதக்குழிகளைப் போலிருக்கிறீர்கள், அதுகள்மேலே உலாவுகிற மனுஷருக்கு அதுகள் தெரியாததாயிருக்குதென்றார். * மத. ௨௩, ௨௭. ௨௮.

௨௫. அப்போ நியாயசாஸ்திரிகளிலே ஒருத்தன் அவருக்குப் பிரதியுத்தாரமாக: போதகரே, இதுகளைச் சொல்லுகிறதினாலே எங்களையும் நிந்திக்கிறீரென்றான்.

௪௬. ஆனால் அவர் சொன்னதாவது: நியாயசாஸ்திரிகளாகிய உங்களுக்கும் அய்யயோ, ஏனென்றால் * சுமக்க அரிதாகிய சுமைகளை மனுஷர் மேலே வைக்கிறீர்கள், நீங்களோ உங்கள் விரல்களிலே ஒன்றாலும் அந்தச் சுமைகளைத் தொடுகிறதில்லை. * மத. ௨௩, ௪.

௪௭. உங்களுக்கு அய்யயோ, * ஏனென்றால் தீர்க்கதரிசிகளுடைய கல்லறைகளைக் கட்டுகிறீர்கள், உங்கள்

பிதாக

பிதாக்களோவென்றால் அவர்களைக் கொன்று போட்டார்கள். * மத். ௨௩, ௨௯—௩௧.

௪௮. ஆகையால் உங்கள் பிதாக்களுடைய கிரியைகளுக்கு நீங்கள் கூட ஏகமியமாயிருக்கிறீர்களென்று சாட்சிவிளங்கிவிக்கிறீர்கள்; அதேதென்றால் அவர்கள் அவர்களைக் கொன்றுபோட்டார்கள், நீங்களோ அவர்கள் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள்.

௪௯. ஆகையினாலே பராபரனுடைய ஞானஞ் சொல்லுகிறதாவது: தீர்க்கதெரிசிகளையும் அப்போஸ்தலரையும் அவர்களண்டைக்கனுப்புவோம், அவர்களில் சிலரைக் கொன்றுபோட்டு, சிலரைத் துன்பப்படுத்துவார்கள். * மத். ௨௩, ௩௪. ஐ.

௫௰. லோகத்தோற்ற முதல் ‡ ஆபேலின் இரத்தந்துவக்கி, பீடத்துக்கும் தேவாலயத்துக்கும் நடுவே அழிக்கப்பட்ட ‡‡ சகரியாவின் இரத்தமட்டுக்குஞ் சிந்துண்ட சகல தீர்க்கதெரிசிகளுடைய இரத்தப்பழியும் இந்தச்சந்ததியினிடத்திலே கேட்கப்படும்படியாகத்தானே.
‡ க. மோ. ௪, ௮. ‡‡ ௨. நாளா. ௨௪, ௨௧. ௨௨.

௫௧. ஆம், இந்தச்சந்ததியினிடத்திலே கேட்கப்படுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௫௨. நியாயசாஸ்திரிகளாகிய உங்களுக்கையோ, * அதேனெனில் அறிவின் திறவுகோலை எடுத்துப் போட்டீர்கள்; நீங்கள்தானே உள்ளே பிரவேசித்ததில்லை, உள்ளே பிரவேசிக்கிறவர்களையுந் தடைபண்ணினீர்களென்றார். * மத். ௨௩, ௰௩.

௫௩. ஆனால் அவரிதுகளை அவர்களுடனே சொல்லும்போது, வேதபாரகரும் பரிசேயரும் அவரை மிக்கவும் நெருக்கவும், வெகுகாரியங்களைக் குறித்து அவரைப் பேசப்பிடுங்கப்பார்க்கவுந் துடங்கி,

௫௪. அவருக்குச் சறுபிளையாயக் காத்திருந்து, அவர்மேலே குத்தஞ்சுமத்தும்படிக்கு அவர் வாய்மொழியிலே ஏதாகிலும் பிடிக்கப்பார்த்தார்கள்.

௰௨. அதிகாரம்.

மாயமும் மனுஷபயமும் வேண்டாமென்பது.

இத்தனை வெகு ஆயிரத்துச் சனம் ஒருத்தருக்கொருத்தர் மிதித்துக் கொள்ளத்தக்கதாய்க் கூட்டங்கூடினபோது, அவர் தம்முடைய சீஷருடனே சொல்லத்துவக்கினதாவது: முதல்முதல் மாயமென்கிற பரிசேயருடைய * புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருங்கோள். * மத். ௰௬, ௬.

௨. * வெளியாகாத மறைபொருளும் அறியப்படாத அந்தரங்கமுமொன்றுமில்லை. * ௮, ௰௭.

௩. ஆனபடியால் நீங்கள் இருளிலே என்னபேசினீர்களோ, அது வெளிச்சத்திலே கேட்கப்படும்; நீங்கள் அறைகளிலே காதிலே என்னசொன்னீர்களோ, அது வீடுகள் மேலே பிரசங்கிக்கப்படும்.

௪. ஆனாலென் சிநேகிதரான உங்களுக்குச் சொல்லுகிறேன்: * சரீரத்தைக் கொன்றுபோட்டு, அதின்பிறகு

அதிகமொன்றுஞ் செய்யமாட்டாதவர்களுக்கு ** பயப்படாதேயுங்கோள். * மத. ௰ ௨௮—௩௧. ** யெச. ௫௧. ௭.

௫. ஆருக்கு நீங்கள் பயப்படவேண்டியதென்று உங்களுக்குக் காண்பிப்பேன்; கொன்றுபோட்டப் பின்பு நரகத்திலே தள்ள அதிகாரமுடையவருக்குப் பயப்படுங்கோள்; ஆமவருக்கே பயப்படுங்கோளென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௬. இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான்குருவிகள் விற்கிறதில்லையோ? ஆனால் அதுகளில் ஒன்றாகிலும் பராபரனுக்கு முன்பாக மறக்கப்பட்டதல்லை.

௭. உங்கள் தலையிலுள்ள எல்லா மயிர்களும் எண்ணப்பட்டிருக்குது; ஆகையால் பயப்படாதேயுங்கோள்; அநேகம் அடைக்கலான்குருவிகளைப் பார்க்க விசேஷத்திருக்கிறீர்கள்.

௮. ஆனாலுங்களுக்குச் சொல்லுகிறேன்: * எவனாகிலும் மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணினால் அவனை மனுஷனுடைய குமாரனும் பராபரனுடைய தூதர்களுக்கு முன்பாக அறிக்கைபண்ணுவார். மத. ௰ ௩௨. ௩௩.

௯. ஆனால் மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் பராபரனுடைய தூதர்களுக்கு முன்பாக மறுதலிக்கப்படுவான்.

௰. * எவனாகிலும் மனுஷனுடைய குமாரனுக்கு விரோதமான வார்த்தையைச் சொன்னால், அவனுக்கு மன்னிக்கப்படும்; ஆனால் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்த் தூஷணிக்கிறவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை. * மத. ௰௨. ௩௧. ௩௨.

௰௧. உங்களை அவர்கள் ஆலயங்களுக்கும் நடுவர்களுக்கும் அதிகாரங்களுக்கும் முன்பாகக் கொண்டுபோய்விடும்போது, எப்படி அல்லது என்னத்தை உத்தரமாகச் சொல்லுவோமென்றும், அல்லது என்னத்தைப் பேசுவோமென்றுங் கவலைப்படாதேயுங்கோள். * மத. ௰. ௰௯. ௨௦.

௰௨. ஏனென்றால் சொல்லவேண்டியதைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பாரென்றார்.

ஐசுவரியமுள்ள மனுஷனுவமை.

௰௩. ஆனால் ஜனத்திலொருத்தன் அவரோடே: போதகரே, என் சகோதரன் எனக்குந் தனக்குமிருக்கிற சுதந்திர ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொள்ள அவனுக்குச் சொல்லுமென்றான்.

௰௪. அவரோவென்றால் அவனோடே: மனுஷனே, என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும் அல்லது பங்கிடுகிறவனாகவும் வைத்தவனாரென்றார்.

௰௫. அவர் பின்னையும் அவர்களோடே: * பொருளாசைக்கு எச்சரிக்கையாயிருக்கப் பாருங்கோள்; ஏனென்றால் ** ஒருத்தனுக்கும் அவன் சீவன் அவன் ஆஸ்திகளின் திரட்சியிலே உண்டாயிராதென்றார்.

* ௧. தீமோ. ௬. ௬—௰. ** மத. ௪. ௪.

௰௬. அவர்

௰௬. அவர்களுக்குஒருஉவமையைசசொனனார், அதா
வது: ஐசுவரியமுளளஒருமனுஷனுடைய காணிபூமி
நனறாயவிளைநதது.

௰௭. அவனதனககுளளே யோசிததுககொணடு
சொனனதாவது: எனனசெயவேன, எனதானியங
களைசசேரததுவைககஇடமிலலையே.

௰௮. நானஒனறுசெயவேன, எனகளஞசியஙகளை
இடிததுபபெரிதாயககடடி, எனககு
விளைநதவைகளொனறையுமஎனனுடையநலலவஸத
துககளையுமஅஙகேசேரததுவைதது,

௰௯. எனஆததுமததுடனே: ஆததுமமே, உனககு
அநேகமவருஷஙகளுககுவேணடியநலலவஸததுககள
வைககதிருககுது, இளைபபாறு, போசி, குடி, பூரிபபா
யிருஎனறுசொலலுவேனெனறுசொனனான.

௨௰. ஆனாலபராபரனஅவனுடனே: மதியறற
வனே, இநதராததிரியிலே * உனஆததுமம உனனிடத
திலகேடடுவாஙகபபடும், அபபோநீஆயததமபண
ணினதுகள ** ஆருடையதாகுமெனறார். * சஙகீ. ௩௯, ௩௫.
௩௯. ** சஙகீ. ௩௯, ௭.

௨௧. பராபரனுககுளஐசுவரியவானாயிராமல, தனக
குததானபொககிஷஙகளைசசேரககிறவன அபபடி
யிருககிறானெனறார்.

விசாரபபினகவலைகளவேணடாமெனபது.

௨௨. அவர்தமசீஷருடனேசொனனதாவது:
ஆகையாலநீஙகளஉணபோமெனறுஉஙகளஜீவனுக
காகவும், எனனஉடுபபோமெனறுஉஙகளசரீரத
துககாகவுமகவலைபபடாதேயுஙகோளெனறுஉங
களுககுசசொலலுகிறேன. * மத. ௬, ௨௫. மு.

௨௩. ஆகாரததைபபார்ககசசீவனும, உடையைப
பார்ககசசரீரமுமஅதிகமாயிருககுது.

௨௪. காகஙகளைககவனிததுபபாருஙகோள, அது
களவிதைககிறதுமிலலை, அறுககிறதுமிலலை. அதுக
ளுககுபபணடகசாலையுமிலலைகளஞசியமுமிலலை,
தேவனவடடாருமபராபரனஅதுகளைபபிழைப
பூடடுகிறார், பறவைகளைபபார்ககநீஙகளெததனை
விசேஷததிருககிறீர்கள.

௨௫. உஙகளிலயார்கவலைபபடுகிறததினாலேதன
சரீரஅளவோடேஒருமுழததைககூடடுவான.

௨௬. இபபோதுமலலாததுககுசசிறியதுமஉஙக
ளாலகூடாதிருககககொளள, மறறதுகளுககாக
நீஙகளகவலைபபடுவானேன.

௨௭. லிலியபுஷபஙகளை, எபபடிவளருகுதெனறு
கவனிததுபபாருஙகோள, அதுகளஉழைககிறது
மிலலைநூறககிறதுமிலலை. ஆனாலுமசாலொ
மோனராஜாதனசகலமகிமையிலுமஅதுக
ளிலொனறைபபோலஉடுததியிருநததிலலையெனறு
உஙகளுககுசசொலலுகிறேன.

௨௮. இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் வெளியின் புல்லைப் பராபரன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களை எத்தனை அதிகம், அற்பவிசுவாசிகளே.

௨௯. ஆனபடியால் என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போமென்று நீங்கள் தேடாமலும் மனச்சலிப்புள்ளவர்களாய்ப் படாமலுமிருங்கோள்.

௩௰. ஏனென்றால் இவைகளையெல்லாம் லோகத்துச் சாதியார் நாடித் தேடுகிறார்கள், உங்கள் பிதாவோ இவைகள் உங்களுக்குத் தேவையென்று அறிந்திருக்கிறார்.

௩௧. பராபரனுடைய ராச்சியத்தைத் தேடுங்கோள், அப்போது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

௩௨. பயப்படாதே, சிறுமந்தையே, ஏனென்றால் உங்கள் பிதா உங்களுக்கு ராச்சியத்தைக் கொடுக்கப் பிரியசித்தமாயிருக்கிறார்.

௩௩. உங்களுக்குண்டானதுகளை விற்றுப் பிச்சை கொடுங்கோள், * பழசாய்ப் போகாத பைகளையும் மாளாத பொக்கிஷத்தையும் பரமண்டலங்களில் உங்களுக்குண்டாக்குங்கோள், அங்கே திருடன் சேருகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை.

* மத். ௬. ௰௯—௨௧.

௩௪. ஏனென்றால் உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமுமிருக்கும்.

முழித்திருப்பதற்காகச் சொன்ன புத்தி.

௩௫. * உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும், * எபே. ௬. ௰௪.

௩௬. நீங்கள் எசமான் கலியாணத்திலிருந்து திரும்பி வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படிக்கு, எப்போ வருவாரென்று அவருக்குக் காத்திருக்கிற மனுஷருக்கொப்பாகவுமிருங்கோள்.

௩௭. எசமான் வந்து முழித்திருக்கக் காணும் ஊழியக்காறரே பாக்கியவான்கள், மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், அவர் அரைக்கட்டிக்கொண்டு அவர்களைப் பந்தியமர்த்தி, சேர்ந்து வந்து அவர்களுக்கு ஊழியஞ் செய்வார்.

௩௮. அவர் ரெண்டாஞ்சாமத்திலாகிலும் மூணாஞ்சாமத்திலாகிலும் வந்து இப்படிக் கண்டுபிடித்தால், அவ்வூழியக்காறர் பாக்கியவான்கள்.

௩௯. * ஆனாலிது காரியத்தை அறியுங்கோள், திருடன் எந்த நேரத்திலே வருவானென்று வீட்டெசமானுக்குத் தெரிந்திருந்தால், அவன் முழித்திருந்து தன் வீட்டைக் கன்னமிடவொட்டானே. * மத். ௨௪. ௪௩. ௪௪.

௪௰. ஆகையால் நீங்களும் * ஆயித்தமாயிருங்கோள், ஏனென்றால் நீங்கள் நினையாத நேரத்திலே மனுஷகுமாரன் வருகிறார். * ௨௧. ௩௪. ௩௬.

௪௧. ஆனால் பேதுரு அவருடனே: ஆண்டவரே! இந்த உவமையை யெங்களோடே சொல்லுகிறீரோ! எல்லாரோடுஞ் சொல்லுகிறீரோ வென்றான்.

௪௨. அப்போது கர்த்தர் சொன்னதாவது: * ஏற்றபோதுந்தருணகாலத்திலே படிகொடுக்கச்சொல்லத் தன் பணிவிடைக்காரர்மேல் வைக்கப்போகிற உண்மையும் புத்தியுமுள்ள உக்கிராணக்காரனார். * மத். ௨௪. ௪௫.

௪௩. எசமான் வந்து அப்படிச் செய்யக்காணும் ஊழியக்காரன் பாக்கியவான்.

௪௪. மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், தமக்குண்டான தெல்லாவற்றின்மேலும் அவனை வைப்பார்.

௪௫. அந்த ஊழியக்காரன் [illegible]: என் எசமான் வரத்தாமதிக்கிறானென்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டு, வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் அடிக்கவும் போசிக்குக்குடித்து வெறிக்கவுந்தொடங்கினால்,

௪௬. அந்த ஊழியக்காரனுடைய எசமான் அவன் பார்த்திராத நாளிலும் அறியாத நேரத்திலும் வந்து, அவனைத் துண்டித்துப்போட்டு, உண்மையில்லாதவர்களுடனே அவன் பங்கைக் கற்பிப்பார்.

௪௭. தன் எசமானுடைய சித்தத்தை அறிந்தும், ஆயத்தப்படாமலும், அவர் சித்தத்தின்படி செய்யாமலும் போன ஊழியக்காரனே அநேகம் அடிகளால் அடிக்கப்படுவான்.

௪௮. அறியாதவனாயிருந்து, அடிகளுக்குப் பாத்திரமானதுகளைச் செய்யாதவனோ கொஞ்ச அடிகளால் அடிக்கப்படுவான். ஏனெனில் எவனுக்கு அநேகங்கொடுக்கப்பட்டிருக்குதோ அவனிடத்தில் அநேகங்கேட்கப்படும், ஆர்வசத்தில் அநேகம் வைத்திருக்குதோ அவனை அதிகங்கேட்பார்கள்.

சுவிசேழம் பிரசங்கிக்கப்படும்போது மனுஷருக்குள்ளே பிரிவினைகள் உண்டாமென்பது.

௪௯. அக்கினியைப் பூமியின்மேல் போடவந்தேன், அது அப்போதே பத்தியெரிந்திருக்கக்கண்டால் எனக்கு ஆசையாயிராதோ. * யெரே. ௨௩. ௨௯.

௫௰. ஆனால் நான் * ஸ்நானங்கொள்ளவேண்டியதொன்றுண்டு, அது முடியுமட்டாக எத்தனை நெருக்கமடைந்திருக்கிறேன். * மத். ௨௰. ௨௨. சங்கீ. ௬௯. ௨.

௫௧. * நான் பூமியிலே சமாதானத்தைத் தரவந்தேனென்று நினைக்கிறீர்களோ, அல்ல, பிரிவினையைத்தானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

* மத். ௰. ௩௪—௩௬.

௫௨. அதேதென்னில் இதுமுதல் ஒரே வீட்டிலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள், இரண்டுபேருக்கு விரோதமாய் மூன்றுபேரும் மூன்றுபேருக்கு விரோதமாய் இரண்டுபேருந்தானே.

௫௩. தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும் தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும் விரோதமாகவும் மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாகவும் பிரிந்துபோவார்களென்றார்.

தம்மைக் கக்ஷிஸ்கத் தேவனறிய மனதிருந்தாதவர்களுக்கு அவர் சொன்னபுத்தி.

௫௪. ஆனாலவர் ஜனங்களோடுஞ் சொன்னதாவது: நீங்கள் மேற்கே மேகமெழும்புகிறதைக் காணுகிறபோது: மழை வருமென்று உடனே சொல்லுகிறீர்கள், அந்தப்படியுமாம்.

௫௫. தென்னலடிக்கிறதை நீங்கள் காணுகிறபோது காங்கையுண்டாமென்கிறீர்கள், அந்தப்படியுமாம்.

௫௬. மாயக்காறரே, பூமியினுருபத்தையும் வானத்தினுருபத்தையும் வகையறுக்க அறிந்திருக்கிறீர்கள், * இந்தக் காலத்தையோ நீங்கள் வகையறுக்காதிருக்கிறதெப்படி. * மத். ௰௬, ௩.

௫௭. ஞாயமின்னதென்று நீங்களே நிதானியாமலிருப்பானேன்.

௫௮. * நீ உன் எதிரியுடனே கூடத் துரையண்டைக்குப் போகிறபோது அவன் உன்னை ஞாயாதிபதியண்டைக்கு இழுக்காமலும் ஞாயாதிபதி உன்னைச் சேவகாரனுக்கொப்புக்கொடாமலும், சேவகாரன் உன்னைச் சிறைச்சாலையிலே போடாமலுமிருக்க, வழியிலேயே அவனை விட்டு விடுதலையாகப் பிரயாசப்படு. * மத். ௫. ௨௫. ௨௬.

௫௯. நீ கடைசிக் காசைக் கொடுத்துத் தீருமட்டும் அங்கேயிருந்து புறப்படமாட்டாயென்று உனக்குச் சொல்லுகிறேனென்றார்.

௰௩. அதிகாரம்.

கனிகொடாத அத்திமர உவமை.

பிலாத்து சில கலிலேயருடைய ரெத்தத்தை அவர்களிட்ட பெலிகளுடனே கலந்துபோட்ட செய்தியை அவருக்கு அறிவிக்கிற சிலர் அந்தவேளையிலே அங்கேயிருந்தார்கள்.

௨. யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: இந்தக் கலிலேயர் இப்படிக்கொத்ததுகளை அநுபவித்ததினாலே எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ.

௩. அல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் * குணப்படாதே போனால் எல்லாரும் அப்படிக் கெடுவீர்கள். * சங்கீ. ௭, ௰௩.

௪. அல்லது சீலோவாவிலே கோபுரம் விழுந்து கொன்றவந்தப் பதினெட்டுப்பேர் யெருசலேமிலே குடியிருக்கிற எல்லா மனுஷரைப் பார்க்கிலுங் குத்தவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ.

௫. அல்ல

௫. இல்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் / நீங்கள் குணப்படாதேபோனால் எல்லாரும் அப்படிக் கெடுவீர்களென்றார்.

௬. அவர் சொன்ன உவமையாவது: ஒருத்தனுக்குத் தன் திராட்சத்தோட்டத்திலே நட்டப்பட்ட ஒரு அத்திமரமிருந்தது / அதிலே கனியைத் தேடிவந்து காணாதேபோனான் /

௭. அப்போ அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன் / காணவில்லை / இதை வெட்டிப்போடு / இது நிலத்தையும் ஏன் கெடுக்குதென்றான்.

௮. அதற்கவன் அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: ஐயா / நான் அதைச் சுத்திலுங் கொத்தி எருப்போட்டு / கனிகொடுக்குமோ என்று பார்க்குமட்டாக / அது இந்த வருஷமும் இருக்கட்டும்.

௯. கனிகொடாவிட்டால் / பின்பு அதை வெட்டிப்போடுமென்று சொன்னானென்றார்.

கூனி நடக்கிற ஒரு ஸ்திரீ குணமாக்கப்பட்டது.

௰. அவர் ஓய்வுநாளில் ஆலயங்களிலே ஒன்றிலே போதகம்பண்ணிக்கொண்டிருந்தார்.

௰௧. அப்போ பதினெட்டு வருஷமாய் வியாதியின் ஆவி பிடித்திருந்த ஒரு ஸ்திரீ அங்கே இருந்தாள் / அவள் பரிச்சேதம் நிமிரமாட்டாத கூனியாயிருந்தாள்.

௰௨. ஆனால் யேசு அவளைக் கண்டபோது தம்மிடத்திலழைத்து / அவளை நோக்கி: ஸ்திரீயே / உன் வியாதிக்கு நீங்கலானாயென்று சொல்லி /

௰௩. அவள் மேலே கைகளை வைத்தார் / உடனே அவள் நிமிர்ந்து பராபரனை மகிமைப்படுத்தினாள்.

௰௪. ஆனால் யேசு ஓய்வுநாளிலே குணமாக்கினதுக்காக ஆலயத்தலைவன் தாங்கலடைந்து / ஜனக்கூட்டத்தோடே: வேலைசெய்ய வேண்டிய ஆறுநாளுண்டு / ஆகையால் ஓய்வுநாளிலே அல்ல அதுகளிலே வந்து குணமாக்கிக்கொள்ளுங்கோவென்று உத்தரவு சொன்னான்.

௰௫. அப்போ கர்த்தர் அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: மாயக்காரனே / உங்களில் அவனவன் ஓய்வுநாளிலே தன்னெருதையல்லது தன் கழுதையை முன்னணையை விட்டவிழ்த்து / கொண்டுபோய் / அதுகளுக்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையோ.

௰௬. ஆனால் இதோ / சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த அபிரகாமின் குமாரத்தியாகிய இவள் ஓய்வுநாளிலே இந்தக் கட்டவிழ்த்துவிடத் தேவையாயிருந்ததில்லையோவென்றார்.

௰௭. அவர் இதுகளைச் சொன்னபோது / அவரை விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள். எல்லா ஜனமும் அவரால் செய்யப்பட்ட சகல மகிமைகளுக்காகவுஞ் சந்தோஷப்பட்டார்கள்.

கடுகுவிதை / புளித்தமா என்கிறதுகளின் உவமைகள்.

௰௮. ஆனால் அவர் சொன்னதாவது: * பராபரனுடைய ராட்சியம் எதுக்கொப்பாயிருக்குது/ அதை எதுக்கொப்பிடுவேன். * மத். ௰௩/ ௩௧—௩௩.

௰௯. கடுகுமணிக்கொப்பாயிருக்குது/ அதை ஒரு மனுஷன் எடுத்து/ தன் தோட்டத்திலே போட்டான்/ அது வளர்ந்து பெரிய செடியாகி/ ஆகாசத்துப் பறவைகள் அதின் கிளைகளிலே கூடுகட்டித்தென்றார்.

௨௰. மீளவும் அவர் சொன்னதாவது: பராபரனுடைய ராட்சியத்தை எதுக்கொப்பிடுவேன்.

௨௧. மீத்தமாவுக்கொப்பாயிருக்குது/ அதை ஒரு ஸ்திரீ எடுத்து/ மூன்றுபறைமாவிலே அதனைத்தும் உப்புமட்டாக அடக்கிவைத்தாளென்றார்.

௨௨. அவர் எருசலேமுக்குப் பயணமாய்/ பட்டணங்களையுங் கிராமங்களையும் உருவப்போய்/ போதகம் பண்ணினார்.

ரெட்சிக்கப்படுகிறவர்கள் கொஞ்சப்பேரோவென்று
தற்குக்கேட்டத்துச்சொன்ன பிரதியுத்தாரம்.

௨௩. ஒருத்தன் அவருடனே: ஆண்டவரே/ ரெட்சிக்கப்படுகிறவர்கள் கொஞ்சப்பேரோவென்றான். அவரோவென்றால் அவர்களுக்குச் சொன்னதாவது:

௨௪. * இடுக்கவாசலாலே உள்ளே பிரவேசிக்கப் போராடுங்கோள்/ ஏனென்றால் அநேகர் உள்ளே பிரவேசிக்க வகைதேடியும் அவர்களாலே கூடாதிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். * மத். ௭/ ௰௩. ௰௪.

௨௫. வீட்டுக்கெசமானெழுந்திருந்து/ கதவைப் பூட்டினதுமுதல் நீங்கள் வெளியே நின்றுகொண்டு/ * ஆண்டவரே/ ஆண்டவரே/ எங்களுக்குத் திறவுமென்று சத்தமிட்டு வந்தடங்குவீர்கள் ஆனால் அவர் உங்களுக்குப் பிரதியுத்தாரமாக: உங்களை எவ்விடத்தாரென்றறியேனென்பார். * வாக்கி. ௧/ ௨௮.

௨௬. அப்போ நீங்கள்: உமக்குமுன்பாகப் போசித்துக் குடித்தோம்/ எங்கள் வீதிகளிலும் போதகம் பண்ணினீரென்று சொல்லத் தொடங்குவீர்கள்.

௨௭. ஆனால் அவர்: உங்களை எவ்விடத்தாரென்றறியேனென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்/ அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டகன்றுபோங்கோளென்பார்.

௨௮. அங்கே நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் எல்லாத் தீர்க்கதரிசிகளையும் பராபரனுடைய ராட்சியத்திலே இருக்கிறவர்களாகவும் உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவுங் காணும்போது/ அழுகையும் பல்லுக்கடிப்பும் உண்டாயிருக்கும்.

௨௯. * கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலுந் தெற்கிலுமிருந்து வந்து பராபரனுடைய ராட்சியத்திலே பந்தியிருப்பாருண்டு. * மத். ௮/ ௰௧. ௰௨.

௩௰. இதோ * முந்தினோராகப்போற பிந்தினோரும் பிந்தினோராகப்போற முந்தினோருமுண்டென்றார். * மத். ௰௯/ ௩௰.

தமமுமககொலலபபொறவரகளுககு அவர் சொனன வாககியம.

௩௧. அநதநாளிலெ சிலபரிசெயர் செரநதுவநது, அவ ரிடடெ: நீரஙகெயிருநது புறபபடடுபபொம, ஏனெ னறால எரொதெ உமமைககொலலமனதாயிருககிறா னெனறாரகள.

௩௨. அவர்அவரகளுககுச சொனனதாவது: நீஙகள பொய அநதநரிககு: இதொ இனறுமநாளையும நான பிசாசுகளைத துரததி, ரொகஙகளை அளிததுத தீரநது, மூனறாமநாளிலெ முகிநதிருபபென.

௩௩. ஆனாலும இனறைககும நாளைககும நாளையி னறைககும நான நடமாடடவெணடியது; எனனென்று சொலலுஙகொள, ஏனெனனில யெருசலெமுககுப புறமபெ ஒருதீரககதரிசிமடிநது பொறதிலலெ.

௩௪. * தீரககதரிசிகளைக கொனறு உனனணடைக கனுபபபபடடவரகளைக கலலெறிகிற யெருசலெமெ, யெருசலெமெ, ஒருகொழிதன குஞசுகளைக கூடடித தனசெடடைகளின கீழெ கூடடிச செரககுமவணணமாக நானெததனைதரம உனபிளளைகளைக கூடடிச செரக கவெணுமெனறிருநதென, ஆனால நீஙகள மாடடொ மெனறீரகள. * மதத. ௨௩, ௩௭—௩௯.

௩௫. இதொ * உஙகள வீடு உஙகளுககுப பாழாககி விடபபடும. மெயயாகவெ உஙகளுககுச சொலலுகி றென, நீஙகள: கததருடையநாமததிலெ வருகிறவர் ஸெததொததிரிககபபடடவரெனறு சொலலுஙகா லமவருமடடுமெ எனனைககாணாதிருபபீரகள எனறார்.

௧௪. அதிகாரம.

நீரககொவவியாதியுளள ஒருததனைச் சொஸ்தமாககினது.

பினனையுஞ சமபவிககதெனறால: பரிசெயரில தலைவனுககொருததனுடைய வீடடிலெ அவர் ஓயவுநாளிலெ அபபமபொசிககவருகையில, அவரகள அவனைச் சன னையாககாததிருநதாரகள.

௨. இதொநீரககொவவியாதியுளள ஒருமனுஷன அவருககுமுனபாகவிருநதான.

௩. யெசுசாயசசாஸதிரிகளுககும பரிசெயருககும பிறுததியுததாரமாக: ஓயவுநாளிலெ குணமாககுகிறது நியாயமொவெனறார.

௪. அவரகளொ பெசாதிருநதாரகள; அப பொதவர் அவனைப பிடிததுக குணமாககிவிடடு,

௫. அவரகளுடனெ: * உஙகளிலொருவனுடையகழு தையாகிலுமொ மாடாகிலுமொ ஒருதுரவிலெவிழுந தால, அநதவனை உடனெ ஓயவுநாளிலெ தூககிவி டானொவெனறார். * ௧௩, ௧௫.

௬. இதறகவரகள எதிருததரஞசொலலமாடடா தெபொனாரகள.

விருந்துக்கழைக்கப்பட்டவர்களுக்கும் அழைத்தவனுக்கும் அவர் சொன்ன நியாயங்கள்.

௭. ஆனால் விருந்துக்கழைக்கப்பட்டவர்கள் பந்தியிலே முதலிடங்களை எப்படித் தெரிந்துகொண்டார்களென்கிறதை அவர் கவனித்துப் பார்த்து, அவர்களுக்குச் சொன்ன உவமையாவது:

௮. நீ யொருத்தனாலே கலியாணத்துக்கழைக்கப்பட்டால், பந்தியிலே முதலிடத்தில் உட்காராதே; ஏனெனில் ஒருவேளை உன்னிலுங் கனமுள்ளவன் அவனாலே அழைக்கப்பட்டிருக்கக்கூடும்;

௯. உன்னையும் அவனையும் அழைத்தவன் வந்து, உன்னுடனே: இவனுக்கிடங்கொடுவென்பான்; அப்பொழுது நீ வெட்கத்துடனே கடைசியிடம் பிடிக்கத் துவக்குவாய்.

௰. நீ அழைக்கப்பட்டால், போய், கடைசியிடத்தில் உட்காரு; அப்பொழுது உன்னை அழைத்தவன் வந்து உன்னுடனே: சிநேகிதனே, உயரப் போயிருவென்றால், உன்னுடனே கூடப் பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக் கனமுண்டாம்.

௰௧. அதேதென்றால், * தன்னைத்தான் உயர்த்துகிறவனெல்லாருந் தாழ்த்தப்படுவான்; தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவானென்றார். * வாக. ௨௯, ௨௩.

௰௨. ஆனால் அவர் தம்மை விருந்துக்கழைத்தவனுக்குச் சொன்னதாவது: நீ பகல்விருந்தையாவது இராவிருந்தைப் பண்ணினால், உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும் உன் பந்துசனங்களையாகிலும் ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழையாதே; ஏனென்றால் உன்னை அவர்களுந் திரும்ப அழைப்பார்களாம்; அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் நடந்தீரும்.

௰௩. நீ விருந்து பண்ணும்போதோவென்னில் ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையுங் குருடரையும் அழை.

௰௪. அப்பொழுது பாக்கியவானாயிருப்பாய்; ஏனென்னில் உனக்குப் பதில் செய்ய அவர்களுக்கில்லை; நீதிமான்களுடைய உயிர்த்தெழுந்தலிலேயோவென்றால் உனக்குப் பதில் செய்யப்படுமென்றார்.

பெரிய விருந்துவமை.

௰௫. கூடப் பந்தியிருந்தவர்களில் ஒருத்தன் இவைகளைக் கேட்டபோது, அவருடனே: பராபரனுடைய ராச்சியத்தில் அப்பம் போசிக்கிறவன் பாக்கியவானென்றான்.

௰௬. அவரோவென்னில் அவனுக்குச் சொன்னதாவது: ஒருமனுஷன் பெரிய விருந்து பண்ணி, அநேகரை அழைத்து,

௰௭. விருந்துவேளையிலே: வாருங்கோள், எல்லாம் ஆயத்தமாச்சுதென்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்ல, தன் ஊழியக்காரனை அனுப்பினான்.

௰௮. அவர்

௰௮. அவர்களெல்லாருமொருமிக்கமாய்ச் சாக்குக்கூட்டா
த்தள்ளச் சொல்லத் துடங்கினார்கள். முந்தினவன்
அவனுடனே: ஒருவயலைக்கொண்டேன், நான் புறப்
பட்டுப்போய் அதைப்பார்க்கவேண்டியதவசியமா
யிருக்குது, என்னை மன்னிக்க உன்னை வேண்டிக்
கொள்ளுகிறேனென்றான்.

௰௯. வேறொருத்தன்: ஐந்தேர் எருதுகளைக்கொண்
டேன், அதுகளைச் சோதிக்கப்போகிறேன், என்னை
மன்னிக்க உன்னை வேண்டிக்கொள்ளுகிறேனென்
றான்.

௨௰. வேறொருத்தன்: பெண் விவாகம்பண்ணி
னேன், அதுநிமித்தியம் நான் வரக்கூடாதென்றான்.

௨௰௧. அந்த ஊழியக்காரன் வந்து தன் எசமானுக்கித்
தெல்லாம் அறிவித்தான், அப்போ வீட்டுக்கெசமான் கோப
மடைந்து, தன் ஊழியக்காரனுடனே: நீ சீக்கிரமாய்ப்
பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் புறப்
பட்டுப்போய், தரித்திரரையும் ஊனரையும் சப்பாணி
களையுங் குருடரையும் இங்கே உள்ளே அழைத்துவா
வென்றான்.

௨௰௨. ஊழியக்காரன்: ஆண்டவரே, நீர் கற்பித்தப்
படி செய்யப்பட்டுது, இன்னமிடமுண்டென்றான்.

௨௰௩. அப்போ எசமான் ஊழியக்காரனுடனே: நீ
வழிகளிலும் வேலிகளருகேயும் புறப்பட்டுப்
போய், என் வீடு நிறையும்படிக்குச் சனங்களை உள்
ளே வரவருந்தியழை.

௨௰௪. ஏனென்னில் அழைக்கப்பட்ட அந்த மனுஷரில்
ஒருத்தனும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லையென்றுங்
களுக்குச் சொல்லுகிறேனென்று சொன்னார்.

எல்லாத்தையும் வெறுத்துத் தம்மைப் பின்செல்
லாதவன் தம்முடைய சீஷனாயிருக்கமாட்டானென்று
கிறீஸ்து உச்சரித்தது.

௨௰௫. வெகுசனங்கள் அவரோடேகூட வழிநடந்து
வந்தது, அவர் திரும்பிக்கொண்டு அவர்களுடனே
சொன்னதாவது:

௨௰௬. யாதொருத்தனென்னண்டைக்கு வந்து, தன் த
கப்பனையுந் தாயையும் பெண்சாதியையும் பிள்ளைக
ளையுஞ் சகோதரரையுஞ் சகோதரிகளையுந் தன் சுயசீவ
னையுங்கூட * பகையாதேபோனாலென் சீஷனாயிருக்
கமாட்டான். * மத். ௰. ௩௭. ௩௮.

௨௰௭. தன் சிலுவையைச் சுமந்துகொண்டென் பிற
கே வராதவனென் சீஷனாயிருக்கமாட்டான்.

௨௰௮. ஏனென்னில் உங்களிலொருத்தன் ஒரு கோபு
ரத்தைக் கட்டமனதாயிருந்தால்,

௨௰௯. தான் அஸ்திவாரம் போட்டபிறபாடு முடிக்கக்
கூடப் பெலனில்லாமல் போய், பார்க்கிறவர்களெல்
லாரும்:

௩௰. இந்தமனுஷன் கட்டத்துவக்கி முடிக்கப்பெல
னில்லாமல் போனானென்று தன்னைப் பரியாசம்

பண்ண

பண்ணத் தொடங்காதபடிக்கு, அவன் முந்தி உட்கா
ர்ந்து, அதைக் கட்டிச் சுதிரத்தனக்கு உண்டோவெ
ன்று செலவுக்குச் சிலவைக் கணக்குப் பாரானோ.

௩௧. அல்லாமலும் ஒரு ராசா மற்றொரு ராசா
வோடே யுத்தங் கலக்கப் போனால், முந்தி உட்கா
ர்ந்து, தன் மேலே இருபதினாயிரம் பேரோடே வருகி
றவனைப் பதினாயிரம் பேரோடே எதிர்க்கப் பல
சாலியோவென்று ஆலோசனை பண்ணானோ.

௩௨. அல்லவென்று கண்டால், அவன் இன்னந் தூ
ரத்திலிருக்கக் கொள்ள, தானாபதியங்களை அனுப்பிச்
சமாதானத்துக்கடுத்ததுகளைக் கேட்டுக் கொள்ளுகி
றான்.

௩௩. அப்படியே உங்களில் தனக்குண்டானதுகளெல்
லாத்தையும் விட்டுவிடாதவனொருத்தனும் என் சீஷனாயி
ருக்க மாட்டான்.

௩௪. * உப்பு நல்லவஸ்து, உப்பு சாரமற்றுப்
போச்சுதேயானால் எதினாலே சாரமுண்டாக்கப்ப
டும். *மத. ௫, ௰௩.

௩௫. அது நிலத்துக்காகிலும் எருவிலேயாகிலும் போ
டப்பட்டத்தக்கதல்ல, அதை வெளியே கொட்டிப் போடு
வார்கள். கேட்கக் காதுள்ளவன் கேட்கக்கடவா
னென்றார்.

௰௫. அதிகாரம்.

காணாமற்போன ஆட்டின் உவமை.

ஆனாலுஞ் சகல * ஆயக்காரரும் பாவிகளும் அவர் வச
னங்களைக் கேட்க அவரண்டைக்குச் சேருகிறவர்க
ளாயிருந்தார்கள். *மத. ௯, ௰.

௨. அப்போ பரிசேயரும் வேதபாரகரும்: இவர் பா
விகளைச் சேர்த்துக் கொண்டு அவர்களுடனே சாப்பிடுகி
றாரென்று முறுமுறுத்தார்கள்.

௩. அவரோவென்றால் அவர்களுடனே சொன்ன உவ
மையாவது:

௪. உங்களில் எந்த மனுஷனுக்கும் நூறாடுடையவனா
யிருந்து அதுகளிலொன்று கெட்டுப்போனால், தொண்ணூற்றொ
ன்பதையும் வனாந்திரத்தில் விட்டு, * கெட்டுப்போனதைக்
கண்டுபிடிக்குமட்டும் அதைத் தேடிப்போகானோ. *
மத. ௰௮, ௰௨.

௫. கண்டுபிடித்தால், அவன் அதைச் சந்தோஷமாய்த்
தன் தோள்களின் மேலே போட்டுக் கொண்டு,

௬. வீட்டுக்கு வந்து சிநேகிதரையும் அயலகத்
தாரையுங் கூட வரவழைத்து, அவர்களுடனே: என்
னோடே கூடச் சந்தோஷமாயிருங்கோள், அதேதென்றால் கா
ணாமற்போன என்னுடைய ஆட்டைக் கண்டுபிடித்
தேனென்பான்.

௭. அப்படியே, * குணப்படுதல் தேவையில்லாத
தொண்ணூற்றொன்பது நீதிமான்களைப் பார்க்க, கு

ணப

ணப்படுகிற ஒரு பாவியின பேரிலே பரமணடலத்திலே சநதோஷமுணடாயிருக்குமென்று உஙகளுக்குச் சொலலுகிறேன. * ௫/ ௩௧. ௩௨.

காணாமலபபோன வெளளிக்காசின உவமை.

௮. அலலது ஒரு ஸ்திரீயானவள் பத்து வெளளிக்காசை வைத்திருந்து, ஒரு வெளளிக்காசு இழந்தால, விளக்கைக் கொளுத்தி வீட்டைப் பெருக்கி, அதைக் கணடுபிடிக்குமட்டாகக் கவனமாய்த் தேடாளோ?

௯. கணடுபிடித்தால, அவள் சிநேகிதிகளையும் அயல வீட்டுக்காரிகளையுங் கூடவரவழைத்து: என்னோடே சந்தோஷமாயிருஙகோள், அதேனென்றால நான இழந்திருந்த வெளளிக்காசைக் கணடுபிடித்தேனென்பாள்.

௰. அப்படியே குணப்படுகிற ஒரு பாவியின பேரிலே பராபரனுடைய தூதர்களுக்கு முனபாகச் சந்தோஷமுணடாகுதென்று உஙகளுக்குச் சொலலுகிறேனென்றார்.

காணாமலபோன குமாரன உவமை.

௰௧. பினனையும் அவர் சொனனதாவது: ஒரு மனுஷனுக்கு இரணடு குமாரரிருந்தார்கள்.

௰௨. அவர்களிலே இளையவன தகப்பனுடனே: தகப்பனே, ஆஸ்தியிலே எனக்கு வரும்பஙகை எனக்குத் தாருமென்றான. அவன அவர்களுக்குச் சீவனத்தைப் பஙகிட்டான.

௰௩. சொற்பநாளுக்குப் பிற்பாடு இளையமகன எலலாத்தையுஞ் சேர்த்துக்கொணடு தூரதேசத்துக்குப் பயணம் புறப்பட்டுப்போய, அங்கே சேட்டைமாறாகமாய்ச் சீவனமபணணி, தன ஆஸ்தியை அழித்துப் போட்டான.

௰௪. அவன எலலாத்தையுஞ் செலவழித்தபிறபாடு, அந்தத் தேசத்திலே மகாபஞ்சமுணடாச்சுது. அவன தாழ்ச்சியடையத்துவக்கி,

௰௫. போய, அந்தத் தேசத்துக் குடிகளிலே ஒருத்தனணடை ஒட்டிக்கொணடான, இவன அவனைத் தன வயலகளிலே, பனனிகளை மேயக்க அனுப்பினான.

௰௬. அப்போ பனனிகள் தினனுகிற தவிடுகளினாலே தன வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான, ஆனாலொருத்தனும் அதை அவனுக்குக் கொடுக்கவிலலை.

௰௭. அவன தன உணர்வுக்கு வந்தபோதோவெனில அவன சொனனதாவது: என தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனைபேருக்கு அப்பந்திரட்சியாயிருக்குது, நானோவெனில பசியினாலே கெட்டுப்போறேன,

௰௮. நான எழுந்து புறப்பட்டு, என தகப்பனணடைக்குப் போய, அவருடனே: தகப்பனே, வானத்துக்கு விரோதமாகவும உமக்கு முனபாகவும பாவஞ் செயதேன.

௰௯. இனிமேல உமமுடைய குமாரனென்றழைக்கப்படுகிறதுக்கு நான பாத்திரவானலல, உமமுடைய கூலிக்

காரர

காரரில ஒருத்தனைப்போலெ என்னை வைத்துக்கொள்ளுமென்னப்பெண்ணொன்றுசொல்லி।

௨௰. எழுந்துபுறப்பட்டு। தன்தகப்பனிடத்தில வந்தான. ஆனாலெ அவன இன்னந்தூரமாயிருக்கும்போது। அவனுடைய தகப்பன அவனைக்கண்டு மனதுருகி। ஓடி। அவனைக்கழுத்தைக்கட்டிக்கொண்டு அவனை முத்தமிட்டான.

௨௧. ஆனால குமாரன அவனோடே: தகப்பனே। வானத்துக்கு விரோதமாகவும உமக்கு முன்பாகவும பாவஞ்செய்தேன। நீர் மேலும் உம்முடைய குமாரனென்று அழைக்கப்படுகிறதுக்கு நான பாத்திரவானல்லவென்றான.

௨௨. தகப்பனோவென்றால தன்னூழியக்காறருடனே சொன்னதாவது: நீங்கள பிரதான வஸ்திரத்தை வெளியேகொண்டுவந்து। அவனுக்குடுத்தி। அவன கைக்குமோதிரத்தையுங் கால்களுக்குப்பாதரட்சைகளையுங்கொடுங்கள।

௨௩. கொழுத்தகன்றைக்கொண்டுவந்தடியுங்கோள। நாம போசித்து। சந்தோஷமாயிருப்போம.

௨௪. ஏனென்றால இந்த என்குமாரன மரித்திருந்து திரும்ப உயிர்த்தான। அவன காணாமல்போனவனாயிருந்து காணப்பட்டானென்றான. அப்போ சந்தோஷப்படத்துவக்கினார்கள.

௨௫. ஆனாலெ அவனுடைய மூத்தகுமாரன வயலிலிருந்தான. அவன வந்து வீட்டுக்குச்சமீபித்தபோது। கீதவாத்தியத்தையுங் களிகூருதலையுங்கேட்டு।

௨௬. ஊழியக்காறரில ஒருத்தனை அழைத்து। இதேதென்று விசாரித்தான.

௨௭. இவன அவனுடனே: உன்சகோதரன வந்தான। அவன திரும்பச்சுகத்துடனே தனக்குக்கிடைத்தபடியினாலே உன்தகப்பன கொழுத்தகன்றையடித்தானென்றான.

௨௮. அப்போ அவன கோபமடைந்து। உள்ளேபோகமாட்டேனென்றான। அவன தகப்பனோவென்றால வெளியேவந்து அவனை வருந்தியழைத்தான.

௨௯. ஆனால அவன தகப்பனுக்குப்பிறத்தியுத்தாரமாகச்சொன்னதாவது: இதோ இத்தனைவருஷம நான உமக்கு ஊழியஞ்செய்து ஒருக்காலும உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும। நான என சிநேகிதரோடே சந்தோஷமாயிருக்கும்படிக்கு நீர் ஒருக்காலும எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியைக்கொடுத்ததில்லையல்ல.

௩௰. வேசிகளுடனே உம்முடைய சீவனத்தைப்பட்சித்துப்போட்டிருந்த உம்முடைய குமாரன வந்தபோதோவென்றால। கொழுத்தகன்றை அவனுக்கு அடித்தீரென்றான.

௩௧. அவனோவென்றால இவனோடே: மகனே। நீ எப்போதுமென்னோடிருக்கிறாய। எனக்குள்ளதுகளெல்லாம உன்னுதாயிருக்குது.

௩௨. ஆனால இந்த உன்சகோதரன மரித்திருந்து திரும்ப உயிர்த்தத்துக்காகவும। காணாமல்போனவனாயிருந்து காணப்பட்டதுக்காகவும நீ மகிழ்ச்சியாகச்சந்தோஷப்படவேண்டியதாயிருக்குமென்றான.

௰௬. அதிகாரம்.

புத்தியாய்ச்செய்த அநீத உக்கிராணக்காரனுவமை.

அவர் தம்முடைய சீஷரோடே சொன்னதாவது: ஐசுவரிய
வானொரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரனிருந்
தான்; இவன் அவனுடைய ஆஸ்திகளை அழித்துப்
போடுகிறானென்று அவனுக்கு அறிவிக்கப்பட்டான்.

௨. அப்போ அவனை அழைத்து, அவனோடே: உன்
பேரில் நானென்ன கேட்கக் கேட்டது, உன் உக்கிராணக்க
ணக்கை ஒப்புவி, இனி நீ உக்கிராணக்காரனா
யிருக்கக்கூடாதென்றான்.

௩. உக்கிராணக்காரன் தனக்குள்ளே
சொல்லிக்கொண்டதாவது: என்ன செய்வேன், என்
னெஜமானன் உக்கிராண விசாரிப்பை என்னைவிட்டு வாங்
கிப்போடுகிறானே; கொத்துகிறதுக்கு எனக்குப் பெல
னில்லை; இரக்க வெட்கப்படுகிறேன்.

௪. நான் உக்கிராண விசாரிப்புக்குப் புறம்பாயத்தள்
ளப்படும்போது, என்னைத் தங்கள் வீடுகளிலே சேர்த்துக்
கொள்வாருண்டாக நான் செய்யவேண்டியதின்
னதென்றறிவேனென்று சொல்லி,

௫. தன்னெஜமானுக்குக் கடன்பட்டவர்களிலே ஒவ்
வொருத்தனை வரவழைத்து, முந்தினவனோடே: நீ
என்னெஜமானுக்குப் பட்ட கடனெத்தனையென்றான்.

௬. அவன்: நூறு குடம் எண்ணெயென்றான். அப்
போ அவனோடே: நீ உன் சீட்டை வாங்கி உட்கார்ந்து
ஐம்பதென்று சீக்கிரமாய் எழுதென்றான்.

௭. பின்பு வேறொருத்தனோடே: நீ பட்ட கடன்
எத்தனையென்றான்; அவன் நூறு கலங் கோதும
யென்றான்; அப்போ அவனோடே: நீ உன் சீட்டை
வாங்கி எண்பதென்றெழுதென்றான்.

௮. அநீத உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தா
னென்று எஜமான் அவனைப் புகழ்ந்தான்; ஏனென்றால் *
வெளிச்சத்தின் பிள்ளைகளைப் பார்க்க இந்தப் பிரபஞ்
சியத்தின் பிள்ளைகள் தங்களுடைய சந்ததிக்குப் புத்தி
மான்களாயிருக்கிறார்கள். * எபேசி. ௫. ௮.

௯. நானும் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள்
மாறும்போது, உங்களை நித்திய கூடாரங்களிலே சேர்த்
துக்கொள்வாருண்டாக, அநீத லோகப் பொரு
ளாலே உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்.
* ௧. திமோ. ௬. ௰௭—௰௯.

௰. சிறியதிலே உண்மையுள்ளவன் அநேகத்திலும்
உண்மையாயிருக்கிறான்; சிறியதிலே அநீதனானவன்
அநேகத்திலும் அநீதனாயிருக்கிறான்.

௰௧. ஆனபோது நீங்கள் அநீத லோகப்பொருளி
லே உண்மையாயிராதேபோனால், மெய்யானதை
உங்களை நம்பிக் கைக்கொப்பிவிப்பவனார்.

௰௨. நீங்கள் அந்நிய காரியத்திலே உண்மையாயிரா
தேபோனால், உங்களுடையதை உங்களுக்குக் கொடுப்
பவனார்.

௰௩. ஒரு

௰௩ * ஒருஊழியக்காரனுமிரண்டெசமான்களுக்கூழியஞ்செய்யக்கூடாது; ஏனென்றால் ஒருத்தனைப்பகைத்துமற்றவனைச்சிநேகிப்பான்; அல்லது ஒருத்தனைச்சார்ந்துகொண்டு மற்றவனையசட்டைபண்ணுவான்; நீங்கள் பராபரனுக்கும் உலோகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்யக்கூடாதேயென்றார். * மத். ௬. ௨௪.

௰௪. ஆனாலிதுகளெல்லாத்தையும் * பணப்பிரியராகிய பரிசேயருங்கேட்டு அவர்பேரிலே முகங்கோணித்தார்கள். * மத். ௨௩. ௰௪.

௰௫. அவரோவென்றால் அவர்களுக்குச்சொன்னது: மனுஷர்முன்பாகத்தங்களை நீதிமான்களாகக் காட்டுகிறவர்கள் நீங்களே; ஆனால் பராபரனுங்கள் * இருதயங்களையறிந்திருக்கிறார்; ஏனென்றால் மனுஷருக்குள்ளே மேட்டிமையானது பராபரனுக்குமுன்பாக அருவருப்பாயிருக்குது. * சாமு. ௭. ௰.

௰௬. நியாயப்பிரமாணமுந்தீர்க்கதரிசிகளும் * யோவான்மட்டுக்குந்தான். அதுமுதல் பராபரனுடைய ராச்சியஞ்சுவிசேஷமாயறிவிக்கப்பட்டு யாவரும்வலுமையாயதுக்குள்ளேபுகுகிறார்கள்.

* மத். ௰௧. ௰௩.

௰௭. ஆனாலும் வேதத்திலே ஒரே அட்சரக்காலிலிருந்து போறதைப்பார்க்கிலும் வானமும் பூமியுமொழிந்து போறது லேசாயிருக்குது. * உ௧. ௩௩. மத். ௫. ௰௮.

௰௮ * எவன்தன்பெண்சாதியைத்தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணுகிறானோ அவன் விபசாரம்பண்ணுகிறான்; புருஷனாலே தள்ளப்பட்டவளை எவன் விவாகம்பண்ணுகிறானோ அவனும் விபசாரம்பண்ணுகிறான். * மத். ௫. ௩௨.

அயிசுரியவானுக்குமேழைலாசருவுக்குங்கண்ட வித்தியாசங்கள்.

௰௯. அயிசுரியமுள்ள ஒருமனுஷனிருந்தான்; அவனிரத்தாம்பரமும் மெல்லிய புடவையுந்தரித்துக்கொண்டு; அநுதினமுஞ்சம்பிரமமாய் வாழ்ந்திருந்தான்.

௨௰. ஆனால் லாசருவென்கிற நாமமுள்ள தரித்திரனொருத்தனிருந்தான்; அவன் புண்ணுகள் நிறைந்தவனாய் அவன்வாசலண்டையிலே கிடந்து;

௨௧. அயிசுரியவானுடைய பந்தியிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன்பசியையாற்ற ஆசையாயிருந்தான். ஆனால் நாய்களும்வந்து அவன்புண்களை நக்கிறது.

௨௨. அப்புறஞ்சம்பவித்ததேதென்றால்; தரித்திரன் மரித்து; தேவதூதராலே அபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய்விடப்பட்டான்; ஆனாலயிசுரியவானும் மரித்தடக்கப்பட்டான்.

௨௩. அவன் நரகத்திலே வேதினைகளிலிருக்கும் போது தன்கண்களை ஏறெடுத்து; தூரத்திலே அபிரகாமையும் அவன்மடியிலே லாசருவையுங்கண்டான்.

௨௪. அப்போது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் என்மேலே இரங்கி, லாசருவைத் தன் விரலின் நுனியைத் தண்ணீரிலே தோய்த்து என் நாவைக் குளிரப்பண்ண அனுப்பும், அதேனென்றால் * இந்தச்சுவாலையிலே வேதனைப்படுகிறேனென்று கூப்பிட்டான். * மாற்கு. ௯. ௪௪.

௨௫. ஆனால் ஆபிரகாம் சொன்னதாவது: மகனே, உயிரோடேயிருக்கக்கொள்ள நீ உன் * நன்மைகளையும் லாசரு அப்படியே தின்மைகளையும் அநுபவித்துத்தீர்ந்ததென்று நினைத்துக்கொள், இப்போது இவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். * ௬. ௨௪.

௨௬. இதுகளல்லாமல் இவ்விடத்திலிருந்து உங்களண்டைக்குக் கடந்துபோகவும், அல்லது அவ்விடத்திலிருந்து எங்களண்டைக்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பள்ளம் உறுதிப்பண்ணப்பட்டிருக்குதென்றான்.

௨௭. அப்போது அவன் சொன்னதாவது: அப்படியானால், தகப்பனே, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்ப உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

௨௮. ஏனெனில் எனக்கைந்து சகோதரர் உண்டு, அவர்களும் இந்த வேதனையிடத்துக்கு வாராதபடிக்கு அவன் அவர்களுக்குச் சாட்சியாய் அறிவிக்கத்தக்கதாகவேயென்றான்.

௨௯. ஆபிரகாம் அவனோடே: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளுமுண்டு, அவர்கள் அவர்களைக் கேட்கட்டுமென்றான்.

௩௰. அவனோவெனில்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்தொருத்தன் அவர்களண்டைக்குப் போனால் குணப்படுவார்களென்றான்.

௩௧. ஆனால் அவன் இவனோடே: அவர்கள் மோசேயையும் தீர்க்கதரிசிகளையுங் கேளாவிட்டால், மரித்தோரிலிருந்தொருத்தன் எழுந்தாலும் ஒப்பார்களென்று சொன்னானென்றார்.

௰௭. அதிகாரம்.

இடறல்களையும் இத்தகுச் செய்தவர்களையுங் குறித்துக் கிறிஸ்து சொன்னபுத்தி. மத். ௰௮. ௬. ௭.

அவர் சீஷருடனே சொன்னதாவது: இடறல்கள் வராதிருக்கிறது கூடாத காரியம், ஆனால் எவனாலே வருகுதோ, அவனுக்கய்யோ.

௨. அவன் இந்தச் சிறியரிலொருத்தனுக்கு இடறல் உண்டாக்குகிறதைப்பார்க்கிலும், அவன் கழுத்திலே எந்திரக்கல் தூக்கப்பட்டு அவன் சமுத்திரத்திலே தள்ளுண்டுபோகிறது அவனுக்குத் தாவிளை.

௩. நீங்கள் எச்சரிக்கையாயிருங்கோள், உன் சகோதரன் உனக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தானேயாகில்

அவனைக் * கடிந்துகொள், அவன் குணப்பட்டால், அவனுக்கு
மன்னி. * ௩. மோ. ௰௯, ௰௭. மத். ௰௮, ௰௫.

௪. அவன் ஒருநாளில் ஏழுவிசை உனக்கு விரோத
மாய்ப் பாவஞ்செய்து, ஒருநாளில் ஏழுவிசையும் உன்
னண்டை திரும்பிவந்து: குணப்படுகிறேனென்றால்,
அவனுக்கு மன்னிப்பாயாக என்றார்.

விசுவாசிகள் முகிவுமுடும் பொறுமையாய்த் தங்கள் வேலையைச் செய்யவேண்டுமென்பது.

௫. அப்போஸ்தலர் கர்த்தருடனே: விசுவாசத்தை
எங்களுக்கு வர்த்திக்கப்பண்ணுமென்றார்கள்.

௬. கர்த்தர் சொன்னதாவது: * கடுகுவிதையத்தனை
விசுவாசம் உங்களுக்கிருந்தால், நீங்கள் இந்த காட்டத்தி
மரத்துடனே: வேருடனே பிடுங்குண்டு கடலிலே நாட்
டப்பட்டுப்போவென்று சொன்னால், அது உங்களுக்குக்
கீழ்ப்படியும். * மத். ௰௭, ௨௰.

௭. ஆனால் உங்களில் ஒருவனுக்கு உழுகிற அல்லது
மேய்க்கிற வேலைக்காரன் ஒருவனிருந்தால், வயலி
லிருந்து வருகிற அவனுக்குடனே: வா, பந்தியிருவென்
பானோ.

௮. நீ எனக்குப் போசனத்தை ஆயத்தம்பண்ணி,
அரைகட்டிக்கொண்டு நான் போசித்துக் குடிக்குமட்டும்
எனக்கூழியஞ்செய், அதற்குப்பிறபாடு நீ போசித்துக்
குடிக்கலாமென்று அவனுடனே சொல்லுவானல்ல
வோ.

௯. தான் கற்பித்தகாரியங்களை அந்த வேலைக்காரன்
செய்ததுக்காக அவனை உபசரிக்கிறானோ, அதெனக்குத்
தோணாது.

௰. அப்படியே நீங்களும், உங்களுக்குக் கற்பிக்கப்
பட்டதுகளெல்லாம் நீங்கள் செய்தபிறபாடு: அப்பி
றயோசனமுள்ள ஊழியக்காறராயிருக்கிறோம், நாங்கள்
செய்யக்கடனாயிருந்ததைச் செய்தோமென்று சொல்
லுங்கோளென்றார்.

அவர் பத்துக் குஷ்டரோகிகளைக் குணமாக்கினது.

௰௧. பின்னுஞ்சம்பவித்ததேதென்றால் அவர் யெரு
சலேமுக்குப் பயணம்பண்ணுகையில், அவர் சமாரி
யாவையுங் கலிலேயாவையும் நடுவழியாய் உருவ
நடந்துவந்தார்.

௰௨. அவர் ஒரு கிராமத்துக்குள் பிரவேசித்தபோது,
குஷ்டரோகமுள்ள பத்து மனுஷர் அவருக்கெதிராக
வந்து, தூரத்திலே நின்று:

௰௩. யேசு ஐயரே, எங்கள்மேலிரங்குமென்று
சத்தமிட்டார்கள்.

௰௪. அவர் கண்டு அவர்களுடனே: * நீங்கள் போய்
உங்களை ஆசாரியர்களுக்குக் காண்பியுங்கோளென்
றார், அப்போ சம்பவித்ததேதென்றால் அவர்கள் போ
கையில் சுத்தமானார்கள். * ௩. மோ. ௰௪, ௨. ௩.

௰௫. ஆனால

௰௫. ஆனால் அவர்களில் ஒருத்தன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பி வந்து மகா சத்தத்துடனே பராபரனை மகிமைப்படுத்தி,

௰௬. அவருடைய பாதத்தண்டையிலே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினன். அவன் சமாரியனாயிருந்தான்.

௰௭. ஆனால் யேசு பிரத்தியுத்தாரமாக: பத்துப் பேர் சுத்தமானதில்லையோ, அந்த ஒன்பது பேரோ எங்கே.

௰௮. இந்த அந்நிய சாதியானேயொழிய மற்றொருத்தனும் பராபரனுக்கு மகிமை செலுத்துவதற்குத் திரும்பி வரக் காணோமோவென்று சொல்லி,

௰௯. அவனுடனே: எழுந்திருந்து போ, உன் விசுவாசம் உன்னை ரட்சித்ததென்றார்.

பராபரனுடைய ராட்சியம் எப்போ வருமென்று கேட்கப்பட்டபோது அவர் பண்ணின பிரசங்கம்.

௨௰. அவர் பரிசேயரால்: பராபரனுடைய ராட்சியம் எப்போ வருமென்று கேட்கப்பட்டு, அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: பராபரனுடைய ராட்சியம் கண்ணாரக் காணவராது.

௨௧. இதோ இங்கே, அதோ அங்கேயென்று சொல்லவுமில்லை, ஏனென்றால் இதோ, பராபரனுடைய ராட்சியம் * உங்களுக்குள்ளேயிருக்குதென்றார். * ௰௧, ௨௰.

௨௨. ஆனால் சீஷருடனே அவர் சொன்னதாவது: நாட்கள் வரும், அப்போ நீங்கள் மனுஷகுமாரனுடைய நாட்களில் ஒன்றைக் காணஆசையாயிருந்தும் காணாதே போவீர்கள்.

௨௩. உங்களுடனே: * இதோ இங்கே அதோ அங்கே என்பார்கள், ஆனால் நீங்கள் போகாமலும் பின்றொடராமலுமிருங்கோள். * மத். ௨௪, ௨௩.

௨௪. ஏனென்றால் வானத்தின் இந்தமுனையிலே எழும்பி மின்னுகிற மின்னல் வானத்தின் அந்தமுனைமட்டும் பிரகாசிக்குமாப்போலே மனுஷனுடைய குமாரனும் தம்முடைய நாளிலிருப்பார்.

௨௫. ஆனால் * முந்தி அவர் அநேகம் பாடனுபவித்து, இந்தச் சந்ததியினாலே ஆகாதவனென்று தள்ளப்பட வேண்டியதாயிருக்குது. * மத். ௰௬, ௨௧.

௨௬. * நோவாவின் நாட்களில் எப்படியிருந்ததோ, அப்படியே மனுஷகுமாரனுடைய நாட்களிலுமிருக்கும். * மத். ௨௪, ௩௭—௩௯.

௨௭. நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்மட்டும் போசித்துக் குடித்தார்கள், பெண் கொண்டு கொடுத்தார்கள், சலப்பிரளயம் வந்து அனைவரையும் அழித்துப்போட்டுது.

௨௮. லோத்துடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும், போசித்துக் குடித்தார்கள், கொண்டு விற்றார்கள், நாட்டினார்கள் கட்டினார்கள்.

௨௯. ஆனால் லோத்து சோதோமைவிட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து * அக்கினியுங் கெந்தகமும் வருஷித்து அவ்வனைவரையும் அழித்துப்போட்டது.
* ௧. மோ. ௰௯, ௨௪. ௨௫.

௩௰. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியேயிருக்கும்.

௩௰௧. அந்நாளிலே வீட்டின்மேலிருக்கிறவன் தன் பண்டங்கள் வீட்டுக்குள்ளிருந்தால், அதுகளை எடுத்துக்கொண்டுபோகும்படிக்கு இறங்கவேண்டாம். அப்படியே வயலிலிருக்கிறவனும் பின்னிட்டுத் திரும்பவும் வேண்டாம்.

௩௰௨. லோத்துடைய * பெண்சாதியை நினையுங்கோள். * ௧. மோ. ௰௯, ௨௬.

௩௰௩. * எவனாகிலுந் தன் ஜீவனை ரெட்சித்துக்கொள்ளப்பார்த்தால் அதைக் கெடுத்துப்போவான், எவனாகிலும் அதைக் கெடுத்தால், அதை உயிர்ப்பித்துக்கொள்ளுவான். * யோவா. ௰௨, ௨௫.

௩௰௪. அந்த ராத்திரியிலே ஒரே படுக்கையின்மேல் இரண்டுபேர் இருப்பார்கள், ஒருத்தன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான்.

௩௰௫. இரண்டுபேர் ஒக்க ஏகமாய் மாவரைப்பார்கள், ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள்.

௩௰௬. இரண்டுபேர் வயலிலிருப்பார்கள், ஒருத்தன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவானென்று அவர்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.

௩௰௭. அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: எங்கே, ஆண்டவரே என்றார்கள். அவர் அவர்களோடே: பிணம் எங்கேயிருக்குதோ, அங்கே கழுகுகள் வந்துகூடுமென்றார். * மத். ௨௪, ௨௮.

௰௮. அதிகாரம்.

ஓய்க்கரியாமல் ஜெபம்பண்ணுவதற்கான உவமை.

ஓய்க்கரியாமல் * எப்போதுஞ் ஜெபம்பண்ணவேண்டுமென்கிறதுக்கான உவமையையும் அவர்களுக்குச் சொன்னார். * ௧. தெச. ௫, ௰௭.

௨. அதாவது: பராபரனுக்குப் பயப்படாதவனும் மனுஷருக்கு அஞ்சாதவனுமாகிய ஒரு நியாயாதிபதி ஒரு பட்டணத்திலிருந்தான்.

௩. அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையிருந்தாள், அவள் அவனிடத்திலே வந்து: என் விரோதக்காரனென்னை விலக்கனுக்கு நியாயஞ்செய்யுமென்றாள்.

௪. அவனுக்கு வெகுநாளாய் மனதில்லாதிருந்தது: ஆனால் பிற்பாடு அவன்: நான் பராபரனுக்குப் பயப்படாமலும் மனுஷருக்கு அஞ்சாமலுமிருந்தும்,

௫. இந்த விதவை என்னைப் பிரயாசப்படுத்துகிறபடியினாலே நான் அவளுக்கு, அவள் முடிக்கத்தும் வந்து என்னுக்கு உபத்திரமப்பண்ணாதபடிக்கு நியாயஞ்செய்

வேனென

இவளென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டா னென்றார்.

௬. பின்னுங் கர்த்தர் சொன்னதாவது: அனீதமுள்ள நியாயாதிபதி சொல்லுகிறதைக் கேளுங்கோள்.

௭. பராபரனானவர் தம்மை நோக்கி ராவும் பகலுங் கூப்பிடுகிற தாம் தெரிந்துகொண்டவர்களைப் பற்றி மேலும் தாமசமாயிருந்து, அவர்களுக்கு நியாயஞ் செய்யாதிருப்பாரோ.

௮. சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வாரென்று உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆகிலும் மனுஷனுடைய குமாரன் வருகிறபோது பூமியிலே விசுவாசத்தைக் கண்டுபிடிப்பாரோ என்றார்.

பெருமையுள்ள பரிசேயன், தாழ்மையுள்ள ஆயக்காறன்.

௯. பின்னுந் தாங்கள் நீதிமான்களென்று நம்பி மற்றவர்களை அற்பமாயெண்ணுகிற சிலருடனே அவர் சொன்ன உவமையாவது:

௰. ரெண்டு மனுஷர் செபம்பண்ணத் தேவாலயத்துக்குப் போயிருந்தார்கள், ஒருத்தன் பரிசேயன், மற்றவன் ஆயக்காறன்.

௰௧. * பரிசேயன் நின்று தனக்குள்ளே பண்ணின செபமாவது: பராபரனே, நானப்பகாறர், அனீதக்காறர், விபசாரருமாகிய மற்ற மனுஷரைப் போலவும் இந்த ஆயக்காறனைப்போலவும் இல்லாதனைக்குறித்து உமக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறேன்.
மத். ரு. ௨௰.

௰௨. வாரத்துக்கிரண்டுதரம் உபவாசிக்கிறேன், எனக்குக் கைவசமான தெல்லாத்திலும் பத்திலொன்று செலுத்துகிறேனென்றான்.

௰௩. ஆயக்காறனோ தூர நின்று, தன் கண்களை மேலாயவானத்துக்கு நேரேடுக்க மனதாயிராமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: பராபரனே, பாவியாகிய என்பேரிலே கிருபையுள்ளவராகுமென்றான்.

௰௪. அவனைப்பார்க்கிலுமிவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குப் போனானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் * தன்னைத்தா னுயர்த்துகிறவனெல்லாந் தாழ்த்தப்படுவான், தன்னைத் தான் தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவானென்றார்.
* மத். ௨௩. ௰௨.

குழந்தைகளைக் கிறீஸ்துவண்டைக்குக் கொண்டுவரப்பட்டது. மத். ௰௯. ௰௩—௰௫. மாற்கு. ௰. ௰௩—௰௬.

௰௫. குழந்தைகளையும், அவர் அதுகளைத் தொட்டுக் கொள்ளத்தக்கதாக, அவரண்டைக்குக் கொண்டுவந்தார்கள், ஆனால் சீஷர்கள் அதைக்கண்டு அவர்களை உதம்பினார்கள்.

௰௬. யேசுவோவென்றால் அதுகளைக் கிட்டக் கொண்டு வரச்சொல்லிச் சொன்னதாவது: * பிள்ளைகளை என்

ன்னண்டைக்குவரட்டும், அதுகளுக்குத்தடை பண்ணா தேயுங்கோள், ஏனென்றால் பராபரனுடைய ராச்சியம் அப்படிக்கொத்தவர்களுடையதாயிருக்குது.

* மத. ௰௮. ௩.

௰௭. மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன் எவனாகிலுங் குழந்தையைப்போலே பராபரனுடைய ராச்சியத்தையேற்றுக்கொள்ளாவிட்டால், அதுக் குள்ளப்பிரவேசியாதிருப்பானென்றார்.

அயிசுவரியமுள்ள ஒருத்தனுக்கவர்நல்ல புத்தியைச் சொன்னது. மத. ௰௯. ௰௬—௨௬. மாற்கு. ௰. ௰௭—௨௭.

௰௮. தலைவனொருத்தன் அவரை: நல்ல போதகரே நானென்னத்தைச்செய்து நித்தியசீவனைச்சுதந்தரித்துக் கொள்ளுவேனென்றுகேட்டான்.

௰௯. ஆனால் யேசுஅவனோடே: நீஎன்னை நல்லவ ரென்கிறதென்ன, பராபரன் ஒருவரேயல்லாமல் ஒருவனும்நல்லவனல்லவே.

௨௰. கற்பனைகளை அறிவாய்: விபசாரம்பண்ணா யாக, கொலைசெய்யாயாக, களவுசெய்யாயாக, பொய்ச்சாட்சிசொல்லாயாக, உன் தகப்பனையும் உன்தாயையுங்கனம்பண்ணு என்றார்.

௨௧. அவனோவென்றால்: இதுகளெல்லாம் என் சிறுவயதுதுவக்கக் கைக்கொண்டிருக்கிறேனென் றான்.

௨௨. ஆனால்யேசுஇதுகளைக்கேட்டு, அவனோடே: இன்னமொன்றுஉனக்குக்குறையுது, உனக்குள்ளதெல் லாத்தையும்விற்று, தரித்திரருக்குப்பகிர்ந்துகொடு, * அப்போ பரமண்டலத்திலே உனக்குப் பொக்கிஷ முண்டு, நீயோவென்றால்வந்து என்னைப் பின்செல் லென்றார். * மத. ௬. ௨௰.

௨௩. அவனோவென்றால் இதுகளைக்கேட்டு வெகு துக்கமடைந்தான், ஏனென்றால்மகா அயிசுவரியமுள் ளவனாயிருந்தான்.

௨௪. அவன் வெகுதுக்கமடைந்ததை யேசுகாணகி றபோதோவென்றால் அவர்சொன்னதாவது: ஆஸ்தியுள்ளவர்கள்பராபரனுடைய ராச்சியத்துக்குள்ளே பிரவேசிப்பதெத்தனை அரிதாயிருக்குது.

௨௫. அயிசுவரியவான்பராபரனுடையராச்சியத்துக் குள்ளப்பிரவேசிப்பதைப்பார்க்கிலும் ஒட்டகம் ஊசி யின்காதிலேநுழைவதெளிதாயிருக்குமென்றார்.

௨௬. அதைக்கேட்டவர்கள்: அப்படியானால், ஆர் ரெட்சிக்கப்படக்கூடுமென்றார்கள்.

௨௭. ஆனால்அவர்: மனுஷராலேகூடாததுகள் பரா பரனாலேகூடுமென்றார்.

பராபரனுடைய ராச்சியத்தின்நிமித்தியம் எதையாகி லும்விட்டுவிட்டவனுக்கு வரும்பலன். மத. ௰௯. ௨௭. ௩௰. மாற்கு. ௰. ௨௮—௩௧.

௨௮. பேதுரு

௨௮. பேதுருவோவென்றால்: இதோ, நாங்கள் எல்லாத்தையும் விட்டு உம்மைப் பின்சென்றோமென்றான்.

௨௯. அப்போதவர் அவர்களுக்குச் சொன்னதாவது: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், பராபரனுடைய ராச்சியத்தின் நிமித்தியமாக வீட்டையாகிலும், பெற்றாரையாகிலும், சகோதரரையாகிலும், பெண்சாதியையாகிலும், பிள்ளைகளையாகிலும் விட்டுவிட்ட எவனும்,

௩௰. இம்மையிலே வெகுவத்தனையும், மறுமையிலே நித்திய சீவனையும் அடையாதிரானென்றார்.

தாம் தமக்கு வரும்பாடுகளை முன்னறிவித்தது.
மத. ௨௰, ௰௭—௰௯. மாற். ௰, ௩௰௨—௩௰௪.

௩௰௧. ஆனாலவர் பன்னிருவரைச் சேர்த்துக்கொண்டு அவர்களோடே சொன்னதாவது: இதோ, எருசலேமுக்குப் போயேறுகிறோம், அங்கே மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டதெல்லாம் நிறைவேறும். * சங். ௨௨.

௩௰௨. அதெப்படியென்றால் புறசாதிகளுக்குக் கொப்புக்கொடுக்கப்பட்டு, பரியாசமும் நிந்தையும் அடைந்து துப்பப்படுவார்.

௩௰௩. அவனை வாரினாலடித்துக் கொன்றுபோடுவார்கள், மூன்றாம்நாளிலோ திரும்ப எழுந்திருப்பாரென்றார்.

௩௰௪. அவர்கள் இதுகளிலொன்றையும் உணர்ந்ததில்லை. இந்த வார்த்தை அவர்களுக்கு மறைபொருளாயிருந்தது, சொல்லப்பட்டதுகளை அறியாதேயிருந்தார்கள்.

அவர் ஒரு குருடனுக்குப் பார்வைகொடுத்தது.

௩௰௫. பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால், அவர் எரிகோவுக்குச் சமீபிக்கையில், * வழியண்டையிலே ஒரு குருடன் உட்கார்ந்திருந்து கொண்டிருந்தான். * மத. ௨௰, ௨௯. ரூ. மாற். ௰, ௪௬. ரூ.

௩௰௬. அவன் சனங்கள் நடக்கிறதைக் கேட்டு, இதேதென்று விசாரித்தான்.

௩௰௭. அவனுக்கு: யேசுநாசரேத்தான் போகிறாரென்று அறிவித்தார்கள்.

௩௰௮. அப்போதவன்: யேசுவே தாவீதின் குமாரனே, எனக்கிரங்குமென்று கூப்பிட்டான்.

௩௰௯. முன்போனவர்கள் அவனை அமர்த்திருக்கச் சொல்லி அதட்டினார்கள், ஆனாலவனோ வெகு அதிகமாய்: தாவீதின் குமாரனே, எனக்கிரங்குமென்று சத்தமிட்டான்.

௪௰. யேசுவோவென்றால் நின்று அவனைத் தம்மண்டைக்குக் கூட்டிவரச் சொன்னார். அவன் சேர்ந்து வந்தபோது அவர்:

௪௰௧. நானுனக்கென்ன செய்ய மனதாயிருக்கிறாய் என்று அவனைக் கேட்டார். அவன்: நான் பார்வையடைய, ஆண்டவரே என்றான்.

௪௨. அப்போ யேசு அவனுடனே: பார்வை அடை, உன் விசுவாசம் உன்னை ரட்சித்ததென்றார்.

௪௩. உடனே பார்வை அடைந்து, பராபரனை மகிமைப்படுத்திக்கொண்டே அவரைப் பின்சென்றான். சனமெல்லாம் அதைக் கண்டு பராபரனுக்குத் துதி செலுத்தினார்கள்.

௰௯. அதிகாரம்.

சகேயுணப்பட்டது

அவர் யெரிகோவில் பிரவேசித்து உருவ நடந்துவந்தார்.

௨. இதோ சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷனிருந்தான், அவன் ஆயக்காறரில் தலைவனும் அய்சுரியவானுமாயிருந்தான்.

௩. அவன் யேசு ஆரென்று அவரைப் பார்க்கவனைத் தேடினான், ஆனால் அவன் சரீர அளவிலே குள்ளனானபடியினாலே, கும்பத்தோடு அவனுக்குக் கூடாதே போச்சுது.

௪. அப்போ அவன் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கிறதுக்கு ஒரு காட்டத்திமரத்தின் மேலே ஏறினான், ஏனெனில் அந்த வழியாய் அவர் வருகிறவராயிருந்தார்.

௫. யேசு அந்த இடத்துக்கு வந்தபோது, அண்ணாந்து பார்த்து அவனைக் கண்டு, அவனுடனே: சகேயுவே, தீவிரமாய் இறங்கு, ஏனெனில் இன்றைக்கு நான் உன் வீட்டிலே யிருக்கவேணுமென்றார்.

௬. அவன் தீவிரமாயிறங்கி, அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டான்.

௭. அதைக் கண்டு எல்லாரும், * பாவியான மனுஷனிடத்திலே தங்கப் பிரவேசித்தாரென்று முறுமுறுத்தார்கள். * ௰௫, ௨.

௮. ஆனால் சகேயு நின்று, கர்த்தருடனே: இதோ ஆண்டவரே, என் ஆஸ்திகளிலே பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருத்தனிடத்திலே எதையாகிலும் அநியாயமாய் வாங்கியிருந்தால், நாலத்தனையாய்த் திரும்பச் செலுத்துகிறேனென்றான்.

௯. யேசு அவனுடனே: இன்றைக்கு இந்த வீட்டுக்கு ரட்சிப்புண்டாச்சுது, ஏனென்றால் இவனும் அபிரகாமுடைய குமாரனாயிருக்கிறான்.

௰. ஏனெனில் * கெட்டுப்போனதைத் தேடவும் ரட்சிக்கவும் மனுஷனுடைய குமாரன் வந்தாரென்றார்.
* மத். ௯, ௰௩. ௰௮, ௰௧. ௧. தீமோ. ௧, ௰௫.

சேமான் பத்து ஊழியக்காறருக்குக் கொடுப்பித்த திரவிய உவமை.

௰௧. அவர்கள் இதுகளைக் கேட்டிருந்தபோது, இவர் எருசலேமுக்குச் சமீபித்திருந்தபடியினாலும், பராபரனுடைய ராட்

சியத்

சீயனுக்கிரமாகக் காணப்படுமென்று அவர்கள் நினைத்தபடியினாலுமொரு உவமையைச் சொன்னார்.

௰௨. அவர் சொன்னதாவது: * உயர்குல மனுஷனொருத்தன், ஒரு ராட்சியத்தைத் தனக்குக் கைக்கொண்டு திரும்பி வருகிறதுக்குத் தூரத்தேசத்துக்குப் போனான். * மத். ௨௫। ௰௪—௩௰.

௰௩. போறபோது அவன் தன்னுடைய பத்து ஊழியக்காரரை அழைத்து, அவர்களுக்குப் பத்து அத்தல் திரவியங் கொடுத்து, அவர்களுடனே: நான் வருமட்டாகத் தொழில் பண்ணுங்கோளென்றான்.

௰௪. ஆனால் அவனூரார் அவனைப் பகைத்து, இவன் நம்முடமேலே ராசாவாயிருக்கிறதுக்கு மனதில்லையென்று, அவன் பிறகே தானாபத்தியத்தை அனுப்பினார்கள்.

௰௫. பிறபாடு சம்பூவித்தத்தேகொண்டு, அவன் ராட்சியத்தைக் கட்டிக்கொண்டு திரும்பி வந்தபோது, தான் திரவியங்கொடுத்திருந்த ஊழியக்காரரை, அவனவன் தொழில் பண்ணித் தேடினதெத்தனையென்றறிய, தன்னண்டைக்கழைக்கச்சொன்னான்.

௰௬. அப்படியே முந்தினவன் சேர்ந்து வந்து: ஆண்டவனே, உம்முடைய அத்தல் பத்து அத்தலை ஆதாயம் பண்ணினதென்றான்.

௰௭. அப்போ அவனுடனே: நல்லது தாசனே, உத்தம ஊழியக்கா, அற்பத்திலே உண்மையாயிருந்தபடியினாலே பத்துப் பட்டணங்கள் மேல் அதிகாரியாயிருக்க வேணுமென்றான்.

௰௮. ரெண்டாம் ஊழியக்காரனும் வந்து: ஆண்டவனே, உம்முடைய அத்தல் ஐந்து அத்தலை ஆதாயம் பண்ணினதென்றான்.

௰௯. அப்போ அவனுடனேயும்: நீயும் ஐந்து பட்டணங்கள் மேலதிகாரியாயிருக்க வேணுமென்றான்.

௨௰. வேறொருத்தன் வந்து: ஆண்டவனே, இதோ உம்முடைய அத்தல், இதை ஒரு சீலையிலே வைத்துக்கொண்டிருந்தேன்.

௨௰௧. ஏனென்றால் நீர் வைக்காததை எடுக்கிறவரும், நீர் விதைக்காததை அறுக்கிறவருமான கடின மனுஷனென்று உமக்குப் பயந்திருந்தேனென்றான்.

௨௰௨. ஆனால் அவனவனுடனே: * உன் வாயினாலே உன்னைத் தீர்க்கிறேன், பொல்லாத ஊழியக்காரா, நான் வைக்காததை எடுக்கிறவனும் நான் விதைக்காததை அறுக்கிறவனுமான கடின மனுஷனென்றறிந்திருந்தாயே, * மத். ௰௨। ௩௭.

௨௰௩. பின்னை ஏன் என் திரவியத்தைக் காசுக்கடையிலே கொடாதே போனாய், அப்போ நான் வந்து வட்டியுடனே அதை வரப்பற்றிக்கொள்ளுவேனென்று சொல்லி,

௨௰௪. அண்டை நிற்கிறவர்களுடனே: அந்த அத்தலை அவன் கையிலே வாங்கி, பத்து அத்தலுள்ளவனுக்குக் கொடுங்கோளென்றான்.

௨௫. அப்பொழுது அவனுடனே: ஆண்டவனே, அவனுக்குப் பத்து இறாத்தலிருக்குதேயென்றார்கள்.

௨௬. ஆனாலவன் சொன்னது: உள்ளவனுக்குக் கொடுக்கப்படும், இல்லாதவனுக்கோவென்றால் அவனுக்குள்ளதும் வாங்கப்படுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௭. பின்னையும் நான் தங்கள் மேல் ராசாவாயிருக்க மனதில்லாத அந்த என்னுடைய சத்துருக்களை இங்கே கொண்டுவந்து, என் கண்முன்பாக வெட்டிப்போடுங்கோளென்று சொன்னார்.

௨௮. இதுகளைச் சொல்லி அவர் யெருசலேமுக்குப் போய முன்னுக்கு நடந்தார்.

கிறிஸ்து யெருசலேமுக்குள் பிறவேசம் பண்ணினது *மத். ௨௧, ௧—௰௧. மற்கு. ௰௧, ௧—௰. யோவா. ௰௨, ௨—௰௯.

௨௯. அப்போ சம்பவித்ததாவது, அவர் ஒலிவமலையென்னப்பட்ட பறுவதத்துக்கருகான பெத்பகேக்கும் பெத்தானியாவுக்குஞ் சமீபித்தபோது அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை அனுப்பி, சொன்னதாவது:

௩௰. எதிராகவிருக்கிற ஊருக்குப் போங்கோள், அதற்குள் பிறவேசித்து, மனுஷரொருத்தனுமொருக்காலுமேறியிராத கழுதைக்குட்டி கட்டியிருக்கிறதைக் காண்பீர்கள், அதை அவிழ்த்துக் கொண்டுவாருங்கோள்.

௩௧. அதை நீங்களவிழ்க்கிறீர்களென்று யாதொருத்தனுங்களைக் கேட்டால், அது கர்த்தருக்குத் தேவையாயிருக்குதென்கிறதாய் அவனுக்குச் சொல்லுங்கோளென்றார்.

௩௨. அனுப்பப்பட்டவர்கள் போய் அவர் தங்களுக்குச் சொன்னபிரகாரமாகக் கண்டுபிடித்தார்கள்.

௩௩. அவர்கள் அதை அவிழ்க்கும்போது, அதின் சேமான்கள் அவர்களுடனே: அதையேன் அவிழ்க்கிறீர்களென்றார்கள்.

௩௪. அவர்களோவென்றால்: அது கர்த்தருக்குத் தேவையாயிருக்குதென்று சொல்லி,

௩௫. அதை யேசுவினிடத்துக்குக் கொண்டுவந்து, தங்கள் வஸ்திரங்களை அதின்மேல் போட்டு, யேசுவை அதின்மேலேற்றினார்கள்.

௩௬. அவர் போகையில், தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்துப்போட்டார்கள்.

௩௭. அவர் ஒலிவமலையிறங்குங்கிட்டச் சமீபித்தபோதோவென்றால், சீஷருடைய திரளெல்லாம், தாங்கள் கண்ட சகல வல்லமைகளுக்காகவுஞ் சந்தோஷப்பட்டவர்களாய், பராபரனை மகா சத்தத்துடனே துதிக்கத் துவக்கி:

௩௮ *கர்த்தருடைய நாமத்திலே வருகிற ராசா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரமண்டலத்தில் சமாதானமும் உன்னதங்களிலே மகிமையும் உண்டாவதாக என்றார்கள். *சங். ௱௰௮, ௨௰௬.

௩௯. அப

௩௯. அப்போது கும்பலிலேயிருந்த பரிசேயர் சிலர் அவருடனே: போதகரே, உம்முடைய சீஷரை அதட்டுமென்றார்கள்.

௪௰. ஆனால் அவர் அவர்களுக்குப் பிரதியுத்தாரமாக: இவர்கள் மவுனமாயிருந்தால் கல்லுகள் கூப்பிடுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.

அவர் எருசலேமுக்காக அழுதது.

௪௧. அவர் சமீபித்தபோது பட்டணத்தைப் பார்த்து அதின்மேலழுது:

௪௨. நீயும் இந்த உன்னுடைய நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கானதுகளை * அறிந்தாலதாவளா; இப்போதோவெனில் உன் கண்களுக்கு மறைவாயிருக்குது. * ரு. மோ. ௩௨, ௨௯.

௪௩. அதேதென்றால், * உன்னைச் சந்திக்குங் காலத்தை நீ அறியாமற்போனபடியினாலே உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதிற்போட்டு உன்னை வளைந்துகொண்டு, எங்கும் உன்னை நெருக்கிப்பிடித்து, * மத். ௨௩, ௩௭.

௪௪. உன்னையும் உன்னிலிருக்கிற உன் பிள்ளைகளையுந் தரையாக்கிப்போட்டு, உன்னில் * கல்லின்மேற் கல்லிருக்கவொட்டாதிருக்கும் நாட்கள் உன்மேலே வருமென்றார். * ௨௧, ௬.

விற்பாரையுங் கொள்வாரையும் அவர் தேவாலயத்திலிருந்து துரத்தினது. மத். ௨௧, ௰௨—௰௩. மாற்கு. ௰௧, ௰௫.

௪௫. அவர் தேவாலயத்துக்குள் பிரவேசித்து, அதிலே விற்கிறவர்களையுங் கொள்ளுகிறவர்களையும் புறம்பே துரத்தத் தொடங்கி, அவர்களுடனே:

௪௬. * நம்முடைய வீடு செபத்தின் வீடாயிருக்குமென்றெழுதியிருக்குது; ஆனால் நீங்கள் அதை ** கள்ளர் குகையாக்கினீர்களென்றார். * யெச. ௫௬, ௭. ** யெரே. ௭, ௰௧.

௪௭. அவர் அனுதினமுந் தேவாலயத்திலே உபதேசித்துக்கொண்டிருந்தார். ஆனால் பிரதான ஆசாரியர்களும் வேதபாரகருஞ் சனத்தின் முப்பரும் அவரைக் கொன்றுபோட வகைதேடி,

௪௮. அதை எப்படிச் செய்வோமென்று காணாமற்போனார்கள்; ஏனென்றால் சனமெல்லாம் அவரைக் கேட்டு அண்டிக்கொண்டிருந்தது.

௨௰. அதிகாரம்.

யேசுவினுடைய அதிகாரத்தைக் குறித்து முப்பர்கள் வந்து தர்க்கித்தது. மத். ௨௧, ௨௩—௨௭. மாற்கு. ௰௧, ௨௭. ௱.

அந்நாட்களில் ஒரு நாளிலே சம்பவித்ததேதென்றால், அவர் தேவாலயத்திலே சனத்தை உபதேசித்து,

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறபோது, பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும் மூப்பரோடுங்கூட வந்து நின்று,

௨. அவருடனே: நீர் எந்த அதிகாரத்தினாலே இதுகளைச் செய்கிறீர், உமக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தவர் ஆரென்று எங்களுக்குச் சொல்லுமென்றார்கள்.

௩. அவரோவென்றால் அவர்களுக்குப் பிரத்தியுத்தரமாக: நானும் உங்களை ஒரு வார்த்தையைக் கேட்பேன், அதை எனக்குச் சொல்லுங்கோள்.

௪. யோவானுடைய ஞானஸ்நானம் பரமண்டலத்தினாலே உண்டாயிருந்ததோ, மனுஷராலே உண்டாயிருந்ததோ என்றார்.

௫. ஆனால் அவர்கள் தங்களுக்குள்ளே யோசனைபண்ணி: பரமண்டலத்தினாலே என்றோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசியாதே போனீர்களென்பார்.

௬. மனுஷராலென்றோமேயானால் சனமெல்லாம் நம்மைக் கல்லெறியும், ஏனென்றால் யோவானைத் தீர்க்கதரிசியென்று நம்பியிருக்கிறார்களென்று சொல்லி,

௭. எதினாலே உண்டானதென்று அறியோமென்று பிரத்தியுத்தரஞ் சொன்னார்கள்.

௮. அப்பொழுது யேசு அவர்களுடனே: நானும் எந்த அதிகாரத்தினாலே இதுகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேனென்றார்.

பொல்லாத திராட்சத்தோட்டக்காரர் உவமை.
மத். ௨௧। ௩௩. ஹ. மாற்கு. ௰௨। ௧—௰௨.

௯. பின்பு அவர் சனத்துடனே சொல்லத்துவக்கின உவமையாவது: ஒரு மனுஷன் திராட்சத்தோட்டத்தை நாட்டி, அதைத் திராட்சத்தோட்டக்காரருக்கு விட்டு, வெகுகாலங்களாய்ப் புறதேசத்திலே போயிருந்தான்.

௰. கருணைக்காலத்திலே அந்தத் தோட்டக்காரர் திராட்சத்தோட்டத்தின் கனியிலே சிலதைத் தனக்குக் கொடுத்தனுப்ப, அவன் ஒரு ஊழியக்காரனை அவர்களிடத்துக்கனுப்பினான், ஆனால் தோட்டக்காரர் அவனை அடித்து வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள்.

௰௧. அவன் வேறே ஒரு ஊழியக்காரனைத் திரும்பவும் அனுப்பினான். அவர்கள் அவனையும் அடித்து நிந்தைப்படுத்தி வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள்.

௰௨. அவன் மூன்றாம் ஊழியக்காரனைத் திரும்பவும் அனுப்பினான், ஆனால் அவர்கள் அவனையுங் காயப்படுத்தித் துரத்திவிட்டார்கள்.

௰௩. அப்பொழுது திராட்சத்தோட்டத்துக்கெசமான்: நானென்ன செய்வேன், என் பிரியமான குமாரனை அனுப்புவேன், அவனையாகிலுங் கண்டு கூசுவார்களென்றான்.

௰௪. ஆனால

யச. ஆனாலே தோட்டக்காரர் அவனைக் கண்டபோது: இவன் சுதந்திரவாளியாயிருக்கிறான்; சுதந்திரம் நம்முடையதாகும்படிக்கு இவனைக் கொல்லுவோம் வாருங்கோளென்று தங்களுக்குள்ளே யோசனைபட்டு;

யரு. அவனைத் திராட்சத்தோட்டத்துக்கு வெளியே தள்ளிக் கொன்றுபோட்டார்கள்; இப்போது அந்தத் திராட்சத்தோட்டத்துக்குச் சமர்த்தன் அவர்களை என்ன செய்வார்.

யசா. வந்து இந்தத் தோட்டக்காறரைச் சங்கரித்துத் திராட்சத்தோட்டத்தை அன்னியருக்குக் கொடுப்பாரென்றார்; அவர்கள் அதைக் கேட்டு: அப்படியாகாதிருப்பதாகவென்றார்கள்.

யஎ. ஆனாலே அவர் அவர்களை நோக்கிப்பார்த்து: இப்பொழுது வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே கோடிக்குத் தலையான கல்லாச்சுதென்றெழுதியிருக்கிறதென்ன.

யஅ. அந்தக்கல்லின்மேல் விழுகிறவனெல்லாம் நொறுங்கிப்போவான்; அதோ அவனெவன்மேல் விழுகுதோ அவனை நசுக்கடிக்குமென்றார்.

* யேச. அ. யச. யரு.

யகூ. அந்நேரத்திலே தானே பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும் அவர் மேல் கைகளைப் போடவகைதேடி; சனத்துக்குப் பயந்திருந்தார்கள். ஏனெனில் இந்த உவமையைத் தங்கள் மேலே சொன்னாரென்றறிந்தார்கள்.

ராயனுடைய வரிக்காசைப் பற்றிச் சொன்ன உத்தரவு. மத். உஉ. யரு—உஉ. மாற். யஉ. யங—யஎ.

உய. அவர்கள் சருப்பிள்ளையாய்க் காத்திருந்து; தாங்கள் நீதிமான்களென்று மாயம்பண்ணும் வேவுகாரராகக் களை; அவரை வசனத்திலே குற்றம்பிடிக்கப்பண்ணுந்துரையின் ஆதிக்கத்துக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்புக்கொடுப்பதற்குமாக; அனுப்பினார்கள்.

உக. இவர்கள்: போதகரே; நீர் நிதானமாய்ப் பேசி உபதேசிக்கிறீரென்றும்; முகமாட்டமில்லாமல் சத்தியமாய்ப் பராபரனுடைய வழியைப் போதிக்கிறீரென்றும் அறிந்திருக்கிறோம்;

உஉ. ராயனுக்கு வரிகொடுக்கிறது எங்களுக்கு நியாயமோ அல்லவோவென்று அவரைக் கேட்டார்கள்;

உங. அவரோவென்றால் அவர்களுடைய தந்திரங்களைக் கண்டறிந்து; அவர்களுடனே: நீங்களென்னைச் சோதிப்பானேன்.

உச. பணத்தை எனக்குக் காண்பியுங்கோள்; அதுக்காருடைய சுருபமும் மேலெழுத்துமிருக்குதென்றார். அவர்கள் பிரத்தியுத்தாரமாக: ராயனுடையதென்றார்கள்.

உரு. அப்போ அவர் அவர்களுடனே: ஆகையால் * ராயனுடையதை ராயனுக்கும் பராபரனுடையதைப் பராபரனுக்குங் கொடுங்கோளென்றார். * ரோ. யங. எ.

உ௬. அவர்கள் சனத்துக்கு முன்பாக அவனை வசனத்திலே பிடிக்கக் கூடாமல்। அவருடைய உத்தரத்துக்கு ஆச்சரியப்பட்டு மவுனமாயிருந்தார்கள.

மரித்தோர் எழுந்திருப்பது மெய்யென்றே ருபிவிக்கிறது. மத். உஉ। உ௩—௩௩. மாற். யஉ। யஅ—உ௭.

உ௭. ஆனால் உயிர்த்தெழுந்கலில்லையென்று சொல்லுகிற சதுசேயரிலே சிலர் சேர்ந்துவந்து। அவரைக் கேட்டதாவது:

உ௮. போதகரே। *ஒருத்தனுடைய சகோதரன்। பெண்சாதியுள்ளவனாயிருக்கையிலே பிள்ளையில்லாதவனாய் மரித்தால்। அவனுடைய சகோதரன் அவன் பெண்சாதியை விவாகம்பண்ணி। தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்கவேண்டுமென்று மோசே எங்களுக்கு எழுதிவைத்தான. *ரு. மோ. உரு। ரு.

உ௯. ஏழுபேர் சகோதரர்கள் இருந்தார்கள்। மூத்தவன் பெண்சாதியை விவாகம்பண்ணி। பிள்ளையில்லாதவனாய் மரித்தான.

௩ய. இரண்டாஞ் சகோதரன் அந்தப் பெண்சாதியை விவாகம்பண்ணி। அவனும் பிள்ளையில்லாதவனாய் மரித்தான.

௩௧. மூன்றாஞ் சகோதரனும்। அப்படியே ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணி। பிள்ளைகளைப் பின்வைக்காமல் மரித்தார்கள.

௩உ. எல்லாருக்கும் கடைசியிலே பெண்சாதியும் மரித்தாள.

௩௩. ஆகையால் உயிர்த்தெழுந்கலிலே அவர்களில் ஆருடைய பெண்சாதியாவாள்। ஏழுபேரும் அவளைப் பெண்சாதியாகப் படைத்திருந்தார்களே என்றார்கள.

௩௪. யேசு பிரத்தியுத்தரமாக அவர்களுக்குச் சொன்னதாவது: இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண் கொண்டு கொடுக்கிறார்கள.

௩௫. ஆனால் அந்த லோகத்தையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரவான்களாய் எண்ணப்பட்டவர்களுக்குக் கொள்வினையும் கொடுப்பினையுமில்லை.

௩௬. ஏனெனில் அவர்கள் இனிமேற் சாகக் கூடாமல் தேவதூதர்களுக்குச் சரியாயிருந்து। தாங்கள் உயிர்த்தெழுந்கலின் பிள்ளைகளானபடியினாலே பராபரனுடைய பிள்ளைகளுமாயிருக்கிறார்கள.

௩௭. ஆனால் மரித்தோர் எழுந்திருக்கிறதை *மோசேயும் முள்செடியைக் குறித்தெழுதின சரித்திரத்திலே கர்த்தரை ஆபிரகாமுடைய பராபரனென்றும் ஈசாக்குடைய பராபரனென்றும் யாக்கோபுடைய பராபரனென்றுஞ் சொல்லுகிறதினாலே தெரியப்பண்ணினான. *உ. மோ. ௩। ௬.

௩௮. பராபரனோவெனில் மரித்தோருடைய பராபரனல்ல। சீவனுள்ளோருடைய பராபரனாயிருக்கி

றார்

ஞர். ஏனென்றால் அவர்களெல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களென்றார்.

௩௯. அப்போது வேதபாரகரில் சிலர் பிரத்தியுத்தாரமாக: போதகரே! நன்றாய்ச் சொன்னீரென்றார்கள்.

௪௰. அப்புறம் அவர்கள் அவரை ஏதொன்றுங் கேட்கத் துணிந்ததில்லை.

கிறிஸ்து ஆருடைய குமாரனென்பது. மத். ௨௨। ௪௧. ம. மாற்கு. ௰௨। ௩௫—௩௭.

௪௧. அவரோவென்றால் அவர்களோடே சொன்னதாவது: கிறிஸ்து தாவீதின் குமாரனாயிருக்கிறாரென்று எப்படிச் சொல்லுகிறார்கள்.

௪௨. கர்த்தர் என் ஆண்டவருடனே: நாம் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதபடியாக்கிப்போடுமட்டும்,

௪௩. நம்முடைய வலதுபாரிசத்திலே உட்காருமென்று தாவீதுதானே * சங்கீத புஸ்தகத்திலே சொல்லுகிறானே. * சங்கீ. ௱௰. ௧.

௪௪. இப்போதும் தாவீது அவரை ஆண்டவரென்கிறானே, பின்னை எப்படி அவனுடைய குமாரனாயிருக்கிறாரென்றார்.

வேதபாரகருடைய மாயத்தைக் காண்பித்தது. மத். ௨௩। ௧. ம. மாற்கு. ௰௨। ௩௮—௪௰.

௪௫. ஆனால் சனமெல்லாங் கேட்க அவர் தம்முடைய சீஷருடனே சொன்னதாவது:

௪௬. நீள வஸ்திரங்களைத் தரித்து நடக்கமனதாயிருந்து, சந்தைகளிலே வந்தனங்களையும் ஆலயங்களிலே பிரதான ஆசனங்களையும் விருந்துகளிலே முதலிடங்களையும் விரும்பி,

௪௭. * வெதனவகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட செபம் பண்ணுகிற வேதபாரகருக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கோள். இவர்கள் அதிக ஆக்கினையடைவார்களென்றார்.

௨௧. அதிகாரம்.

சனங்கள் தருமங்களைப் போடுகிறவிதத்தைக் கிறிஸ்து நோக்கிப்பார்த்தது. மாற்கு. ௰௨। ௪௧. ம.

அவர் கண்ணேறெடுத்துப் பார்க்கிறபோது, தங்கள் காணிக்கைகளைத் தருமப்பெட்டியிலே போடுகிற ஐசுவரியவான்களைக் கண்டார்.

௨. ஆனால் இரண்டு காசை அதிலே போடுகிற ஒரு ஏழைவெதனவையையும் அவர் கண்டு:

௩. மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், இந்த ஏழைவெதனவ எல்லாரைப்பார்க்கிலும் அதிகம் போட்டாள்.

௪. ஏனெ

௪. ஏனென்னிலிவர்களெல்லாருந்தங்கள் பரிபூரணத்திலெடுத்து, பராபரனுடைய காணிக்கைகளுக்குப்போட்டார்கள், இவளோவெனில தனதாட்சியிலெடுத்து, தனக்குள்ள சீவனத்தையெல்லாம போட்டாளென்றார்.

அவர் எருசலேமின அழிவையும் லோகத்தின் முடிவையுங் குறித்துச் சொன்னது. மத். ௨௪, ௧. ௩. மாற்கு. ௰௩, ௧. ௩.

௫. சிலர் தேவாலயத்தைக்குறித்து: அது நல்ல கல்லுகளாலுங் காணிக்கைச்சீர்ப்பாடுகளாலுஞ்சோடித்திருக்குதென்று சொன்னபோது,

௬. அவர்: நீங்கள் பார்க்கிற இதுகளுக்கு நாள்கள் வரும், அப்போ இடிக்கப்படாமல கல்லின் மேல்க்கல்லும் வைக்கப்படுவதில்லையென்றார்.

௭. அவர்கள அவரை: போதகரே, இதுகளெப்போ வரும், இதுகள சம்பவிக்கப்போறகாலத்துக்கடையாளமென்னவென்று கேட்டார்கள்.

௮. அதற்கவர் சொன்னதாவது: நீங்கள் மோசம் போகப்படாதபடிக்குப்பாருங்கோள், ஏனென்னில அனேகரென்பேர்க்கொண்டு, நான தானென்று சொல்லுவார்கள், அந்தக்காலஞ்சமீபித்திருக்குது. ஆகையால அவர்கள் பிறகே போகாதேயுங்கோள்.

௯. யுத்தங்கள கலகங்களுடைய செய்தியை நீங்கள் கேட்கும்போதோவென்றால், திகிலடையாதேயுங்கோள், ஏனென்னிலிதுகள் முன்னே நடக்கவேண்டியது, முடிவோ உடனே வராதென்றார்.

௰. அப்போ அவரிவர்களுடனே சொன்னதாவது: சாதிக்குச்சாதியும் இராசாங்கத்துக்கிராசாங்கமும் விரோதமாக எழும்பும்.

௰௧. அந்தந்த இடங்களிலே பெரிய பூமியதிர்ச்சல்களும் பஞ்சங்களும் பெருவாரிக்காச்சல்களுமுண்டாயிருக்கும், வானத்திலிருந்து பயங்கரங்களும் பெரிய அடையாளங்களுமுண்டாம்.

௰௨. இதுகளெல்லாத்துக்கும் முன்னேயோ அவர்கள் உங்கள் மேல * தங்கள் கைகளைப்போட்டு, என் நாமத்தினிமித்தியமாக உங்களைத் துன்பப்படுத்தி, ஆலயங்களுக்குஞ்சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுப்பார்கள், ராசாக்களுக்குந் துரைகளுக்கும் முன்பாகவுங் கொண்டுபோகப்படுவீர்கள். * யோவ. ௰௬, ௨.

௰௩. ஆனாலிது சாட்சிப்புவிக்குதற்கு உங்களுக்கு முடியும்.

௰௪. ஆகையாலப்படி உத்தரஞ்சொல்லலாமென்று * முன் கவலைப்படாதிருக்கத் தக்கதாக உங்களிருதயங்களிலே வையுங்கோள். * மத. ௰, ௰௯.

௰௫. ஏனென்னில உங்களுக்கு விரோதிக்கிறவர்களெல்லாரும எதிர்பேசவும எதிர் நிற்கவுங்கூடாத வாக்கையும ஞானத்தையும் நான் உங்களுக்குக்கொடுப்பேன். * ௨. மோ. ௪, ௰௨.

௰௬. ஆனால

௰௬. ஆனாலும் பெற்றாராலும் * சகோதரராலும் பந்துசனங்களாலும் சிநேகிதராலும் நீங்கள் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள், உங்களில் சிலரைக் கொன்றுபோடுவார்கள். * மீகா. ௭, ௬.

௰௭. என்னாமத்தின் நிமித்தியமாக எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்.

௰௮ * ஆனாலுங்கள் தலையினொரு மயிரும் அழியாது. * ௰௨, ௭.

௰௯. உங்கள் பொறுமையிலே உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொண்டிருங்கோள்.

௨௰. யெருசலேம் சேனைகளாலே சூழப்பட்டதை நீங்கள் காணும்போதோவென்னில் அதின் அழிவு சமீபித்ததென்றறியுங்கோள்.

௨௧. அப்போ யூதேயாவிலிருக்கிறவர்கள் பறுவதங்களுக்கோடிப்போகவும், அதின் நடுவிலிருக்கிறவர்கள் வெளிப்படவும், நாட்டுப்புறங்களிலிருக்கிறவர்கள் அதற்குள் வராதிருக்கவுங்கடவார்கள்.

௨௨. ஏனென்றால் எழுதியிருக்கிறதெல்லாம் நிறைவேறும்படியாய், நீதியைச் சரிக்கட்டும் நாட்களதுகள்தானே.

௨௩. ஆனால் அந்நாட்களிலே கெற்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் ஐயோ, ஏனென்றால் தேசத்தின்மேலே மகா அவதியும் இந்தச்சனத்தின்பேரிலே கோபமுமுண்டாயிருக்கும்.

௨௪. பட்டயக்கூர்மையிலே விழுவார்கள், சகல சாதிகளிடத்திலுஞ் சிறைப்பட்டுப்போவார்கள், யெருசலேமோவென்றால் புறச்சாதிகளுடைய காலங்கள் * நிறைவேறும்படியாக, புறச்சாதிகளால் மிதிக்கப்பட்டதாயிருக்கும். * ரோ. ௰௧, ௨௫.

௨௫. சூரியனிலுஞ் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்களும் பூமியின்மேலிருக்கிற சாதிகளுக்குள்ளே கலக்கமான மனநெருக்கமுமுண்டாம். சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்.

* யெச. ௰௩, ௰.

௨௬. பூச்சக்கரத்தின் மீதிலே வருங்காரியங்களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினாலே மனுஷர் சோர்ந்துபோவார்கள், ஏனென்றால் வானங்களின் பெலன்களசையும்.

௨௭. அப்போ * மனுஷனுடைய குமாரன் மேகத்திலே வல்லமையோடும் வெகுமகிமையோடும் வரக் காண்பார்கள். * அப்போ. ௧, ௰௨.

௨௮. இதுகள் சம்பவிக்கத் துடங்கும்போதோவென்னில் நீங்கள் நிமிர்ந்து உங்கள் தலைகளை ஏறெடுங்கோள், அதேனென்னில் * உங்கள் மீட்புச் சமீபிக்குதென்றார். * ரோம. ௮, ௨௩.

௨௯. ஒரு உபமையை அவர்களுக்குச் சொன்னார். அத்திமரத்தையுஞ் சகல மரங்களையும் பாருங்கோள்.

௩௰. அதுகளதுளிர்விடுகிறதையிலே வசந்தகாலஞ் சமீபமாச்சுதென்று அதுகளாலே கண்டறிகிறீர்கள்.

௩௰௧. அப்படியே நீங்களும் இதுகளெல்லாம் சம்புவிக்கிறதைக் காணும்போது பராபரனுடைய ராட்சியஞ் சமீபமாயிருக்குதென்று அறியுங்கோள்.

௩௰௨. மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், எல்லாஞ் சம்புவிக்குமட்டும் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாது.

௩௰௩. * வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோகாது. * ௰௬, ௰௭.

சங். ௱௨, ௨௭.

௩௰௪. உங்களிருதயங்களோவெனில் * பெருந்தீனியினாலும் வெறியினாலும் பிழைப்பின் கவலைகளினாலும் பாரக்குள்மத்தப்பட்டு, அசப்பிலே அந்தநாள் உங்கள்மேல் வராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கோள்.

* ரோ. ௰௩, ௰௩. எபே. ௫, ௰௮.

௩௰௫. அது தரணியெல்லாப் பூமியின்மீதெல்லாங் குடியிருக்கிறவர்மேலும் அது * ஒருகண்ணியைப்போலே வரும். * ௧. தெச. ௫, ௩.

௩௰௬. ஆகையால் சம்புவிக்கப்போகிறதுகளுக்கெல்லாம் நீங்கள் தப்பித்துக்கொண்டு, மனுஷனுடைய குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எல்லாக்காலத்திலும் ஜெபம்பண்ணி விழித்திருங்கோளென்றார்.

௩௰௭. அவர் பகற்காலங்களிலே தேவாலயத்திலே உபதேசித்திருந்து, ராக்காலங்களிலோ வெளியே போய் ஒலிவமலையென்னப்பட்ட பர்வதத்திலே தங்குவார்:

௩௰௮. சனமெல்லாம் அவரைக் கேட்க அதிகாலமே தேவாலயத்திலே அவரண்டைக்கு வருவார்கள்.

௨௨. அதிகாரம்.

யேசுவைக்காட்டிக்கொடுக்க யூதா பொருந்திக்கொண்டது. மத். ௨௬, ௧—௰௬.
மாற்கு. ௰௪, ௧—௰௧.

ஆனால் பஸ்காவென்னப்பட்ட புளிப்பில்லா அப்பங்களின் பண்டிகை சமீபித்தது.

௨. அப்போ பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும், அவரை எப்படிக் கொன்றுபோடலாமென்று வழிதேடினார்கள், ஏனென்றால் சனத்துக்குப் பயமாயிருந்தார்கள்.

௩. ஆனால் பன்னிருவர் தொகைக்குள்ளானவனும் இஸ்காரியோத்தென்னும் பேர்கொண்ட யூதாவுக்குள் சாத்தான் புகுந்தது.

௪. அவன் போய்: தான் அவரை இன்னின்னபடி உங்களுக்குக் காட்டிக்கொடுப்பேனென்று பிரதான ஆசாரியர்களோடுஞ் சேர்வைக்காரரோடும் பேசிக்கொண்டான்.

௫. அவர்

௫. அவர்கள் சந்தோஷப்பட்டு, அவனுக்குத் திரவியங் கொடுக்கத் தீர்மானித்தார்கள்.

௬. அவன் வாறுதி கொடுத்து, அவரைச் சந்தடியில்லாமல் அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கச் சமயந் தேடினான்.

கிறீஸ்து தம்முடைய சீஷருடனே பஸ்காவைப் போசித்தது. மத். ௨௬, ௧௭—௨௫. மாற். ௧௪, ௧௨—௨௧.

௭. ஆனால் பஸ்காவைப் பலியிட வேண்டிய புளிப்பில்லா அப்பங்களுடைய நாள் வந்தது.

௮. அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானையும் அனுப்பி: நாம் பஸ்காவைப் போசிக்கத்தக்கதாக நீங்கள் போய் அதை நமக்கு ஆயத்தம் பண்ணுங்கோளென்றார்.

௯. இவர்கள் அவருடனே: நாங்களெங்கே ஆயத்தம் பண்ண உமக்குச் சித்தமுண்டென்றார்கள்.

௰. அவரிவர்களுடனே சொன்னதாவது: இதோ நீங்கள் பட்டணத்துக்குள் பிரவேசிக்கும்போது, தண்ணீர்க் குடஞ் சுமந்து வருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான், அவனுள் ப்பிரவேசிற வீட்டுக்கு நீங்களவனுக்குப் பின்சென்று,

௧௧. அந்த வீட்டுக்கெசமானுடனே: நான் என் சீஷரோடுங்கூடப் பஸ்காவைப் போசிக்கத்தக்கதான இடம் எங்கேயென்று போதகர் உன்னைக் கேட்டனுப்புகிறாரென்று சொல்லுங்கோள்.

௧௨. அவன் உங்களுக்குத் தளவரிசைப்படுத்தியிருக்கிற பெரிய மேல்வீட்டைக் காண்பிப்பான், அங்கே ஆயத்தம் பண்ணுங்கோளென்றார்.

௧௩. அவர்கள் போய், அவர் தங்களுடனே சொன்னபிரகாரமாக* கண்டுபிடித்து, பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள். * ௧௯, ௩௨.

௧௪. வேளைவந்தபோது அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள்.

௧௫. அப்பொழுது அவரிவர்களுடனே: நான் பாடுபடுகிறதுக்கு முன்னே இந்தப் பஸ்காவை உங்களுடனே போசிக்க மிகவும் ஆசைப்பட்டேன்.

௧௬. ஏனென்றால் பராபரனுடைய ராச்சியத்திலே அது நிறைவேறுமட்டாக நானினி அதிலே போசியேனென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சொல்லி,

௧௭. பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, ஸ்தோத்திரித்து: நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கோள்.

௧௮. ஏனென்றால், பராபரனுடைய ராச்சியம் வருமட்டாக திராட்சக்கனியின் ரசத்திலே குடியேனென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.

அவர் பரிசுத்த ராப்போசனத்தைக் கற்பனையிட்டது. மத். ௨௬, ௨௬—௨௯. மாற். ௧௪, ௨௨—௨௫.

௰௯. அவர் * அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்குது, இதை என்னை நினைக்கிறத்துக்காகச் செய்யுங்கோளென்றார். * ௧. கொரி.

௰௧. ௨௩—௨௫.

௨௰. அந்தப்படியே போசனம்பண்ணினதுக்குப் பிறபாடு * பாத்திரத்தையுங் கொடுத்துச் சொன்னதாவது: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய ரெத்தத்திலே புது உடன்படிக்கையாயிருக்குது.

௨௰௧. ஆகிலும் பாருங்கோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனேகூட பந்தியிலேயிருக்குது.

௨௰௨. மெய்தான், நிருணித்திருக்கிறபடியே மனுஷனுடைய குமாரன் போறார், ஆகிலும் எவனாலே காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ என்றார்.

௨௰௩. அப்போ தங்களில் ஆர் இதை நடப்பிக்கப் போறவனென்று அவர்கள் ஒருவர்க்கொருவர் விசாரிக்கத் துடங்கினார்கள்.

சீஷரில் உண்டான வாதுவாக்கு.

௨௰௪. * தங்களிலெப்பெரியவனாயெண்ணப்படுபவனாரென்கிற வாதுவாக்கும் அவர்களுக்குள்ளுண்டாச்சுது.

௨௰௫. ஆனால் அவர் அவர்களுக்குச் சொன்னதாவது: சாதிகளுடைய ராசாக்கள் அவர்களை ஆண்டுகொள்ளுகிறார்கள், அவர்களுடைய அதிகாரிகளும் உபகாரிகளென்றழைக்கப்படுகிறார்கள்.

௨௰௬. ஆனால் * உங்களில் அப்படி வேண்டாம், உங்களில் பெரியவன் சிறியவனைப்போலிருந்து தலைவன் பணிவிடை செய்கிறவனைப்போலிருக்கக்கடவான். * ௧. பேது. ௫, ௧—௫.

௨௰௭. ஏனெனில் ஆர் பெரியவன், பந்தியிருக்கிறவனோ பணிவிடை செய்கிறவனோ, பந்தியிருக்கிறவனல்லவோ. * நானோ உங்கள் நடுவிலே பணிவிடை செய்கிறவனைப்போலிருக்கிறேன்.

* யோவா. ௰௩, ௰௪. பிலி. ௨, ௫—௮.

௨௰௮. ஆனால் என்னுடைய சோதினைகளில் என்னுடனே தரித்திருந்தவர்கள் நீங்கள்தானே.

௨௰௯. ஆகையால் என் பிதா எனக்கு ராச்சியத்தை உடன்படிக்கைபண்ணினதுபோல், அதை நான் உங்களுக்கும்,

௩௰. நீங்கள் என் ராச்சியத்தில் என் பந்தியிலே போசித்துக் குடிக்கது, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களை ஞாயந்தீர்க்கிறவர்களாய் * ஆசனங்களின் மேலே உக்காருகிறதுக்கும்படிக்கு, உடன்படிக்கை பண்ணுகிறேனென்றார். * மத். ௰௯, ௨௮.

சாத்தானாசஜபீஷணைநீஷணத்திருக்குதென்றும் உபத்திர
காலமவருமென்றுங் கிறீஸ்து வசாற்றுது.

௩௧. பின்னையுங் கர்த்தர் சொன்னதாவது: சீமோனே, சீமோனே, இதோ * சாத்தானானவன் உங்களைக் கோதுமையைப் புடைக்கிறாப்போலச் சலிக்கத்தக்கதாக விட்டுச் சொல்லிக் கேட்டுது, * ௧. பேது. ௫, ௮.

௩௨. ஆனாலுன் விசுவாசமொழிந்துபோகாதபடிக்கு நானுனக்காக வேண்டிக்கொண்டேன், நீயினி மனந்திரும்பின பின், உன் சகோதரரைத் திடப்படுத்தென்றார்.

௩௩. ஆனாலவனவருடனே: ஆண்டவரே, உம்முடனேகூடக் காவலிலேயுஞ் சாவிலேயும் போகிறதுக் காயத்தமாயிருக்கிறேனென்றான்.

௩௪. அவரோவென்னில்: * பேதுருவே, நீ என்னை அறியேனென்று மூன்றுதரம் மறுதலிக்கிறதுக்கு முன்னே இன்றைக்குச் சாவல் கூவாதென்றுனக்குச் சொல்லுகிறேனென்றார். * யோவா. ௰௩, ௩௮.

௩௫. பின்னையுமவரவர்களுடனே: நானுங்களை * பையும் வட்டுவமும் பாதரட்சைகளுமில்லாமல் அனுப்பின போது உங்களுக்குக் குறைபட்டுதோவென்றார். அவர்கள்: ஒன்றுங் குறைபடவில்லையென்றார்கள். * ௯, ௩. மத. ௰, ௯. ௰.

௩௬. அவரவர்களுடனே சொன்னதாவது: இப்போதோவென்னில், பையுடையவனதை எடுத்துக் கொள்ளக்கடவான், வட்டுவத்தையும் அப்படித்தானே, பட்டையமில்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவான்.

௩௭. ஏனென்னில்: * அக்கிரமக்காரரிலொருத்தனாக எண்ணப்பட்டாரென்றெழுதியிருக்கிறது முதலாய் இன்னமுமென்னிடத்தில் நிறைவேறவேண்டியதென்றுங்களுக்குச் சொல்லுகிறேன், அதேதென்றாலென்னைக்குறித்தெழுதியிருக்கிறதுகளுக்கு நிறைவேறுதல் வந்திருக்குதென்றார். * யெச. ௫௩, ௰௨.

௩௮. ஆனாலவர்கள்: ஆண்டவரே, இதோ இரண்டு பட்டையமிங்கேயிருக்குதென்றார்கள். அவரோவென்னில் அவர்களுடனே: போதுமென்றார்.

அவர்பட்ட ஆத்துமப்பாடுகள். மத. ௨௬, ௩௬—௪௬.
மாற்கு. ௰௪, ௩௨—௪௨.

௩௯. அவர் * புறப்பட்டுப் பழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப் போனார். ஆனால் அவருடைய சீஷரும் அவரைப் பின்சென்றார்கள். * யோவா. ௰௮, ௧.

௪௰. அவர் அவ்விடத்துக்கு வந்தபோது அவர்களுடனே: நீங்கள் சோதினைக்குள் படாதபடிக்குச் செபம் பண்ணுங்கோளென்றார்.

௪௧. அவரவர்களைவிட்டுக் கல்லேறிதூரம் அப்பாற்பட்டு முழங்காற்படியிட்டுச் செபம்பண்ணி,

௪௨. பிதாவே, உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரத்தை என்னைவிட்டு நீங்கப்பண்ணும், எனக்கோ அல்ல உமக்கிஷ்டமாயிருக்கிறபடி ஆவதாகவென்றார்.

௪௩. ஆனால் வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து அவருக்குக் காணப்பட்டு அவரைப் பெலப்படுத்தினான்.

௪௪. அவர் மரண அவஸ்தையாகி, அதிக உக்கிரந்துடனே செபம்பண்ணினார். ஆனால் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.

௪௫. அவர் செபம்முடித்தெழுந்திருந்து, தம்முடைய சீஷரண்டைக்கு வந்து, அவர்கள் துக்கத்தினாலே நித்திரைபண்ணக்கண்டு,

௪௬. அவர்களுடனே: நீங்கள் தூங்குகிறதென்ன? நீங்கள் சோதனைக்குள் படாதபடிக்கு எழுந்திருந்து செபம்பண்ணுங்கோளென்றார்.

அவர் பிடிபட்டது. மத. ௨௬, ௪௭—௫௬. மாற்கு. ௰௪, ௪௩—௫௨. யோவா. ௰௮, ௨—௰௨.

௪௭. அவர் இப்படிப் பேசுகையில், இதோ கும்பு வந்தது; அவர்களுக்கு முன்னுக்குப் பன்னிருவரிலே ஒருத்தனான யூதா என்னப்பட்டவன் நடந்து வந்து, யேசுவை முத்தமிட அவரண்டை சேர்ந்தான்.

௪௮. ஆனால் யேசு அவனுடனே: யூதாவே, முத்தத்தினாலே மனுஷனுடைய குமாரனைக் காட்டிக்கொடுக்கிறாயோவென்றார்.

௪௯. அவரைச் சுத்தியிருந்தவர்கள் சம்பவிக்கப்போறதைக் கண்டபோதோவெனில், அவருடனே: ஆண்டவரே, பட்டயத்தினாலே வெட்டுவோமோவென்றார்கள்.

௫௰. அவர்களில் ஒருத்தன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டினான்.

௫௧. யேசுவோ பிரத்தியுத்தரமாக: இம்மட்டும் நிறுத்துங்கோளென்று சொல்லி, அவனுடைய காதைத் தொட்டு அவனைக் குணமாக்கினார்.

௫௨. பிறபாடு யேசு தம்மிடமேலே வந்த பிரதான ஆசாரியர்களோடும் தேவாலயத்து அதிகாரிகளோடும் மூப்பரோடுஞ் சொன்னதாவது: ஒரு கள்ளன் மேலே புறப்பட்டு வருமாப்போலே, பட்டயங்களோடுந் தடிகளோடும் புறப்பட்டு வந்தீர்களோ.

௫௩. நானனுதினந் தேவாலயத்தில் உங்களுடனேகூட இருக்கையிலே நீங்கள் என்மேலே கைகளை நீட்டினதில்லை; இதுவோவெனில் உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் வல்லமையுமாயிருக்குதென்றார்.

௫௪. அவர்களோ அவரைப் பிடித்து அவரைப் பிரதான ஆசாரியனுடைய வீட்டுக்குள் கொண்டுபோய்விட்டார்கள்; ஆனால் பேதுரு தூரத்திலே பின்சென்றான்.

அவர் பிரதான ஆசாரியனரண்மனையிலே பட்டபாடுகளும் பேதுருவினாலே மறுதலிக்கப்பட்டதும்.
மத. ௨௬, ௫௭, ௬௯ மாற்கு. ௰௪, ௫௩, ௬௬
யோவா. ௰௮, ௰௫—௨௭.

௫௫. அவர்

௫௫. அவர்கள் முற்றத்தின் நடுவிலே நெருப்பைமூட்டி, கூடிஉக்கார்ந்தபோது, பேதுரு அவர்களின் நடுவிலேஉக்கார்ந்தான்.

௫௬. ஆனாலொருவேலைக்காரி அவனை வெளிச்சத்தின் முன்னேஉக்கார்ந்திருக்கக்கண்டு, அவனை உற்றுப்பார்த்து: இவனும் அவனோடேயிருந்தானென்றாள்.

௫௭. அவனோ: பெண்பிள்ளையே, அவனை அறியேனென்று அவனை மறுதலித்தான்.

௫௮. சற்றுநேரத்துக்குப்பிறபாடு வேறொருத்தன் அவனைக்கண்டு: நீயும் அவர்களிலொருத்தனென்றான். பேதுருவோ: வெளியே மனுஷனே நானல்லவென்றான்.

௫௯. ஏறக்குறைய ஒருமணித்தியாலத்துக்குப்பிறபாடு மற்றொருத்தன்: மெய்யாய் இவனும் அவனோடேயிருந்தான், ஏனெனில் கலிலேயனாயிருக்கிறானென்று திடப்படுத்தினான்.

௬௰. ஆனால் பேதுரு: மனுஷனே, நீ சொல்லுகிறது இன்னதென்று அறியேனென்றான். உடனே அவனின்னம் பேசுகையிலே சேவல் கூவிற்று.

௬௧. அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார், அப்போ பேதுரு: சேவல் கூவுகிறதுக்கு முன்னே என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று கர்த்தர் தன்னோடே சொல்லியிருந்தவார்த்தையை நினைவுகூர்ந்து,

௬௨. வெளியேபுறப்பட்டு, மனங்கசந்தழுதான்.

௬௩. ஆனால் * யேசுவைப்பிடித்துக்கொண்டிருந்த மனுஷர் அவரைப்பரியாசம்பண்ணி, அடித்து,

* யேச. ௫௰. ௬.

௬௪. அவரை மூடிக்கட்டிட்டு, அவருடைய முகத்திலே அறைந்து, உன்னை அடித்தவனாரென்று ஞானதிருஷ்டியாலே சொல்லென்று அவரைக்கேட்டு,

௬௫. வேறே அநேகங்களை அவருக்குத்தூஷணமாகச்சொன்னார்கள்.

௬௬. பொழுதுவிடிந்தபோது, சனத்தினுடைய மூப்பரும் பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும் கூட்டங்கூடி, தங்கள் ஆலோசனை சங்கத்திலே அவரைக்கொண்டுவந்து நிறுத்தி,

௬௭. நீ கிறிஸ்துவாயிருக்கிறாயோ எங்களுக்குச்சொல்லென்றார்கள். அதற்கு அவர் அவர்களுக்குச்சொன்னது: நான் உங்களுக்குச்சொன்னாலும் நம்பீர்கள்.

௬௮. நான் கேட்டாலுமெனக்கு உத்தாரஞ்சொல்லீர்கள், என்னைவிடுதலையும் பண்ணீர்கள்.

௬௯. இதுமுதல் மனுஷனுடையகுமாரன் பராபரனுடைய வல்லமையின் வலதுபாரிசத்திலே உக்கார்ந்திருப்பாரென்றார்.

௭௰. அப்பொழுதெல்லாரும்: ஆகையால் நீ பராபரனுடையகுமாரனோவென்று கேட்டார்கள். அவர் அவர்களோடே: நீங்கள் சொல்லுகிறபடி நானேயென்றார்.

௭௧. அவர்களோவென்றால்: இனிநமக்குச்சாட்சிதேவையென்ன/ நாமதானேயிவனவாயினாலேகேட்டோமேயென்றார்கள்.

௨௩. அதிகாரம்.

கிறிஸ்துபிலாத்துக்கும் ஏரோதேக்குமுன்பாகப்பட்டபாடுகள். மத. ௨௭/ க—௰௪. மாற். ௰௫/ க—௰௫. யோவா. ௰௮/ ௨௮. ௰௯/ க—௰௬.

அவர்களுடைய கூட்டமெல்லாம் எழுந்திருந்து/ அவரைப்பிலாத்தனிடத்துக்குக்கொண்டுபோய்/

௨. இவனசாதியைமாறுபாடாக்குகிறவனாகவும்/ தன்னைத்தானேகிறிஸ்துராசாவென்று சொல்லிராயருக்குவரிகொடுக்கவேண்டாமென்கிறவனாகவும் இவனைக்கண்டுபிடித்தோம் என்று அவரைக்குற்றஞ்சாட்டத்துடங்கினார்கள்.

௩. பிலாத்து அவரை: நீ யூதருடையராசாவோவென்று கேட்டான். அவர் அவனுக்குப்பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடியேயென்றார்.

௪. ஆனாலபிலாத்துபபிறதான ஆசாரியர்களோடுங் கும்புகளோடும்: இந்தமனுஷனிடத்திலேகுற்றமொன்றுங்காணேனென்றான்.

௫. அவர்களோவென்றால் உரண்பட்டுச்: இவன கலிலேயாதுவக்கி இவ்விடமட்டுக்கும் யூதேயாவெங்கும் போதிக்குச்சொல்லிச்சனத்தையெடுத்துவிடுகிறானென்றார்கள்.

௬. ஆனால கலிலேயாவென்றதைப்பிலாத்துகேழ்வியானபோது: இந்தமனுஷன்கலிலேயனோவென்று கேட்டான்.

௭. *அவர் ஏரோதேயின அதிகாரத்துக்குள்ளானவர்ரென்றறிந்தபோது/ அந்நாட்களிலேயெருசலேமிலேகாணும்வந்திருந்தஏரோதேயண்டைக்கவரை அனுப்பினான். *௩/ ௧.

௮. ஆனாலேரோதேயேசுவைக்காண்கிறபோதும் தியுகுசந்தோஷப்பட்டான்/ ஏனென்றால அவரைக்குறித்து அவன அனேகங்களைக் கேழ்விப்பட்டிருந்தபடியினாலே/ *வெகுநாளாய அவரைக்காண ஆசையாயிருந்தான். அவராலே செய்யப்படும்யாதொரு அடையாளத்தைப்பார்க்கலாமென்றுநம்பினான். *௯/ ௯.

௯. அனேகமவார்த்தைகளினாலே அவரைக்கேட்டான/ ஆனால அவர் அவனுக்குப்பிரதியுத்தரமொன்றுஞ்சொல்லாதிருந்தார்.

௰. பிறதான ஆசாரியர்களும்வேதபாரகருமோவெனில அவரைமெத்த வங்குத்தச்சாட்டிக்கொண்டே நின்றார்கள்.

௰௧. ஆனாலேரோதேதன ராணுவமனுஷருடனே கூட அவரை அறப்பமாக்கினான்/ பரியாசம்பண்ணி/ மினுக்குள்ள வஸ்திரத்தை அவருக்குத் தரிப்பித்து/ அவரைத்திரும்பப்பிலாத்தனிடத்துக்கனுப்பினான்.

௧௨. அன்றையத்தினமே பிலாத்துமேரோதேயும் ஒன்றுக்கொன்று சிநேகிதரானார்கள்; ஏனென்றால் முன்னாலே ஒருவருக்கொருவர் பகையாயிருந்தார்கள்.

௧௩. பிலாத்துவோவென்றால் பிரதான ஆசாரியர்களையுந் தலைவரையுஞ் சனத்தையுங் கூட்டிவரவழைத்து,

௧௪. அவர்களுடனே சொன்னதாவது: இந்த மனுஷனை சனத்தை மாறுபாடாக்கிறவனென்றவனை என்னிடத்திலே கொண்டுவந்தீர்கள்; இதோ நான் உங்களுக்கு முன்பாக விசாரிக்கிறபோது, நீங்கள் இந்த மனுஷன் மேலே சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் அவனிடத்திலே கண்டதில்லை.

௧௫. ஏரோதேயுங் கண்டதில்லை; உங்களை அவனிடத்துக்கனுப்பினேனே; ஆனாலிதோ, மரணத்துக்கேதுவாக ஒன்றும் அவனாற் செய்யப்பட்டதில்லை.

௧௬. ஆனபடியினாலே அவனைத் தண்டித்து விடுதலையாக்குவேனென்றான்.

௧௭. ஏனென்றால் அவன் பண்டிகைதோறும் அவர்களுக்கு ஒருத்தனை விடுதலையாக்கவேண்டியதாயிருந்தது.

௧௮. ஆனாற் திரள்கூட்டமெல்லாம்: இவனைக் கொன்றுபோட்டு, பரபாவை எங்களுக்கு விடுதலையாக்குமென்று கூக்குரலிட்டார்கள்.

௧௯. அவன் பட்டணத்திலுண்டான ஒரு கலகத்துக்காகவுங் கொலைபாதகத்துக்காகவுங் காவலிலே வைக்கப்பட்டிருந்தான்.

௨௰. பிலாத்தோவென்றால் யேசுவை விடுதலையாக்கமனதாய், மறுபடியுஞ் சத்தமிட்டுப் பேசினான்.

௨௧. அவர்களோவென்றால்: அவனைச் சிலுவையிலறையும், சிலுவையிலறையுமென்று கூக்குரலிட்டார்கள்.

௨௨. அவன் மூன்றாம் விசை அவர்களுடனே: ஏனிவனெந்தப் பொல்லாப்பைச் செய்தான்? மரணத்துக்கேதுவான குற்றமொன்றும் அவனிடத்திலே நான் கண்டதில்லையே; ஆகையால் அவனைத் தண்டித்து விடுதலைபண்ணுவேனென்றான்.

௨௩. ஆனாலவர் சிலுவையிலறையப்பட அவர்கள் மகாசத்தங்களுடனே கேட்டுக்கொண்டேயிருந்தார்கள்; அவர்களும் பிரதான ஆசாரியர்களுமிட்ட சத்தங்கள் * பெலத்தது. * யோவா. ௧௯. ௧௨.

௨௪. பிலாத்துக்கோவென்றால் அவர்கள் மனுவின்படியாகச் செய்வதென்று தீர்த்து,

௨௫. கலகத்தினிமித்தியமுங் கொலைபாதகத்தினிமித்தியமுங் காவலிலே வைக்கப்பட்டிருந்தவனை அவர்கள் விடக்கேட்டுக்கொண்டவனை அவர்களுக்கு விடுதலைபண்ணி; யேசுவை அவர்கள் மனதுக்கொப்புக்கொடுத்தான்.

அவர் வெளியே கொண்டுபோகப்பட்டுச் சிலுவையிலறையுண்டது. மத். ௨௭. ௩௧—௪௯. மாற்கு. ௧௫. ௨௰—௩௬. யோவா. ௧௯. ௧௬—௨௯.

௨௬. அவர்கள் அவரைக் கொண்டுபோம்போது, வயலிலிருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோனென்கிறவனைப் பிடித்து, சிலுவையை யேசுவின் பிறகே சுமந்துவரும்படி அவன்மேலே வைத்தார்கள்.

௨௭. ஆனாலே வெகுதிரளான சனமும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவரைப் பின்சென்றார்கள்.

௨௮. யேசு அவர்கள் முகமாய்த் திரும்பிச் சொன்னதாவது: யெருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கோள்.

௨௯. ஏனென்றால் இதோ: மலடிகளும் பிள்ளைப் பெறாத கெற்பங்களும் உண்ணக்கொடுத்தாத முலைகளும் பாக்கியமுள்ளதுகளென்று சொல்லப்படும் நாட்கள் வரும்.

௩௰. அப்போது * பர்வதங்களோடே: எங்கள் மேலே விழுங்கோளென்றும், குன்றுகளோடே: எங்களை மறைத்துப்போடுங்கோளென்றும் சொல்லத் தொடங்குவார்கள். * ஒசே. ௰, ௮.

௩௧. ஏனென்றால் பச்சைமரத்துக்கு இதுகளைச் செய்தால், பட்டமரத்துக்கென்ன செய்யப்படுமென்றார்.

௩௨. * இதரவாளிகளாகிய வேறே இரண்டுபேரும் அவரோடேகூடக் கொலைசெய்யப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்கள். * யேச. ௫௩, ௰௨.

௩௩. தலைஓட்டிடமென்று சொல்லப்பட்ட இடத்துக்கு அவர்கள் வந்தபோது, அங்கே அவரையும் அந்தக் குற்றவாளிகளையும் ஒருத்தனை வலதுபக்கத்திலும் ஒருத்தனை இடதுபக்கத்திலுமாகச் சிலுவைகளிலே அறைந்தார்கள்.

௩௪. யேசுவோவென்றால்: * பிதாவே இவர்களுக்கு மன்னியும், ஏனென்றால் தாங்கள் செய்கிறதின்னதென்றறியார்களென்றார். ** அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப்போட்டார்கள். * யேச. ௫௩, ௰௨. ** சங். ௨௨, ௰௮.

௩௫. சனம் பார்த்துக்கொண்டு நின்றது, ஆனாலே அவர்களுடனே கூடத்தலைவரும் முக்கனைக்கிறது: மற்றவர்களை ரட்சித்தானே, இவன் பராபரன் தெரிந்துகொண்ட கிறீஸ்துவானாலே, தன்னைத்தானே ரட்சிக்கட்டுமென்றார்கள்.

௩௬. சேவகரும் அவரைப் பரியாசம்பண்ணி, அண்டைசேர்ந்து அவருக்குக் காடியைக் கொண்டுவந்து:

௩௭. நீ யூதருடைய ராசாவானாலே, உன்னை நீயே ரட்சியென்றார்கள்.

௩௮. அவருக்குமேலாக: இவன் யூதருடைய ராசாவென்று எழுத்துக் கிரேக்க லத்தீன் எபிரேய எழுத்துகளாலே எழுதப்பட்டிருந்தது.

௩௯. ஆனாலே தூக்கப்போடப்பட்ட குற்றவாளிகளில் ஒருத்தன் அவரைத் தூஷணித்து: நீ கிறீஸ்துவானாலே உன்னையும் எங்களையும் ரட்சியென்றான்.

௪௰. மற்றவனோவென்றால் அவனைக் கடிந்து உத்தாரமாக: இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருக்கிற நீயும் பராபரனுக்குப் பயப்படாதேபோ?

௪௧. நாமோ நியாயமாக அகப்பட்டிருக்கிறோம்; ஏனென்றால் நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க கூலியை அடைகிறோம்; இவரோவென்றால் அவலக்ஷணமானதொன்றையும் நடப்பித்ததில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு;

௪௨. யேசுவுடனே: ஆண்டவரே, நீர் உம்முடைய ராச்சியத்திலே வருகும்போது அடியேனை நினைத்தருளுமென்றான்.

௪௩. யேசு அவனுடனே: மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், நீ இன்றைக்கே என்னுடனேகூடப் பரதீசிலேயிருப்பாயென்றார்.

௪௪. ஏறக்குறைய ஆறுமணிவேளையாயிருக்கும்போது, பூமியெங்கும் ஒன்பதாமணிவேளைமட்டும் அந்தகாரமுண்டாச்சுது.

௪௫. சூரியனிருண்டு, தேவாலயத்தின் திரை நடுவுபுறமாய்க் கிழிந்துபோச்சுது.

அவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டது. மத். உ௭,
௫௰. மாற். ௰௫, ௩௭. யோவா.
௰௯, ௩௰.

௪௬. யேசு மகா சத்தமாய்: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேனென்று கூப்பிட்டார்; இதைச் சொல்லி ஜீவனைவிட்டார். * சங்கீ. ௩௧, ௬. அப். ௭, ௫௯.

௪௭. அதைச் சேர்வைக்காரன் சம்பவித்ததைக் கண்டு: மெய்யாக இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தானென்று பராபரனை மகிமைப்படுத்தினான்.

௪௮. இந்த வேடிக்கைக்குக் கூடியிருந்த ஜனங்களெல்லாரும் சம்பவித்தவைகளைக் கண்டபோது, தங்கள் மார்புகளில் அடித்துக்கொண்டு திரும்பினார்கள்.

௪௯. அவருக்கு அறிமுகமானவர்களெல்லாரும், கூடக் கலிலேயாவிலிருந்து அவரைப் பின்சென்று வந்த ஸ்திரீகளும் தூரத்திலே நின்று இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

௫௰. ஏதோ அரிமத்தியாவென்கிற யூதருடைய பட்டணத்தானும் நல்லவனும் நீதிமானுமாய்,

௫௧. அவர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதிருந்த ஆலோசனைக்காரனுமாகிய யோசேப்பென்னும் பேர்கொண்ட ஒரு மனுஷனிருந்தான். அவன் தானும் பராபரனுடைய ராச்சியத்துக்குக் காத்திருந்தான். * ௨. ௨௫, ௩௮.

௫௨. இவன் பிலாத்தண்டையிலே போய், யேசுவின் சரீரத்தைக் கேட்டு,

௫௩. அதைத் தூக்கி, மெல்லிய புடவையிலே சுத்தி, கல்லிலே வெட்டப்பட்டதும் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்படாததுமான ஒரு கல்லறையிலே வைத்தான்.

௫௪. அது ஆயத்தநாளாயிருந்தது, ஓய்வுநாளுந்துவக்கிற்று.

௫௫. ஆனால் கலிலேயாவிலிருந்து அவருடனேகூடவந்திருந்த ஸ்திரீகளும் பின்சென்று, கல்லறையையும் அவருடைய சரீரமானது வைக்கப்பட்டிருந்ததையும் பார்த்து,

௫௬. திரும்பிப்போய், கந்தவர்க்கங்களையும் பரிமளதைலங்களையும் ஆயத்தம்பண்ணி, ஓய்வுநாளிலே கற்பனையின்படியே ஓய்ந்திருந்தார்கள்.

௨௪. அதிகாரம்.

கிறீஸ்து உயிர்த்தெழுந்தது. * மத. ௨௮, ௧—௰௫. மாற்கு. ௰௬, ௧—௰௩. யோவா. ௨௰, ௧—௰௮.

ஆறுவாரத்தின் முதல்நாள் அதிகாலமே அவர்கள் தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை எடுத்துக்கொண்டு, அவர்களும் அவர்களுடனே கூடவேறே சில ஸ்திரீகளுங் கல்லறையினிடத்திலே வந்தார்கள்.

௨. ஆனால் கல்லறைக் கல்லானது அறையைவிட்டுப்பிரட்டித்தள்ளப்பட்டதை அவர்கள் கண்டு,

௩. உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய யேசுவின் சரீரத்தைக் காணாதேபோனார்கள்.

௪. அவர்கள் அதின்பேரில் ஐயப்பட்டுக்கொண்டிருக்கையிலே சம்பவித்ததேதெனில், இதோ மின்னும் வஸ்திரங்களுள்ள இரண்டு பேர் அவர்களண்டை வந்துநின்றார்கள்.

௫. அவர்கள் பயமடைந்து முகந்தரையை நோக்கிக் குனிந்திருக்கையிலே, இவர்கள் அவர்களுடனே சொன்னதாவது: உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்திலே தேடுவானேன்.

௬. அவர் இங்கேயில்லை, அவர் எழுந்திருந்தார், அவர் இன்னங் கலிலேயாவிலிருக்கக்கொள்ள உங்களுடனே:

௭. * மனுஷனுடைய குமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டுச் சிலுவையிலறையுண்கவும் மூன்றாம்நாளிலே திரும்ப எழுந்திருக்கவும் வேண்டியதென்று சொன்னதை நினைவுகூருங்கோளென்றார்கள். * ௯, ௨௨.

௮. அப்போதவர்கள் அவர் வார்த்தைகளை நினைவுகூர்ந்து,

௯. கல்லறையைவிட்டுத்திரும்பி, இதுகளையெல்லாம் பதினொருவருக்கும் மற்றவர்களெல்லாருக்கும் அறிவித்தார்கள்.

௰. இதுகளை அப்போஸ்தலருடனே சொன்னவர்கள் * மகதலா ஊர் மரியாளும், யொவன்னாளும், யாகோபின் தாய் மரியாளும், இவர்களுடனேயிருந்த மற்ற ஸ்திரீகளுந்தானே. * ௮, ௨. ௩.

௰௧. ஆனாலவர்களுடையவார்த்தைகளவர்க ளுக்குப்பித்துமொழிகளாய்க்கண்டுஅவர்களை நம்பாதேபோனார்கள்.

௰௨. பேதுருவோவென்றால்எழுந்திருந்து/கல்லறை யண்டையிலேயோடி/அதற்குள்ளேகுனிந்து சீலைகளாத்திரம்வைத்திருக்கக்கண்டுசம்பவித்ததை தனக்குள்ளேயாச்சரியப்பட்டுக்கொண்டுபோனான்.

அவரெம்மாவுக்குப்போகிறரண்டுசீஷ ருக்குத்தரிசனையானது. மாற்கு. ௰௬/
௰௨. ௰௩.

௰௩. ஆனாலந்தநாளிலேதானேயவர்களில் ரெண்டுபேரெருசலேமுக்கறுபதுஸ்தாதுதூர மாண்மாவுஎன்னுங்கிராமத்துக்குப்போ னார்கள்.

௰௪. அவர்கள்சம்பவித்தஇந்தக்காரியங்களெல் லாத்தையுங்குறித்துவொருவரோடொருவர்பேசிக்கொண்டார் கள்.

௰௫. அவர்களொருவரோடொருவர்பேசிவிசாரித்துக் கொண்டிருக்கையிலேசம்பவித்ததென்னவென்றால்/யேசுதா முசமீபித்து/அவர்களோடேகூடநடந்தார்.

௰௬. ஆனாலவரையறியாதபடிக்கவர்களுடைய கண்கள்பிடிபட்டுது.

௰௭. அவரவர்களோடே: நீங்கள்துக்கமுக முள்ளவர்களாய்வழிநடந்துஒருவரோடொருவர் சொல்லிக்கொள்ளுமிந்தவார்த்தைகளென்னவென்றார்.

௰௮. அவர்களிலொருத்தனாகியக்லேயோபாவென் னும்பேருள்ளவன்பிரத்யுத்தரமாகஅவரோடே: நீ மாத்திரமெருசலேமிலேயிந்நாள்களில்சம்பவித் தவைகளையறியாதபரதேசியாயிருக்கிறாயோவெ ன்றான்.

௰௯. அப்போஅவரவர்களோடே: எதுகளெ ன்றார். அவர்களவரோடே: சொன்னது: பராபரனுக்குஞ்சகலசனத்துக்குமுன்பாகசெயலிலுஞ்சொ ல்லுமவார்த்தையிலும்வல்லமையுள்ளதீர்க்கதரிசி யாயிருந்தயேசுநாசரேத்தானை/

௨௰. நம்முடையபிரதானாசாரியர்களுங்கலைவரும மரணாக்கினைக்கொப்புக்கொடுத்து/சிலுவையில அறைந்தார்களென்கிறதுகளைத்தானே.

௨௰௧. நாங்களோவென்றால்/*இஸ்ரவேலைமீட்கப் போறவர்அவரென்றுநம்பினோம்/ஆனாலேப்படி யெல்லாமிருந்தும்/இதுகள்சம்பவித்துஇன்றுமூன்று நாளாகுது. * அப்போ. ௧/ ௬.

௨௰௨. எங்களிலேசிலஸ்திரீகளோஎங்களைவிஸ் மிக்கவும்பண்ணினார்கள்/அவர்களதிகாலமே கல்லறையண்டையிலிருந்து/

௨௰௩. அவருடையசரீரத்தைக்காணாமல்அவருயி ரோடிருக்கிறாரென்றுசொன்னதேவதூதருடைத ரிசனையையுங்கண்டோமென்றுவந்தார்கள்.

௨௪. அப்போ எங்களுடனே இருக்கிறவர்களில் சிலர் கல்லறையண்டையிலே போய், ஸ்திரீகள் சொன்னதுக்குச் சரியாய்க் கண்டார்கள், அவரையோ காணவில்லையென்றார்கள்.

௨௫. அப்போ அவர் இவர்களுடனே: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதுக்கு அவமதியும் மந்த இருதயமுமானவர்களே,

௨௬. கிறிஸ்து இப்பாடுகளை உத்தரிக்கவுந் தம்முடைய மகிமைக்குள்ளாகப் பிரவேசிக்கவும் வேண்டியதாயிருந்ததில்லையோவென்று சொல்லி,

௨௭. மோசேயையுஞ் சகல தீர்க்கதரிசிகளையுந் துவக்கி, சகல வேதத்திலுந் தம்மைக் குறித்தவைகளை அவர்களுக்கு விபரித்துக் காட்டினார்.

௨௮. அவர்கள் பயணமாய்ப் போன கிராமத்துக்குச் சேர்ந்தார்கள், அப்போ அவர் அப்புறமே போகிறவர் போலே காண்பித்தார்.

௨௯. ஆனால் அவர்கள்: எங்களுடனே கூட இரும், அதேதென்னில் அந்திநேரமாச்சு பொழுது சாய்ந்ததென்று சொல்லி, அவரை வருந்திக்கொண்டிருந்தார்கள், அப்போ அவர் அவர்களுடனே கூட இருக்கிறதுக்குப் பிரவேசித்தார்.

௩௰. அவர் இவர்களுடனே கூடப் பந்தியிருக்கையில் சம்பவித்ததேதென்னில், அவர் அப்பத்தையெடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார்.

௩௧. அப்போ அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள், அவரோவென்னில் அவர்களுக்கு அதெரிசியமாய்ப் போனார்.

௩௨. அப்போ ஒருத்தரோடொருத்தர்: அவர் வழியிலே நம்முடனே பேசி, வேதவாக்கியங்களை நமக்குத் திறந்து சொல்லும்போது, நம்முடைய இருதயம் நமக்குள் பற்றியெரிகிறதாயிருந்ததில்லையோவென்று சொல்லிக்கொண்டு,

௩௩. அந்நேரமே எழுந்திருந்து, எருசலேமுக்குத் திரும்பிப்போய், பதினொருவரும் அவர்களோடிருக்கிறவர்களுங் கூடினவர்களாகவும்:

௩௪. கர்த்தர் மெய்யாய் எழுந்திருந்து * சீமோனுக்குத் தெரிசனையானாரென்று சொல்லுகிறவர்களாகவுங் கண்டு, * ௧. கொ. ௰௫. ௫.

௩௫. தாங்களும் வழியிலே சம்பவித்ததுகளையும், அவர் அப்பத்தைப் பிட்டுக்கையிலே தாங்களுக்கு எப்படி அறியப்பட்டாரென்கிறதையும் விவரித்தார்கள்.

அவர் உண்ணு முதலாகக் கொண்டு அப்போஸ்தலருக்குத் தெரிசனையானது. மாற்கு. ௰௬. ௰௪. மு. யோவா. ௨௰. ௰௯. மு.

௩௬. அவர்கள் இதுகளைப் பேசிக்கொண்டிருக்கக்கொள்ள, யேசுதாமே அவர்கள் நடுவிலே நின்று, அவர்களுடனே: உங்களுக்குச் சமாதானமென்றார்.

௩௭. அவர்

௩௭. அவர்கள் கலோவெனலத்தினும் பயமும் அடைந்து தாங்கள் ஒரு ஆவியைக் காண்கிறதாய் நினைத்தார்கள்.

௩௮. அப்போதவர் அவர்களுடனே சொன்னதாவது: நீங்கள் கலங்கியிருக்கிறதேது, உங்கள் இருதயங்களிலே சந்தேகங்களெழும்புகிறதுமேது.

௩௯. நான்தானென்று என் கைகளையுமென் கால்களையும் பாருங்கோள், என்னைத் தொட்டுப் பாருங்கோள், ஏனென்றால் எனக்கு மாங்கிஷமும் எலும்புகளுமுண்டென்று நீங்கள் காண்கிறபடியே ஒரு ஆவிக்கில்லையென்றுத்தரச் சொல்லி,

௪௰. இக்கைகளையுங் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்.

௪௧. ஆனாலவர்கள் சந்தோஷத்தினாலே இன்னம் விசுவாசியாமல் ஆச்சரியமாயிருக்கிறபோது அவர் அவர்களுடனே: போசிக்கத்தகும் ஏதிங்கே உங்களுக்குண்டோவென்றார்.

௪௨. அவர்களோவென்றால் அவருக்குப் பொரித்த மீன் கண்டத்தையுந் தேன்கூண்டுத் துணுக்கையுங் கொடுத்தார்கள்.

௪௩. அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் போசித்து,

௪௪. அவர்களுடனே சொன்னதாவது: மோசேயின் ஞாயப்பிரமாணத்திலுந் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலுஞ் சங்கீதங்களிலும் என்னைக் குறித்தெழுதியிருக்கிறதெல்லாம் நிறைவேற வேண்டியதென்று நானின்னம் உங்களோடிருக்கும்போது உங்களுடனே சொல்லி வந்த வர்த்தமானங்கள் இதுகள்தானேன்றார்.

௪௫. அப்போ வேதவெழுத்துகளை உணர்ந்திட அவர் அவர்களுடைய அறிவைத் திறந்து,

௪௬. அவர்களுடனே சொன்னதாவது: இந்தப்பிரகாரமாக எழுதியிருக்குது, இந்தப்பிரகாரமாகவுங் கிறீஸ்து பாடுபட்டு மூன்றாம் நாளிலே மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும்,

௪௭. யெருசலேமதுவக்கிச் சகல சாதிகளிடத்திலுங் * குணப்படுதலும் பாவமன்னிப்பும் அவர் நாமத்திலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியதாயிருந்தது.

* அப்போ. ௫, ௩௧.

௪௮. நீங்களோ இதுகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

௪௯. இதோ நான் என் பிதாவின் வாக்குத்தத்தத்தை உங்கள் மேல் அனுப்புகிறேன், நீங்களோவென்றால் உன்னதத்திலிருந்துவரும் பெலனாலே தரிப்பிக்கப்படும் மட்டும் யெருசலேம் பட்டணத்திலிருங்கோளென்றார்.

* யோவா. ௰௪, ௨௬. அப்போ. ௧, ௪.

அவர் பரமண்டலங்களிலேறினது. மாற்கு. ௰௬, ௰௯. ௨௰. அப்போ. ௧, ௯—௰௧.

௫௰. அவர்

௫௰. அவர் அவர்களைப் பெத்தானியாமட்டும் வெளி
யே அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய கைகளை
ஏறெடுத்து அவர்களை ஆசீர்வதித்தார்.

௫௧. அவர்களை ஆசீர்வதிக்கையிலே சம்பவித்ததே
தென்றால், அவர்களை விட்டுப் பிரிந்து பரமண்டலத்
திலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்.

௫௨. அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு, மகா
சந்தோஷத்துடனே யெருசலேமுக்குத் திரும்பி,

௫௩. எப்பொழுதுந் தேவாலயத்திலே பராபர
னைப் புகழ்ந்து துதித்துமிருந்தார்கள். ஆமென்.

யோவான் எழுதின சுவிசேஷம்.

௧. அதிகாரம்.

கிறிஸ்துவினுடைய மேன்மையின் முகவுரை.

ஆதியிலே * வார்த்தையிருந்தது, அவ்வார்த்தை பரா
பரனிடத்திலிருந்தது, அவ்வார்த்தை ** பராபரனுமாயி
ருந்தது. * ௧. யோவா. ௧, ௧. ௫, ௭. அறிவி. ௰௯,
௰௩. ** ௪. யோவா. ௫, ௨௰.

௨. இது ஆதியிலே * பராபரனிடத்திலிருந்தது.

* வாக. அ, ௨௨—௩௰.

௩. எல்லாம் * அதினாலே உண்டாச்சுது, உண்டான
தொன்றும் அதுவல்லாமல் உண்டானதில்லை.

* சங்கீ. ௩௩, ௬. கொலோ. ௧, ௰௬. யா.

௪. அதிலே * ஜீவனுண்டாயிருந்தது, அந்த ஜீவன்
மனுஷருடைய வெளிச்சமாயிருந்தது. * ௫, ௨௬.

௫. * வெளிச்சம் இருளிலே பிரகாசிக்குது, ஆனால்
இருளதை உணர்ந்துகொண்டதில்லை. * அ, ௰௨.
௯, ௫. ௰௨, ௪௬.

௬. பராபரனாலே அனுப்பப்பட்ட ஒரு மனுஷனிருந்
தான், அவன் பேர் யோவான். * மத. ௩, ௧.

௭. இவன் தன்னாலே எல்லாரும் விசுவாசிக்கும்படிக்
கு வெளிச்சத்துக்குச் சாட்சி கொடுக்கச் சாட்சியாக வந்
தான்.

௮. அவன் அந்த வெளிச்சமாயிராமல் அந்த வெளிச்
சத்துக்குச் சாட்சி கொடுக்க வந்தான்.

௯. அது லோகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிர
காசிப்பிக்கிற மெய்யான வெளிச்சமாயிருந்தது.

௰. லோகத்திலிருந்தார், லோகம் அவராலும் * உண்
டாச்சுது, ஆனாலும் லோகம் அவரை அறிந்ததில்லை.

* எபிரே. ௧, ௨.

௰௧. தம்மக்குச் சொந்தமானதிலே வந்தார்; அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளாதே போனார்கள்:

௰௨. ஆனாலெத்தனைபேர் அவரை ஏற்றுக்கொண்டார்களோ, தம்முடைய நாமத்தின்பேரிலே விசுவாசிக்கிற அத்தனைபேருக்கும் அவர் * பராபரனுடைய பிள்ளைகளாகிறதுக்கு அதிகாரங்கொடுத்தார்.

* ரோ. ௮, ௰௫. கலா. ௩, ௨௰௬.

௰௩. அவர்கள் இரத்தங்களினாலாகிலும் மாம்ஷத்தின் சித்தத்தினாலாகிலும் புருஷனுடைய சித்தத்தினாலாகிலும் பிறவாமல், * பராபரனாலே பிறந்தார்கள்.

* ௩, ௫. ௧. யோவா. ௫, ௰௯. ௰௧. ௧, ௰௮.

௰௪. அந்த வார்த்தை * மாம்ஷமாகி கிருபையினாலும் உண்மையினாலும் நிறைந்தவராய் நம்மிடத்தில் வாசம்பண்ணினார், பிதாவுக்கு ஒரே பேறானவரின் மகிமையாக அவருடைய ** மகிமையைக் கண்டோம்.
* யேச. ௭, ௰௪. மத். ௧, ௰௯. ** யேச. ௪௰, ௫.

யேசுகிறிஸ்துவுக்காக யோவான் ஸ்நானகன் பகர்ந்த சாட்சிகள்.

௰௫. யோவான் * அவருக்குச் சாட்சிகொடுத்துச் சத்தமிட்டுச் சொன்னதாவது: எனக்குப் பிந்தி வருகிறவர் எனக்கு முந்தினவரானவர்; ஏனெனில் எனக்கு முன்னிருந்தாரென்று சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான். * மத். ௩, ௰௧. மாற். ௧, ௭.
௰௬. அவருடைய பரிபூரணத்தினாலே நாமெல்லாரும் கிருபையின்மேல் கிருபையையும் பெற்றோம்.

௰௭. ஏனெனில் நியாயப்பிரமாணம் மோசேயைக் கொண்டு கொடுப்பட்டது; கிருபையும் உண்மையுமோ யேசுகிறிஸ்துவினாலே உண்டாச்சுது.

௰௮. பராபரனை * ஒருத்தனும் ஒருக்காலுங் கண்டதில்லை; பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே ** நமக்கதைத் தெரிவித்தாரென்றான். * ௨. மோ.

௩௩, ௨௰. ** ஞா. ௰, ௨௨.

௰௯. யோவானே நீர் ஆரென்று கேட்க யூதர் யெருசலேமிலிருந்து ஆசாரியர்களையும் லேவியரையும் அனுப்பின போது அவன் கொடுத்த சாட்சியாவது:

௨௰. அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டு: நான் கிறிஸ்துவல்லவென்று அறிக்கையிட்டான்.

௨௰௧. அவர்கள் அவனை: பின்னை ஆர், நீர் எலியாவோவென்று கேட்டார்கள். அவன்: நான் அவனல்லவென்றான். நீர் தீர்க்கதெரிசியாரோவென்றதற்கு: அல்லவென்று பிறத்தியுத்தாரஞ்சொன்னான்.

௨௰௨. அப்போ அவனுடனே: எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் பிறத்தியுத்தாரங்கொடுக்க, நீர் ஆர், உம்மை நீர் ஆரென்கிறீரென்றார்கள்.

௨௰௩. அவன்: யேசாயா தீர்க்கதெரிசி சொன்னபிரகாரமாக * நான் வனாந்திரத்திலே: கர்த்தருடைய வழி

யைச்செவ்வைபண்ணுங்கோளென்று கூப்பிடுகிறவருடைய சத்தமாயிருக்கிறேனென்றான்.

* மத. ௩, ௩.

௨௪. அனுப்பப்பட்டவர்கள் பரிசேயராயிருந்தார்கள்.

௨௫. அவர்கள் அவனைக் கேட்டு, அவனோடே: நீர் கிறிஸ்துவல்லாமலும் எலியாவல்லாமலுந் தீர்க்கதெரிசியாரல்லாமலுமிருந்தால், பின்னை ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீரென்றார்கள்.

௨௬. யோவான் அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: நான் * தண்ணீரிலே ஞானஸ்நானங் கொடுக்கிறேன், ஆனாலும் நீங்கள் அறியாதிருக்கிறவர் உங்கள் நடுவிலே நிற்கிறார். * மத. ௩, ௰௧.

௨௭. அவர் எனக்குப் பிந்திவந்தும் எனக்கு முந்தினவரானவர், அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்க்க நான் பாத்திரவானல்லவென்றான்.

௨௮. இதுகள் யோர்தானுக்கக்கரையிலே யோவான் ஞானஸ்நானங் கொடுத்த பெத்தாபராவிலே சம்பவித்தது.

௨௯. மறுநாளிலே யோவான் யேசுவைத் தன்னண்டை வரக்கண்டு சொன்னதாவது: இதோ லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற பராபரனுடைய ஆட்டுக்குட்டி.

௩௰. எனக்குப் பிந்தி ஒரு புருஷன் வருகிறார், அவர் எனக்கு முந்தினவரானவர், ஏனெனில் எனக்கு முன்னிருந்தாரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தானே.

௩௧. நானும் அவரை அறியாதிருந்தேன், ஆனாலும் அவர் இஸ்றவேலுக்கு வெளியாக்கப்படுவதற்காக நான் வந்து தண்ணீரிலே ஞானஸ்நானங் கொடுக்கிறேனென்றான்.

௩௨. யோவான் சாட்சிகொடுத்துச் சொன்னதாவது: ஆவி புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி அவர் மேலிருந்ததைக் கண்டேன். * மத. ௩, ௰௬.

௩௩. நானும் அவரை அறியாதிருந்தேன், ஆனாலும் தண்ணீரிலே ஞானஸ்நானங் கொடுக்க என்னை அனுப்பினவர் என்னோடே: நீ ஆர்மீதில் ஆவி இறங்கியிருக்கிறதைக் காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியிலே ஞானஸ்நானங் கொடுக்கிறவரென்றார்.

௩௪. அதை நான் கண்டு, இவர் பராபரனுடைய குமாரனென்று சாட்சி கொடுத்தேனென்றான்.

சிலசீஷர் கிறிஸ்துவண்டை சேர்ந்தது.

௩௫. மறுநாளிலே திரும்ப யோவானும் அவனுடைய சீஷரிலே இரண்டுபேரும் நின்றிருந்தார்கள்.

௩௬. உலாவுகிற யேசுவை அவன் கண்ணோக்கி: * இதோ பராபரனுடைய ஆட்டுக்குட்டி என்றான்.

* ௨௯. வசனம்.

௩௭. அவ

ஙஎ. அவனிரணடுசீஷர அவனிதைசொலலக கேடடுயேசுவைப்பின சென்றார்கள.

ஙஅ. யேசுதிருமபிககொணடு, அவர்களபபின செலலுகிறதைக்கணடு, அவர்களுடனே: என்ன தேடுகிறீர் களென்றார.

ஙகூ. அவர்கள அவருடனே: ரபீ (அதறகுஅரததம போதகரே) எஙகேதஙகியிருக்கிறீர என்றார்கள.

சய. அவர்நீஙகளுடனே: வநதுபாருஙகோ ளென்றார். அவர்கள வநது, எஙகேதஙகுகிறாரென்று கணடு, அனறையதினமவருடனே கூட இருநதார் கள, ஏறககுறையபததுமணிவேளையாயிருநதது.

சக. யோவானசொலலககேடடு அவரைப்பின சென்றவர்களிலொருதனசீமோன பேதுருவின சகோதரனாகிய அநதிரேயாவாயிருநதான.

சஉ. இவன முநதித்தனனுடைய சகோதரனா கியசீமோனைககணடு, அவனுடனே: மேசியாவைக கணடுபிடிததோமென்றான. அதறகு அரததங கிறிஸதது என்பது.

சங. இவனதைசசொலலி, அவனையேசுவினிடதது கழைததுவநதான. யேசுஅவனைநோககிப்பார்தது: நீ யோனாவினமகனாகியசீமோனாயிருக்கிறாய, நீ * கேப பா என்றழைககபபடுவாய என்றார். அதின அர்ததம பேதுருவென்பது. * மத. யசா, யஅ.

சச. மறுநாளிலே யேசுகலிலேயாவுக்குப்புறப பட்டுப்போகமனதாயிருநது, பிலிப்புவைக்கணடு, அவ னுடனே: எனனைப்பின செல்லென்றார.

சரு. பிலிப்புவோவென்றால அநதிரேயா பேதுரு என்றவர்களின ஊராகியபெதசாயதாபடடணத தானாயிருநதான.

சசா. பிலிப்புநாததானுவேலைக்கணடு அவனுட னே: * மோசேநியாயபபிரமாணத்திலுமதீர்க்கதரிசிக ளுமஎழுதினவரைககணடுபிடிததோம, யோசேப பினகுமாரனுமநாசரேததூரானயேசுவையே என் றான. * க. மோ. ங, யரு. சசா, ய. ரு. மோ. யஅ, யஅ.

சஎ. நாததானுவேல அவனுடனே: நாசரேததிலி ருநதுயாதொருநனமை உணடாகககூடுமோ வென் றான. பிலிப்புஅவனுடனே: வநதுபாரென்றான.

சஅ. யேசுநாததானுவேல தமமணடைவரககண டு, அவனைககுறிதது: இதோ கபடமறற உததம இஸற வேலனென்றார.

சகூ. நாததானுவேல அவருடனே: எதினாலென னை அறிநதிருக்கிறீர என்றான. யேசு அவனுக்குப்பிரதி யுததரமாக: பிலிப்பு உன்னை அழைககிறதுககு முனனே, அததிமரததின கீழிருக்கிற உனனைககண டேனென்றார.

ருய. நாததானுவேல அவருககுப்பிரததியுததார மாக: ரபீ, நீர் பராபரனுடையகுமாரன, நீர் இஸற வேலுடையராசாவென்றான.

௫௧. யேசுவனுக்குப்பிரதியுத்தரமாக: அத்தி
மரத்தின்கீழிருக்கிறவுன்னைக்கண்டேனென்றுநான்
உன்னுடனே சொன்னதினாலே விசுவாசிக்கிறாய்; இது
களிலும் பெரியதுகளைக் காண்பாயென்றார்.

௫௨. பின்னும் அவனுடனே: மெய்யாகவே
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; இது
முதல் வானந்திறந்திருக்கிறதையும் பராபரனுடைய
தூதர்கள் மனுஷனுடைய குமாரனிடத்திலிருந்தேறு
கிறதையும் அவர்மேலிறங்குகிறதையுங் காண்பீர்
களென்றார். * ௧. மோ. ௨௮, ௰௨.

௨. அதிகாரம்.

கிறிஸ்து கானாவிலே ஒரு கலியாணத்திலே செய்த அற்புதம்.

மூன்றாம்நாளிலே கலிலேயாவினூரான கானா
விலே கலியாணமாயிருந்தது; அங்கே யேசுவினுடைய
தாயுமிருந்தாள்.

௨. ஆனால் யேசுவும் அவருடைய சீஷரும், கலியா
ணத்துக்கழைக்கப்பட்டிருந்தார்கள்.

௩. திராட்சப்பழரசங் குறைப்பட்டபோது யேசுவி
னுடைய தாய் அவருடனே: திராட்சப்பழரசம் அவர்
களுக்கில்லையென்றாள்.

௪. யேசு அவளுடனே: * ஸ்திரீயே, எனக்கும்
உனக்குமென்ன; என் வேளை இன்னம் வந்ததில்லை
என்றார். * ௰௯, ௨௬.

௫. அவருடைய தாய் பணிவிடைக்காரருடனே:
உங்களுக்கென்ன சொல்லுகிறாரோ அதைச் செய்யுங்
கோளென்றாள்.

௬. ஆனால் அங்கே, யூதர் சுத்தம் பண்ணிக்கொள்
ளும் முறைமையின்படியே ஆறு கற்சாடிகள் வைத்தி
ருந்தது. ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம்பிடித்
தது.

௭. யேசு அவர்களுடனே: சாடிகளிலே தண்ணீ
ரை ரொப்புங்கோளென்றார். அவர்கள் அதுகளை வாய
மட்டாக ரொப்பினார்கள்.

௮. அப்போ அவர்களுடனே: நீங்கள் இப்போ மொண்
டு, பந்திவிசாரிப்புக்காரனண்டை கொண்டுபோங்
கோளென்றார்; அவர்கள் கொண்டுபோனார்கள்.

௯. ஆனால் திராட்சப்பழரசமாயப்போன தண்
ணீரை பந்திவிசாரிப்புக்காரன் ருசிபார்த்து, அதெங்
கேயிருந்துவந்ததென்கிறதைத் தண்ணீரை மொண்டப
ணிவிடைக்காரர் அறிந்ததேயொழியத்தான் அறியாதிருக்
கிறபோது, பந்திவிசாரிப்புக்காரன் மணவாளனைக்
கூப்பிட்டு,

௰. அவனுடனே: எந்த மனுஷனும் முந்தி நல்ல தி
ராட்சப்பழரசத்தை வார்த்து, ஜனங்கள் திருப்தியடைந்
திருந்தால் அப்போ இளப்பமானதை வார்ப்பான்; நீ
நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்துவைத்தாயென்
றான்.

௰௧. அடையாளங்களுடைய இந்தத் துவக்கத்தை யேசு கலிலேயாவின் கானாவிலே செய்து தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவர் பேரிலே விசுவாசித்தார்கள்.

௰௨. இதுகளுக்குப் பிறபாடு அவரும் அவருடைய தாயும் அவருடைய சகோதரரும் அவருடைய சீஷருங் கப்பர்னகூமுக்கு இறங்கிப்போனார்கள்; ஆனால் அங்கே அவர்கள் வெகுநாளிருந்ததில்லை.

அவர் தேவாலயத்தைச் சுத்திகரித்தது.

௰௩. யூதருடைய பஷாக் கிட்டியிருந்தது; அப்போ யேசு யெருசலேமுக்கு நடந்தேறி;

௰௪. தேவாலயத்திலே மாடுகளையும் ஆடுகளையும் புறாக்களையும் * விற்கிறவர்களுங் காசுக்காரரும் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு; * மத. ௨௧, ௰௨.

௰௫. கயறுகளால் ஒரு சவுக்கை உண்டாக்கி, எல்லாரையும் ஆடுகளையும் மாடுகளையுந் தேவாலயத்துக்குப் புறம்பாகத் துரத்தி, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, மேசைப்பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு,

௰௬. புறாக்களை விற்கிறவர்களுடனே: இதுகளை இவ்விடம்விட்டெடுத்துப் போங்கோள்; என் பிதாவினுடைய வீட்டை வியாபார வீடாக்காதேயுங்கோளென்றார்.

௰௭. ஆனால் * உம்முடைய வீட்டுக்காக இருக்கிற பத்தி வயிராக்கியம் என்னைப் பட்சித்துத் தேன்மெழுந்திருக்கிறதென்று அவருடைய சீஷர் நினைவுகூர்ந்தார்கள்.
* சங்கீ. ௬௯, ௰.

௰௮. அப்போ யூதர் அவருக்குப் பிரதியுத்தாரமாக: நீர் இதுகளைச் செய்கிறதுக்கு * எங்களுக்கென்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர் என்றார்கள்.
* ௬, ௩௰.

௰௯. யேசு அவர்களுக்குப் பிரதியுத்தாரமாக: * இந்தத் தேவாலயத்தை இடியுங்கோள்; மூன்று நாளிலே அதை எழுப்புவேனென்றார். * மத. ௨௬, ௬௧. ௨௭, ௪௰.

௨௰. அப்போ யூதர்: நாற்பத்தாறு வருஷக்காலத்திலே இந்தத் தேவாலயங் கட்டப்பட்டது; நீர் மூன்று நாளிலே அதை எழுப்புவீரோவென்றார்கள்.

௨௧. அவரோவென்னில் தம்முடைய சரீரமென்ற தேவாலயத்தைக் குறித்துப் பேசினார்.

௨௨. இதை அவர்களுடனே சொல்லியிருந்தாரென்கிறதை அவருடைய சீஷர் அவர் மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு நினைவுகூர்ந்து, வேதஎழுத்தையும் யேசு சொன்ன வசனத்தையும் விசுவாசித்தார்கள். * லூ. ௨௪, ௮.

௨௩. அவர் யெருசலேமில் பஷாவின் பண்டிகைக்கிருக்கக்கொள்ள, அநேகர் அவர் செய்த அடையாளங்களைக் கண்டு அவருடைய நாமத்தின் பேரிலே விசுவாசித்தார்கள்.

௨௪. யேசுவோவென்றால் * எல்லாரையும் அறிந்தபடியினாலே, நம்பிக்கையாய் அவர்களுடனே தன்னைக் கொடுத்ததில்லை. * ௬। ௬௪.

௨௫. ஒரு மனுஷனுக்கொருவன் சாட்சி கொடுக்க அவருக்குத் தேவையாயிருந்ததில்லை, ஏனென்றால் மனுஷனுக்குள்ளிருந்ததைத் தாமே அறிந்திருந்தார்.

௩. அதிகாரம்.

கிறிஸ்து நிக்கொதேமுடனே பண்ணின சம்பாஷணை.

ஆனால் யூதரில் தலைவனாகிய நிக்கொதேமு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் பரிசேயரிலிருந்தான்.

௨. அவன் ராத்திரியிலே யேசுவினிடத்திலே வந்து, அவருடனே: ரபி, நீர் பராபரனிடத்திலே வந்த போதகரென்று அறிந்திருக்கிறோம், ஏனென்றால் ஒருத்தனும் தன்னுடனே பராபரனிருந்தாலேயொழிய நீர் செய்கிற இந்த அடையாளங்களைச் செய்யக்கூடாதென்றான்.

௩. யேசு அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், ஒருத்தன் * மறுபடியும் பிறந்தாலேயொழிய பராபரனுடைய ராச்சியத்தைக் காணக்கூடாதென்றார். * மத. ௰௮। ௩.

௪. நிக்கொதேமு அவருடனே: மனுஷன் முதிர்வயதாயிருக்கையிலே எப்படிப் பிறக்கக்கூடும், அவன் இரண்டாந்தரந் தன் தாயின் கெர்ப்பத்துக்குள்ளே பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோவென்றான்.

௫. யேசு பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது: மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், ஒருத்தன் * தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலேயொழிய, பராபரனுடைய ராச்சியத்துக்குள்ளே பிரவேசிக்கக்கூடாது. * எசேக. ௩௬। ௨௫—௨௭. தீத்து. ௩। ௬. ௭.

௬. * மாம்சத்தினாலே பிறந்தது மாம்சமாயிருக்குது, ஆவியினாலே பிறந்தது ஆவியாயிருக்குது. * ௧. மோ. ௬। ௩.

௭. நீங்கள் மறுபடியும் பிறக்கவேணுமென்று நான் உனக்குச் சொன்னதுக்காக அதிசயப்படாதே.

௮. காற்று தனக்குச் சரிப்போன இடத்திலே வீசுது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் * அது எங்கேயிருந்து வருகுதென்றும் எங்கே போகுதென்றும் அறியாய், ஆவியினாலே பிறந்தவனெவனும் அந்தப்படியாயிருக்கிறானென்றார். * சங்கீ. ௱௩௯। ௫. ௭. பிரச. ௰௧। ௫.

௯. நிக்கொதேமு அவருக்குப் பிரத்தியுத்தரமாக: இதுகள் சம்பவிக்கக்கூடுகிறது எப்படியென்றான்.

௰. யேசு அவனுக்குப் பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது: நீ இஸ்றவேலிலே போதகனாயிருந்தும் இதுகளை அறியாயோ.

௰௧. மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி

நாங்கள்

நாங்கள் கண்டதற்குச் சாட்சி கொடுக்கிறோம்; ஆனால் எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளீர்கள்.

௰௨. நான் உங்களுக்குப் பூமிக்கடுத்த காரியங்களைச் சொல்லியும் நீங்கள் விசுவாசியாதே போனால், பரம காரியங்களை உங்களுக்குச் சொன்னேனாகில் எப்படி விசுவாசிப்பீர்கள்.

௰௩. * பரமண்டலத்திலிருந்திறங்கினவரும் பரமண்டலத்திலுள்ள மனுஷனுடைய குமாரனே ஒழிய ஒருத்தனும் பரமண்டலத்துக்கேறினதில்லை. * ௬। ௬௨.

௰௪. மோசே வனாந்தரத்திலே * சர்ப்பத்தை உயர்த்தின வண்ணமாய் மனுஷனுடைய குமாரன், * ௪. மோ. ௨௧। ௮. ௯.

௰௫. அவர் பேரில் * விசுவாசிக்கிறவனெல்லாங் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை அடைவதற்காக உயர்த்தப்பட வேண்டியது. மற்கு. ௰௬। ௰௬.

௰௬. அதேதென்னில் * பராபரன் தம்முடைய ஏகசுதனான குமாரனை, அவர் பேரில் விசுவாசிக்கிறவனெல்லாங் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை அடைவதற்காகத் தக்கந்தயுத்தணமையாய் லோகத்தை நேசித்தார். * ரோ. ௫। ௮.

௰௭. ஏனென்னில் பராபரன் தம்முடைய குமாரனை லோகத்தில், * லோகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படியாக அனுப்பாமல், அவராலே லோகம் ரட்சிக்கப்படுவதற்காக அனுப்பினார். * ௰௨। ௪௭.

௰௮. அவர் பேரில் விசுவாசிக்கிறவன் * ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோவென்னில் பராபரனுடைய ஏகசுதனான குமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசியாமல் போனபடியினாலே அப்போதே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறான். * ௫। ௨௪.

௰௯. வெளிச்சம் லோகத்திலே வந்திருந்தும், மனுஷர் * வெளிச்சத்தைப் பார்க்கிலும் இருளைச் சிநேகித்ததே ஆக்கினைக்குள்ளாக்குதலாயிருக்குது; ஏனென்னில் அவர்களுடைய கிரிகைகள் பொல்லாததாயிருந்தது.

௨௰. அதேதென்னால் பொல்லாங்கு செய்கிறவனெல்லாம் வெளிச்சத்தைப் பகைத்து, தன் கிரிகைகள் கண்டிக்கப்படாதபடிக்கு வெளிச்சத்தண்டை வராதிருக்கிறான்.

௨௧. ஆனால் உண்மையைச் செய்கிறவனோ, தன் கிரிகைகள் வெளியாகும்படிக்கு, வெளிச்சத்தண்டை வருகிறான்; ஏனென்னில் அதுகள் பராபரனுக்குள் செய்யப்பட்டிருக்குதென்றார்.

யேசுவுக்காக யோவான் ஸ்நானகன் மறுபடியும் பகர்ந்த சாட்சி.

௨௨. இதுகளுக்குப் பிற்பாடு யேசுவும் அவருடைய சீஷரும் யூதேய தேசத்திலே வந்தார்கள்; அங்கே அவர் இவர்களோடுங் கூடச் சஞ்சரித்துக்கொண்டிருந்து, * ஞானஸ்நானங் கொடுத்தார். * ௪। ௨.

௨௩. ஆனால் யோவானுஞ்சாலிமுக்குச்சருகான அயினோனென்று பேருள்ளதலத்திலே ஞானஸ்நானங்கொடுக்கிறவனாயிருந்தான் / ஏனெனில் அங்கே வெகு தண்ணீரிருந்தது / அங்கே சனங்கள் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௨௪. ஏனென்றால் யோவானின்னம் * காவலிலே வைக்கப்பட்டிருந்ததில்லை. * மத. ௰௪ / ௩.

௨௫. அப்போ யோவானுடைய சீஷரிலேசிலருக்கும் யூதருக்குஞ் சுத்தம் பண்ணுதலுக்காக்கதருக்கமுண்டாய்,

௨௬. அவர்கள் யோவானண்டைக்கு வந்து அவனை நோக்கி / உம்முடனே கூட யோர்தானுக்கக்கரையிலிருந்தாரே / அவருக்காக நீர் சாட்சி கொடுத்தீரே / இதோ அவர் ஞானஸ்நானங்கொடுக்கிறார் / எல்லாரும் அவரண்டையிலே வருகிறார்களென்றார்கள்.

௨௭. யோவான் பிரத்தியுத்தரமாகச்சொன்னதாவது: மனுஷனுக்குப் பரமண்டலத்திலிருந்து கொடுக்கப்பட்டாலேயொழியவொன்றையுந்தனனுடையதாகக்கொள்ளக்கூடாது.

௨௮. நான் கிறீஸ்துவாயிராமல் அவருக்கு முன்னாக / அனுப்பப்பட்டவனாயிருக்கிறேனென்று நான் சொன்னதுக்கு நீங்களே எனக்குச்சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

௨௯. மணவாளியையுடையவனே மணவாளன் / ஆனால் நின்று மணவாளனைப் பேசக்கேட்கிற அவருடைய சிநேகிதன் மணவாளனுடைய சத்தத்துக்காக மிக்க வெகு சந்தோஷப்படுகிறான் / இப்போது மிந்தவென்னுடைய சந்தோஷம் நிறைவேறிற்று.

௩௰. அவர் பெருகவும் நான் குறுகவும் வேண்டியது.

௩௧. உயரவிருந்து வருகிறவர் எல்லாருக்கும் மேலானவர் / பூமியிலிருந்துண்டானவன் பூமியினால் மனுஷனாயிருந்து / பூமியிலிருந்து பேசுகிறான். பரமண்டலத்திலிருந்து வருகிறவர் எல்லாருக்கும் மேலானவராயிருந்து /

௩௨. * தாம் கண்டு கேட்டதைச்சாட்சியாகச்சொல்லுகிறார் / ஆனால் அவருடைய சாட்சியை ஒருவரும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. * ௧ / ௰௮.

௩௩. அவருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டவன் / பராபரன் சத்தியபரரென்கிறதுக்கு முத்திரை போட்டான்.

௩௪. ஏனெனில் பராபரனனுப்பினவர் பராபரனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார் / அதேதென்றால் அவருக்குப் பராபரன் ஆவியை * அளவாய்க்கொடார். * கோலோ. ௧ / ௰௯. ௨ / ௯.

௩௫. பிதா குமாரனைச்சிநேகிக்கிறார் / * எல்லாத்தையும் அவர் கையிலே கொடுத்தார். * மத. ௰௧ / ௨௭.

௩௬. குமாரன் பேரிலே விசுவாசிக்கிறவனுக்கு நித்தியசீவனுண்டு / * குமாரனை விசுவாசியாதவனோ சீவனைக்காண்பதில்லை. பராபரனுடைய கோபம் அவன் மேல் நிலைநிற்குமென்றான். * மறுக். ௰௬ / ௰௬.

௪. அதிகாரம்.

கிணத்தில் ஒரு சமாரிய ஸ்திரீயுடனே பண்ணின சம்பாஷணை.

யோவானைப் பார்க்கிலும் யேசு அதிகமான சீஷராக்கி* ஞானஸ்நானம் பண்ணுவிக்கிறதைப் பரிசேயர் கேட்டார்களென்று கர்த்தர் அறிந்தபோதோவென்றால்,* ௩, ௨௨. ௨௬.

௨. யூதேயாவைவிட்டு மறுபடியும் கலிலேயாவுக்குப் போனார்.

௩. யேசுவோவென்றால் தாமே ஞானஸ்நானங் கொடாமல், அவருடைய சீஷர் கொடுத்தார்கள்.

௪. அவர் போகக்கொள்ள, சமாரியாவை உருவ நடக்கவேண்டியதாயிருந்தது.

௫. அப்போ* யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுக்க நிலத்துக்கருகான சீகாரென்னப்பட்ட சமாரியாவின் ஊருக்கு வந்தார். * ௧. மோ. ௪௮, ௨௨. யோசு. ௨௪, ௩௨.

௬. அங்கே யாக்கோபுடைய கிணறிருந்தது. யேசுவோவென்றால் பயணத்தினாலே இளைப்பட்டவராய்க் கிணற்றண்டை உட்கார்ந்தார், ஏறக்குறைய ஆறுமணி வேளையாயிருந்தது.

௭. சமாரியா சாதியான ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள், அவளுடனே யேசு: எனக்குத் தாகத்துக்குத் தாவென்றார்.

௮. ஏனென்றால் அவருடைய சீஷர் தீன்பண்டங்களைக் கொள்ள ஊருக்குள்ளே போயிருந்தார்கள்.

௯. சமாரிய ஸ்திரீ அவருடனே: நீர் யூதனாயிருக்கக்கொள்ள, சமாரிய ஸ்திரீயாகிய என்னண்டை: தாகத்துக்குத் தாவென்று எப்படிக் கேட்கிறீரென்றாள். ஏனென்றால் யூதர் சமாரியருடனே பழக்கம் பண்ணுகிறதில்லை.

௰. யேசு அவளுக்குப் பிரதியுத்தாரமாக: நீ பராபரனுடைய ஈவையும், எனக்குத் தாகத்துக்குத் தாவென்று உன்னுடனே சொல்லுகிறவர் ஆரென்கிறதையும் அறிந்தாயானால்: நீயே அவரைக் கேட்டிருப்பாய், அப்போ* சீவனுள்ள தண்ணீரை உனக்குக் கொடுப்பாரென்றார். * ௭, ௩௮. ௩௯.

௰௧. ஸ்திரீ அவருடனே: ஆண்டவனே, மொள்ள உமக்குப் பாத்திரமில்லையே, கிணறு ஆழமுமாயிருக்குது, பின்னை எங்கேயிருந்து உமக்குச் சீவனுள்ள தண்ணீருண்டாம்.

௰௨. இந்தக் கிணற்றை எங்களுக்குக் கொடுத்த நம்முடைய தகப்பனாகிய யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ, அவர் தானும், அவர் பிள்ளைகளும் அவர் மிருகசீவன்களும் அதிலே குடித்ததுண்டேயென்றாள்.

௰௩. யேசு அவளுக்குப் பிரதியுத்தாரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனெல்லாந் திரும்பத் தாகமுண்டாவான்.

௰௪. ஆனாலெவனுக்கும் நான் தனக்குக் கொடுக்குந் தண்ணீரைக் குடித்தால், அவன் * என்றென்றைக்குந் தாகமடையான்; நான் அவனுக்குக் கொடுக்குந் தண்ணீர் அவனுக்குள் நித்திய சீவனுக்கூறுகிற தண்ணீரூற்றுமாமென்றார். * ௬, ௨௭. ௩௫.

௰௫. ஸ்திரீ அவருடனே: ஆண்டவனே, நான் தாகமடையாமலும் இங்கே மொள்ள வாராமலுமிருக்கும்படிக்கு, அந்தத் தண்ணீரை எனக்குத் தாருமென்றாள்.

௰௬. யேசு அவளுடனே: போய் உன் புருஷனை அழைத்துக்கொண்டு இங்கே வாவென்றார்.

௰௭. ஸ்திரீ பிரதியுத்தாரமாக: எனக்குப் புருஷனில்லையென்றாள், யேசு அவளுடனே, எனக்குப் புருஷனில்லையென்று நன்றாய்ச் சொன்னாய்.

௰௮. ஏனெனில் ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்போ உனக்கிருக்கிறவனே உனக்குப் புருஷனல்ல, இது மெய்யாய்ச் சொன்னாயென்றார்.

௰௯. ஸ்திரீ அவருடனே: ஆண்டவனே நீர் தீர்க்கதரிசியென்று காண்கிறேன்.

௨௰. எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே பணிந்து கொண்டார்கள், நீங்களோ பணிந்து கொள்ள வேண்டிய ஸ்தலம் * யெருசலேமிலேயிருக்குதென்று சொல்லுகிறீர்களென்றாள். * ரு. மோ. ௰௨. ௫.

௨௰௧. யேசு அவளுடனே சொன்னது: ஸ்திரீயே, என்னை நம்பு, வேளை வரும், அப்போ இந்த மலையிலாகிலும் யெருசலேமிலாகிலும் பிதாவைப் பணிந்து கொள்ளீர்கள்.

௨௰௨. நீங்கள் * அறியாததைப் பணிந்து கொள்ளுகிறீர்கள், நாங்கள் அறிந்திருக்கிறதைப் பணிந்து கொள்ளுகிறோம். ஏனெனில் இரட்சிப்பு யூதரிடத்திலிருந்து வருகுது. * ௨. ராசா. ௰௭. ௨௯.

௨௰௩. ஆனால் உண்மையாய்ப் பணிகிறவர்கள் பிதாவை ஆவியிலும் உண்மையிலும் பணிந்து கொள்ளும் வேளை வரும், இப்போவும் வந்திருக்குது, ஏனெனில் அப்படியே தம்மைப் பணிந்து கொள்ளுகிறவர்களைப் பிதா தேடுகிறார்.

௨௰௪. பராபரன் * ஆவியாயிருக்கிறார், அவரைப் பணிந்து கொள்ளுகிறவர்கள் ஆவியிலும் உண்மையிலும் பணிய வேண்டியதென்றார். * ௨. கோ. ௩. ௰௭.

௨௰௫. ஸ்திரீ அவருடனே: கிறிஸ்து என்னப்பட்ட மேசியா வருகிறாரென்று அறிவேன், அவர் வரும்போது எல்லாத்தையும் எங்களுக்கு அறிவிப்பாரென்றாள்:

௨௰௬. யேசு அவளுடனே: * உன்னுடனே பேசுகிற நானே அவரென்றார். * ௯. ௩௭.

௨௰௭. இதிலே அவருடைய சீஷர் வந்து, அவர் ஸ்திரீயுடனே பேசினதுக்காக ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீர், அல்லது அவளுடனே என்ன பேசுகிறீரென்று ஒருத்தனுங் கேட்கயில்லை.

௨௰௮. ஸ்திரீ போவெனிலே தன் பாத்திரத்தை வைத்து, ஊருக்குள் போய், சனங்களுடனே:

௨௯. வாருங்

௨௯. வாருஙகோள/நான செயததெலலாததை
யுமெனககுச சொனன ஒருமனுஷனை/அவரகிறிஸ
துவலலவோவெனறு/பாருஙகோளேனெனறாள.

௩௰. அபபோ ஊரிலிருநது புறபபடடு அவரண
டைககுவநதாரகள.

௩௧. இததுககுளளே சீஷர அவரை: ரபி/போசியு
மெனறுவேணடிககொணடாரகள.

௩௨. அவரோவெனனில அவரகளுடனே: போசிகக
எனககு நீஙகள அறியாத ஒருபோசனமுணடெ
னறார.

௩௩. அபபோ சீஷர ஒருததரோடொருததர: அவருக
குயாதொருததன போசனஙகொணடுவநதானோவெ
னறாரகள.

௩௪. யேசு அவரகளுடனே சொனனதாவது: நான
எனனை அனுபபினவருடைய சிததததினபடி செயது/
அவருடைய கிரியையை முடிககிறதே எனனுடைய போ
சனமாயிருககுது.

௩௫. அவவபபு நாளவரைககும நாலுமாதமிருகக
குதெனறு நீஙகள சொலலுகிறதிலலையோ/இதோ
உஙகளுககுச சொலலுகிறேன உஙகள கணகளை நீங
களெறெடுதது/வயலவெளிகள அபபோதே * அறுப
புககு வெணமையாயிருககுதெனறு பாருஙகோள.
* மத. ௯/ ௩௭.

௩௬. அறுககிறவன பலனபெறறு/நிததியசீவனுக
குககனியைச சேரககிறான. விதைககிறவனும அறுககிற
வனும இருவருங கூட சநதோஷபபடடததககதா
யாயததானே.

௩௭. எனனில: விதைககிறவன வேறெ அறுககிற
வன வேறெனகிற வாககுததததிலே உணமையாயிருக
குது.

௩௮. நீஙகள பயிரிடாததை அறுககநான உஙகளை
அனுபபினேன/வேறெபேரகள வேலையைச செய
தாரகள/நீஙகள அவரகள வேலைககுள புகுநதீர
களெனறார.

௩௯. நான செயததெலலாததையுமெனககுச சொன
னாளெனறு சாடசியிடுகிற அநத ஸதிரீயினுடைய வாறததை
யினிமிததியம அநத ஊரிலுள சமாரியரில அனேகர
அவரமேல விசுவாசிததாரகள.

௪௰. சமாரியர அவரணடைககுவநதபோதோவெ
னனில அவரைத தஙகளிடததிலிருககவேணடிககொண
டாரகள. அவர இரணடுநாள அஙகேயிருநதார.

௪௧. அபபோ அவருடைய வசனததினாலே பினனை
யும வெகு அதிகமானபேரகள விசுவாசிதது/

௪௨. ஸதிரீயுடனே: இனி உன சொலலுககாக வி
சுவாசியோம/இவர மெயயாய கிறிஸதுவாகிய *
லோகரெடசகரெனறு நாஙகள கேடடறிநதி
ருககிறோமெனறாரகள. * ௧. தீமோ. ௪/ ௰.

௪௩. இரணடுநாளைககுப பிறபாடோவெனனில
அவர அவவிடததைவிடடுப புறபபடடுககலிலேயா
வுககுபபோனார.

௪௪. அதேனென்றால்: ஒரு தீர்க்கதெரிசிக்கு அவன் சொந்த பூமியிலே கனமில்லையென்று யேசுதாமே சாட்சி பகர்ந்தார். * மத. ௰௩. ௫௭.
௪௫. அவர் கலிலேயாவிலே வந்தபோதோவென்றால், அவர் யெருசலேமிலே பண்டிகையிலே செய்ததெல்லாத்தையும் பார்த்திருந்த கலிலேயர் அவரை ஏற்றுக்கொண்டார்கள், ஏனென்றால் அவர்களும் பண்டிகைக்கு வந்திருந்தார்கள்.

அவர் ராசாவின் மனுஷருள் ஒருத்தனுடைய குமாரனைக் குணமாக்கின அதிசயம்.

௪௬. அப்போ யேசு * தாம் தண்ணீரைத் திராட்சரசமாக்கின கானாவென்கிற கலிலேயாவின் ஊருக்கும் மறுபடியும் வந்தார். ஆனால் ராசாவின் மனுஷரில் ஒருத்தனிருந்தான், அவன் குமாரன் கப்பர்னகூமிலே வியாதியாய்க் கிடந்தான். * ௨. ௧.
௪௭. யேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவிலே வந்ததை அவன் கேட்டபோது, அவரண்டைக்குப் போய், அவர் இறங்கி வந்து தன் மகனைச் சுகமாக்கி அருள அவரை வேண்டிக்கொண்டான். ஏனென்றால் சாகச் சமீபமாயிருந்தான்.
௪௮. அப்போ யேசு அவனுடனே: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையுங் காணாதிருந்தால், விசுவாசியீர்களென்றார். * ௧. கொ. ௧. ௨௨.
௪௯. ராசாவின் மனுஷன் அவருடனே: ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதுக்கு முன்னே இறங்கி வாருமென்றான்.
௫௰. யேசு அவனுடனே: போ, உன் குமாரன் பிழைத்திருக்கிறானென்றார். யேசு தனக்குச் சொன்ன வார்த்தையை அந்த மனுஷன் நம்பிப் போனான்.
௫௧. ஆனால் அவன் இறங்கிப் போகையிலே அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்க்கொண்டு வந்து: உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறானென்று அறிவித்தார்கள்.
௫௨. அப்போ எந்த மணிவேளையிலே அவனுக்குக் குணமாச்சுதென்று அவர்களிடத்திலே விசாரித்தான். அவர்கள் அவனுடனே: நேத்து ஏழாம் மணிவேளையிலே சுரம் அவனை விட்டுதென்றார்கள்.
௫௩. அப்போ: உன் குமாரன் பிழைத்திருக்கிறானென்கிறதை யேசு தன்னுடனே சொன்ன மணிவேளை அதுவேயென்றதை அப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள்.
௫௪. இந்த இரண்டாம் அடையாளத்தை யேசு மறுபடியும் யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தபோது செய்தார்.

௫. அதிகாரம்.

அவர் ௩௮. வருஷத்து வியாதிக்காறனை ஓய்வுநாளிலே குணமாக்கினது.

இதுகளுக்குப்பிறபாடு யூதருடைய பண்டிகையாயிருந்தது, அப்போ யேசு யெருசலேமுக்குப் போயினார்.

௨. யெரு

௨. யெருசலேமிலே வெள்ளாட்டுவாசலண்டையிலே எபிரேயபாஷையிலே பெதெஸ்தாவென்னப்பட்ட ஒருகுளமிருக்குது, அதுக்கஞ்சு மண்டபங்களுண்டு.

௩. அதுகளிலே தண்ணீர் அசைவுக்குக் காத்திருக்கிற குருடர், சப்பாணிகள், சூம்பல்ரோகக்காரர் முதலான வியாதிக்காரரின் திரளான சனங்கிடந்தார்கள்.

௪. ஏனென்றால் சிலவேளையிலே ஒரு தேவதூதன் குளத்திலே இறங்கி, தண்ணீரைக் கலக்குவான். தண்ணீர் கலங்கினபிறபாடு முந்தி அதுக்குள்ளே பட்டவனே அவன் எந்தவியாதி பட்டிருந்தாலும், குணமாவான்.

௫. அங்கே முப்பத்தெட்டு வருஷம் வியாதியான ஒரு மனுஷனிருந்தான்.

௬. யேசு அவன் கிடக்கிறதைக் கண்டு, அவனிப்படியிருக்கிறது வெகுகாலமாச்சுதென்றும் அறிந்திருந்து, அவனுடனே: குணமாக உனக்கு மனதுண்டோவென்றார்.

௭. வியாதிக்காரன் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்திலே கொண்டுபோய் விட எனக்கொரு மனுஷனுமில்லை. நான் போகிறதுக்குள்ளே வேறொருத்தன் இறங்குவானென்றான்.

௮. யேசு அவனுடனே: *எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்றார். *மத். ௯, ௬.

௯. உடனே அந்த மனுஷன் குணமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்துபோனான். அந்த நாளோவென்றால் ஓய்வுநாளாயிருந்தது.

௰. அப்போ யூதர் குணமாக்கப்பட்டவனுடனே: *ஓய்வுநாளாயிருக்குது, படுக்கையையெடுத்துப்போறது உனக்குத் தாயமல்லவென்றார்கள். *எரே. ௱௭, ௨௰௧.

௰௧. அவன் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைக் குணமாக்கினவர் என்னுடனே: உன் படுக்கையையெடுத்துக்கொண்டு நடவென்று சொன்னாரென்றான்.

௰௨. அப்போ அவர்கள் அவனை: உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று உன்னுடனே சொன்ன மனுஷன் ஆரென்று கேட்டார்கள்.

௰௩. ஆனால் குணமாக்கப்பட்டவன் அவராரென்றறிந்திலன், ஏனென்றால் அவ்விடத்திலே கும்பிருந்தபடியினாலே யேசு விலகியிருந்தார்.

௰௪. அதற்குப் பிறபாடு யேசு அவனைத் தேவாலயத்திலே கண்டு, அவனுடனே: இதோ, குணமானாய். அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடிக்கு *இனிப்பாவஞ் செய்யாதேயென்றார். *அ, ௰௧.

௰௫. அந்த மனுஷன் போய், தன்னைக் குணமாக்கினவர் யேசுவென்று யூதருக்கறிவித்தான்.

௰௬. ஓய்வுநாளிலே இதுகளைச் செய்தாரென்கிறதுநிமித்தியம் யூதர் யேசுவைத் துன்பப்படுத்தி, அவரைக் கொல்லவகை தேடினார்கள்.

௰௭. ஆனால்

௰௭. ஆனால் யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாக: என் பிதா இதுவரைக்குங் கிரியை நடப்பிக்கிறார் * நானுங் கிரியை நடப்பிக்கிறேனென்றார். * ௰௪, ௰.

௰௮. ஆனதுகொண்டு அவர் ஓய்வுநாளின் கட்டளை அழித்ததுந் தவிர, பராபரனைத் தம்முடைய பிதாவென்றுஞ் சொல்லி, தம்மைப் பராபரனுக்குச் சரியாக்கினபடியால், யூதர் பின்னையும் அதிகமாய் அவரைக் கொல்லவகை தேடினார்கள்.

அவர் தம்முடைச் சத்துருக்களுக்குச் சொன்ன உத்தரவு.

௰௯. அப்போ யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், குமாரன், பிதாச் செய்யக் காணுகிறதையேயொழிய வேறொன்றையுந் தாமாய்ச் செய்யமாட்டார், ஏனென்றால் அவர் எதுகளைச் செய்கிறாரோ, அதுகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.

௨௰. ஏனென்றால் பிதாக் குமாரனைச் சினேகித்து, தாம் செய்கிறதெல்லாத்தையும் அவருக்குக் காண்பிக்கிறார். இதுகளிலும் பெரிதான கிரியைகளை உங்களுக்காச்சரியமாக அவருக்குக் காண்பிப்பார்.

௨௧. அதேதென்றால் பிதா மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறாப்போலே, குமாரனுந் தாம் வேணுமென்றபேர்களை உயிர்ப்பிக்கிறார்.

௨௨. ஏனெனில் பிதாவைக் கனம்பண்ணுகிறாப்போல எல்லாருங் குமாரனைக் கனம்பண்ணும்படிக்கு, பிதா ஆரையும் தாம் ஞாயந்தீராமல், * ஞாயத்தீர்ப்பை எல்லாங் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்தார். * அப்போ. ௰௭, ௩௧.

௨௩. * குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவைக் கனம்பண்ணாதவனாயிருக்கிறான். * ௧. யோவா. ௨, ௨௩.

௨௪. மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய சீவனுண்டு, * அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குள் அகப்படாமல், மரணத்தை விட்டு நீங்கிச் சீவனுக்குள் பட்டிருக்கிறான். * ௩, ௰௮. ௮, ௫௧.

௨௫. மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், * மரித்தோர் பராபரனுடைய குமாரனின் சத்தத்தைக் கேட்கும் வேளை வருகுது, இப்போயும் வந்திருக்குது, அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள். * ௰௧, ௬௫. ஏபே. ௨, ௧.

௨௬. ஏனென்றால் பிதா தம்மில்தாமே சீவனுடையவராயிருக்கிறாப்போலே, குமாரனுக்கும் அவருந் தம்மில்தாமே சீவனுடையவராயிருக்குதலைக் கட்டளையிட்டார்.

௨௭. அவர் மனுஷனுடைய குமாரனாயிருக்கிறபடியினாலே, ஞாயத்தீர்ப்பையுஞ் செய்ய அவருக்கதிகாரங் கொடுத்தார்.

உஅ. இதுக்காக ஆச்சரியப்படாதேயுங்கோள் / ஏனெனில் வேளை வருகும் / அப்போ பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு /

உ௯. நன்மை செய்தவர்கள் சீவனுக்கெழுந்திருக்கிறவர்களாகவும் / துன்மை செய்தவர்களாக்கினைக்கெழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். * தானி. ௰௨/ ௨.

௩௰. * நானொன்றுஞ் செய்ய மாட்டேன் / நான் கேட்கிறபடி தீர்ந்தீர்க்கிறேன் / என் தீர்ப்பு நீதியுமாயிருக்குது / ஏனென்றால் என்னிஷ்டமானதை தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதைத் தேடுகிறேன். * ௬/ ௩அ.

௩௧. எனக்கு நானே சாட்சி கொடுத்தாலென் சாட்சி மெய்யாயிராது.

௩௨. * எனக்குச் சாட்சி கொடுக்கிற வேறொருத்தரிருக்கிறார் / அவரெனக்குக் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்றறிவேன். * மத. ௩/ ௰௭.

௩௩. * நீங்கள் யோவானண்டைக்கு மனுஷரை அனுப்பினீர்கள் / அப்போ அவன் மெய்யான சாட்சியைச் சொன்னான். * ௧/ ௰௯.

௩௪. நானோவென்றால் மனுஷனுடைய சாட்சியைப் பிடியாமல் / நீங்கள் ரட்சிக்கப்படுவதற்காக இதுகளைச் சொல்லுகிறேன்.

௩௫. அவன் எரிகிறதும் பிரகாசிக்கிறதுமான விளக்காயிருந்தான் / நீங்களோவென்றால் அவனுடைய வெளிச்சத்திலே கொஞ்சப்போது களிகூர மனதாயிருந்தீர்கள்.

௩௬. ஆனால் யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் பெரிதான சாட்சி எனக்குண்டு. அதேதென்றால் நான் நிறைவேற்றப் பிதா எனக்குக் கொடுத்ததும் நான் செய்கிறதுமான கிரியைகளே / பிதா என்னை அனுப்பினாரென்றெனக்குச் சாட்சி கொடுக்கும்.

௩௭. என்னை அனுப்பின பிதாதாமே எனக்குச் சாட்சி கொடுத்தார். நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை அவருருவைக் கண்டதுமில்லை.

௩அ. அவர் வார்த்தை உங்களுக்குள் தரித்திருக்கிறதுமில்லை / ஏனெனில் அவர் அனுப்பினவனை நீங்கள் விசுவாசியீர்கள்.

௩௯. வேதவெழுத்துகளை ஆராய்ந்து பாருங்கோள் / அதேதென்றால் அதுகளிலே உங்களுக்கு நித்திய சீவனுண்டென்றெண்ணுகிறீர்களே / எனக்குச் சாட்சி கொடுக்கிறதுகளும் அதுகள்தானே.

௪௰. ஆனால் உங்களுக்குச் சீவனுண்டாகும்படி என்னண்டைக்கு வர உங்களுக்கு மனதில்லை.

௪௧. மனுஷராலே மகிமையை வாங்கிக்கொள்ளேன்.

௪௨. உங்களிலே தேவனிலே தெய்வசிநேகமில்லை என்றுங்களை அறிவேன்.

௪௩. நானென் பிதாவின் நாமத்திலே வந்திருந்தும் / என்னை ஏற்றுக்கொள்ளீர்கள் / வேறொருத்தன் தன் சுயநாமத்திலே வந்தால் / அவனை ஏற்றுக்கொள்ளுவீர்கள்.

௪௪. பராபரனாலே மாத்திரம் உண்டாகும் மகிமையைத் தேடாமல், * ஒருத்தராலொருத்தர் மகிமையை வாங்கிக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிக்கலாம். * ௰௨, ௪௩.

௪௫. பிதாவினிடத்தில் நான் உங்களைக் குற்றஞ்சாட்டுவேனென்று நினையாதேயுங்கோள், உங்களைக் குற்றஞ்சாட்டுகிறவனொருத்தனுண்டு, அவன் நீங்கள் நம்பின மோசேதானே.

௪௬. ஏனெனில் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள், அதேதெனனில் * என்னைக்குறித்து அவன் எழுதினான். * க. மோ. ௩, ௰௫. ௨௨, ௰௮. ௪௯, ௰. ௫. மோ. ௰௮, ௰௫.

௪௭. அவனெழுதினதை நீங்கள் விசுவாசியாமல் போனீர்களேயானால் என் வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்களென்றார்.

௬. அதிகாரம்.

கிறிஸ்து ஐயாயிரம் பேருக்குப் போசனங்கொடுத்தது அதிசெயம். மத. ௰௪, ௰௩—௨௧. மாற். ௬, ௩௰—௪௪. லூக். ௯, ௰—௰௭.

இதுகளுக்குப்பிறபாடு யேசு திபேரியாப்பட்டணத்துக் கடுத்தான கலிலேயக்கடலுக்கக்கரைக்குப் போனார்.

௨. திரள்கும்பு அவரைப் பின்சென்றது, ஏனெனில் அவர் வியாதிக்காரரில் செய்த அடையாளங்களைக் கண்டார்கள்.

௩. ஆனால் யேசு ஒரு பருவதத்திலேறி, அங்கே தம்முடைய சீஷருடனேகூட உட்கார்ந்தார்.

௪. ஆனால் யூதருடைய பண்டிகையாகிய பஸ்காசமீபமாயிருந்தது.

௫. அப்போ யேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரள்கும்பு தம்மண்டைவரக் கண்டு, பிலிப்புவுடனே: இவர்கள் சாப்பிடத்தக்கதாக எங்கே அப்பங்களைக் கொள்வோமென்றார்.

